# நான்
# புரிந்து கொண்ட
# நபிகள்

சுழல்

# நான்
# புரிந்து கொண்ட நபிகள்

அ. மார்க்ஸ்

எதிர்

**உள்ளே**

## முன்னுரை

# 1

# நான் புரிந்து கொண்ட நபிகள்

“சுயமரியாதை இயக்கம் நடத்திய நபிகள் நாயகம் அறிமுகப் பெருவிழாவும், அதன் பொருட்டு வெளியிடப்பட்ட துண்டறிக்கையும் எங்களை ஈர்த்தன. இதுபற்றி ‘ஒற்றுமை’ இதழுக்கு நீங்கள் ஒரு தொடர் கட்டுரை எழுத வேண்டும்” எனப் பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ் அவர்கள் கேட்ட போது நான் உடனடியாக ஒத்துக் கொள்ளவில்லை. இரண்டு நாட்கள் யோசித்த பின் மிகுந்த தயக்கத்துடனேயே இந்தப் பணியை ஏற்றுக் கொண்டேன்.

‘ஒற்றுமை’ இதழ் வாசகர்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்கள். அவர்களிடம் போய் நபிகள் பற்றியும் இஸ்லாம் பற்றியும் என்ன புதிதாய் சொல்லிவிடப் போகிறேன் என்பதே என் தயக்கத்திற்குக் காரணம்.

இஸ்லாம் குறித்து ‘ஒரு சகிப்புத்தன்மையற்ற மதம், விரிவாக்கத் தன்மை கொண்ட பயங்கரவாத மதம்’ என்கிற ஒற்றைப் பரிமாண அவதூறுப் பிரச்சாரமொன்று உலக அளவிலும், ‘முஸ்லிம்கள் தேசப்பற்று அற்றவர்கள், இந்த நாட்டுக்கு விசுவாசம் இல்லாதவர்கள்’, என்கிற பொய்ப் பிரச்சாரம் இந்திய அளவிலும் மேற்கொள்ளப்படும் சூழல் இது. உலக மேலாதிக்கவாதிகளும், இந்துத்துவப் பாசிச சக்திகளும் இதைச் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மார்க்சிஸ்டுகளாகவும், பெரியாரிஸ்டுகளாகவும் உள்ள நாங்கள் எவ்வாறு நபிகளின்பாலும், இஸ்லாமின்பாலும் ஈர்க்கப் பட்டோம் என்கிற வரலாற்றைப் பதிவு செய்வது இன்றையச் சூழலில் பயனுடையதாக இருக்கும் என நினைத்ததாலேயே தயக்கத்தை மீறி இப்பணியை ஏற்றுக்கொண்டேன்.

எங்களைப் பொருத்தமட்டில் நபிகளையும் இஸ்லாமையும் நோக்கி நாங்கள் ஈர்க்கப்பட்டதற்கு இறையியல் சார்ந்த காரணங்களைக் காட்டிலும் அரசியல் சார்ந்த காரணங்களே முதன்மை பெறுகின்றன. அரசியல் மற்றும் சமூகவியல் அடிப்படைகளில் நம்மை ஈர்க்கக்கூடிய தகுதி இன்றைய பெருமதங்களில் இஸ்லாமுக்கு மட்டுமே உண்டு.

மதங்களின் சமூகவியலைப் பற்றி ஆய்வு செய்கிறவர்கள் இஸ்லாம்,

பவுத்தம், கிறிஸ்தவம் ஆகிய மூன்று மதங்களை மட்டும் மனிதகுல முழுமைக்குமான மதங்கள் (Universal Religions) என்பார்கள். நாடு, இனம், மொழி, சாதி எல்லாவற்றையும் கடந்து யாரொருவரும் எந்தக் கணத்திலும் இம்மதங்களுள் சரண் புக முடியும். இந்து மதத்தில் இது சாத்தியமில்லை. அது பிறவி அடிப்படையிலான மதம். நாடு, இனம் சார்ந்த மதம். இந்தியர்கள் மட்டுமே இந்துக்களாக இருக்க முடியும்.

இம்மூன்று மதங்களிலும் கூட இஸ்லாம் தனித்துவமாக விளங்குவதற்குக் காரணம் அது மட்டுமே தன்னை அண்டியவர்களுக்கு இந்த மண்ணிலேயே நிறைவேற்றத்தக்க ஒரு சமூகத் திட்டத்தை முன் வைக்கிறது. தன்னை ஏற்று வந்தவர்களுக்கான ஒரு மத நிறுவனத்தை (Church/சங்கம்) அமைப்பதைப் பற்றி மட்டுமே கிறிஸ்தவமும், பவுத்தமும் பேசின.

கிறிஸ்துவின் மீட்பாலும், இறையருளாலும் முக்தியையும் மோட்சத்தையும் அடைதலைப் பற்றியே கிறிஸ்தவம் பேசியது. இஸ்லாமும் கூட மறுமையைப் பற்றியும் இறுதித் தீர்ப்பு பற்றியும் பேசினாலும் அது இந்த உலகத்திலேயே சமத்துவமும், நீதியும் நிறைந்த ஒரு சமூகத்தை நிர்மாணிக்கும் திட்டத்தை வைத்து இயங்கியது, இயங்குகிறது.

கிறிஸ்தவம் ஒரு சிறிய மதப்பிரிவாக ஒரு பேரரசின் எல்லைக்குள் உருவாகியது. இனக்குழுக்களிலிருந்து அரசு உருவாகிக் கொண்டிருந்த காலச்சூழலில் ஒரு சிறு மதப்பிரிவாகத்தான் பவுத்தமும் கூடத் தோன்றியது.

இவ்விரு மதங்களையும் நிறுவிய இயேசுவும், புத்தரும் நீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டக்கூடிய ஒரு அரசைத் தாமே உருவாக்க வேண்டும் என்கிற எண்ணம் கிஞ்சித்தும் இல்லாதவர்களாக இருந்தனர். எனவே நிலவும் அரசமைப்புகளுடன் அவர்கள் நிறுவிய மதமும் அவர்களும் சமாதானமாகிப் போனார்கள்; சமரசம் செய்து கொண்டார்கள்.

நிலவுகிற அரசமைப்பிற்குக் கட்டுப்படுதலைக் கிறிஸ்தவம் எப்போதும் போதித்து வந்தது. தான் வாழ்ந்த காலத்திலேயே புத்தர் அரசுகளோடும், ஆதிக்க சக்திகளோடும் பல சமரசங்களைச் செய்து கொண்டார். சமூகத்திலுள்ள ஆதிக்க சக்திகளின் நிர்ப்பந்தம் வந்தபோது கடனைத் தீர்த்துவிட்டு வருகிறவர்களுக்கு மட்டுமே சங்கத்தில் இடம் உண்டு என்றார். அடிமைகளுக்கு இடமில்லை என்றார். கொல்லாமையைப் போதித்த புத்தர் ஒரு கட்டத்தில் அரசப் படைகளுக்கு மட்டும் விதி விலக்கு அளித்தார். அன்று உருவாகி வந்த முடியரசு ஒன்றால் அவர் பிறந்த சாக்கிய சமூகம் அவரது கண்முன் அழிக்கப்படுவதை ஒன்றும் செய்ய இயலாமல் பார்த்துக் கொண்டிருக்க மட்டுமே புத்தரால் முடிந்தது.

ஆனால் இஸ்லாமோ அரசுகளற்ற இனக்குழுச் சமூகங்கள் மத்தியில் ஒரு சிறிய பிரிவாக உருவாகி, ஒரு இயக்கமாகப் பரிணமித்து, ஏக இறைவனுக்கு முன் அனைவரும் சமம் என்கிற கருத்தியலைப் பிரச்சாரம் செய்து, எண்ணற்றத் தியாகங்களை மேற்கொண்டு, ஒரு கட்டத்தில் புலம் பெயர்ந்து, கொண்ட கொள்கைகளுக்காகப் போராடி, அவற்றை நிறுவுவதற்கான ஒரு அரசியல் கட்டுமானத்தை (அரசை) உருவாக்கியது.

ஒருவர் முஸ்லிமாக மாறுவதென்பது ஒரு மதத்தைத் (தீன்) தழுவுவது மட்டுமன்று; ஒரு இயக்கக் கட்டுமானத்தில் உறுப்பாவதும் கூட.

ஒரே சமயத்தில் அவர் 'அல்லாஹ்' என்கிற ஏக இறைவனை ஏற்றுக் கொள்பவராக மட்டுமின்றி அவ்வாறு ஏற்றுக்கொண்டவர்களின் சமூக அமைப்பின் (உம்மா) உறுப்பினராகவும் ஆகிறார்.

மறுமை குறித்த உயர் நோக்கங்களோடு நில்லாமல், இம்மையில் சமத்துவத்தையும், நீதியையும் நிலைநாட்டும் செயல் திட்டங்களும் கொண்டு இயங்கியதால்தான் இங்கேயே தோன்றிய மதங்களாயினும், வெளியிலிருந்து வந்தவையாயினும் இந்தியாவின் சாபக்கேடான வருணத்தையும், சாதியையும், தீண்டாமையையும் ஒப்பீட்டளவில் வென்ற ஒரே மதமாக இஸ்லாம் மட்டுமே அமைந்தது.

எங்களை இஸ்லாம் ஈர்த்ததற்கான முதற்காரணம் இதுவே.

இரண்டாவது காரணத்தை நான் தொடக்கத்திலேயே குறிப்பிட்டு விட்டேன். இன்று நம்மையும், இந்திய சனநாயகத்தையும், இந்தியச் சமூகத்தின் பன்மைத்துவத்தையும் எதிர்கொண்டுள்ள மிகப்பெரிய ஆபத்தாகிய இந்துத்துவப் பாசிசம் குறித்து நாம் கவலை கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு 'கம்யூனிச ஆபத்து' என்கிற இலக்கிலிருந்து 'இஸ்லாமியப் பயங்கரவாதம்' என்கிற இலக்கை முன்வைத்து தனது விரிவாக்க, மேலாதிக்க அரசியலை நடத்துகிற உலக முதலாளியத்தின் நடவடிக்கைகள் இந்தியாவில் உருவாகி வருகிற பாசிசத்துடன் இணைந்து நிற்கிறது.

இது உலக அளவில் சனநாயகத்தையும், சமத்துவத்தையும், பன்மைத்துவத்தையும் நேசிக்கிற சக்திகளின் கவலையை அதிகரித்துள்ளது. இந்த ஆபத்துக்களை எதிர்கொள்வதற்கு இவை இலக்காக நிறுத்தும் இஸ்லாத்தை இன்னும் அதிகமாகப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது.

இஸ்லாத்தைப் 'பயங்கரவாத' மதமாகச் சித்திரிக்கும் சக்திகள் இதற்கிணையாக அண்ணல் நபிகளை இழிவு செய்வதையும் அவரைப் பற்றிய பொய்மைகளைப் பரப்புவதையும் தொடர்ந்து செய்து வருகின்றன.

*வரலாறு முழுவதும் மேலைக் கிறிஸ்தவச் சிந்தனை மரபு இஸ்லாத்தைத் தன் இருப்பையே கேள்விக்குள்ளாக்குகிற மாற்றுக் கலாச்சாரமாகக் கண்டு அஞ்சி வந்துள்ளது. நபிகளை 'எதிர்-கிறிஸ்து' (Anti-Christ)வாக முன்வைத்து அவதூறு செய்து வந்துள்ளது.*

*1956-ல் கமால் அப்துல் நாசர் சூயஸ் கால்வாயை நாட்டுடைமை ஆக்கினார். 1973-ல் அன்வர் சதாத் இஸ்ரேலுக்கு எதிரான இஸ்லாமிய உணர்வைத் திரட்டினார். 80-களில் முஸ்லிம் நாடுகளில் ஏற்பட்ட எழுச்சி. இவை அனைத்தும் மேலை உலகின் இஸ்லாம் குறித்த அச்சத்தை இரட்டிப்பாக்கின. 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' குறித்த சொல்லாடல்களை அது கட்டவிழ்த்து விடத் தொடங்கியது.*

*இந்தியாவைப் பொருத்தமட்டில் சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக இங்கே உருப்பெற்ற இந்துத்துவச் சிந்தனைகள் முதன்மையாக இஸ்லாத்தையே குறிவைத்து இயங்கின. இந்தியா-பாகிஸ்தான் தேசப் பிரிவினையை ஒட்டிய கொடிய வகுப்புக் கலவரங்கள் மத்தியில் இந்தியா சுதந்திரமடைந்தது.*

*அன்று தொட்டு இந்திய முஸ்லீம்களை இந்தியாவிற்கு விசுவாச மற்றவர்களாகவும், சந்தேகத்திற்குரியவர்களாகவும் பார்க்ககூடிய பார்வை ஒன்றை இந்துத்துவ சக்திகள் தவிர, காங்கிரசிலிருந்த இந்துத்துவ ஆதரவு சக்திகளும் உருவாக்கி வளர்த்தன.*

*காந்தி கொலையை ஒட்டி ஏற்பட்ட அவப்பெயரின் விளைவாகச் சற்றே பதுங்கியிருந்த இந்துத்துவ சக்திகள் 1980-களில் மீண்டும் தீவிரமாக முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரங்களை மேற்கொள்ளத் தொடங்கின. 1982 மீனாட்சிபுரம் மதமாற்றத்தை ஒட்டியும், பாபர் மசூதியை இடித்து ராமர் கோயில் கட்டுவது என்கிற திட்டத்தை முன்வைத்து விசுவ இந்து பரிசத் தீவிரமாக இயங்கத் தொடங்கியதற்குப் பின்பும் முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரம் தீவிரமாகியது.*

*1992-ல் மசூதி இடிக்கப்பட்டது. தொடர்ந்த வன்முறைகளில் இஸ்லாமியர்களின் உடைமைக்கும், உயிருக்கும் நாடெங்கிலும் உத்தரவாதமில்லாத நிலை ஏற்பட்டது. 1990-களின் பிற்பகுதியில் ஆட்சியில் அமர்ந்த இந்துத்துவம் அரசதிகாரத் துணையோடு இந்திய முஸ்லிம்களை இரண்டாம் தரக் குடிமக்களாக்கும் முயற்சியைத் தீவிரப்படுத்தியது. இதனுடைய உச்சக்கட்டமாக 2002-ல் குஜராத் வன்முறைகள் அரங்கேறின. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். ஒரு லட்சத்து எழுபதினாயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடு வாசலிழந்தனர். அதிகாரத்திலிருந்தோர் பொறுப்பற்றுப் பேசினர். குற்றவாளிகள் கம்பீரமாக உலா வந்தனர்.*

*இந்நிலையில் இந்துத்துவப் பாசிசத்தை எதிர்ப்பதென்பது*

பாதிக்கப்பட்ட இஸ்லாமியச் சமூகத்தோடு இணைந்து நிற்பதிலிருந்து பிரிக்க இயலாதது என்பதைப்புரிந்து கொண்டோம். இஸ்லாத்தையும், நபிகளின் வாழ்வையும்/போராட்டங்களையும், இஸ்லாமிய வாழ்வு நெறியின் வழி காட்டியாக அமைந்துள்ள புனித குர்ஆனையும் மேலும் ஆழமாகக் கற்பதும், புரிந்து கொள்ள முயற்சிப்பதும் இதனுடைய முதற்படி என்பதை உணர்ந்து கொண்டோம்.

இந்தப் புரிதலின் அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளும் ஒரு வாய்ப்பாக இந்நூலைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்துள்ளேன்.

உங்களோடு பகிர்ந்து கொள்வதோடு எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிற போதெல்லாம் எங்களின் கருத்துக்களை இங்குள்ள பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியிலும் கொண்டு செல்வோம், பிரச்சாரம் செய்வோம்.

எங்களைப் போன்று வெளியிலிருந்து இஸ்லாத்தைப் பார்ப்பவர்களை இஸ்லாமும் நபிகளது வாழ்வும் எவ்வாறு ஈர்க்கின்றன என அறிவது உங்களுக்கும் ஒரு புதிய அனுபவமாக இருக்கக்கூடும். உள்ளிருந்து பார்க்கும்போது கிடைக்கக்கூடிய பார்வை அனுகூலங்கள் வெளியில் இருந்து பார்க்கும்போது கிடைக்காது என்ற போதிலும், வெளியிலிருந்து பார்க்கும் போது வேறு சில புதிய சாத்தியக் கூறுகளுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

அப்படி ஏதேனும் உங்களுக்குப் பயன்படத்தக்க தகவல்களை இத்தொடர் மூலம் உங்களோடு பகிர்ந்து கொள்ள இயலுமாயின் நான் மகிழ்ச்சியடைவேன். எனது பார்வையில் ஏதேனும் தவறுகள் தென்படுமாயின் அதைச் சுட்டிக்காட்டினால் ஏற்றுக்கொள்வேன்.

எனினும் இந்நூல் அண்ணலாரின் இன்னொரு வாழ்க்கை வரலாறோ அல்லது இஸ்லாத்தின் வரலாறோ அல்ல. இஸ்லாத்திற்கும், நபிகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களின் மெய்மைகளையும் பொய்மைகளையும் நபிகளின் வாழ்க்கை, இஸ்லாமிய வரலாறு ஆகியவற்றினூடாக மதிப்பிடுகிற ஒரு எளிய முயற்சியே இத்தொடர்.

# 2

# பிணைக் கைதிகளாய் இந்திய முஸ்லிம்கள்

*சுதந்திரத்திற்குப் (1947) பிந்தைய இந்திய முஸ்லிம்களின் நிலையை முதல் சுதந்திரப்போருக்குப் (1857) பிந்தைய நிலையுடன் ஒப்பிடுவார் அறிஞர் ஏ.ஜி. நூரானி (பார்க்க: The Muslims of India: A Documentary Record, Oxford, 2003).*

*இரண்டு சூழல்களிலும் அவர்கள் பெரிய அளவில் உயிர், உடமை இழப்புகளுக்கு ஆளாகியிருந்தனர். 1857-க்குப் பிந்தைய பிரிட்டிஷ் அரசினரும் 1947-க்குப் பிந்தைய சுதந்திர அரசிலிருந்த பெரும் பான்மையான இந்துத்துவச் சார்புடைய அரசியல் சக்திகளும் தமது அரசுக்கு முஸ்லிம்கள் விசுவாசமாக இல்லை என்கிற அய்யத்தோடேயே அணுகினர்.*

*எனினும் இரண்டு சூழல்களுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருந்தது எனவும் குறிப்பார் நூரானி. 1857-ல் முஸ்லிம்களை வழிநடத்த ஒரு வலிமையான அரசியல் தலைமை இருந்தது. 1947-ல் அது இல்லை. சையத் அமீர்கான், அமீர்அலி, பத்ருதீன் த்யாப்ஜி போன்ற வலிமையான தலைவர்கள் அன்று இங்கு இல்லை. 'காயிதே ஆஸம்' முகமது அலி ஜின்னா பாகிஸ்தானுக்குச் சென்றதில் வியப்பில்லை. ஒன்றாயிருந்த வங்க மாகாணத்தின் பிரதமராக இருந்த எச்.எஸ்.சுஹ்ராவர்தி பாகிஸ்தானின் பிரதமரானார்.*

*இந்திய முஸ்லிம்களின் அரசியல் தலைமைக்குத் தகுதியானவராக ஜின்னாவால் கருதப்பட்ட சவுதரி கலிகுஸ்மானுக்கு சுஹ்ராவர்தி எழுதிய கடிதத்தில் (10, செப்டம்பர் 1947) இந்திய முஸ்லிம்களின் முன்பு மூன்று சாத்தியங்களை முன்வைத்தார். (இந்திய அரசியல் சட்ட அவையில் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக இருந்தவர் கலிகுஸ்மான்).*

*அவை: 1. இருதேசக் கொள்கையை வலிமையாகப் புரிந்து கொள்வது; 2. இந்திய யூனியனில் பொதுக் குடியுரிமையை விசுவாசத்தோடு பகிர்ந்து கொள்வது; 3. முழுமையான சரணாகதி.*

*கலிகுஸ்மான் இரண்டாவது சாத்தியத்தையே தேர்வு செய்தார். எனினும் சமமான பொதுக் குடிமக்களாக முஸ்லிம்கள் நடத்தப்படுவார்களா என்ற நியாயமான அச்சத்தையும் அவர் முன் வைத்தார். இந்தியாவில்*

*மட்டுமின்றி பாகிஸ்தானிலும் இருந்த சிறுபான்மைச் சமூக மக்களின் அற உணர்வைத் திரட்டி அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ஒரு பேரியக்கம் நடத்தப்பட வேண்டும் என்கிற ஆலோசனையையும் கலிகுஸ்மான் வைத்தார். இந்தப் பேரியக்கத்திற்கு மகாத்மா காந்தி தலைமையேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார். அந்த அளவிற்கு இந்திய முஸ்லிம்களின் நம்பிக்கைக்குரியவராக இருந்தார் காந்தி. அதே காரணத்திற்காகவே அடுத்த நான்காம் மாதம் அவரைச் சுட்டு வீழ்த்தின இந்துத்துவ சக்திகள்.*

*காந்தி கொல்லப்பட்ட நிகழ்ச்சி கலிகுஸ்மானின் கொஞ்ச நஞ்ச நம்பிக்கைகளையும் சிதறடித்திருக்கும் போலும். அவரும் பாகிஸ்தானுக்குச் சென்று நிரந்தரமாகத் தங்கினார். அரசியல் சட்ட அவையில் இருந்த இதர முக்கிய முஸ்லிம் தலைவர்களான Z.H. லாரி, உசேன் இமாம், அப்துல் சத்தார் சய்த் முதலியோரும் பாகிஸ்தானைத் தேர்வு செய்தனர்.*

*எஞ்சியிருந்தவர் அகில இந்திய அளவில் புகழ்பெற்ற தலைவர் மவுலானா அபுல் கலாம் ஆஸாத். எல்லோரும் மதிக்கத் தக்க கண்ணியவானாகவும், அரசியலறிஞராகவும் இருந்தபோதிலும் இந்திய முஸ்லிம்களுக்கு அரசியல் தலைமையேற்க அவர் தயாராக இல்லை. காங்கிரஸ் கட்சியிலும் நேருவின் அமைச்சரவையிலும் தொடர்வதையே அவர் தேர்வு செய்தார்.*

***1947** ஜூலை இறுதியில் அன்றைய மத்தியச் சட்டமன்றத்தில் இருந்த முஸ்லிம் உறுப்பினர்கள் தமது சட்டமன்றத் தலைவரான ஜின்னாவைச் சந்தித்தனர். அதுவே அவர்கள் அவரைக் கடைசியாகச் சந்தித்தது. அவர் கராச்சிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். விடை கொடுக்கவும், அறிவுரை பெறவும் அவர்கள் வந்திருந்தனர். இந்திய முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றிய கவலையை அவர்கள் முன் வைத்தனர். எனினும் அவர் குறிப்பாக எதுவும் சொல்லவில்லை எனக் குறிப்பிடுகிறார் அப்போது அங்கிருந்த முஹம்மத் ரஸாகான்.*

*தனது தலைமையின் கீழ் இந்திய முஸ்லிம் தலைவர்கள் போதிய அனுபவம் பெற்றுள்ளனர் எனவும், தமக்கான கொள்கையையும் திட்டத்தையும் இனி அவர்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டதோடு ஜின்னா நிறுத்திக் கொண்டார். இந்தியாவிற்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதையும், எக்காரணம் கொண்டும் இரு குதிரைகளில் சவாரி செய்ய முயல வேண்டாம் என்பதையும் உறுதியாக வற்புறுத்தினார்.*

***1947** டிசம்பர் **14, 15** தேதிகளில் கராச்சியில் கடைசியாகக் கூடிய அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சிக் கூட்டத்தில் 'பாகிஸ்தானுக்கும் இந்திய யூனியனுக்கும் தனித்தனி முஸ்லீம் லீக் கட்சிகள் செயல்படும்' எனத்*

தீர்மானம் இயற்றப்பட்டது. 'காயிதே மில்லத்' முகமது இஸ்மாயில் அவர்கள் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். சென்னையில் அமைப்புக் கூட்டம் கூட்டப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஜின்னா அக்கூட்டத்தில் ஒன்றை தெளிவாகவும் உறுதியாகவும் கூறினார்:

> "இந்துஸ்தானத்திற்கு ஒரு முஸ்லிம் அமைப்பு இருக்க வேண்டும். நீங்கள் வேறு எப்படியாவது யோசித்தீர்களானால் தொலைந்து போவீர்கள். கட்சியைக் கலைப்பதாக முடிவு செய்தால் அது பெரிய தவறு. மவுலானா அபுல்கலாம் ஆசாத்தும் மற்றவர்களும் இந்திய முஸ்லிம்களின் (தனித்துவமான) அடையாளத்தைத் தகர்ப்பதற்கு முயற்சிப்பதாக நான் அறிகிறேன். அதை அனுமதிக்காதீர்கள். அப்படிச் செய்து விடாதீர்கள்" (New Age, Jan 11, 1948)

காங்கிரசில் சேருங்கள் என காந்தியும், சோசலிஸ்ட் கட்சிக்கு வாருங்கள் என ஜெயப்பிரகாஷ் நாராயணனும் இந்திய முஸ்லிம்களுக்கு அழைப்பு விட்டுக் கொண்டிருந்தபோது ஜின்னா சொன்ன இந்த அறிவுரை மிகவும் குறிப்பிடத்தக்கது.

தனியான அமைப்பு தேவைதானா என உசேன் இமாம் (பீகார்) போன்றவர்கள் தயங்கியபோது, "நீங்கள் இதைச் செய்யாவிட்டால் 1906ம் ஆண்டு நிலைமைக்குத் திரும்ப வேண்டும். நாற்பது மில்லியன் முஸ்லிம்கள் இந்தியாவில் இருக்கிறீர்கள். உங்களுக்குத் தனியாகத் தலைவர்கள் தேவை. நாங்கள் உங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்க முடியாது" என்றும் ஜின்னா வற்புறுத்தினார்.

1948 மார்ச் 10-ம் தேதியன்று சென்னையில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அமைப்புக் கூட்டம் கூடியது. தமிழர் ஒருவர் அமைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டதும், சென்னையில் முதல் கூட்டம் கூட்டப்பட்டதும் நமக்கெல்லாம் பெருமைதானெனினும் வலிமையான ஒரு அகில இந்தியத் தன்மையை முஸ்லிம் லீக் பெறாமற் போனதை நாம் கவனிக்கத் தவறலாகாது.

முதல் கூட்டத்தில் வெறும் 30 பேர்களே கலந்து கொண்டனர். வலிமையான அமைப்புகள் உள்ள வங்கம், பீகார், டெல்லி, ஒரிசா போன்ற மாநிலங்களிலிருந்து யாரும் கலந்து கொள்ளவில்லை. உ.பி.யில் இருந்து மவுலானா ஹஸ்ரத் மொகானி மட்டும் கலந்து கொண்டார். காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கேரளாவிலும், தமிழகத்திலும் மட்டுமே அமைப்பு ஓரளவு வலிமையாக இருந்தது. சென்னை மற்றும் கேரள மாநிலத் தேர்தல்களை மட்டுமே கணக்கில் வைத்து முஸ்லிம் லீக் செயல்படுவதாகக் கூறி 1961-

ல் முகம்மது ரஸா கான் விலகிக் கொண்டார்.

உண்மைகள் எப்படியாயினும் அகில இந்திய அளவில் வலிமையான அமைப்பு ஒன்று உருவாகாமற் போனது ஒரு பெரிய இழப்பே. நெருக்கடி நிலையின் போதும், பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும் அகில இந்திய அளவில் ஒரு வலிமையான எதிர்ப்பை முஸ்லிம்கள் வெளிக்காட்ட இயலாமற் போனதற்கு இதுவே காரணம்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய சூழலில் இத்தகைய ஊடாட்டங்களுடன் இந்திய முஸ்லிம்கள் நின்றிருந்த போதிலும், இந்திய அரசுக்கு உண்மையாக இருப்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர். சீனா மற்றும் பாகிஸ்தானுடனான போர்களில் அவர்களின் தேசபக்தி சிறந்த முறையில் வெளிப்பட்டது. எனது மகனைப் போர்க் களத்திற்கு அனுப்பத் தயார் என அறிவித்தார் காயிதே மில்லத்.

இருந்தும்கூட இந்திய முஸ்லிம்களை அய்யத்துடன் நோக்கும் போக்கு காங்கிரசுக்குள்ளும் வளர்ந்தது. இந்தப் போக்கிற்கு இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தும், வல்லபாய் பட்டேலும் முன்னோடிகளாக விளங்கினர். சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் இட ஒதுக்கீடும், தனி வாக்காளர் தொகுதியும் வேண்டும் என அரசியல் சட்ட அவையில் முஸ்லிம் தலைவர்கள் கோரியபோது, படேல் கூறிய மறுமொழி கொடூரமானது. நாட்டையே பிரித்துக் கொடுத்தாகி விட்டது, இனி இதற்கு மேல் எந்த உரிமைகளையும் நீங்கள் கோரக் கூடாது என்பதே அதன் சாராம்சம்.

> "இந்த நாட்டில் இவ்வளவு நடந்ததைப் பார்த்த பின்னும் இப்படி ஒரு திருத்தத்தை அவர்கள் (முஸ்லிம்கள்) முன்மொழிகிறார்கள் என்றால், அவர்கள் பார்வையில் எந்தச் சிறிய மாற்றமும் விளைந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. முஸ்லிம் லீக் கட்சியிடமிருந்து இப்படி ஒரு திருத்தத்தை முன்மொழிய ஆணை பெற்று வந்துள்ளார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்களுக்காக நான் வருத்தப்படுகிறேன். ஆணைகளை ஏற்றுச்செயல் படுவதற்கான இடம் இதுவல்ல. மனசாட்சிப் படியும், இந்த நாட்டின் நன்மையைக் கருதியும் செயல்பட வேண்டிய இடம் இது. தான் வாழும் நாட்டின் நலன்களிருந்து தமது நலன் வேறுபட்டிருப்பதாக ஒரு சமூகம் கருதுவது மிகப் பெரிய தவறு. முஸ்லிம்களுக்குத் தனி இடஒதுக்கீட்டிற்கு இன்று நாம் ஒத்துக்கொள்வதாக வைத்துக் கொண்டோமானால் முஸ்லிம் சமுதாயத்தின் மிகப்பெரிய எதிரியாக நான் என்னைக் கருதிக் கொள்வேன். ஒரு மதச்சார்பற்ற சனநாயக அரசில் அது ஏற்படுத்தப் போகும் விளைவு என்னை அப்படி ஒரு முடிவுக்குத் தள்ளும். வகுப்பு அடிப்படையில் தனி வாக்காளர் தொகுதி உங்களுக்குக் கிடைக்கிறது என வைத்துக் கொள்ளுங்கள். மாநிலங்களிலோ, மத்தியிலோ உருவாகப் போகிற அமைச்சரவைகளில் நீங்கள் இடம்பெற முடியுமா? தனியான விருப்புகளை நீங்கள்

வைத்துள்ளீர்கள். கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் உருவாகிற ஒரு அமைச்சரவையிலும் அரசிலும் எங்களை நம்பாத (அதாவது), பெரும்பான்மையை நம்பாத மக்கள் இடம்பெற இயலாதது வெளிப்படை. எனவே அரசில் உங்களுக்குப் பங்கு இருக்க முடியாது. நீங்கள் உங்களைத் தனியாக விலக்கிக் கொள்வீர்கள் என்றென்றும் சிறுபான்மையாகவே கிடப்பீர்கள். பிறகு என்ன பலன்களை நீங்கள் பெற இயலும்?" (அரசியல் சட்டஅவை விவாதம், 26, மே 1949)

*பேச்சு முழுவதிலும் முஸ்லிம்களை 'அவர்கள்' 'நீங்கள்' என இந்த நாட்டின் 'மற்றமை' (ஸிமீலீமீக்ஷீ)களாக முன்னிறுத்திப் பேசுவது ஒரு பக்கம். தனித்தொகுதி கொடுத்தால் அமைச்சரவையில் இடம்பெற முடியாது என மிரட்டுவது இன்னொரு பக்கம். தலித்களும் கூடத் தமக்கு நியாயமாக உரிய தனித் தொகுதிகளையும் இரட்டை வாக்குரிமையையும் கேட்டனர். இரட்டை வாக்குரிமை அவர்களுக்கும் மறுக்கப்பட்டது. ஆனால் அப்படிக் கேட்டதற்காக அவர்களை யாரும் 'வெளியிலிருந்து ஆணைபெற்று வந்தவர்கள்' என்றோ, 'தொகுதி ஒதுக்கீடு கொடுத்தால் அரசில் இடம் பெற முடியாது' என்றோ மிரட்டவில்லை.*

*ஜவஹர்லால் நேருவின் வாழ்க்கை வரலாற்றாசிரியரும் முன்னாள் குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணனின் மகனுமாகிய சர்வபள்ளி கோபால் நாட்டுப் பிரிவினைக்குப் பிந்தைய உடனடி அரசியல் சூழலைப் பற்றி,*

"இந்தப் பணியைச் செய்கிறபோது சுதந்திர மக்களின் முதல் தலைவர் என்கிற வகையில் தனது அமைச்சரவையின் முழு ஒத்துழைப்பையும் நேருவால் பெற இயலவில்லை. ஆஸாத், கித்வாய், அமிர் கவுர் போன்ற சில உறுப்பினர்கள் அவரோடு இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் மக்கள் செல்வாக்கு அவர்களுக்கு அதிகமில்லை. காங்கிரசின் பழம் பெரும் தலைவர்களான படேல், ராஜேந்திர பிரசாத் போன்றவர்கள் இந்து மகா சபைத் தலைவர் சியாமா பிரசாத் முகர்ஜியின் பின்னணியோடு - இந்துப் பெரும்பான்மையின் நலன்களைக் குறியீடு செய்யும் அரசை உருவாக்குவதையே விரும்பினார்கள். இந்தியாவைத் தேர்வு செய்து வந்துள்ள முஸ்லிம் அதிகாரிகள் நிச்சயமாக விசுவாசமாக இருக்க மாட்டார்கள். எனவே, அவர்கள் அனைவரையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனப் படேல் கருதினார். அவரைப் பொருத்தமட்டில், இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும், பாகிஸ்தானில் உள்ள இந்துக்கள் ஒழுங்காக நடத்தப்படுவதற்காகப் பிடித்து வைக்கப்பட்ட பிணைக்கைதிகள்"

*என்று கூறுவது குறிப்பிடத்தக்கது (ஜவஹர்லால் நேரு வாழ்க்கை வரலாறு).*

*இந்தியாவின் முதலும் கடைசியுமான மதச்சார்பற்ற பிரதமராக இருந்த நேரு முஸ்லிம்களை அணுகிய முறை போற்றத்தக்க ஒன்று. எனினும்*

*படேல், பிரசாத், முகர்ஜி போன்றோர் அவரது மதச்சார்பற்ற செயற்பாடுகளுக்குப் பெரும் தடையாக விளங்கினர்.*

*இரும்பு மனிதர் என இந்துத்துவவாதிகளால் போற்றப்படுகிற அன்றைய உதவிப் பிரதமரான வல்லபாய் படேல் பிரதமர் நேருவுக்கு 1948 அக்டோபர் 15 தேதியிட்டு எழுதிய கடிதம் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.*

*“கிழக்கு பாகிஸ்தானிலிருந்து (இன்றைய வங்கதேசம்) இந்துக்கள் வெளியேறுவது தொடருமானால் அதற்குச் சம எண்ணிக்கையில் மேற்கு வங்க முஸ்லிம்களை இங்கிருந்து வெளியேற்றுவோம்” எனப் பாகிஸ்தான் அரசை எச்சரிக்குமாறு நேருவுக்கு அந்தக் கடிதத்தில் அறிவுரை கூறியிருந்தார் பட்டேல்.*

*வெளியேற்றப்படும் முஸ்லிம்கள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள் என்றெல்லாம் பட்டேல் அதில் விளக்கவில்லை. ஒரு சிறந்த மதச்சார்பற்ற சனநாயகவாதியான ஜவஹர்லால் நேரு இந்தக் கடிதத்தைக் கசக்கிக் குப்பையில் எறிந்தார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.*

*விடுதலைக்குப் பிந்தைய சூழலில் முஸ்லிம்கள் பிரச்சனையில் நேரு எவ்வளவு அக்கறையாக இருந்தார் என்பதற்கு அன்றைய மத்தியப் பிரதேச முதல்வர் ரவிசங்கர் சுக்லாவிற்கு அவர் (20 மார்ச், 1954) எழுதிய கடிதம் சான்று. முழுமையாக அதனை இங்கே மொழிபெயர்த்துத் தருகிறேன்.*

என் அன்பான சுக்லாஜி,

மத்தியப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களின் நடவடிக்கைகள் குறித்து நீங்கள் எழுதியுள்ள ஜனவரி 27 தேதியிட்ட கடிதம் கிடைத்தது. உடனடியாகப் பதில் எழுதாமைக்கு வருந்துகிறேன்.

இந்திய முஸ்லிம்கள் மத்தியில் பல்வேறு விதமான போக்குகள் இருக்கின்றன. அவற்றில் சில கண்டிக்கத்தக்கவையாக இருக்கும் என்பதில் அய்யமில்லை. எனினும் இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு நாம் எந்த முடிவுக்கும் வந்துவிட முடியது என நான் நினைக்கிறேன். பலதரப்பட்ட சூழல்களையும் நாம் ரொம்பவும் புறவயமாக மதிப்பிடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் பொதுவில் மகிழ்ச்சியற்றும், திருப்தியற்றும் இருக்கிறார்கள் என்றால் தவறு நம் தரப்பில்தானே ஒழிய அவர்கள் தரப்பில் இல்லை. எந்த ஒரு பெருங்குழுவிற்கும் இது பொருந்தும். நாட்டுப் பிரிவினையாலும் அதன் பின்விளைவுகளாலும் இந்திய முஸ்லிம்கள் மிகப்பெரிய அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

இந்தியாதான் அவர்களின் சொந்த நாடு. அவர்களின் நலன்கள் இங்குதான் உள்ளன என்கிற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவது முழுக்க முழுக்க நம்முடைய பொறுப்பு. அதை நாம் செய்யத் தவறும் போது, முஸ்லிம்கள் அவர்களின் தலைவர்கள் சிலரால் தவறாக வழி நடத்திச் செல்லப்படுகிறார்கள் என நாம் சொல்வதில் அர்த்தம் இல்லை.

இந்திய முஸ்லிம்களின் சிந்தையில் ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு விரக்தி குடிகொண்டுள்ளது என்பது உண்மைதான். பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருப்பவர்களைப் பற்றி நான் பேசவில்லை. அவ்வாறு நிறையப் பேரும் இல்லை. ஆனால் பல்வேறு வழிகளில் முஸ்லிம்கள் மீது அழுத்தம் தொடர்ந்து ஏற்படுகிற மாதிரியான சூழல் இங்கு உருவாகியுள்ளது. அகில இந்திய அளவிலும், மாநிலங்களிலும் அரசுப் பணிகளில் முஸ்லிம்களுக்குப் போதிய இடமளிப்பது குறித்த பிரச்சினை உள்ளது. கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் இடம் பெறுவது குறித்த பிரச்சினை கூட உள்ளது. வணிகம் செய்வதிலும் அவர்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே, எதிர்காலம் குறித்தப் பாதுகாப்பின்மையை அவர்கள் உணர்வதில் வியப்பில்லை.

உருது மொழி குறித்த முஸ்லிம்களின் கோரிக்கை பற்றியும் உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். இது ரொம்பவும் முக்கியமான விசயம். வேறெதையும் விட முஸ்லிம்களை உளவியல் ரீதியில் பாதிக்கக்கூடிய விசயம். நமது கல்விக் கொள்கையின்படி உருது மொழியைக் கற்றுக் கொள்வதற்கான முழு வாய்ப்புகளையும் நாம் ஏற்படுத்தித் தரவேண்டும். இப்படிச் செய்வது இந்தி மொழிக்கு எதிரானது அல்ல. தேசிய மொழி என்கிற வகையில் இந்திக்கு உறுதியான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. நமது நடைமுறைக் கொள்கை நாம் அறிவித்துள்ள கல்விக் கொள்கையுடன் பொருந்தாமலிருப்பதன் விளைவுதான் முஸ்லிம்கள் மனதில் ஆழமான விரக்தியுணர்வை ஏற்படுத்தியிருக்குமோ என நான் அஞ்சுகிறேன்.

இந்த நாட்டு மக்களில் முஸ்லிம்கள் ஒரு பெருந்தொகையினர் என்பதையும், அவர்களின் நல்லெண்ணத்தை நாம் எவ்வாறு பெறுவது என்பது ஒரு பெரிய பிரச்னை என்பதையும் நாம் மறந்துவிட்டது போலத் தோன்றுகிறது. பெரிய அளவில் காஷ்மீர் பிரச்சினை இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் எதிர்வினையைப் பொருத்துள்ளது.

கிழக்கு பாகிஸ்தானில் சமீபத்தில் நடைபெற்றுள்ள தேர்தல் ஒரு புதிய சூழலைப் பாகிஸ்தானில் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் உறவுகள் மேம்படுவதற்கு வழிவகுப்பதாக அது உள்ளது. பாகிஸ்தான் மக்களின் பொதுவான உணர்வுகள் இந்தியாவுடன் நட்பு பாராட்டுவதாகவே உள்ளன. இந்தியாவில் உள்ள முஸ்லிம் குடிமக்களை நாம் எவ்வாறு கையாளுகிறோம் என்பதைப்

பொருத்தே எல்லாம் உள்ளது.

உங்கள் உண்மையுள்ள
ஜவஹர்லால் நேரு.

*இந்தக் கடிதத்தில் ஒவ்வொரு வாசகமும் நேருவின் பொறுப்புணர்வையும், மதச்சார்பின்மையையும் பறைசாற்றுவதாக உள்ளதை விளக்க வேண்டியதில்லை. அவரவர் மாநிலங்களில் அரசுப் பணிகளில் முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிப்பது குறித்து மாநில முதலமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் நேரு எழுதிய கடிதத்தைச் (**26** ஏப்ரல் **1954**) சுருக்கம் கருதித் தவிர்க்கிறேன்.*

***1960** லிருந்து முஸ்லிம்களுக்கு எதிராக வகுப்புக் கலவரங்கள் தொடங்கின. **1964**-ல் நேரு செத்துப் போனார். இந்திய முஸ்லிம்களின் துயரம் தொடர்ந்தது.*

# 3

# மேலைச் சமூகத்தின் அறியாமைகளும் ஆணவங்களும்

மேலைச் சமூகம் இஸ்லாத்தை தனது இருப்பை அச்சுறுத்த வந்த மிகப்பெரிய எதிரியாகவே கடந்த ஆயிரம் ஆண்டுகளாகக் கருதி வருகிறது. ஒரு சிறிய வாய்ப்புக் கிடைத்தாலும் அதை வைத்துக் கொண்டு நபிகளையும் இஸ்லாமையும் இழிவு செய்ய அது தயங்கியதில்லை. எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். மிகச் சமீபத்திய நிகழ்வு ஒன்று.

ஆயத்துல்லாஹ் கொமேய்னி அவர்கள் சல்மான் ருஷ்டி மீதும் அவரது 'சாத்தானின் கவிதைகள்' நூலை வெளியிட்ட மேலைப் பதிப்பாளர்கள் மீதும் 'ஃபத்வா' விதித்ததை (1989) நாமறிவோம். இஸ்லாம் எள்ளளவும் சகிப்புத் தன்மையற்ற மதம் எனவும் கலை இலக்கிய ரசனையும் அறிவுமற்ற ஒரு சமூகம் எனவும் கருத்துரிமையை முற்றிலும் அனுமதிக்காத நெறி எனவும் பிரச்சாரம் செய்வதற்கு மேலைச் சமூகத்திற்கு இது ஒரு பெரும் வாய்ப்பாக அமைந்தது. கொமெய்னி மட்டுமின்றி உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் அனைவருமே பழி தூற்றப்பட்டனர்.

கொமெய்னி விதித்த ஃபத்வா சரியா தவறா என்கிற வாதம் ஒரு பக்கம் இருக்கட்டும். முஸ்லிம் மதத்திற்குள்ளேயே பலரும் அதைக் கண்டிதத்ததை இந்தக் 'கருத்துரிமைப் போராளிகள்' யாரும் கண்டு கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஃபத்வா கொடுக்கப்பட்டுச் சரியாக ஒரு மாதத்திற்குப் பின் கூடிய 'இஸ்லாமிய காங்கிரஸ்' கூட்டத்தில் கலந்து கொண்ட 45 இஸ்லாமிய நாடுகளில் 44 நாடுகள் கொமெய்னியின் ஃபத்வா இஸ்லாத்திற்கு விரோதமானது எனக் கண்டித்தன. கொமெய்னியின் ஈரான் மட்டும் தனிமைப்படுத்தப்பட்டது. பெரிதும் மதிக்கப்படக்கூடிய கெய்ரோவின் அல்-அஸ்ஹர் மதரஸாவும் கூட இந்த ஃபத்வா இசுலாமியச் சட்டத்திற்கு விரோதம் எனக் கூறியது.

எனினும் மேலைப் பத்திரிகைகள் அனைத்தும் ஏதோ உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் ருஷ்டியின் ரத்தத்திற்காக வெறி கொண்டு அலைவது போலவே சித்திரித்தன, உருவ வழிபாட்டைக் கடுமையாக

மறுக்கும் இஸ்லாமிய இறைத் தூதரின் 'படத்தை'க் கொண்டிருந்த அந்த நூல் உலகெங்கிலுமிருந்த முஸ்லிம் மக்களின் மனத்தை எந்த அளவிற்குப் பாதித்திருக்கும், எத்தகைய வேதனையையும் வெப்பத்தையும் உருவாக்கியிருக்கும் என்பதைப் பற்றி அவர்கள் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை.

செப்டம்பர் 11, 2001-ல் உலக வர்த்தக மையம் தாக்கி அழிக்கப்பட்ட பின்பும் இதேபோன்ற பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. தாடி வைத்தவர்களையெல்லாம் முஸ்லிம்கள் எனக் கருதித் தாக்கக்கூடிய நிலை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் ஏற்பட்டது. சமயப் பொறையை வற்புறுத்தி மக்காவில் அருளப்பட்ட புனித வசனங்களை எல்லாம் புறந்தள்ளிவிட்டுக் குறிப்பான போர்ச் சூழலின்போது மதீனாவில் அருளப்பட்ட புனித வசனங்கள் சிலவற்றைச் சூழலிலிருந்து விலக்கிச் சுட்டிக்காட்டி இஸ்லாம் வன்முறையைப் போதிக்கும் மதம் என்கிற பிரச்சாரம் முடுக்கப்பட்டது.

மேலை நாகரீகத்தின் இன்னும் இரு முக்கிய மதங்களான யூத, கிறிஸ்தவ மதப் புனித நூல்களிலிருந்தும் கூட இது போன்ற 'வன்முறையைத் தூண்டும்' வசனங்களைச் சுட்டிக்காட்ட இயலும் என்பதை அவர்கள் வசதியாக மறந்து போனார்கள்.

யூதர்களின் புனித நூலாகிய 'டோராஹ்'வில் (தோரா) இஸ்ரேலியர்களுக்குத் திரும்பத் திரும்ப ஒரு அறிவுரை கூறப்படுகிறது. 'உறுதி அளிக்கப்பட்ட நாட்டிலிருந்து' (Promised Land - ஜோர்டான் ஆற்றிற்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடைப்பட்ட பலஸ்தீனப் பகுதி) பூர்வ குடிகளாகியப் பலஸ்தீனியர்களை விரட்ட வேண்டும்; அவர்களது புனிதச் சின்னங்களை அழிக்க வேண்டும்; அவர்களோடு எந்த உடன் படிக்கைகளையும் ஏற்படுத்தக்கூடாது, என்பனவே யூதப் புனித மறை இஸ்ரேலியர்களுக்கு அளிக்கும் அறிவுரை.

பலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறைகளை நியாயப்படுத்துவதற்கு யூதத் தீவிரவாதிகளில் சிலர் இந்தப் புனித வசனங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனாலும் யூத மதத்தைப் பற்றி முழுமையாகப் புரிந்தவர்கள் யாரும் இத்தகைய வெறுப்பு அறிவுரைதான் அதன் சாரமான பண்பு என ஏற்கமாட்டார்கள். யூதத் தீவிரவாதிகள் தமது வன்முறை நடவடிக்கைகளுக்கு இவ்வசனங்களைப் பயன்படுத்துவது நியாயமற்ற செயல் என்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

அதேபோலத்தான் புனித பைபிளிலும் கூட ஏசு அன்புவடிவானவராகத் தோற்றமளித்த போதிலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் இதற்கு மாறான பண்புடன் பேசுவதையும் செயல்படுவதையும் காண இயலும். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் 'நான் அமைதியைக் கொண்டு வருவதற்காக வரவில்லை, வாளை எடுப்பதற்காகவே வந்தேன்' என்று கூடக் கூறுகிறார்.

*ஆனால், மிகச் சமீபத்தில் ஸ்பெரபெர்னிகாவில் பல்லாயிரக்கணக்கான (குறைந்தபட்சம் எண்ணாயிரம் பேர்) முஸ்லிம்களைக் கிறிஸ்தவ செர்பியர்கள் கொன்று குவித்தபோது மேற்குறித்த ஏசுவின் சொற்களைச் சுட்டிக்காட்டிக் கிறிஸ்தவம் வன்முறையைப் போதிக்கும் மதம் என யாரும் சொல்லவில்லை. அப்படிச் சொல்வது நியாயமுமாகாது என்பது வேறு விசயம்.*

*மேலைச் சமூகம் என்றைக்கும் இஸ்லாத்தை அனுசரித்துப் போனதில்லை, அரைகுறைப் புரிதலுடனும், அறிந்து கொள்ளும் முனைப்பற்ற இறுமாப்புடனுமே இஸ்லாத்தை அது அணுகி வந்துள்ளது. ஒரு சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.*

*ஆத்திரம் கொண்ட முஸ்லிம்கள் சல்மான் ருஷ்டியின் 'சாத்தானின் கவிதைகள்' நூற் பிரதிகளை பிராட்ஃபோர்டு நகரின் வீதிகளில் போட்டு எரித்த காட்சியைப் பிரிட்டிஷ் தொலைக்காட்சிகள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பியதை நாம் அறிவோம். முஸ்லிம்கள் சகிப்புத்தன்மை யற்றவர்கள் எனக் காட்டுவதற்கு இதை ஒரு வாய்ப்பாக அவர்கள் பயன்படுத்தினர். கிறிஸ்தவ சமுதாய வரலாற்றில் இதுபோன்ற புத்தகங்களைத் தடை செய்வதும் போட்டு எரிப்பதும் நடந்திராத காரியமல்ல என்பதை அவர்கள் சவுகரியமாக மறந்தனர்.*

*ஒரு சம்பவம்: கி.பி. 1242-ம் ஆண்டு. அன்று பிரான்சை ஆண்டு கொண்டிருந்தது பதினைந்தாம் லூயி மன்னன். பின்னாளில் கத்தோலிக்க மதத்தால் புனித லூயி ஆக அறிவிக்கப்பட்டவர் அவர். யூதர்களின் 63 நூற்கள் அடங்கிய மதச் சட்டத் தொகுதி 'யூதேய தால்முட்' எனப்படும். லூயி அதைத் தடை செய்தார். கிறிஸ்துவைப் பற்றிய வஞ்சகம் நிறைந்த தாக்குதல்கள் தால்முட்டில் உள்ளன என்றார் லூயி. தடை செய்யப்பட்ட அந்நூல் அரசனின் முன்னால் கொளுத்தப்பட்டது. பிரான்சில் இருந்த யூத சமுதாயத்துடன் எந்த விவாதத்திற்கும், பேச்சுவார்த்தைகளுக்கும் லூயி தயாராக இல்லை. "யூதர்களுடன் ஏதாவது விவாதம் நடத்த வேண்டுமெனில் அவர்களது வயிறுகளில் ஆழமாக வாளைச் சொருகுகிற வடிவத்தில்தான் அது இருக்க முடியும்" எனவும் புனித லூயி அறிவித்தார்.*

*கிறிஸ்தவ அவநம்பிக்கையாளர்கள் மீது முதல் மத விசாரணையை நிறுவியதும் அவரே. விசாரணையின் இறுதியில் நூற்றுக்கணக்கில் அவர்களது நூற்கள் மட்டுமல்ல அவர்களும் உயிரோடு கொளுத்தப் பட்டனர். இஸ்லாமிய உலகின்மீது முதல் சிலுவைப் போரைத் தொடங்கியவரும் இவரே. இவரைப் புனித லூயியாகக் கத்தோலிக்க கிறிஸ்தவம் ஏற்றுக்கொண்டதை நாம் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியதாகிறது. கலீலியோ உள்ளிட்ட அறிவியலாளர்கள், சிந்தனையாளர்கள் பலரும் இவ்வாறு மரண தண்டனைக் குள்ளாக்கப்பட்டதையும் மறந்து விட இயலாது.*

இவையெல்லாம் ஏதோ பழைய கதைகள்தானே எனவும் நாம் நினைக்க வேண்டியதில்லை. சில வாரங்களுக்கு முன்பு (ஆக. 2003) ஆஸ்திரேலியக் கன்னியர் மடம் ஒன்றில் இன்று உலகெங்கிலும் பெரிய அளவில் விற்பனையாகும் 'ஹாரி பாட்டர்' நாவல்கள் தடை செய்யப்பட்டு உள்ள செய்தி பத்திரிகைகளில் வந்தது. கிறிஸ்தவத்தால் அங்கீகரிக்கப்படாத மந்திர தந்திரங்கள் நிறைந்ததாகப் பாட்டர் கதைகள் அமைந்துள்ளன என்பது குற்றச்சாட்டு. இது சரியா, தவறா என்கிற கேள்விகள் ஒருபுறம் இருக்கட்டும். இவையெல்லாம் கிறிஸ்தவம் எந்த அளவிற்குச் சகிப்புத் தன்மையற்ற மதமாக உள்ளது என்பதற்கு உதாரணங்கள் ஆகாதா?

கி.பி. 850-ல் நடந்த இன்னொரு நிகழ்ச்சி: ஸ்பெயினில் இஸ்லாமிய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். பலதரப்பட்ட மதங்கள் நடைமுறையிலிருந்து அரபு நாட்டில் தோற்றம் கொண்ட இஸ்லாம் மற்ற மதங்களை அழித்தொழிக்க நினைத்ததில்லை. சொல்லப் போனால் யூதத்தையும், கிறிஸ்தவத்தையும் அது தனக்குச் சாதகமான மதங்களாகவே ஏற்றுக்கொண்டது. மற்றவர்களின் இறைத்தூதர்களையும், அவர்களின் இறை வெளிப்பாடுகளையும் ஏற்றுக்கொள்கிற ஒரே மதம் இஸ்லாம் மட்டுமே. ஸ்பெயினிலும் கூட கிறிஸ்தவர்கள் தமது மதத்தைத் கடைபிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும் பூரண சுதந்திரம் இருந்தது. ஒரே ஒரு நிபந்தனைதான்: முஸ்லிம்களின் நேசத்திற்குரிய இறைத்தூதராகிய முஹம்மது நபிகளை அவர்கள் அவமதிக்கக் கூடாது.

ஸ்பெயினில் இருந்த கிறிஸ்தவர்கள் முஸ்லிம் ஆளுகையை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவத்தைக் கடைபிடித்து வந்தனர். 'மொஸாரப்'கள் என அவர்கள் அழைக்கப்பட்டனர். அரபி நூற்களையும், கவிதைகளையும், இலக்கியங்களையும் அவர்கள் விருப்புடன் கற்றனர். இந்தச் சூழலில் பர்ஃபெக்டஸ் என்கிற ஒரு கிறிஸ்தவத் துறவி கார்டோவா நகரின் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்தபோது ஒரு சில அரபியர்கள் அவரிடம், 'ஏசு, முஹம்மது இவர்களில் யார் பெரியவர்?' என்று கேட்டனர். இது ஒரு வம்பான கேள்விதான். பதில் கூறுவதைத் தவிர்த்து விட்டு அங்குள்ள காஜியிடம் அவர் புகார் செய்திருக்கலாம். ஆனால் அவர் திடீரென வெடித்துச் சீறினார். ஒரு மனநோயாளி போல நடந்து கொண்டார். நபிகளை ஒரு போலி எனவும், பாலியல் வெறியர் என்றும், எதிர்க் கிறிஸ்து என்றும் பலவாறு தூற்றினார். உடனடியாக அவர் அங்கிருந்து அகற்றப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

தேவையற்ற முறையில் பர்ஃபெக்டஸ் வம்பிழுக்கப்பட்டதை உணர்ந்த காஜி உடனடியாக அவருக்குத் தண்டனை எதுவும் வழங்காமல் காலங்கடத்தினார். ஆனால் பர்ஃபெக்டஸ் ஒரு மனநோயாளியைப் போல மீண்டும் மீண்டும் நபிகளை இழிவு செய்து பேசினார். இறுதியில் அன்றைய சட்டப்படி அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கிறிஸ்தவர்களில் சிலர் அவரது உடலை வெட்டித் துண்டுகளாக்கிக் கொண்டு சென்று வழிபடத் தொடங்கினர். சில நாட்களில் இஷாக் என்கிற இன்னொரு பாதிரி காஜியின் முன்தோன்றி நபிகளையும், இஸ்லாத்தையும் வெறித்தனமாக இழிவு செய்தார். ஒருவேளை குடிபோதையில் இருப்பாரோ என்று எண்ணி அவரை நினைவுக்குக் கொண்டு வர முயற்சிக்கப்பட்டது. எனினும் அவர் தொடர்ந்து நபிகளை இழிவு செய்யவே அவருக்கும் தண்டனை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தொடர்ச்சியாக மேலும் பல கிறிஸ்தவர்கள் இவ்வாறு காஜி முன் தோன்றி நபிகளை இழிவு செய்வதை ஒரு இயக்கமாகத் தொடர்ந்தனர்.

கார்டோவா நகரின் பேராயரும் இதர மொஸாரப்புகளும் கிறிஸ்தவர்களின் இந்த நடவடிக்கைகளை ஆதரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் யூலோஜியோ, பால் ஆல்வாரோ என்ற இரு கிறிஸ்தவப் பாதிரிகள் தம்மைக் ‘கடவுளின் வீரர்கள்’ என அழைத்துக் கொண்டு இத்தகைய நடவடிக்கைகளைத் தூண்டினர். சுமார் 600 ஆண்டு காலம் யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களும் இணைந்து வாழ்ந்து சமய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய ஸ்பெயின் நாட்டு வரலாற்றில் இச்சம்பவம் ஒரு களங்கமாகவே அமைந்தது. கிறிஸ்தவ மதமும் இதர கிறிஸ்தவ நாடுகளும் யூலோஜியோ மற்றும் ஆல்வாரோவின் நடவடிக்கைகளை ஆதரிக்காத போதும் அவர்கள் நபிகள் பற்றியும் இஸ்லாம் பற்றியும் பரப்பியக் கருத்தை மேலை உலகம் மவுனமாக ஏற்றுக்கொண்டது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

‘இறுதி நாட்களில் எதிர் கிறிஸ்து ஒருவர் தோன்றி ஆட்சி புரிவார் எனப் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டிய இவர்கள் இதற்கான தயாரிப்பே முஹம்மதின் வருகை என வாதிட்டனர். புனித பைபிளிலுள்ள தெசெலோனியர்களுக்கான இரண்டாம் திருமுகத்தில் ஒரு பெரும் எதிர்க் கிளர்ச்சி எழுந்த பிறகே ஏசு மீண்டும் தோன்றுவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எருசலேம் திருக்கோவிலில் தனது ஆட்சியை நிறுவும் இக்கிளர்ச்சியாளன் பொய்யான செய்திகளையும் வேதங்களையும் உலகிற்கு அளித்து ஏமாற்றுவான் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 666 என்றும் மர்ம எண்ணுள்ள ஒரு மிருகம் நரகத்திலிருந்து ஊர்ந்து வந்து ‘கோவில் மலை’யில் தன்னை நிறுவிக்கொண்டு உலகை ஆளும் எனவும் பைபிளிள் ஒரு குறிப்பு உள்ளது. இவையனைத்தும் நபிகளையும் அவர் காட்டிய புதிய நெறிகளையுமே குறிக்கின்றன என யூலோஜியோவும் ஆல்வாரோவும் பிரச்சாரம் செய்தனர். கி.பி. 638-ல் எருசலேமைக் கைப்பற்றிய முஸ்லிம்கள் கோவில் மலையில் (Temple Mount) ஒரு அழகிய மசூதியை நிறுவினர். பெரும் நிலப்பரப்பை ஆளவும் தொடங்கினர். தவிரவும் யூலோஜியோவும் ஆல்வாரோவும் நபிகளின் வாழ்க்கை வரலாறு ஒன்றை கையில் வைத்திருந்தனர். அதன்படி ஸ்பெயின் சகாப்தத்தின் 666-ம் ஆண்டு நபிகள் மரணமடைந்தார். எல்லாவற்றையும் இணைத்துப் புரட்டி நபிகள்

நாயகத்தை எதிர் கிறிஸ்துவாகக் கட்டமைத்துப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நபிகளின் வாழ்க்கை வரலாறு பாம்ப்லோனாவுக்கு அருகிலுள்ள லெய்ர் துறவி மடத்திலிருந்த கிறிஸ்தவப் பாதிரிமார்களால் எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் உருவாக்கப்பட்டது. இஸ்லாமிய அரசு விரைவாகப் பரவி வந்த நேரம் அது. அரசியல் ரீதியான அச்சம் தவிர மத ரீதியான பல அய்யங்களும் மேலைக் கிறிஸ்தவர்களைக் குழப்பிய கால கட்டம். இப்படி ஒரு 'புனிதமற்ற' நம்பிக்கை பரவுவதற்கு கடவுள் எப்படி அனுமதித்தார் என்கிற கேள்வி அவர்களை வாட்டியது. இந்தப் பின்னணியில்தான் அந்த வாழ்க்கை வரலாற்றை அவர்கள் எழுதினர். இதில் நபிகள் ஒரு ஏமாற்றுக்காரராகவும், போலி இறைத் தூதராகவும் சித்திரிக்கப்பட்டார். அவர் ஒரு காமுகர் எனவும் சதா சிற்றின்பச் சகதியில் புரளுபவர் எனவும் தன்னைப் பின்பற்றியவர்களையும் அப்படியே வாழ்வதற்கு வழிகாட்டியவர் எனவும் ஏசப்பட்டார். கடுமையான துறவு வாழ்க்கையை வற்புறுத்திய கிறிஸ்தவம் நபிகள் பல மனைவியரை மணந்திருந்ததை மிகவும் அய்யத்துடனும் அருவெறுப்புடனும் நோக்கியது.

அன்றைய அரபு வாழ்க்கை முறையையும், கலாச்சாரத்தையும், அரசியல் பின்னணியையும், இறைவனால் தனது திருத்தூதராகத் தேர்வு செய்யத்தக்க மாண்பைப் பெற்றவராயினும் மக்களோடு மக்களாக வாழ்ந்து மரித்து ஒரு சாதாரண மனிதராகவே நபிகள் வரலாற்றில் தடம் பதித்துள்ளார் என்பதையும் புரியாமையின் விளைவே அது. முழுமையாகப் புரிந்து கொள்ள அவர்களுக்கு இயலாதபோதும் இதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி நபிகளின் பாலியல் வாழ்வைக் கொச்சைப்படுத்திப் பிரச்சாரம் செய்வதற்கு மேலை நாகரிகம் என்றும் தயங்கியது இல்லை. பல மனைவியரை மணந்து கொண்டார், குழந்தைப் பருவத்தினரையும் மணந்து கொண்டார், திருமணத்திற்கு அப்பாலும் உறவுகளைக் கொண்டிருந்தார் என்றெல்லாம் கருத்துக்கள் பரப்பப்பட்டன.

'இஸ்லாம் என்பது ஏக இறைவனால் நபிகளுக்கு அருளப்பட்ட ஒரு மார்க்கமல்ல; கிறிஸ்தவத்தின் தோல்வியடைந்த ஒரு பிரிவுதான் அது; போரையும் கொலை வெறியையும் போற்றிய மதம்; வாள் முனையில் பிற மதத்தினரை மாற்றிய ஒரு மார்க்கம்' என்றெல்லாம் இஸ்லாம் குறித்த ஒற்றைப் பிம்பம் அய்ரோப்பிய நாடுகளில் கட்டமைக்கப்பட்டது. இத்தகைய கற்பிதங்களின் பின்னணியில்தான் இஸ்லாமிய உலகின் மீது சிலுவைப் போர்களும் ஏவப்பட்டன. நபிகள் நாயகத்தை 'மகூந்த்' என இக்கற்பிதங்கள் குறிப்பிட்டன.

முதல் சிலுவைப் போரின்போது இயற்றப்பட்ட 'ரோலந்த் பாடலில்' (Song of Roland) முஸ்லிம்கள் குறித்த மேலை நாகரிகத்தின் அறியாமை

வெளிப்படுகிறது. சார்ல்மேன் மற்றும் ரோலத்திலுள்ள முஸ்லிம்கள் சிலை வழிபாட்டாளர்களாக அப்பாடலில் சித்திரிக்கப்படுகின்றனர். அப்போலோ, டெர்வாகன்ட், மஹமெத் என்கிற மூன்று கடவுள்களை வணங்குபவர்களாகவும் குறிப்பிடப்பட்டனர்.

1097-ல் டோரிலேயிலும் 1099-ல் எருசலேமிலும் வெற்றிகளைக் குவித்த அய்ரோப்பியர் முஸ்லிம்களைச் சகமனிதர்களாகவே கருதவில்லை. புனித நகரங்களைக் கைப்பற்றியிருந்த கிருமிகளாகவே அவர்கள் கருதப்பட்டனர். எருசலேம் வீதிகள் முஸ்லிம்களின் ரத்தத்தால் நனைந்தன.

நபிகள் பற்றி மேலை நாகரிகம் இட்டுக் கட்டிய கதைகளில் சில: ஒரு வெள்ளை எருது மக்களைப் பயமுறுத்தி வந்தது. அதன் கொம்புகளுக்கிடையே புனித குர்ஆன் எந்தப் பிடிமானமும் இன்றி அதிசயமாக நீந்திக் கொண்டிருந்தது. இன்னொரு கதையின்படி முஹம்மது அவர்கள் ஒரு புறாவுக்கு பயிற்சியளித்து வளர்த்து வந்தாராம். தனது காதுகளில் பட்டாணிக் கடலையை நிரப்பி, புறாவைத் தோளில் உட்கார வைத்துக் கொள்வாராம். புறா ஒவ்வொரு கடலையாகக் காதிலிருந்து கொத்திக் கொத்தித் தின்னும். புனித ஆவி காதுக்குள் குர்ஆனை ஓதுவதாக ஒரு பிரம்மையை நபிகள் இப்படி ஏற்படுத்துவாராம்.

புனித இறை வசனங்கள் நபிகள் வழியாக இறங்கியபோது அவர் அடைந்த உடல் வதைகளையும், பரவசங்களையும் வெறும் காக்காய் வலிப்பு எனவும் அவர்கள் அவதூறு இழைக்கத் தயங்கவில்லை.

ருஷ்டியின் 'சாத்தானின் கவிதைகள்' நூலில் புனைந்து காட்டப்படும் 'மகூந்த்' என்னும் பாத்திரம் மேற்குறித்த மேலைத் தேயக் கட்டுக் கதைகளின் தொடர்ச்சியாகவும் எதிரொளிப்பாகவும் கட்டமைக்கப் பட்டுள்ள உண்மையை அந்நூல் மீது விதிக்கப்பட்ட ஃபத்வா பற்றிய விமர்சனங்களின்போது நாம் மறந்து விட இயலாது.

# இஸ்லாமின் சகிப்புத்தன்மை

4

நபிகள் நாயகம் ஒரு வரலாற்று மனிதர். மக்களின் கண்முன் அவர்களில் ஒருவராக வாழ்ந்தவர். ஒரு புதிய 'தீனை' (வாழ்வியல் நெறியை) மட்டுமல்ல அதைப் பின்பற்றுகிறவர்களின் சமத்துவமும் நீதியும் மிக்க ஒரு 'உம்மா'வை (சமூகத்தை) நிறுவியவர்; ஒரு அரசை உருவாக்கியவர் என்கிற ரீதியில் நபிகளை ஏற்றுக்கொள்ள மறுத்த மேலைச் சமூகம் தொடர்ந்து அவரைப் புனைந்து கட்டப்பட்ட ஒரு கற்பிதமாகவே அணுகியது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த டொமினிக்கன் ஆய்வாளராகிய ரிக்கால்டோடா மான்டி க்ரூஸ் முஸ்லிம் நாடுகளில் விரிவான சுற்றுப்பயணங்களை மேற்கொண்டார். முஸ்லிம்களின் இறை நம்பிக்கையையும், தூய நெறியையும் கண்டு வியந்து குறிப்புகள் எழுதினார். எனினும் அவர் நாடு திரும்பியபின் எழுதிய 'டிஸ்ப்யூடேஷியோ' என்கிற புகழ்பெற்ற நூலில் மீண்டும் பழைய பல்லவியையே பாடினார். நபிகளை ஒரு பொய்யராகவும் ஏமாற்றுக்காரராகவும் சித்திரித்தார்.

கத்தோலிக்கக் கிறிஸ்துவத்தை எதிர்த்துப் புதியதொரு சீர்திருத்தக் கிறிஸ்தவத்தைத் தோற்றுவித்த மார்டின் லூத்தரும் அவரைப் பின்பற்றிய பிறரும் கூட நபிகளையும் இஸ்லாத்தையும் இழிவு செய்வதை நிறுத்தவில்லை. மேற்குறித்த மான்டி க்ரூசின் 'டிஸ்ப்யூடேஷியோ' நூலை லூத்தரே மொழிபெயர்த்து அதற்கொரு முன்னுரையும் எழுதினார். மான்டி க்ரூசின் நூலைத் தான் முன்பே படித்ததாகவும் இஸ்லாத்தைக் குறித்து அதில் இழிவாக எழுதியுள்ளதை அப்போது நம்பவில்லை எனவும் எழுதிய லூத்தர் தற்போது தன்னிடம் குர்ஆனின் லத்தீன் மொழி பெயர்ப்பு ஒன்று உள்ளதாகவும், அதைப் படிக்கும்போதுதான் க்ரூஸ் எழுதியிருப்பதெல்லாம் உண்மை என்பதைத் தான் புரிந்து கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

முஹம்மதும் முஸ்லிம்களும் எதிர்க் கிறிஸ்துவர்கள் என்பது உண்மையா என்கிற கேள்வியை உயிர்ப்பித்த லூத்தர் எதிர்க் கிறிஸ்துவாக உருப்பெறுகிற அளவிற்கு இஸ்லாம் தகுதியும் திராணியுமுடைய மதம் அல்ல என்று பதிலுரைத்தார். கிறிஸ்தவத்தின் உண்மையான எதிரி

போப்பும் கத்தோலிக்கச் சபைகளும்தான் என்று கூறிய லூத்தர் இந்த உள் எதிரிகளை வீழ்த்தாவிட்டால் நாம் முஹம்மதிய 'ஆபத்தை' எதிர் கொள்ள இயலாமல் தோற்க நேரிடும் என எச்சரித்தார். 'மத்திய கால அய்ரோப்பாவும் அரபியர்களும்' என்கிற அரிய நூலை எழுதிய நார்மன் டேனியல் குறிப்பிடுவது போலக் கத்தோலிக்கர்களும் சீர்திருத்தக் கிறிஸ்தவர்ககளும் இஸ்லாத்தைப் பற்றிய முழுமையான புரிதலின்றியேக் கிறிஸ்தவத்தின் எதிரிகளை இஸ்லாத்துடன் இணைத்துப் பேசி வந்தனர்.

ஸ்பெயின், இத்தாலி போன்ற அய்ரோப்பிய நாடுகளிலிருந்தக் கடைசி முஸ்லிம் வரை கொன்று குவித்து, நாடு கடத்தி, முஸ்லிம் மதத்தைத் துரத்தியடிப்பதில் ஒரளவு வெற்றி கண்ட மேலை நாகரீகம், இழந்து போன கிரேக்க ரோமத் தத்துவ அறிவியல் நூற்களையெல்லாம் மீண்டும் புத்துருவாக்கம் செய்ய இஸ்லாமிய அறிஞர்களையே நம்ப வேண்டியிருந்தது என்பது வேறு கதை. அரபி மொழியில் பொதிந்து கிடந்த பழம் கிரேக்க அறிவுச் செல்வங்களைப் புத்துருவாக்கம் செய்ததில் இப்ன் சினா, இப்ன் ரஹித் என்கிற இரு முஸ்லிம் அறிஞர்களின் பங்கு முக்கியமானது. பெருங்கவிஞனான தாந்தே தனது புகழ் பெற்ற காவியமாகிய 'தெய்விக இன்பியலில்' *(The Divine Comedy)* இவ்விரு அறிஞர்களையம் புகழ்கிறான். யூக்லிட், தாலமி, சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரின் கிரேக்க அறிவுச் செல்வங்களை மீண்டும் அய்ரோப்பியர்கள் பெறுவதற்குக் காரணமாக இருந்த இவ்விரு முஸ்லிம் அறிஞர்களும் (இவர்களை அவிசினா, அவிருஷ் என அய்ரோப்பாவில் குறிப்பிடுவர்) நரகத்தின் வெளிப்பகுதியில் நற்குணமிக்கப் புறச்சமயத்தாருடன் வாழ்கின்றனர் எனக் குறிப்பிடும் தாந்தே, ஆனால் முஹம்மது நரகத்தின் எட்டாவது குழியில் கொடூரமான தண்டனைகளை அனுபவித்துக் கொண்டிருப்பதாகக் கூசாமல் எழுதினார் *(Divine Comedy 28:22-7)*.

சமீபத்திய கதைகளுக்கு வருவோம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் 'ரோம சாம்ராஜ்யத்தின் சரிவும் வீழ்ச்சியும்' என்கிற புகழ்பெற்ற நூலை எழுதிய எட்வர்ட் கிப்பன் இஸ்லாத்தின் ஏக இறைக் கொள்கையை வெகுவாகப் புகழ்கிறார். உலக நாகரீக வரலாற்றிற்கு முஸ்லிம்களின் பங்களிப்பையும் அவர் அதில் பதிவு செய்கிறார். நபிகளைப் பற்றி அவர் விரிவாக எழுதவில்லையாயினும் கொள்ளைகளின் மூலமாகச் செல்வத்தையும் அழகிய மங்கையர்களையும் அடையலாம் என்று ஆசையை ஊட்டி அரபியர்களை முஹம்மத் வென்றெடுத்தார் எனக் கிப்பன் எழுதக் கூசவில்லை. பிரெஞ்சுப் புரட்சியின் ஊற்றுக்கண் எனக் குறிப்பிடப்படும் வால்டேரும் கூட இப்படித்தான். தான் எழுதிய கட்டுரை ஒன்றில் *(Les Moeurs)* இஸ்லாத்தைப் பற்றிச் சிறப்பாக எழுதிய வால்டேர், கட்டுரையின் இறுதியில் முஹம்மது ஒரு ஏமாற்றுக்காரர் என்பதைத் தெரிந்து கொண்டவர்கள் கூட அவரைப் பெரிய மனிதராக நினைக்கிறார்கள் எனவும், அதை அறியாதவர்கள் அவரை இறைத்தூதர்

என வணங்குகின்றனர் எனவும் குறிப்பிட்டார். 1741-ல் 'முஹம்மத் அல்லது (மத) வெறியர்' என்றொரு நாடகத்தை எழுதிய வால்டேர், தந்திரங்கள் மற்றும் பொய்கள் மூலமாக ஒரு மதத்தின் விசுவாசிகளாக மக்களை மாற்றுகிற ஏமாற்றுத்தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாக நபிகளைச் சொல்லுகிறார்.

இதுபோல இன்னும் நிறைய சொல்லிக்கொண்டே போக முடியும் என்றாலும் சுருக்கம் கருதி நிறுத்திக்கொள்வோம். இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் கூட மீண்டும் இதே அவதூறுகளையும் பொய்யையும் சற்று நவீனமான வடிவத்தில் சல்மான் ருஷ்டி செய்தார். அவரைத் தூக்கிப் பிடிக்கும் முயற்சியினூடாக மேலைச் சமூகம் அதற்கு ஏற்பு அளித்தது. ருஷ்டி மீது உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் கொண்ட ஆத்திரத்தையும் கோபத்தையும் இந்த விரிவான வரலாற்றைப் படிக்கும் நடுநிலையாளர்கள் யாரும் புரிந்து கொள்ள இயலும்.

ஆனால் இந்த அளவிற்கு வரலாற்றிற்குச் செவி கொடுக்கத் தயாராக இல்லாத பெரும்பான்மை மக்களின் மத்தியில் இஸ்லாம் ஒரு சகிப்புத் தன்மையற்ற மதம், வாள் முனையில் தன்னை வளர்த்துக் கொண்ட மார்க்கம் என்கிற பிரச்சாரம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது, படுகிறது.

திருக்குர்ஆனையும் இஸ்லாத்தின் வரலாற்றையும் நபிகளின் வாழ்க்கையையும் ஊன்றிப் படிக்கும் யாரும் இஸ்லாம் ஒரு சகிப்புத் தன்மையற்ற மதம் என்கிற கூற்றை ஏற்கமாட்டார்கள்.

அரபுச் சமுதாயத்தின் ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் தோன்றியவர் நபிகள் நாயகம். ஒரு பக்கம் பைசான்டியப் பேரரசு; இன்னொரு பக்கம் பாரசீகப் பேரரசு. நவீன மதங்களான யூத மதம் (ஜுடாயிசம்) முன்னதிலும், கிறிஸ்தவம் பின்னதிலும் கோலோச்சியிருந்தன. இடைப்பட்ட அரபு நாட்டிலோ நவீனமான ஒரு மதம் மட்டுமல்ல, ஒரு பேரரசும் உருவாகவில்லை, நவீன மதங்களுக்கு முந்திய சிறு தெய்வ வழிபாடுகளே (பகனிசம்) அங்கு விரவியிருந்தது. பேரரசு ஏதும் உருவாகவில்லையாயினும் மக்கா ஒரு பெருவணிக நகரமாக உருவாகி இருந்தது. பல்வேறு இனக்குழுக்கள் சதா ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருந்த நிலை. ஒரு பக்கம் கடும் ஏழ்மை, இன்னொரு பக்கம் பெருஞ்செல்வக் குவிப்பு. பல்வேறு சிறு தெய்வங்களை வழிபடும் நிலை. ஒரு அரசாக மட்டுமல்ல, ஒரே சமுதாயமாகவும் அவர்கள் உருப் பெறவில்லை. பழைய இனக்குழுச் சமுதாயங்களிலிருந்த சமத்துவம், நீதி, சமப்பகிர்வு முதலிய சிறந்த பண்புகளையும் இந்தப் புதிய வணிக நாகரீகம் இழந்திருந்தது. இவர்களுள் குறைஷி இனத்தவர்கள் செல்வம் மிகுந்தவர்களாகவும் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்களாகவும் விளங்கினர்.

புதிய வணிகப் பொருளாதாரத்திற்கு ஏற்ற சமூக உருவாக்கம் மற்றும் அரசு நிர்வாகம் ஆகியவற்றின் தேவையைப் பலர் உணர்ந்தனர். யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இறைத் தூதர்களை அளித்த இறைவன் இந்த அரபியருக்கு ஒரு இறைத் தூதரை அளிக்காமற் போய்விட்டானே என்ற ஏக்கமும் அவர்களுக்கு இருந்தது. இந்தப் பின்னணியில்தான் குறைஷி இனத்தில் முஹம்மத் இப்ன் அப்தல்லாஹ் என்கிற நபிகள் நாயகத்தின் பிறப்பு நிகழ்கிறது.

கி.பி. 610 ஆம் ஆண்டு ரமளான் மாதத்தில் ஒரு நாள் இந்த அரபு வணிகருக்கு ஏற்பட்ட அனுபவம் உலகவரலாற்றை மாற்றியமைத்தது. இந்த மக்கள் அனைவரது பிரச்சினைக்கும் விடிவு அளிக்கக்கூடிய இறைநெறி ஒன்றை ஏக இறைவன் தன் மூலம் அளிப்பதாக அவர் உணர்ந்தார். அடுத்த இருபத்தி மூன்று ஆண்டுகள் (ஆங்கில நாள் கணக்குப் படி இருபத்தோரு ஆண்டுகள்) திருக்குர்ஆன் நபிகளூடாக இறங்கியது என்பர். அவருக்கு அந்நெறி படிப்படியாக, ஒவ்வொரு கூற்றாக, ஒவ்வொரு அத்தியாயமாக இறைவனால் இறக்கப்பட்டது என்பது இஸ்லாமியர்களின் முதன்மையான நம்பிக்கை.

திருக்குர்ஆன் எனப்படும் இந்த அருட்செய்தியை மக்கள் மத்தியில் பரப்புவதிலும் அந்த வழிக்காட்டலின்படி பல்வேறு போராட்டங் களையும், தியாகங்களையும் மேற்கொண்டு நீதியும் சமத்துவமும் மிக்க ஒரு சமுதாயத்தை (உம்மா) உருவாக்குவதிலும் 'நபிகள் நாயகம்' எனத் தமிழ் பேசும் மக்களால் நெஞ்சார அழைக்கப்படும் இறைத்தூதரின் எஞ்சிய வாழ்க்கை கழிந்தது.

நபிகள் மூலம் அறிவிக்கப்பட்ட செய்தி மிகவும் எளிமையானது. மயிர் பிளக்கும் வாதங்களிலோ, நுணுக்கமான தர்க்கங்களிலோ நபிகள் ஈடுபட்டதில்லை. புனித குர்ஆனின் அணுகல் முறையும் அப்படியாக இல்லை. கருத்துக்குள் அடங்காத ஊக ஆய்வுகளிலும் வெட்டி விவாதங்களிலும் ஈடுபடுவதை அது ஊக்குவிப்பதில்லை. மாறாக மனிதர்கள் எல்லோரும் சமூக நீதியுடனும் சமத்துவத்துடனும் உள்ள ஒரு 'உம்மா'வாக வாழ்வதற்கான ஈடுபாடு மிக்க முயற்சியையே (ஜிஹாத்) இஸ்லாம் வற்புறுத்துகிறது.

ஏக இறைக்கொள்கையைத்தான் எடுத்துக்கொள்வோமே. அதை நிறுவுவதற்காக எந்த ஒரு தத்துவ வெட்டி வியாக்கியானங்களையும் திருக்குர்ஆன் முன்வைப்பதில்லை. அதன் அணுகல் முறை ரொம்பவும் நடைமுறை சார்ந்தது. உங்களது பழைய மதமும் அதன் பல்வேறு கடவுளர்களும் இனி உங்களுக்குப் பயன்படமாட்டார்கள் என்பதே அதன் தர்க்கமாக அமைந்தது.

> "...அந்தக் கடவுள்கள் எந்தப் பொருளையும் படைப்பதில்லை; ஏன், அவர்களே படைக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்; மேலும்

தங்களுக்குக் கூட எத்தகைய இலாபத்தையும் நஷ்டத்தையும் அளிக்கும் அதிகாரத்தையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை; மேலும் மரணிக்கச் செய்யவும், உயிர் கொடுக்கவும் (இறந்தவர்களை) மீண்டும் எழுப்பவும் அவர்களால் முடியாது" (25:3)

"அல்லாஹ்வை விடுத்து நீங்கள் வணங்குபவை அனைத்தும் வெறும் சிலைகள்தாம்! மேலும் நீங்கள் பொய்யை இட்டுக் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அல்லாஹ்வை விடுத்து யாரையெல்லாம் நீங்கள் வழிபடுகின்றீர்களோ அவர்கள் உண்மையில் உங்களுக்கு எந்த ஒரு உணவையும் அளிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. உணவை அல்லாஹ்விடமே கேளுங்கள். மேலும் அவனுக்கே அடி பணியுங்கள்; மேலும் அவனுக்கு நன்றியும் செலுத்துங்கள். அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டு செல்லப்படுவீர்கள்" (29:17)

*என்பன திருக்குர்ஆனில் வெளிப்படும் இறைவாக்குகள். அரபியர்களுக் கெனத் தான் புதிதாக ஒரு நெறிமுறையையும் தத்துவத்தையும் கொண்டு வந்துள்ளதாகவும்கூட நபிகள் எங்கும் உரிமை கொண்டாடியதில்லை. ஏக இறைவன் என்கிற பழைய கொள்கையை, இடையில் மக்கள் மறந்து போன கொள்கையை அரபிய மக்களுக்கு நினைவூட்டுவதே தமது பணி எனக் கருதினார், உரைத்தார். (80:11;16)*

*தான் ஒருவனே இறைத்தூதர் எனவும் நபிகள் உரிமை கொண்டாடியதில்லை. திருக்குர்ஆனும் அப்படிக் கூறவில்லை. இஸ்லாமிய மரபுப்படி முஹம்மதுக்கு முன்பாக 1,24,000 இறைத்தூதர்கள் இருந்துள்ளனர். எண்ணிக்கையிலடங்காதவர்கள் என்பதன் குறியீடே இந்த இலக்கம். யூதர்களும், கிறிஸ்தவர்களும் வணங்குகிற மோஸஸையும் (மூஸா) ஏசுவையும் (ஈஸா) கூட நபிகளாக ஏற்றுக்கொண்டது திருக்குர்ஆன். பழைய நபிகளையும், அவர்கள் நிறுவிய புதிய மதங்களையும் மறுப்பதற்காகவோ அழிப்பதற்காகவோ தான் வந்துள்ளதாகவும் முஹம்மது நபிகள் கூறியதில்லை. (2:128-132;61:6)*

*இப்படி மற்ற மதங்களையும் அவைகளின் இறைத்தூதர்களையும் வேறெந்த மதமும் ஏற்றுக்கொண்டதில்லை என்பது சிந்திக்கத்தக்கது. சமயப் பொறை என்பது இஸ்லாத்தின் இயல்பான, பிரிக்க இயலாத கூறாக உள்ளது.*

# 5

# பிற நம்பிக்கைகளையும் ஏற்றுக் கொண்ட இஸ்லாம்

*எல்லா மதங்களுக்கும் மிக அடிப்படையாக இருப்பது நம்பிக்கை. தமது இறைவன், அவனது அருட்செயல்கள், அவன் அளித்த வேதம், சட்டங்கள், புனிதத் தலங்கள், வழிபாட்டு முறைகள் என எத்தனையோ நம்பிக்கைகளின் அடிப்படையில்தான் ஒவ்வொரு மதமும் வேர் கொண்டுள்ளது. இந்த நம்பிக்கைகளின் இன்னொரு பக்கமாக அமைவது மற்ற நம்பிக்கைகளை ஏற்காதது; அவைகளை மறுப்பது. எனவே எல்லா மதங்களும் சக மதங்களின் நம்பிக்கைகளை ஏற்பதில்லை. ஏற்பதில்லை என்பதோடு மூர்க்கமாக மறுக்கவும் செய்கின்றன. சில நேரங்களில் மற்ற மதங்களின் கடவுளரையும், இறைத்தூதர்களையும் அவர்களுக்கு அருளப்பட்ட இறை வாக்குகளையும் வேறு வழியின்றி நடைமுறையில் ஏற்றுக்கொண்ட போதிலும் கொள்கையளவில் அவற்றை எந்த மதங்களும் முழு மனத்துடன் அங்கீகரிப்பதில்லை.*

*உலக மதங்கள் குறித்த இந்தப் பொது விதியை இஸ்லாம் மீறுகிறது. இஸ்லாம் மட்டுமே இதனை முழுமையாக மீறுகிறது. அது பிற மதங்களைச் சகித்துக் கொள்வதென்பது தவிர்க்க இயலாமையின் விளைவோ, வேறு வழியில்லாமல் நிகழ்ந்ததோ அல்ல. முஸ்லிம்களின் ஆகப் பெரிய ஒரு வேதமாகிய திருக்குர்ஆன் இதை ஏற்றுக்கொள்கிறது. நபிகள் இந்தக் கொள்கையைப் பிரச்சாரம் செய்தார். அரபு நாட்டைச் சுற்றி அன்று வழக்கத்திலிருந்த இருபெரும் மதங்களாகிய யூத மதத்தையும், கிறிஸ்தவத்தையும் அவற்றின் புனித வேதங்களையும் திருக்குர்ஆன் ஏற்றுக்கொண்டது. ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல அம்மதங்களைப் பின்பற்றுகிற மக்களை 'அஹ்ல்-அல்-கிதாப்' அதாவது 'வேதம் வழங்கப்பட்டவர்கள்' என மரியாதையுடன் விளித்தது. கிறிஸ்தவம் பிற நம்பிக்கையாளரை 'அஞ்ஞானிகள்' என இழிவு செய்யும். இந்து மதம் சமணர்களையும் பவுத்தர்களையும் 'வேத மறுப்பாளர்கள்' என நிந்தனை செய்யும். தான் நம்புகிற நான்கு வேதங்களை மட்டுமே அது ஏற்றுக் கொள்ளும். தமது வேதத்தை ஏற்காதவர்களைக் கடவுளையே ஏற்காதவர்களாக 'நாஸ்திகர்கள்' என ஒதுக்கும். இஸ்லாமோ சக மதங்களையும் சமத்துவத்துடன் அணுகியது.*

"...மேலும் அவர்களிடம் (வேதம் வழங்கப்பட்டவர்களிடம்)

கூறுங்கள்: 'எங்களுக்கு அனுப்பப்பட்டவற்றின் மீதும் உங்களுக்கு அனுப்பப்பட்டவற்றின் மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம். எங்களுடைய இறைவனும் உங்களுடைய இறைவனும் ஒருவனே! மேலும் நாம் அவனுக்கே கீழ்ப்படிந்தவர்களாக இருக்கிறோம்". (29:46)

*என்பது இஸ்லாமிய இறைவாக்கு. 'உங்களுக்கு அனுப்பப் பட்டவற்றை நாங்கள் அங்கீகரிக்கிறோம்' என்பதாக இவ்வாக்கு அமையாமல் 'உங்களுக்கு அனுப்பப்பட்டவற்றின் மீதும் நம்பிக்கை கொண்டோம்' என்று கூறப்படுவது மதங்களின் வரலாற்றில் ஒரு அதிசயம் என்றே சொல்லலாம்.*

*அப்படியானால் முஹம்மது நபிகளின் பணி என்பதென்ன? அவர் எந்த வகையில் பிற நபிகளிடமிருந்து வேறுபட்டு நிற்கிறார்? மீண்டும் மீண்டும் எண்ணற்ற நபிகளின் வாயிலாக வெவ்வேறு இன நாட்டு மக்களுக்கு என்ன சொல்லப்பட்டதோ அதையே அரபு மக்களுக்கு அவர்களது மொழியில் வழங்குவதற்காகத் தேர்வு செய்யப்பட்டவரே முஹம்மது அவர்கள். முஹம்மதால் பரப்பப்பட்ட அல்லாஹ்வின் மதம் என்பது கி.பி. 610-ல் ஹீரா மலையில் தோற்றம் கொண்டதல்ல. அது படைப்பின் நாளிலேயே தோன்றிய ஒன்று. கிறிஸ்தவர்களின் பழைய ஏற்பாடு மொழிகிற படைப்பின் வரலாற்றை திருக்குர்ஆன் ஏற்றுக்கொள்கிறது. இஸ்லாமிய நம்பிக்கைப்படி ஏக இறைவன் உருவாக்கிய முதல் கலீபா ஆதம் தான். அதன்பின் அவன் எண்ணற்ற இறைத்தூதர்களை உலகின் பல்வேறு மக்களுக்கும் அனுப்பிக்கொண்டே இருந்தான்.*

*இந்த உண்மையை நிலைநாட்டும் பொருட்டு பிற வேதங்களை மேற்கோள் காட்டுவதற்கும் திருக்குர்ஆன் தயங்குவதில்லை.*

"மேலும் மூஸா (மோசஸ்) தன் சமூகத்தாரிடம் இவ்வாறு கூறியதை நினைவு கூறுங்கள்: 'என் சமூக மக்களே! எனக்கு ஏன் துன்பம் அளிக்கிறீர்கள்? நான் அல்லாஹ்விடமிருந்து உங்களுக்காக அனுப்பப்பட்ட தூதராவேன் என்பதை நீங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள்..." (61:5)

"மர்யத்தின் (அன்னை மரியாள்) குமாரர் ஈஸா (ஏசுநாதர்) இவ்வாறு கூறியதை நினைவு கூறுங்கள்: 'இஸ்ராயீலின் வழித்தோன்றல்களே! நான் அல்லாஹ்வினால் உங்களிடம் அனுப்பப்பட்டிருக்கும் தூதராவேன். நான் எனக்கு முன்பே வந்துள்ள தவ்ராத் (யூதர்களின் தோரா) வேதத்தை மெய்ப்படுத்தக்கூடியவனாக இருக்கிறேன். மேலும் எனக்குப் பிறகு அஹமத் ('பராக்லேட்') என்னும் பெயருடைய தூதர் ஒருவர் வருவார் என்று நற்செய்தி சொல்பவனாகவும் இருக்கின்றேன்..." (61:6)

*என்று யூதர்களின் மோசஸையும் கிறிஸ்தவர்களின் ஏசுவையும் பெயர்*

*கூறி ஏற்றுக்கொள்கிறது இஸ்லாம். பேரிறைவன் என்கிற சொல்லுக்கு 'அல்லாஹ்' என்னும் திருப்பெயர் அரபு நாடு முழுமையும் புழக்கத்தில் இருந்தது. தனக்குப் பின் 'பராக்லேட்' என்றொரு தூதர் வருவதாக ஏசு சொன்னார் என்கிற கிறிஸ்தவ நம்பிக்கை இங்கே சுட்டிக் காட்டப்படுகிறது. 'பராக்லேட்' என்பது அரபிய மொழியில் 'அஹமத்' (முஹம்மத்) எனப் பெயர்க்கப்படுகிறது.*

*பிற நம்பிக்கையாளர்களை ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல. அவர்களைத் தமது நம்பிக்கையை நோக்கி இழுப்பது அல்லது கட்டாயமாகக் கொண்டு வருவது, வென்றெடுப்பது என்பதையும் இஸ்லாம் வற்புறுத்தவில்லை. அழைப்பு விடுப்பது என்பதை வற்புறுத்தலாக இஸ்லாம் முன் வைக்கவில்லை. உங்கள் நம்பிக்கை உங்களுக்கு எங்கள் நம்பிக்கை எங்களுக்கு என்கிற ரீதியில் சிந்திப்பதாகவே இஸ்லாமியச் சிந்தனை மரபு அமைந்தது.*

*மதவியல் சார்ந்த வெட்டி விவாதங்களை (ஸன்னா) இஸ்லாம் புறக்கணித்தது குறித்து முன்பே குறிப்பிட்டேன். மற்ற மதத்தினரோடு விவாதம் செய்ய நேர்ந்தால் அது பகைமை அடிப்படையில் இருக்கலாகாது என்பதையும் திருக்குர்ஆன் வற்புறுத்துகிறது. "மேலும் வேதம் வழங்கப்பட்டவர்களிடம் மிக அன்பான முறையிலன்றி நீங்கள் தர்க்கம் செய்ய வேண்டாம்" என்பது இறைவாக்கு (**29:46**). பகையோடு வந்து கொடுமை செய்ய முனைவோரிடம் அன்பெனும் பெயரில் அழிபடுவதை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லையாயினும் கொடுமையாளர்கள் அல்லாதவர்களிடம் மதத்தின் பெயரால் பகை செய்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை.*

*வற்புறுத்தி மதம் மாற்றுவதையும் குர்ஆன் வன்மையாக மறுக்கிறது. தீனில் (மத நடவடிக்கைகளில்) யாதொரு கட்டாயமோ, நிர்பந்தமோ இல்லை" (**2:256**) என்னும் புகழ்பெற்ற வசனம் இதனைத் தெளிவாக்குகிறது.*

*அப்படியானால் முஹம்மது நபிகளின் தொடக்க கால எச்சரிக்கைகள் யாரை நோக்கி அமைந்தன?*

*வேதம் அருளப்பட்ட தொடக்க ஆண்டுகளில் நபிகள் நாயகம் பெரும் அரசியல் திட்டங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. வெறும் ஒரு எச்சரிக்கையாளராகவே (நதிர்) அவர் தன்னை நிறுத்திக் கொண்டார். திருக்குர்ஆனும் அவ்வாறே மொழிந்தது.*

> "(நபியே!) நீர் எச்சரிக்கை செய்பவர் மட்டுமே ஆவீர். நாமே உம்மை நற்செய்தி சொல்பவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் நியமித்து, சத்தியத்துடன் அனுப்பியுள்ளோம். மேலும், எச்சரிக்கை செய்பவர் எவரும் வருகை தராமல் எந்தச் சமுதாயமும் இருந்ததில்லை" (35:23,24)

"போர்த்திக்கொண்டு படுத்திருப்பவரே எழுந்து எச்சரிக்கை செய்வீராக. மேலும் உம் இறைவனின் மேன்மையைப் பிரகடனப்படுத்துவீராக. மேலும் உம் ஆடைகளைத் தூய்மையாக்குவீராக. அசுத்தத்திலிருந்து விலகியிருப்பீராக. ஆதாயம் கருதிப் பிறருக்கு உதவி செய்யாதீர். உம் இறைவனுக்காகப் பொறுமையைக் கைக்கொள்வீராக" (74:1-7)

*என்பவைதான் நபிகளுக்கும் அவரைப் பின்பற்றுவோருக்கும் ஏக இறைவன் அளித்த ஆணை. எச்சரிக்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களைத் தண்டிக்கும் உரிமையை அவன் அவர்களுக்கு அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

"(நபியே!) நீர் அறிவுரை புரிந்த வண்ணம் இருப்பீராக! திண்ணமாக நீர் அறிவுரை புரிபவர் மட்டுமே ஆவீர். அவர்களை நீர் நிர்பந்திப்பவர் அல்லர். ஆனால் எவன் புறக்கணித்தானோ மேலும் நிராகரித்தானோ அவனுக்கு அல்லாஹ் கடினமான தண்டனை அளிப்பான்". (88:21-24)

*மாந்தருள் சிறந்த நபிகள் நாயகத்திற்கே தண்டிக்கும் உரிமை இல்லாத போது அல்லாஹ்வின் பெயராலோ நபிகளின் பெயராலோ அதைச் செய்கிற உரிமை நமக்கில்லை என்பது தெளிவு.*

*சரி. அந்த எச்சரிக்கைதான் என்ன?*

*குறைஷிகள் தம்மைத் திருத்திக் கொள்ளாவிட்டால் அவர்கள் சமூகம் வீழும் என்ற எச்சரிக்கைதான் அது. ஒன்று திரட்டப்படும் நாளினைப் பற்றியதே (42:7) அந்த அச்சுறுத்தல்.*

*ஆதி வழியிலிருந்து விலகிய குறைஷிகளும் மற்றவர்களும் ஏக இறைவனை மறந்தார்கள். எண்ணற்ற பல கடவுளரை வணங்கிச் சிதறுண்டனர். சதா போரில் தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர். பண்டைய இனக்குழுச் சமூகத்தின் அறவியல் மாண்புகளும் சமத்துவ நீதியும் வீழ்ச்சியுற்றன. அறியாமையும் மடமையும் கோலோச்சிய காலம் (ஜாஹிலியா) என இஸ்லாமிய மரபு இக்கால கட்டத்தைக் குறிக்கும்.*

*இப்ராஹீம் நபியால் உருவாக்கப்பட்ட மக்கா நகரம் ஒரு முக்கியமான வணிக மையமாக விளங்கியதை அறிவோம். அரபு நாட்டின் இரு முக்கிய வணிகப் பாதைகள் சந்திக்கும் புள்ளியாக அது அமைந்தது. செங்கடலின் கிழக்குக்கரை வழியாகச் சென்று யேமன், சிரியா, பலஸ்தீனம், ட்ரான்ஸ் ஜோர்டான் ஆகியவற்றை இணைத்த ஹிஜாஸ் சாலையும் யேமனை ஈராக்குடன் இணைத்த நஜ்த் சாலையும் சந்தித்துக் கொண்ட புள்ளியாக அமைந்து பணம் கொழித்த நகரமாக அது வளர்ந்திருந்தது. நகரத்தின் ஆதிக்க சக்திகளாக குறைஷி இனத்தவர் விளங்கினார்.*

*மக்கா நகரத்தின் வணிக வெற்றிக்குக் காரணம் இப்ராஹீம் நபிகளால்*

நிர்மாணிக்கப்பட்ட கஅபா வணக்கத் தலம்தான் என்கிற நம்பிக்கை குறைஷிகளிடம் மட்டுமல்லாது மக்காவின் மீது ஒரு கண் வைத்திருந்த அபிசீனியப் பேரரசு உட்படப் பலரிடமும் இருந்தது. அரபு நாடு முழுமையிலிருந்தும் ஆண்டுதோறும் கஅபா தலத்திற்கு ஹஜ் யாத்திரை வரும் வழக்கம் இருந்து வந்தது. கிறிஸ்தவர்களாக மாறிய அரபியர்களும் கூடத் தங்கள் கடவுளை ‘அல்லாஹ்’ என்று அழைத்துக் கஅபாவிற்கு ஹஜ் யாத்திரை வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபியா அன்று அபிசீனியா வசம் இருந்தது. சவூதியின் அபிசீனிய ஆளுநராக இருந்த அப்ரஹா, கஅபா தலத்திற்குப் போட்டியாக பளிங்கினாலான ஒரு அழகியக் கிறிஸ்தவ ஆலயமொன்றை சானாவில் கட்டி யாத்ரிகர்களை அங்கே ஈர்க்க முயற்சித்துத் தோற்றார். இது குறித்த இஸ்லாமிய மரபில் சுவையான கதையொன்றுண்டு. பெரும் படைகளுடன் மக்காவை முற்றுகையிட வந்தவர்கள் பிளேக் நோயால் தாக்குண்டுப் பின்வாங்க நேர்ந்தது. குறைஷிகள் இதை இறைவனால் அருளப்பட்ட அதிசயமாக நம்பினர். அபிசீனியர்கள் தம்முடன் ஒரு யானையை அழைத்து வந்தனர். அரபு நாட்டுக்குப் புதிதான அந்த பெரும் மிருகத்தை மக்கா மக்கள் கண்டு வியந்தனர். அதிர்ச்சி அடைந்தனர். எனினும் புனித நகருக்கு அருகில் வந்தவுடன் அந்த யானை மண்டியிட்டு வீழ்ந்தது. அத்தோடு முடியவில்லை. கடற்கரையிலிருந்து ஒரு பறவைக் கூட்டத்தை அனுப்பினான் இறைவன். அவை உதிர்த்த ஒரு வகை விஷக் கூழாங் கற்களின் விளைவாகத் தோன்றிய கொப்புளங்களால் கலங்கிய அபிசீனியர்கள் தோற்றோடினர். கஅபா தலம் குறித்தும் குறைஷிகள் குறித்தும் ஒரு அச்சமும் மரியாதையும் சுற்றி இருந்த அனைத்து மக்களுக்கும் உருவாயின.

# 6

# உம்மி நபி

திருக்குர்ஆனில் முஹம்மது 'உம்மி நபி' என அழைக்கப்படுகிறார். 'கல்லாதவர்', 'எழுதப் படிக்க அறியாதவர்' என்பது இதன் பொருள்.

கூர்ந்த அறிவும், வரலாற்றுச் சிந்தனையும், வணிகத் திறமையும், அரசியல் சாதுரியமும் மிக்க முஹம்மது அவர்கள் இயல்பில் எழுதப் படிக்க அறியாதவராக இருந்தமை அவர்பாலுள்ள மரியாதையையும் வியப்பையும் நமக்கு அதிகரிக்கவே செய்கிறது.

எனினும் நபிகளாரை அப்படிச் சொல்லிவிட இயலாது என்கிற கருத்தில் 'உம்மி நபி' என்பதன் உண்மையான பொருள் 'எழுதப் படிக்க அறியாத ஒரு சமூகத்திற்கான இறைத்தூதர்' என்பதுதான் என்கிற விளக்கத்தை அளிப்பவர்களும் உண்டு. இன்னும் சிலர் 'உம்மி' என்னும் சொல் 'உம்மா' (சமுதாயம் - மக்கள்) என்கிற வேர்ச் சொல்லிலிருந்து உருவாகியது; எனவே முஹம்மது அவர்கள், ஒரு உண்மையான 'மக்களின் நாயகராக' விளங்கியதையே 'உம்மி நபி' என்னும் சொல்லாட்சி குறிப்பிடுகிறது என்கிற விளக்கத்தையும் முன் வைப்பர்.

எனினும் தொடக்க கால வரலாற்று நூல்கள் எதிலும் இளமையில் முஹம்மது அவர்கள் வாசிப்பு மற்றும் எழுத்துப் பயிற்சி மேற்கொண்டதற்கான ஆதாரங்கள் இல்லை. ஏதேனும் கடிதங்கள் எழுதத் தேவை ஏற்படும்போது, அலீ முதலிய எழுத்தறிவுடைய தோழர்களிடமும் உதவியாளர்களிடமும் நபிகள் சொல்லச் சொல்ல அவர்கள் எழுத அக்கடிதங்கள் உருவாக்கப்பட்டன என அறிகிறோம்.

எப்படியோ எழுத்தறிவு வளர்ச்சியுறாத ஒரு சமூகத்தில் அவர்களுள் ஒருவராகத் தோன்றி அச்சமூக விடுதலையைத் தன் வாழ்நாளில் சாதித்துக் காட்டிய நபிகளார் அம்மக்களின் பிரச்சினைகளை அவற்றின் முழுப் பரிமாணங்களோடும் அறிந்தவராக இருந்தார். சதா அவை குறித்த சிந்தனை வயப்பட்டவராகவே இருந்தார். தமது பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் சக மதங்களின் வேத நூற்கள் சொல்கிற வரலாறுகள் முதலியவற்றையெல்லாம் முழுமையாக அறிந்தவராக, அவை குறித்த தேர்ந்த ஞானமுடையவராக இருந்தார்.

*தனியாக இருக்கும் நேரங்களிளெல்லாம் இம்மக்களின் பிரச்சினைகள் குறித்தும் அவர்களின் விடுதலை குறித்துமே சிந்திப்பவராக இருந்தார். நீதியும் சமத்துவமுமிக்க ஒரு சமூகத்தை அவர்களுக்கென உருவாக்குதல் பற்றியே எண்ணியிருந்தார். ஏக இறைவனிடமும் அது குறித்தே அவர் இறைஞ்சினார். இத்தகைய செயல்பாடுகளின் உச்சமாக இறைவனின் திருவாக்குகள் அவரில் இறங்கின. அவை என்றென்றைக்குமான மானுட விடுதலை குறித்த சிந்தனைகளாக மட்டுமின்றி அவ்வப்போதைய பிரச்சினைகளுக்கான வழிகாட்டல்களாகவும் அமைந்தன. ஒவ்வொரு இறை வெளிப்பாடும் அவரில் இறங்கியபோது அவர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அடைந்த பாடுகள் நம்மை நெக்குருக வைக்கின்றன. "என்னிலிருந்து என் உயிர் (Soul) கிழித்தெறியப்படுவது போன்ற உணர்ச்சியை அடையாமல் எந்த ஒரு இறை வெளிப்பாடையும் நான் அடைந்ததில்லை". என்பது நபிகளின் வாக்கு (மாக்ஸிம் ரோடின்சன் மேற்கோள் காட்டும் 'ஜலால் அல்-தின் சுயூதி' யின் கூற்று).*

*முந்தைய இறைத்தூதர்கள் குறித்த அவரது அறிவும், இறை வழிகாட்டலும் முஹம்மதின் சிந்தையில் ஏற்படுத்திய தாக்கங்களை நாம் இந்தப் பின்னணியில்தான் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக இப்ராஹீம் நபி (ஆபிரகாம்) மற்றும் அவரது மகன் இஸ்மாயில் குறித்த அவரது புரிதலை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.*

> "இப்பொழுது இப்ராஹீமின் வழிமுறையை யார் புறக்கணிப்பார்? தன்னைத் தானே எவன் மூடனாக்கிக் கொண்டானோ! அவனைத் தவிர இப்ராஹீமையே நாம் திண்ணமாக இவ்வுலகில் (எமது பணிக்காக) நாம் தேர்ந்தெடுத்தோம். ... (அவருடைய நிலை எத்தகையதாக இருந்த தென்றால்) அவருடைய இறைவன் 'நீர் முஸ்லிமாகி விடுவீராக என அவரிடம் கூறினான். அதற்கு அவர் (உடனே) பதில் கூறினார்: 'அகிலமனைத்தின் அதிபதிக்கு நான் (கீழ்ப்படிந்த) முஸ்லிமாகி விட்டேன்'... யஃகூபை மரணம் நெருங்கியபொழுது நீங்கள் அங்கிருந்தீர்களா என்ன? (அவர் மரணிக்கும் தருவாயில்) தம் மக்களிடம் வினவினார்: 'மக்களே! எனக்குப் பின்னர் நீங்கள் எதை வணங்குவீர்கள்?' அதற்கு அவர்கள் அனைவரும் பதிலளித்தனர்: 'உங்கள் இறைவனும் உங்கள் மூதாதையர் இப்ராஹீம், இஸ்மாயில், இஸ்ஹாக் ஆகியோரின் இறைவனுமான ஒரே இறைவனையே நாங்கள் வணங்குவோம். அத்துடன் நாங்கள் (அவனுக்கே) கீழ்ப்படிந்த முஸ்லிம்களாகத் திகழ்வோம்'. (2:130-133).

*இறைத்தூதர் வரிசையில் இப்ராஹீம் நபியின் மூத்த மகனான இஸ்மாயிலின் பெயர் நபிகளாருக்குப் புத்துணர்ச்சி அளிப்பதாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் (Genesis) ஆப்ரஹாமிற்கும் அவரது ஆசைநாயகியான ஹகருக்கும் இஸ்மாயில் என்றொரு மகன் இப்ராஹீம்இருந்ததைப் பற்றிக் குறிப்புள்ளதைத் தனது யூத நண்பர்கள் மூலம் நபிகள் அறிந்திருந்தார்.*

*ஆனாலும் இப்ராஹீமின் மனைவி சாராவுக்கு இஸ்ஹாக் பிறந்த போது, அவர் (சாரா) ஹகர் மீதும், இஸ்மாயில் மீதும் பொறாமை கொண்டார். ஆப்ரஹாம் இதுகுறித்து வருந்தினார். எனினும் இஸ்மாயிலும் ஒரு பெரிய தேசத்தைத் தோற்றுவிப்பார் என இறைவன் அளித்த உறுதி அவருக்கு ஆறுதலளித்தது. மிகுந்த துயருடன் ஹகரையும், இஸ்மாயிலையும் இப்ராஹீம் நாட்டைவிட்டு வெளியேற்றினார். வனாந்திரங்களில் வளர்ந்து திரிந்த இஸ்மாயில், ஒரு மாபெரும் வீரனாக உருப்பெற்றார்.*

*இஸ்மாயிலின் வழித்தோன்றல்களே அரபியர்கள் என்று அரபிய யூதர்கள் நம்பினர். ஹகரையும் அவரது மகனையும் மக்கா பள்ளத்தாக்கில் கொண்டு வந்து விட்டுவிட்டு ஆப்ரகாம் சென்றுவிட்டார் என்கிற நம்பிக்கையும் அரபியரிடம் இருந்தது. இறைவன் அவர்களை கவனமாய்க் காப்பாற்றினான். பின்னாளில் ஆபிரகாம் மக்காவிற்கு வந்து இஸ்மாயிலைக் கண்டார். இருவரும் இணைந்து அரபியாவின் முதல் இறைத் தலமாகிய கஅபாவை நிர்மாணித்தனர். எனவே அரபியர்களும் யூதர்களைப் போல ஆபிரகாமின் பிள்ளைகளே.*

*இந்த இறை இல்லத்தை நிர்மாணித்த பின்பு அரபியர்களுக்கு ஒரு இறைத்தூதரை நல்க வேண்டுமென இறைவனை இப்ராஹீமும், இஸ்மாயிலும் இறைஞ்சினர் என்பது திருக்குர்ஆன் வாக்கு (2:122-124). கஅபாவின் உருவாக்கம் குறித்த இந்த நம்பிக்கையைத் தம் மக்களின் விடுதலைக்கான ஊற்றுக்கண்ணாக நோக்கினார் முஹம்மது.*

*இன்று உலக வல்லரசுகளின் கண்ணை உறுத்தும் எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ள அரபு நாடுகள் முஹம்மது பிறந்தபோது (கி.பி. 570) அத்தகைய புகழையோ வளத்தையோ பெற்றிருக்கவில்லை. அரபியாவில் தென் பகுதி மட்டுமே பருவமழை வளம் பெற்றுச் செழிப்புற்றிருந்தது. பிற பகுதிகள் 'நாகரீக மனிதர்கள்' அண்ட முடியாத வனாந்தரங்களாகவே இருந்தன. அங்கு வசித்த நாடோடி மக்களை 'கூடார மனிதர்கள்' (சரெகனோய்) எனக் கிரேக்கர்கள் கேலி செய்தனர். அரபியாவைச் சுற்றிலும் வளர்ச்சி பெற்றிருந்த பைசாண்டியப் பேரரசும் (கிறிஸ்தவம்), பாரசீகப் பேரரசும் (யூதம்) நிலை கொண்டிருந்தன. 'கடவுளற்ற நாடு' என அழைக்கப்பட்ட அரபு நாடுகளில் இவற்றையொத்த நவீன மதங்களோ, பேரரசுகளோ உருவாகவில்லை. புராதனப் 'பகன்' வழிபாடுகள் நிறைந்த பகுதியாகவே அரபுப் பள்ளத்தாக்கு இருந்தது. பின்னாளில் மதீனா என அழைக்கப்பட்ட யத்ரிப் சற்றே வளமுள்ள பகுதியாக அன்று விளங்கியது. எனினும் அங்கு குடியேறியிருந்த யூதர்களும் கூடப் புராதனப் பகன் வழிபாடுகளைப் பின்பற்றக் கூடியவர்களாகவே இருந்தனர். பாலைவனப் பகுதியில் வாழ்ந்திருந்தப் 'பெதோய்ன்' பழங்குடிகள் நாடோடித் தன்மை மிக்கவையாகவும் சதா தமக்குள் போரிட்டு அழித்துக் கொள்பவையாகவும் பழங்குடிச் சமூகங்களுக்கே உரிய குடிப்பற்று, பிற குடியினரை எதிரிகளாக*

அணுகுதல் என்கிற பண்புகள் நிறைந்தவையாகவும் இருந்தன. எனவே அவை ஒரு சமூகமாக உருப்பெறவோ, அரசாகப் பரிணமிக்கச் சாத்தியமுள்ளவையாகவோ இல்லை.

இந்நிலை குறித்த கவலை 'பெதோய்ன்' இனக் குழுக்களிடையே இருக்கத்தான் செய்தது. எனினும் அருகே வளர்ச்சி கொண்டு நிலை பெற்றிருந்த பைசாண்டிய, பாரசீகப் பேரரசுகளையோ அவற்றின் இறைநெறிகளாக இருந்த கிறிஸ்தவ, யூத மதங்களையோ அரபியப் பழங்குடியினர் நம்பத் தயாராக இல்லை. மிகுந்த அய்யத்துடனேயே அவைகளை இவர்கள் அணுகினர். இந்த மதங்களை ஏற்றுக் கொள்வது என்பது மறைமுகமாக இவர்களின் அரச மேலாண்மையையும் ஏற்றுக் கொள்வதாகவே அமையும் என்கிற புரிதலை அவர்கள் கொண்டிருந்தனர். இதற்கு ஏற்றாற்போல கிறிஸ்தவப் பைசாண்டியப் பேரரசு அபிசீனியாவை (இன்றைய எத்தியோப்பியா) தனது அடிமையாக்கியது. அபிசீனியா தழுவியிருந்த கிறிஸ்தவம் இதற்குப் பெருந்துணையாக அமைந்தது.

கிறிஸ்தவ பைசாண்டியத்தின் காலனியான அபிசீனியா கி.பி. 525-ல் தென் அரபியாவை வெற்றி கொண்டது. பாரசீக ஆதரவு வேண்டித் தென் அரபிய மன்னன் யூசுப் ஆசய் யூத மதத்தைத் தழுவியும் பயனில்லை. வெறுப்புற்ற யூசுப் குதிரையோடு கடலில் இறங்கி மறைந்தான் என்பது வரலாறு. முஹம்மது பிறந்த அதே ஆண்டு பாரசீக மன்னன் குஸ்டுவா தென் அரபியாவைக் கைப்பற்றினான். இவை அனைத்தையும் ஹிஜாஸ் மற்றும் நஜ்த் பகுதியிலிருந்து பெதோய்ன் அரபு இனக்குழுவினர் கவலையோடு நோக்கினார். யூதம், கிறிஸ்தவம் ஆகியவற்றின் மீதான அவர்களது அய்யமும் அச்சமும் வளர்ந்தன. அதே சமயத்தில் தம்மைக் குறித்த ஒரு தாழ்வுணர்வும் அவர்களிடம் தலை தூக்கியது. தமக்கான ஒரு புதிய மதம், வேத நூல், இறைத்தூதர் ஆகியவை குறித்த ஏக்கம் அவர்களுக்கு உருவாகியது.

பல்வேறு பகன் மத நம்பிக்கைகள் சார்ந்திருந்தவர்களாயினும் அவர்களில் பொதுவான மத நம்பிக்கையாகவும் வழிபாட்டுத் தலமாகவும் கஅபா விளங்கியது. கஅபாவைத் தவிர வேறு பல தலங்களையும் அவர்கள் வணங்கச் செய்தாலும் கஅபாவே முக்கியத் தலமாக விளங்கியது.

மக்காவில் ஜம்ஜம் ஊற்றுக்கு அருகில் கனசதுர வடிவத்தில் அமைந்திருந்த கஅபாவின் தென்மூலையில் பதிக்கப்பட்டிருந்த கருப்புக் கல் புனிதமாகக் கருதப்பட்டது. வானிலிருந்து சுழன்று வீழ்ந்த ஒரு விண்கல்லாக அது இருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். விண்ணையும் மண்ணையும் இணைக்கும் புனிதமாக அது வணங்கப் பட்டது. முஹம்மதின் காலத்தில் அது ஹ்யூபல் என்கிற நபாத்திய (இன்றைய ஜோர்டான்) தேவதைக்காக அர்ப்பணிக்கப்பட்டு இருந்தது.

எனினும் அன்றிருந்த எல்லாத் தலங்களைக் காட்டிலும் அதற்கிருந்த முக்கியத்துவம் என்பது அது அரபியர்களின் தனிப்பெரும் கடவுளாகிய ஏக இறைவனுக்கே (அல்லாஹ்) முதலில் அர்ப்பணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. ஆண்டுதோறும் நடைபெற்ற ஹஜ் யாத்திரை அத்திருத்தலத்தை நோக்கியே அமைந்தது. கஅபாவைச் சுற்றியுள்ள வட்ட வடிவத் தலத்தில் யாத்ரீகர்கள் கூடித் தமது 'தவ்வாஃப்' கடனை நிறைவேற்றினார், பல்வேறு இனக்குழுக்களின் குல தெய்வங்களான **360** தேவதைகளின் சிலைகள் கஅபாவை சுற்றிப் பதிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு இனக்குழுவும் ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து தமது தேவதைக்கு வணக்கம் செலுத்தினர். பழைய சுமேரிய ஆண்டு **360** நாட்களைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. கஅபாவைச் சுற்றியுள்ள இருபது மைல் சுற்றளவில் எல்லாவிதமான போர்களும் வன்முறைகளும் தடுக்கப்பட்டிருந்தன.

தன் வாழ்நாள் முழுவதிலும் கஅபாவின் மீது அளவிடற்கரிய பற்றும், ஈர்ப்பும், பணிவும் கொண்டிருந்தார் முஹம்மது. தான் இழிவு செய்யப்பட்ட போதும், ஒதுக்கப்பட்ட போதும், அங்கு செல்வது ஆபத்து என அச்சுறுத்தப்பட்ட போதும், வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் ஹஜ் யாத்திரை செய்வதையோ, கஅபாவைச் சுற்றி வந்து வணங்குவதையோ அவர் நிறுத்தவில்லை. தான் போற்றிய ஏக இறை நம்பிக்கைக்கு கஅபாவைச் சுற்றிப் பதிக்கப்பட்டிருந்த **360** இணை வைப்புகளும் பொருத்தமற்றதாக இருந்தபோதிலும் கூட கஅபாவிற்கான இறைக் கடமையைச் செய்வதென்பதை அவர் நிறுத்தியதில்லை.

அரபுப் பகன் மத நம்பிக்கைகளில் வெறுப்பு கொண்ட பிற அரபிய முன்னோடிகளிடமிருந்து நபிகள் வேறுபடுகிற புள்ளி இதுவே.

# 7

# திசை வழி புதிது

*வறண்ட பாலை, ஸ்தெப்பி புல்வெளிகள், இடை இடையே நீர் வளம் நிறைந்த சோலைகள் என்பதாக அமைந்த மண்ணில் வாழ நேர்ந்த அரபியர்களுக்கு வாழ்க்கை ஒரு பெருஞ்சவாலாகவே விளங்கியது. நீண்ட நாட்கள் நீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்தும் திறன் மிகுந்த ஒட்டகங்கள் அவர்களுக்கு இயற்கை அளித்த கொடை. இரண்டாயிரம் ஆண்டு காலமாக ஒட்டகங்களைப் பிடித்து, வளர்த்து, இன விருத்தி செய்து தமது வாழ்க்கையில் ஒரு பிரிக்க இயலாத அம்சமாக அவற்றை அவர்கள் பழக்கி வைத்திருந்தனர். நாடோடி வாழ்க்கைக்கு அவை பெருந்துணையாக இருந்தன.*

*அரபியர்கள் அனைவருமே நாடோடி வாழ்க்கை மேற்கொண்டவர் களல்ல. நீர் வளம் நிறைந்த பகுதிகளில் இருந்தோர் விவசாயம் செய்யவும் தெரிந்திருந்தனர். நாடோடிகள் பாலைவனப் பகுதிகளை ஊடுருவிச் செல்லும்போது அவர்களைப் பின்பற்றி வந்த சிலர் நீர்வளம் மிக்கப் பகுதியில் தங்கி விவசாயம் செய்தனர். அவர்கள் விளைவித்த கோதுமை நாடோடிக் குடும்பங்களின் பசியை ஓரளவுக்குத் தீர்க்கவும், நாடோடிக் குழுக்கள் கொண்டு வருகிற வணிகப் பொருட்கள் விவசாயிகளின் இதர தேவைகளைக் தீர்க்கவுமென ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்ந்தனர்.*

*இயற்கையோடு போராடி வாழ நேர்ந்த இவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்தது ஒத்த உறவின் அடிப்படையிலான இனக்குழு ஒற்றுமைதான். எனினும் இந்த இனகுழுக்களிடையே கடும் போட்டியும், வாழ்வு மரணப் போராட்டங்களும் இருக்கவே செய்தன. இக்குழுக்கள் 'கவ்ம்' என அழைக்கப்பட்டன. தொன்மையான யாரோ ஒரு மூதாதையின் வழி வந்தவர்களாக அவர்கள் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர் (எ.டு.: பனூ கல்ப் - கல்பின் மக்கள், பனூ அசத் - அசத்தின் மக்கள்).*

*கவ்முக்குள் அனைவரும் சமமாகக் கருதப்பட்டனர். தனி நபர்கள் ஒவ்வொருவரின் பாதுகாப்பையும் கவ்ம் உறுதி செய்தது. தனி நபர்கள் ஒவ்வொருவரும் கவ்மிற்கு முழு விசுவாசத்துடன் நடந்து கொள்ள வேண்டும். குழுவின் நலனை விடத் தனி நபர் நலன்கள் உயர்ந்தவையாக முடியாது. ஒவ்வொருவருக்கும் உரிமைகளும் கடமைகளும் உண்டு. கிடைத்ததை அனைவரும் பகிர்ந்து கொள்ளுதல் என்பது பழங்குடி*

அமைப்புகளின் தனிப் பெருஞ்சிறப்பு.

இந்த ஒற்றுமையை உறுதி செய்யும் விதமாக 'முருவா' என்கிற கருத்தியலை அரபியர்கள் உருவாக்கியிருந்தனர். இதற்கு நேரடியாக மொழியாக்கம் சாத்தியமில்லை. 'ஆண்மை' எனச்சில ஆங்கில ஆசிரியர்கள் மொழிபெயர்க்கின்றனர். மனிதத்தன்மை என்பதே இதற்குக் கிட்டத்தட்ட சரியான பொருள். போரிடும் உணர்வு, அச்சமற்ற தன்மை, துயரங்களை எதிர்கொள்ளும் தைரியம், தனது கவ்மிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்காகப் பழிவாங்கும் தீரம், எளியவர்ளையும், பலவீனமானவர் களையும் காக்கும் பெருந்தன்மை ஆகியவை கலந்து ஒட்டுமொத்தமான பண்பாட்டை ஒவ்வொரு கவ்மும் தனது 'முருவா' எனப் பெருமையாகக் கூறிக்கொள்ளும்.

மதத்தினிடத்தை இந்தப் பண்பாடு ஈடுசெய்தது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தப் பண்பாடு துன்பம் நிறைந்த பாலை வாழ்வின் ஒரே ஆறுதலாக அவர்களுக்கமைந்தது. முற்றிலும் மண் சார்ந்த பண்புகளுடன் கூடியதாக இந்தப் பழங்குடி மத உணர்வு அமைந்தது குறிப்பிடத்தக்கது. தனி நபர்களின் முக்தி அல்லது மறுமை வாழ்வு என்பது அங்கே முக்கியமில்லை. அங்கே புனித மதிப்பீடாக இனக்குழுவே அமைந்தது. கவ்மின் தொடர்ச்சியைப் பேணுவதே அனைவரின் லட்சியமும், பெருமையும், கடமையும்.

இனக்குழுவில் யாரேனும் ஒருவர் கொல்லப்பட்டால் அதற்காகப் பழி வாங்குவது ஒவ்வொருவரின் கடமையாகக் கருதப்பட்டது. பழிக்குப் பழி, போர், மற்ற இனக் குழுக்களைத் தாக்குதல் என்பதே அவர்களின் வாழ்வாக அமைந்தது. ஒரு இனக்குழு இன்னொன்றின் மீது படையெடுப்பது, கொள்ளையடிப்பது, கால்நடைகளைக் கவர்ந்து வருவது என்பதும் அவர்களின் வீர விளையாட்டுகளாக அமைந்தன. இத்தகைய ஒரு நிலை தொடர்ந்ததனாலேயே அவர்கள் ஒரு பெருஞ் சமூகமாக ஒன்றிணைய இயலாமற் போனது. அரசாக உருப்பெறவும் அதன் மூலம் பொருளியல் வளர்ச்சிகள் பெறவும் முடியாமற் போனது.

இந்தச் சூழலின் சாதகமான அம்சங்களையும் பாதகமான கூறுகளையும் கூர்மையாகக் கவனித்தார் நபிகள் நாயகம். ஏற்றத் தாழ்வற்ற சமத்துவமும் சகோதரத்துவமும் நிலவும் முஸ்லிம் சமுதாயத்தைக் கட்டமைக்க முயன்றபோது பழங்குடிப் பண்பாட்டின் சமத்துவ கூறுகளை அவர் முன்மாதிரியாக்கிக் கொண்டார்.

முன்னுரிமை மிக்க மேல்தட்டினர் என யாரும் பழங்குடி அமைப்புக்குள் உருவாக இயலாது. பிரபுத்துவம், பரம்பரைத் தலைமை என்பதெல்லாம் கூட கவ்ம்களில் சாத்தியமில்லை. இவற்றையெல்லாம் இஸ்லாமியச் சமூகத்தின் உயிரோட்டமான பண்புகளாக முஹம்மது ஏற்றுக்கொண்டார்.

ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளும் தீராத பகையையும் வேறுபாடுகளையும் களைவதற்கு அவரவர் தாம் சார்ந்துள்ள கவ்ம்களின் மீதான தனித்துவமான ஈடுபாட்டை விட்டுவிட்டு ஏக இறைவனின் கீழ் ஒரே மதமாக இணைதல் என்கிற அவரது முடிவிற்கு இறைவாக்குகளும் சான்றளித்தன. வழி வகுத்தன.

கஅபாவை முன்னிறுத்தி இப்ராஹீமின் வழித்தோன்றல்களெனத் தம்மை அடையாளம் காணும் முஸ்லிம்களாக அரபியர்களை ஒன்றிணைக்கும் பெரும் பணியைக் கடும் எதிர்ப்புகளிடையே அவர் மேற்கொண்டார். ஆண்டுதோறும் நடைபெறும் ஹஜ் புனித யாத்திரைக்காக அனைத்து அரபியர்களும் கஅபாவை நோக்கித் திரளுவதை அவர் கவனத்தில் நிறுத்திக் கொண்டார்.

இஸ்லாமுக்கு முந்தைய ஹஜ்ஜிலும் கஅபாவே முக்கிய பங்கு வகித்தது. கஅபாவைச் சுற்றி வந்து வணங்குதல், அரபத் மலையில் நின்று தொழுதல் முதலியவை அன்றைய வழக்கங்களாயிருந்தன. கஅபாவைத் தவிர வேறு பல தலங்களும் அப்போது வணங்கப்பட்டன. அவற்றில் எதுவும் இப்போது இல்லை. அவற்றுள் மூன்று பெண் தெய்வங்கள் முக்கியமானவை. தகீப் இனக்குழுவினரின் தய்ஃப் நகரில் இருந்த தேவதையின் பெயர் ‘அல்லாத்’. ‘நக்லா’வில் அமைந்திருந்த ‘அல்-உஸ்ஸா’ என்னும் பெண் கடவுளின் ஆலயம் புகழ் பெற்றிருந்தது. ‘குதாயத்’தில் அமைந்திருந்த ஆலயத்திலிருந்த ‘மனத்’ தேவதை விதியை நிர்ணயிக்கும் கடவுளாக வணங்கப்பட்டது.

இங்கெல்லாம் கூட உருவ வழிபாடுகள் இல்லாவிட்டாலும் இனப்பெருக்க வளக் குறியீடுகளாகக் கற்கள் வணங்கப்பட்டன. இந்தத் தேவதைகளின் ஆலயங்கள் மீது அரபிய இனக் குழுவினருக்கு மிகுந்த பற்று இருந்தபோதிலும் கஅபாவே முதன்மையானதும் அரபுப் பெருமைக்குரியதுமான வழிபாட்டுக் தலமாக இருந்தது.

முஹம்மது தனது இறைப் பணியைத் தொடங்குவதற்குச் சற்று முன்னதாக கஅபாவுடன் இணைந்திருந்த இத்தகைய பகன் - தேவதை - வழிபாடிலிருந்து விலகி நிற்பதென குறைஷிய முன்னோடிகள் நால்வர் முடிவெடுத்தனர். இந்த நால்வருக்குள்ளும் ஒரு ரகசியப் புரிதலிருந்தது. ‘அறியாமையின் காலம்’ (ஜாஹிலியா) என்றழைக்கப்படுகிற இக்கால கட்டத்தின் இறுதியில் உதித்த இவர்களின் வழிபாட்டு மரபு ‘ஹனீஃபியா’ என்றழைக்கப்படுகிறது. இவர்கள் ‘ஹனிஃப்’கள் என அழைக்கப் பட்டனர்.

உத்மான் இப்ன் அல்-ஹுவாய்ரித், உபைதுல்லா இப்ன் ஜஹ்ஷ், வராகா இப்ன் நவ்ஃபல், ஸைத் இப்ன் அம்ர் ஆகியோரே இந்நால்வர். இவர்களில் உத்மான் என்பவர் முஹம்மதின் இளமைக் காலத்தில் மக்காவில் ஒரு முக்கியப் புள்ளி. கிறிஸ்தவராக மாறியிருந்த இந்தக்

குறைஷி வணிகர் சக இனக் குழுவினர் தம்மை அரசராக ஏற்றுக் கொண்டால் அம்மக்களின் வணிக நலனை மேம்படுத்துவதாக உறுதி அளித்தார். எனினும் யாரும் அவரைப் பொருட்படுத்தவில்லை. முஹம்மதின் நெருங்கிய உறவினரான உபைதுல்லா முஸ்லிமாகிப் பின் கிறிஸ்தவத்தில் இணைந்தார். இன்னொரு உறவினரான நவ்ஃபலும் கிறிஸ்தவத்திற்கு மாறியவர்தான். நான்காமவரான ஸைத் மட்டும் வேறு மதத்தில் சேராமல் கஅபா வழிபாட்டிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டுப் பகன் வழிபாடுகளைக் கடுமையாக விமர்சித்து வந்தார்.

இவர்கள் நால்வரும் சக இனக்குழுவினரை நோக்கிக் கீழ்க்கண்ட அறைகூவலை விடுத்தனர்:

"நீங்கள் அனைவரும் ஆப்ரஹாம் உருவாக்கிய மதத்தைக் களங்கப் படுத்திவிட்டீர்கள். நீங்கள் சுற்றிவரும் இந்தக் கல் எதற்கும் பயன்படாது. பார்க்கவோ, கேட்கவோ, பாதுகாக்கவோ, உதவி செய்யவோ எதுவும் செய்ய அதனால் இயலாது. உங்களுக்காக ஒரு மதத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். இறைவனின் சாட்சியாகச் சொல்கிறேன் இன்று உங்களுக்கு என ஒரு மதம் இல்லை". (கில்லாமே மொழி பெயர்த்த இஷ்ஹாக்கின் 'சிதத் ரசூல் அல்லா' விலிருந்து)

எளிதில் இவர்கள் அன்றைய சமூகத்திலிருந்து விலக்கப்பட்டனர். தனது சகோதரராலேயே விரட்டியடிக்கப்பட்ட ஸைத் மக்காவைச் சுற்றியுள்ள குன்றுகளில் அலைந்து திரிந்தார். பின் வெளிநாடுகளுக்குச் சென்று ஏதேனும் விடை கிடைக்கிறதா என அலைந்தார். வழியில் சந்தித்த துறவி ஒருவர் மக்காவில் ஒரு இறைத்தூதர் தோன்றப் போவதைக் கூறினார். ஆவலுடன் மக்காவை நோக்கித் திரும்பிய ஸைத், சிரியா எல்லையில் வைத்துக் கொல்லப்பட்டார். முஹம்மதைப் பாராமலேயே அவர் உயிர் பிரிந்தது. எனினும் அவர் மகன் ஸைத் பின்னாளில் நபிகளின் உற்ற தோழராக விளங்கும் வாய்ப்புப் பெற்றார்.

புதிய மாற்று குறித்தத் தேடலும், நவீனமான ஒரு மதம் குறித்த ஏக்கமும் அன்றைய அரபிய முன்னோடிகளிடம் இருந்ததையே ஹனீஃபியா இயக்கம் வெளிப்படுத்துகிறது. எனினும் குறைஷிகள் மட்டுமின்றி அனைத்து அரபியர்களின் ஒற்றுமைக் குவியமாக கஅபா விளங்கியதை ஹனீஃப்கள் கவனிக்கத் தவறினர். அந்த உண்மையைக் கூர்ந்து கவனித்து அதனடிப்படையில் செயல்பட்டவர் முஹம்மது ஒருவரே. அதற்குரிய இறை வழிகாட்டல்களை அவர் அவ்வப்போது அடைந்தார்.

மக்காவை விட்டு விரட்டப்படுவதற்கு முதல் நாள் "ஏ! இறைவனே, எனக்கு மட்டும் உன்னை எப்படி வணங்குவது என்று தெரிந்திருந்தால் நான் அப்படி வணங்கியருப்பேன், ஆனால் எனக்குத் தெரியவில்லையே" என்று ஸைத் புலம்பியதாக ஒரு கதையுண்டு (முன் குறிப்பிட்ட நூல்).

முஹம்மதே அந்த வழிமுறையை அறிந்தவராக விளங்கினார்.

மதீனாவில் புலம் பெயர்ந்து வாழ்ந்த போதிலும் கஅபாவையும் ஹஜ் யாத்திரையையும் முஹம்மது என்றும் மறக்கவில்லை. வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் ஹஜ் யாத்திரைக்கு முயற்சித்தார். கி.பி. 632-ல் வெற்றிகரமாக புனித ஹஜ்ஜையும் நிறைவேற்றினார். கஅபாவை வணங்குவதில் முஸ்லிம்களுக்கு எந்தத் தடையுமில்லை என்பதை நிறுவுவதன் மூலமே அரபியர்கள் அனைவரையும் ஈர்க்க முடியும், தாம் விரும்பிய சமத்துவமும் சகோரத்துவமும் ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும் என அவர் நம்பினார். எனினும் அவர் தனது ஏக இறைக் கொள்கையில் எந்தச் சமரசமும் செய்து கொண்டதில்லை. காலத்தையும் நேரத்தையும் சூழலையும் துல்லியமாக எடை போட்டுத் தனது அடிகளை முன்னெடுத்து வைப்பதில் நபிகளுக்கு நிகராக யாரையும் சொல்ல இயலாது.

புலம் பெயர்ந்த பதினெட்டாவது மாதத்தில் தொழுகைத் திசையை அவர் மாற்றியமைத்தது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அதுவரை முஸ்லிம்கள் அனைவரும் எருசலமை நோக்கியே தொழுது வந்தனர். எருசலமை நோக்கிய இரவுப் பயணத்தின்போது முஸ்லிம் நம்பிக்கைக்குக்கூட இந்தப் பழைய புனித நகரம் பொருத்தமானது தான் என்கிற முடிவை முஹம்மது அடைந்தார். தவிரவும் எருசலமை நோக்கித் தொழுகைத் திசையை ('கிப்லா') அமைப்பது பழைய இரண்டு அருள் வெளிப்பாட்டு மதங்களுடன (யூதம், கிறிஸ்தவம்) முஸ்லிம் மதத்தின் தொடர்பை வெளிப்படுத்தும் எனவும் அவர் கருதினார். முஸ்லிம்களும் கூட மற்ற இரு மதத்தினரையும் போலப் புனித நூற்களின் மக்கள்தான் என உணர்த்துவதற்கும் இது பயன்படும் எனவும் அவர் எண்ணியிருக்கக் கூடும்.

622-ம் ஆண்டு மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி ஒரு குழு ஹஜ் நிறைவேற்றப் புறப்பட்டது. நம்பிக்கை நிறைந்த பலரும் அடங்கிய இக்குழுவில் எழுபத்து மூன்று ஆண்களும், இரு பெண்களும் முஸ்லிம்கள். அக்குழுவில் ஒருவரும் கஸ்ரஜ் இனக்குழுத் தலைவருமான அல்பாரா இப்னு மாரார் என்பவர் அந்த ஹஜ் யாத்திரையின் போது 'கிப்லா'வை மாற்றிக் கொள்ளலாம் என்றொரு கருத்தை முன் வைத்தார்.

அல்லாஹ்வின் மிக முக்கியமான வழிபாட்டுத் தலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். எருசலத்தை நோக்கி வணங்குவது என்கிற பெயரில் மக்காவிற்குப் பின்புறத்தைக் காட்டுவது எப்படிச் சரியாக இருக்க முடியும் என்பது அவரது கேள்வி. எனினும் மற்ற முஸ்லிம்கள் பாராவை ஏற்றுக் கொள்ளவில்லை. முஹம்மதின் 'கிப்லா' எருசலமாக இருக்கும் போது இதென்ன கேள்வி என ஒதுங்கினர். பாரா மட்டும் மக்காவைத் தனது 'கிப்லா'வாக்கித் தொழுதார்.

*கஅபாவை அடைந்தவுடன் பாரா முஹம்மதைத் தேடி ஓடினார். 'கிப்லா' பற்றிக் கேட்டார். முஹம்மது தெளிவாகப் பதிலளிக்கவில்லை. சற்றே குழப்பமான ஒரு பதிலைச் சொல்லிவிட்டு எருசலமை நோக்கித் தொழத் தொடங்கினார். வேறு வழியின்றிப் பாராவும் அதையே தொடர்ந்தார். மதீனாவிற்குத் திரும்பி சிறிது காலத்தில் பாரா மரணமடைந்தார். திசையில் மாற்றமின்றித் தொழுகை தொடர்ந்தது.*

*நபிகளின் புலப் பெயர்வுக்குப் பின் ஒருநாள் (ஜனவரி, **624**) ஷாபான் மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமைத் தொழுகையின்போது ஒரு சிறப்பு அருள் வெளிப்பாட்டால் உந்தப்பட்ட முஹம்மது எருசலமை நோக்கித் தொழுது கொண்டிருந்த அனைவரையும் மக்காவை நோக்கித் திரும்பித் தொழச் சொன்னார்.*

> "(நபியே!) உம்முடைய முகம் (அடிக்கடி) வானத்தை நோக்குவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதோ நீர் எந்தக் 'கிப்லா'வை விரும்புகிறீரோ அதன் பக்கமே நாம் உம்மைத் திருப்பி விடுகிறோம். மஸ்ஜிதுல் ஹராம் (கஅபா ஆலயம்) பக்கமாக உம்முடைய முகத்தைத் திருப்புவீராக! இனி நீங்கள் எங்கிருப்பினும் (தொழுகையின்போது) அதன் பக்கமாகவே உங்கள் முகங்களைத் திருப்புவீராக" (2:144-147)

*என்பது இறைவாக்கு.*

# 4

# புலப்பெயர்வும் இஸ்லாமியச் சமத்துவமும்

*அசாத்தியமான அரசியற் சாதுர்யம் மிக்க நபிகள் நாயகம் அறிவித்த இந்தக் 'கிப்லா' மாற்றம் ஒரு பெருமைக்குரிய புதிய அடையாளத்தை முஸ்லிம்களுக்கு வழங்கியது. எருசலத்திலிருந்து விலகிப் புனித கஅபாவை நோக்கித் தொழுதல் என்பது ஏற்கனவே ஆழமாய் வேர் கொண்டிருந்த இரண்டு அருளப்பட்ட மதங்களிலிருந்தும் இஸ்லாம் மார்க்கம் முற்றிலும் வேறுபட்ட, தனித்துவமான ஒரு மார்க்கம் என்பதை உலகிற்கு அறிவிக்கும் அரசியல் முடிவாகவும் விளங்கியது. இறைவன் அருளிய மார்க்கத்தைச் சிதைத்தவர்களிடமிருந்து எல்லாவிதமானத் தொடர்புகளையும் இறுதியாய்த் துண்டித்துக் கொள்ளும் அறிவிப்பாய் அது அமைந்தது.*

> "எவர் தமது தீனைத் துண்டு துண்டாக்கி, பல்வேறு குழுக்களாய்ப் பிரிந்துவிட்டார்களோ அவர்களோடு நிச்சயமாக உமக்கு எவ்விதத் தொடர்புமில்லை. அவர்களுடைய விவகாரம் அல்லாஹ்வின் பொறுப்பிலேயே உள்ளது... (நபியே!) கூறுவீராக! 'நிச்சயமாக என் இறைவன் எனக்கு நேரான வழியைக் காட்டிவிட்டான். அது முற்றிலும் சரியான, கோணலற்ற தீன். தூய நம்பிக்கையாளரும், இணை வைப்புகளை மேற்கொள்ளாதவருமான இப்ராஹீமின் நெறியே அது'.
>
> சொல்வீராக: 'நிச்சயமாக எனது தொழுகையும் வழிபாடுகளும், வாழ்வும் மரணமும் எல்லாமும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியன. மேலும் சொல்வீராக: அல்லாஹ்வே அனைத்திற்கும் அதிபதியாக இருக்க, அவனை விடுத்து வேறொருவனைத் தேடுவேனா? நீங்கள் அனைவரும் உங்கள் அதிபதியிடமே திரும்ப வேண்டியுள்ளது". (6:160,161,164)

*என்கிற இறைவாக்குகள் நபிகளுக்கு ஏற்கனவே அருளப்பட்டிருந்ததை நாம் மறந்துவிடலாகாது.*

*புலப்பெயர்வின் (ஹிஜ்ரத்) தொடக்க ஆண்டுகளில் அங்குள்ள யூதக் குழுக்களுடன் இணைந்து செயல்படுகிற நிலைப்பாடுகள் சிலவற்றை முஹம்மது மேற்கொண்டார். எனினும் யூதர்கள் முஹம்மதை ஒரு இறைத்தூதராக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நோவா, மோசஸ்*

*முதலான இறைத்தூதர்கள் பற்றிய புனிதக் குர்ஆனின் விவரிப்புகளுக்கும் தமது நம்பிக்கைகளுக்குமுள்ள வேறுபாடுகளின் விளைவாகத் திருக்குர்ஆன் வசனங்களை அவர்கள் இகழ்ச்சியாகவே நோக்கினர்.*

*இந்நிலையில், எருசலத்தை நோக்கித் தொழுதல் என்பது இஸ்லாமானவர்களின் கவுரத்திற்குப் பொருத்தமானதாக இல்லை. குறிப்பாக, அன்சாரிகள் என நபிகளால் பெயர் சூட்டப்பட்ட மதீனா முஸ்லிம்கள் 'கிப்லா' மாற்றத்தின் மூலம் பெருமிதம் கொண்டனர். தனித்துவமான தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு வாய்ப்பாக மட்டுமின்றி அன்சாரிகளும், புலம் பெயர்ந்து வந்த முஹாஜிர்களும் எந்த வேறுபாடுகளுமற்ற ஒற்றைப் பொதுச் சமூகமாக - உம்மாவாக ஒன்று கலப்பதின் குறியீடாகவும் 'கிப்லா' மாற்றம் அமைந்தது.*

*புலப் பெயர்வு என்பது நபிகளைப் பொருத்தமட்டில் ஒரு வேதனையான அனுபவம்தான். சதி செய்யப்பட்டு மக்காவை விட்டு அவர் துரத்தப்பட்டதைப் பற்றிய குறிப்புகள் பல புனித குர்ஆனிலேயே உள்ளன (60:1,95;8:30;47:13;27:48-51). தற்காலிகமாகவேனும் மக்காவை விட்டு அவரும் தோழர்களும் வெளியேற வேண்டியது தவிர்க்க இயலாததாயிற்று. கி.பி. 622-ல் மதீனாவிலிருந்து மக்காவிற்கு வந்த முஸ்லிம் ஹஜ் யாத்ரீகர்கள் பற்றி முன்பே குறிப்பிட்டோம். இறைச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காக மினா பள்ளத்தாக்கிற்கு அவர்கள் வந்தபோது, அகாபா மலையிடுக்கில் ஒரு நள்ளிரவில் நபிகளுடன் அவர்கள் மேற்கொண்ட சந்திப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட உறுதி மொழி இஸ்லாமிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று. புலம் பெயர்ந்து வந்தால் உரிய பாதுகாப்பை மதீனாவிலுள்ளவர்கள் வழங்க முடியுமா என நபிகள் வினவியபோது இந்த உறுதிமொழி அங்கே மொழியப் பட்டது:*

> "இன்பங்களிலும் துன்பங்களிலும், சுகங்களிலும் சோதனையிலும், தீய சூழல்களிலும் இறைத்தூதருக்கு விசுவாசமாக இருப்போம் என நாங்கள் போர் உறுதி எடுத்துக்கொள்கிறோம். நாங்கள் யாருக்கும் தீங்கு இழைக்கமாட்டோம் எனவும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மைகளையே பேசுவோம் எனவும் இறைவனின் பணியில் யாருடைய கண்டனங்களுக்கும் அஞ்ச மாட்டோம் எனவும் நாங்கள் உறுதி மேற்கொள்கிறோம்" (இப்ன் இஷ்ஹாக்)

*யாத்ரீகர்களில் ஒரவரான அல்பாரா அங்கிருந்த 'அவ்ஸ்' மற்றும் 'கஸ்ராஜ்' இனக்குழுக்களின் பிரதிநிதியாக எழுந்து முஹம்மதின் கரங்களைப் பற்றிக்கொண்டு தமது பெண்களையும் குழந்தைகளையும் எவ்வாறு பாதுகாக்கிறார்களோ அதேபோல் நபிகளையும் மற்றவர்களையும் பாதுகாப்பதாக உறுதியளித்தார். எனினும் அவர்களுக்கு ஒரு அய்யம் இருந்தது. யூதர்களுடன் அவர்கள் வழிவழியாகச் சில*

உறவுகளைப் பேணி வந்தனர். அவற்றையெல்லாம் முறித்துவிட்டு நபிகளுடன் இணையத் தயார்தான். ஆனால் குறைஷிகளுடனான பிரச்சனை முடிந்து விட்டால் நபிகள் அவர்களை விட்டுவிட்டுப் போய்விடலாம் அல்லவா? அப்படியானால், எங்களுடைய கதி என்ன? என்கிற கேள்வியை ஒருவர் எழுப்பினார். புன்னகை அரும்ப நாயகம் சொன்னார்:

> "அப்படியல்ல. நான் உங்களில் ஒருவன், நீங்கள் எங்களில் ஒருவர். உங்களோடு யார் போர் புரிகின்றனரோ அவர்களோடு நானும் போர் புரிவேன். யார் உங்களுடன் சமாதானமாக இருக்கிறார்களோ அவர்களுடன் நானும் சமாதானமாக இருப்பேன்".

கொடுத்த வாக்கை நபிகள் நாயகம் காப்பாற்றத் தவறியதில்லை.

இரண்டாம் அகாபா எனப்படும் இச்சந்திப்பில் மேற்கொண்ட இவ் உறுதி 'போர் உறுதிமொழி' எனப்படுகிறது. முஸ்லிம் மதம் திடீரென போர்த்தன்மையுடைய மதமாக மாறிவிட்டது என்று இதன் பொருளல்ல. நபிகள் திட்டமிட்ட அடுத்த முக்கிய நடவடிக்கை குறித்தத் தோழமை ஒருங்கிணைவின் (solidarity) உணர்ச்சி பூர்வமான வெளிப்பாடாகவே அது அமைந்தது.

நபிகள் முன்மொழிந்த 'ஹிஜ்ரத்' எனப்படும் புலப்பெயர்வு என்பது பாதுகாப்பு நோக்கிலான வெறும் இடப்பெயர்வு மட்டுமன்று. இரத்த உறவுகளின் அடிப்படையிலான எல்லாவிதமான இனக்குழு வேர்களையும் அறுத்தெறிந்துவிட்டு ஒரு புதிய 'உம்மா'வைப் படைப்பதற்கான குறியீடு அது. குறைஷிகள் என்கிற தமது பழைய இன அடையாளங்களை யெல்லாம் துறந்துவிட்டு முஸ்லிம் என்கிற ஒற்றை அடையாளத்தின் கீழ் சமூக வேறுபாடுகள் அனைத்தையும் அழித்தொழித்த ஒரு அற்புதமான அரசியல் நடவடிக்கை அது. வருணாசிரமத்தை எதிர்த்து இந்தியாவிலேயே தோன்றிய மதங்களாயினும், இந்தியாவிற்கு வெளியிலிருந்து வந்த மதங்களாயினும் சாதீயத்திற்குப் பலியாகாத ஒரே மதமாக ஒப்பீட்டளவில் இஸ்லாம் மட்டுமே இருப்பதின் ரகசியம் இதில்தான் அடங்கியுள்ளது. ஒரே வீச்சில் இனக்குழு அடையாளங் களையும் 'பகன்' (பழங்குடி) வழிபாட்டு முறைகளையும் புறந்தள்ளிய அறிவுபூர்வமான செயல்பாடு அது.

ஒரு இனக்குழு தனது தேவை கருதி மற்றொரு இனக்குழுவின் பாதுகாப்பில் இணைவது (confederation) என்பது வழக்கமாக நடக்கக் கூடியதுதான். ஒரு குழு, அது குலமோ இல்லை சில தனி நபர்களோ இவ்வாறு ஒரு புதிய சமூகத்தில் அங்கத்தவர்களான போதிலும் அவர்கள் யாரும் தம்முடைய பழைய இனக்குழுவுடன் நிரந்தரமாக வேர்களை அறுத்துக் கொள்வதில்லை. ஏனெனில் இனக்குழுப் பண்புகளின்படி இரத்த உறவு என்பது அறுக்கத்தக்க ஒன்றல்ல. ஆனால் நபிகளின் புலப்

பெயர்வு என்பது இதற்கு முற்றிலும் மாறுபட்டது. மதீனாவிற்கு இடம் பெயர்தல் என்கிற முடிவுக்கு 'ஹிஜ்ரத்' என்கிற அரபுச் சொல்லை முஹம்மது தேர்வு செய்ததென்பது இந்த ஆழமான அர்த்தங்களை எல்லாம் உள்ளடக்கியுள்ளது.

அரபு மொழியில் 'ஹிஜ்ரத்' என்பதன் வேர்ச்சொல் 'ஹாஜரா-ஹு' என்பது. இதன் பொருள்: ...ஒருவர் எல்லாவிதமான நட்பு மற்றும் அன்பு சார்ந்த இணைவுகளையும் உறவுகளையும் துண்டித்துக் கொள்ளுதல்... அவர்களுடனான தொடர்புகளை முற்றாக முறித்துக் கொள்ளுதல்'' (W.Montgomery Watt, Muhammad in Mecca: History in the Qu'ran). மதீனாவில் உள்ள முஸ்லிம்கள் புலம் பெயர்ந்து வருவோர்க்கான பாதுகாப்பையும் உதவியையும் (நஸ்ர்) அளிக்க வேண்டும். புலம் பெயர்ந்து வருபவர்களுடன் எந்த வகையிலும் இரத்த உறவும் இனக்குழுப் பந்தமும் இல்லாத இவர்கள் இந்த உதவியையும் பாதுகாப்பையும் நிரந்தரமாக அளிக்க வேண்டும்.

இத்தகைய நிரந்தர உதவியை நல்கும் இவர்கள் 'அன்சாரிகள்' (உதவியாளர்கள் - 'நஸ்ர்' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து உருவானது) என நபிகளால் அழைக்கப்பட்டனர். இந்த உதவி என்பது இடத்தையும், பொருளையும் பகிர்ந்து கொள்வது மட்டுமன்று, அவர்கள் இதுவரை அனுபவித்திருந்த எல்லாவிதமான சோகங்களையும், துயரங்களையும், இழிவுகளையும் போக்கி அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பை அளித்தல். தேவையானால் போர் உட்படத் தமது அனைத்துச் சாத்தியங்களையும் பயன்படுத்தி அவற்றை நல்குதல் என்பதன் அடிப்படையிலேயே அந்த உறுதிமொழி 'போர் உறுதிமொழி' என அழைக்கப்பட்டது. புலம் பெயர்ந்து அடைக்கலம் புகுந்தோர் 'முஹாஜிர்'கள் என்றழைக்கப்பட்டனர்.

முஹம்மத் புலம் பெயர்ந்து செல்லும்போது அதற்குதவியாக ஒட்டகம் ஒன்றை அபூபக்கர் பரிசளித்தபோது அதை நன்கொடையாகப் பெற அவர் மறுத்துவிட்டதும் இங்கே நினைவுகூரத்தக்கது. ஏற்கனவே சிலமுறை அவ்வாறு பரிசளிக்கப்பட்டபோது அவற்றை ஏற்றுக்கொண்ட நபிகள் இப்போது அதை ஏற்க மறுப்பதென்பது இப்புலப்பெயர்வை அவர் இறைவனுக்கான தனது தனிப்பட்ட அர்ப்பணிப்பாக மேற்கொண்டதையே காட்டுகிறது.

மக்காவிலிருந்த முஸ்லிம்கள் அனைவரையும் புலப்பெயர்வு மேற்கொள்ளவேண்டும் என முஹம்மது கட்டாயம் செய்யவுமில்லை. தயங்கியவர்களை அவர் வற்புறுத்தவுமில்லை என்பது மட்டுமல்ல அவர்களைக் கோழைகள் என்றோ, நம்பிக்கையற்றவர்கள் என்றோ கண்டிக்கவுமில்லை.

இந்தியக் கிறிஸ்தவம் சாதீயச் சுமைகளையும் தீண்டாமைக் கொடுமைகளையும் வெல்ல இயலாமல் தோற்றது. போர்க்

கொடுமையால் இன்று புலம் பெயர்ந்து வாழ்கிற ஈழத் தமிழர்களும் சரி,சம்பாதிப்பதற்காக புலம் பெயர்ந்து வாழ்கிற இந்தியத் தமிழர்களும் சரி தாம் செல்கிற இடங்களுக்கெல்லாம் தமது சாதிகளைச் சுமந்தே செல்கின்றனர். பாரிசிலிருந்து வெளிவரும் ஈழத் தமிழர்களின் இதழ்களையெல்லாம் விரித்தால் சாதி குறிப்பிட்டுத் திருமண விளம்பரங்கள் வருவதைப் பார்க்கலாம். ஆனால் புலப்பெயர்வு என்பது இத்தகைய இழிவுகளையும் சமூக அழிவுகளையும் சுமந்து வருகிற காரியமல்ல என்பதை முஹம்மதின் 'ஹிஜ்ரத்' ஒன்றே நிறுவுகிறது. அதனால்தான் தந்தை பெரியார், சாதியக் கொடுமைகள் நிறைந்த தமது சூழலில் 'இன இழிவு நீங்க இஸ்லாம் ஒன்றே நன்மருந்து' என்று ஊரறிய முழங்கினார்.

9

# பெரியாரையும் மார்க்சீயரையும் ஈர்த்த இஸ்லாம்

*பெரியார் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன். சமூகத்தில் சமத்துவம் நிலவுவதைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கியவர்கள் எல்லோரையும் இஸ்லாம் ஈர்த்து வந்துள்ளது. மதங்களையும் இறை நம்பிக்கையையும் ஏற்றுக்கொள்ளாதவர்களாயினும் பெரியாரும் மார்க்சீயர்களும் இஸ்லாத்தை வியந்து போற்றியுள்ளனர். இஸ்லாத்திற்கு இக்கட்டு வரும் வேளைகளில் அவர்கள் இஸ்லாத்தின் பக்கமே நின்றுள்ளனர். என்னைப் பொருத்தமட்டில் பிரெஞ்சு மார்க்சியரும் இஸ்லாமியவியலாளருமான மாக்ஸிம் ரோடின்சன் மூலமே இஸ்லாம் குறித்த ஈடுபாடு முதலில் ஏற்படலாயிற்று. இறைத்தூதர் முஹம்மது குறித்தும் இஸ்லாம் குறித்தும் அவர் எழுதியுள்ள ஏராளமான நூற்கள் மேலைத் தேசத்தினர் இஸ்லாம் குறித்து அவிழ்த்துவிட்ட பல கட்டுக் கதைகளைத் தவிடுபொடியாக்கக் கூடியவை. மோனெரோ (Monnerot) போன்றவர்கள் 'இஸ்லாமின் நவீன வடிவமே கம்யூனிசம்' என்று சொல்கிற அளவிற்குப் போயினர். இக்கூற்றை அப்படியே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லையாயினும் இத்தகைய ஒப்புமைக்கான கூறுகள் கவனிக்கப்பட வேண்டியவை. முஹம்மது கனவு கண்ட 'உம்மா'வின் சமத்துவக் கூறுகளே அவை.*

*தன்னை இஸ்லாம் ஈர்த்ததற்கான காரணங்களைப் பெரியார் ஈ.வே.ரா. பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறார். அவற்றைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்:*

> 1. இஸ்லாம் மதத்தில் பல கடவுளர் வணக்கம் கிடையாது. மூட நம்பிக்கைகள் கிடையாது. விக்கிரக ஆராதனை கிடையாது (பெரியார் சிந்தனைகள், ஆனைமுத்து, தொகுப்பு பக். 301, 302).
>
> 2. சமத்துவமும் சகோதரத்துவமும் நிறைந்த ஒரே மதமாக இஸ்லாம் மட்டுமே உள்ளது. தீண்டத்தகாதவர் என்றோ, வேதத்தைப் படிக்கக்கூடாதவர் என்றோ, ஆலயத்திற்குள் அல்லது பொது இடத்திற்குள் நுழைய முடியாதவர் என்றோ இங்கு யாருமே தடுக்கப் படுவது இல்லை (மேற்குறிப்பட்ட தொகுப்பு. பக். 32, 33).

*என்றெல்லாம் தெளிவாகச் சொன்னவர் பெரியார். இஸ்லாம் என்றால் ஏதோ 'லுங்கி' கட்டிக் கொள்வதோ அல்லது தாடி வைத்துக் கொள்வதோ*

*என்று நினைக்க வேண்டாம் என்று சொல்லிய பெரியார் இஸ்லாம் என்பது சாந்தி, பணிவு, பக்தி என்று பொருள்படும் அரபுச் சொல். இஸ்லாம் என்பது சகோதரத்தன்மை என்பது அவ்வளவுதான் என்று முத்தாய்ப்பாகக் கூறினார். தவிரவும்*

> "நம்மிலும் பல பெரியார்கள் - 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது போலவெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் அவைகள் என்றும் ஏட்டளவில் இருக்கின்றனவே தவிர நடப்பில் இல்லை. ஆனால் முஸ்லிம் சமுதாயத்திலே, நடப்பிலே ஒரே ஆண்டவன் வழிபாடும் மக்களுக்குள் பிறவியில் பேதமற்ற நிலைமையும் இருந்து வருகின்றன".

*என்பதையும் சுட்டிக் காட்டினார்.*

*உலகத்திலேயே மிகப்பெரிய கொடுமை தீண்டாமைதான் என்று வலியுறுத்திய பெரியார், "இந்த வியாதி மிகப் பெரிது. இது புற்று, தொழுநோய் போன்றது. வெகு நாளையநோய்" என்றார். இந்த நோயில் இருந்து விடுதலை பெற ஒரே வழி இந்து மதத்தை விட்டு வெளியேறுவதுதான் என்பதையும் திரும்பத் திரும்பச் சொன்னார். வெளியேறுவது என்று சொன்னதோடு நிற்கவில்லை.*

> "(இந்த நோய்க்கு) ஒரே மருந்துதான் - அது இஸ்லாம் தான்! இதைத் தவிர வேறு மருந்து இல்லை. இது இல்லாவிட்டால் வேதனைப் பட வேண்டியதுதான்... நோய் தீர்ந்து எழுந்து நடக்க இன்றைய நிலையில் இஸ்லாம் மருந்துதான். இதுதான் நாடு கொடுக்கும், வீரம்கொடுக்கும், நிமிர்ந்து நடக்கச் செய்யும் மருந்தாகும்"

*என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். (இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து என்ற பெயரில் குடியரசு பதிப்பகத்தால் இந்த உரை சிறு நூலாக 1947-ல் வெளியிடப்பட்டது. ஆனைமுத்து தொகுப்பிலும் காணலாம்).*

*வெறும் பேச்சோடு நிறுத்திக் கொள்பவரல்லர் பெரியார். புகழ் பெற்ற வைக்கம் போராட்டத்தின் முதற்கட்டம் முடிந்த கையோடு,*

> "அடுத்து எர்ணாகுளத்தில் ஒரு மாநாடு என் (பெரியார்) தலைமையில் கூட்டப்பட்டது. அதில் சாதி ஒழிப்புக்காகச் சாதியில்லாத மதமாகிய இஸ்லாம் மதத்தில் இந்துக்கள் சேர்ந்துவிடுவது என்று தீர்மானம் நிறைவேற்றக் கொண்டு வரப்பட்டது. சில செல்வாக்குட்பட்டவர்கள் கிறிஸ்தவ மதத்தில் சேருவது என்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். மாஜி மந்திரி அய்யப்பன் அவர்கள் இஸ்லாம் மதத்திற்குப் போய்ச் சேருவது என்று திருத்திப் போட வேண்டுமென்று சொல்லி ஏகமனமாக நிறைவேற்றச் செய்தார். இஸ்லாத்திற்குச் சேருவது என்ற தீர்மானம் வந்த அன்றைக்கே ஒரு அய்ம்பது பேர்களைப் போல முஸ்லிம்களாகி

விட்டார்கள்; பிறகு வெளியிலும் பலர் மதம் மாறிவிட்டார்கள்; இது ஒரு பெரிய கலக்குக் கலக்கிவிட்டது"

*என்று 09.01.1959 தேதியிட்ட 'விடுதலை'யில் பெரியார் எழுதுகிறார். இதன் பிறகே திருவிதாங்கூர் கோயிற் கதவுகள் தீண்டத்தகாதவர்களுக்குக் திறந்து விடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.*

*அண்ணல் அம்பேத்கர் 1930ல் முஸ்லிமாக மாறுவது என முடிவு எடுத்தபோது மாளவியா, விஜயராகவாச்சாரி முதலியோரெல்லாம் அதைக் கண்டித்தனர். பெரியார் ஒருவரே, "நீங்கள் ஒண்டியாகப் போகக் கூடாது. குறைந்தது ஒரு லட்சம் பேரோடு மதம் மாற வேண்டும்" என்று தந்தி கொடுத்து ஊக்குவித்தார் (ஆனைமுத்து தொகுப்பு பக். 1033). அம்பேத்கரின் பவுத்த மதமாற்றம் குறித்துப் பெரியார் கூறியதும் நினைவு கூரத்தக்கது. அது:*

"அம்பேத்கார் பவுத்தத்தில் சேர்கிறேன் என்று சொன்னவுடன் எப்போதும் போலப் பலர் எதிர்த்தார்கள். ஆனால் இஸ்லாம் ஆவது என்றால் பயப்படுகிற அளவுக்குப் பவுத்தர் ஆகிவிடுவது என்று சொல்வதற்கு இந்து மதத்தார்கள் (பார்ப்பனர்கள்) பயப்படமாட்டார்கள். ஏனென்றால் பவுத்தத்தை இந்து மதத்தோடு ஏறக்குயை கலர வைத்து விட்டார்கள்"□(சென்னைச் சொற்பொழிவு 13.5.52).

*முஸ்லிம்களின் அன்றைய முக்கிய அரசியல் கோரிக்கைகளான பாகிஸ்தான் பிரிவினை, தனி வகுப்புவாரி இடஒதுக்கீடு ஆகிய இரண்டையும் முழுக்க முழுக்க ஆதரித்த ஒரே தமிழ் அரசியல்வாதி பெரியார்தான். இஸ்லாமியர்களை அன்னியர்கள் எனவும், ராமராஜ்யம் அமைப்போம் எனவும், இந்துஸ்தானம் இந்துக்களுக்கே எனவும் சாவர்க்கர் போன்றவர்கள் சொல்லும்போது முஸ்லிம்களிடம் வேறு என்ன எதிர்பார்க்க இயலும் என்று கேட்ட பெரியார், "ஜனாப் ஜின்னாவின் திட்டமே அறிவு ததும்புவது" என்று முழங்கினார் (குடிஅரசு, அறிக்கை, 31.3.1940). வகுப்புப் பிரதிநிதித்துவத்தையும் வற்புறுத்தினார். "இந்திய அரசாங்கத்தில், இந்திய ஜனங்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்ட பெரிய சமூகத்தவராகிய முகம்மதிய சகோதரர்களுக்குப் பங்கு உண்டா இல்லையா?" என்று வினவினார் (குடியரசு,14.2.26)*

*இஸ்லாமியரைப் பெரியார், திராவிடர் என அணைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. திராவிட மொழிகளில் ஒன்றான 'ப்ராஹுய்' மொழி பலுசிஸ்தானத்தில் பயிலப்படுவதும் சிந்து வெளி நாகரீகத்தை 'புரோடோஎலாமோ' நாகரிகம் என அறிஞர்கள் மெக் ஆல்பின் போன்றோர் மெசபடோமிய நாகரிகத்துடன் இணைத்துக் குறிப்பிடுவதையும் இத்துடன் ஒப்பு நோக்க வேண்டும்.*

*முழுமையான நாத்திகராயினும் இஸ்லாமிய இறை நம்பிக்கைகளில்*

*ஒன்றை அவர் ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. இறைத்தூது பற்றி இஸ்லாம் விரிவாகப் பேசுகிறது. மனிதர்களுக்குத் தேவையான அனைத்தையும் அவர்களுக்கு அளித்த அல்லாஹ், அவர்களுக்கு அவ்வப்போது, ஆங்காங்கு இறைவனின் வழியைக் காண்பிக்கக்கூடிய இறைத் தூதர்களையும் அளித்தான். நபி, ரசூல், பைகம்பர் என அவர்கள் அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு அவனால் அரபு மக்களுக்கு இன்றைக்குச் சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன்பு அளிக்கப்பட்ட இறைத்தூதரே முஹம்மது அவர்கள். நபிகளின் மூலம் பரிசுத்த குர்ஆன் இறக்கியருளப்பட்டது. அனைத்து மக்களுக்கும் தேவையான உண்மைகள் எல்லாம் அதிலுள்ளன என்பதும் முஹம்மது மனிதகுலம் முழுமைக்கான இறைத்தூதர் என்பதும் இஸ்லாமிய நம்பிக்கை. மனித குலத்திற்கு எத்தனை போதனைகள் அளிக்கப்பட வேண்டுமோ அத்தனையும் அவர் மூலம் இறக்கப்பட்டுவிட்டதால் அவரே இறுதி இறைத்தூதர். இந்த அடிப்படையில்தான் முஹம்மது அவர்கள் இறுதித் தூதர் - இறைத் தூதின் தொடரை முடிவுக்குக் கொண்டு வருபவர் - 'காத்தமுன் நபிய்யீன்' என அழைக்கப்படுகிறார்.*

> "மக்களே(!) முஹம்மத் உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையல்லர். ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராகவும் இறுதி நபியாகவும் இருக்கின்றார். அல்லாஹ் ஒவ்வொன்றையும் அறிந்தவனாக உள்ளான்" (33:40)

*என்பது புனித குர்ஆனில் வெளிப்படும் இறைமொழி.*

> "தூதர்கள் எனும் நீண்ட சங்கிலித் தொடரில் எனக்குள்ள தொடர்பு ஒர் அரண்மனைக்கு ஒப்பானதாகும். அந்த அரண்மனையோ மிக நேர்த்தியாகக் கட்டப்பட்டிருக்கிறது. அதில் எல்லாமே பூர்த்தி அடைந்துவிட்டன. ஒரே ஒரு செங்கல் வைக்க வேண்டிய இடம் தான் காலியாக இருந்தது. அந்தக் காலியிடத்தையும் நான் நிரப்பி விட்டேன். கட்டடமும் பரிபூரணமாகிவிட்டது. தூதுத்துவமும் இத்துடன் முடிவுற்றுவிட்டது".

*என நபிகள் கூறியுள்ளதை ஹதீஸ்களும் (புகாரி, முஸ்லிம்) உறுதி செய்யும் (பார்க்க: மவ்லானா மவ்தூதியின் 'இதுதான் இஸ்லாம்').*

*இறுதி நபித்துவம் என்கிற இக்கருத்தைப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் அவருக்கே உரித்தான பாணியில் சொல்வது ரசிக்கத்தக்கது. அது:*

> "தோழர்களே! மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். நபி அவர்கள், 'மக்கள் சமுதாயத்திற்கு ஒரே கடவுள்; மக்கள் சமுதாயம் ஒரே குலம். உருவ வழிபாட்டுக்கு மக்கள் ஆளாகக் கூடாது. நான் என்ன சொல்லியிருந்தாலும் உங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பாருங்கள்.

*என்பதாகச் சொல்லியிருக்கிறார்.*

கடைசியாக இன்னொன்றையும் சொன்னார்: 'நான்தான் கடைசி நபி எனக்குப் பின்னால் நபிகள் (தீர்க்கதரிசிகள்) தோன்றமாட்டார்கள்' என்று. அதைப்பற்றி நீங்கள் எப்படிக் கருதினாலும் என்ன முடிவுக்கு வந்தாலும் இன்றைய வரையிலே அவருக்குப் பின்னால் இந்தத் துறைகளில் அவர் சொன்ன கொள்கை, கருத்துக்களைவிட மேலானதாகச் சொல்லுவதற்கு எவரும் தோன்றவில்லை. அந்த அளவுக்கு மனித சமுதாயத்தின் எல்லா வாழ்வுத் துறைத் தன்மைகள் பற்றியும் உயர்ந்த தத்துவங்கள் கொண்ட கோட்பாடுகள் சொல்லிவிட்டார் நபி அவர்கள்". (சென்னைச் சொற்பொழிவு, ,20.12.1953)

*என்று சொல்லும் பெரியார், நபிகளின் மானுடத் தன்மை பற்றிச் சொல்வது சிந்திக்கத்தக்கது.*

# 10

# நபிகள் என்ற மனிதர்

*சாத்தான்குளத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது (28.07.1931) பெரியார் ஈ.வே.ரா. அவர்கள்,*

> "திரு. முகமது நபியைப் பற்றி யார் எப்படி நினைத்துக் கொண்டாலும், நான் அவரை ஒரு மனிதர் என்றும், மனிதரைப் போலவே தாயும், தகப்பனும் கூடிக் கருத்தரித்துப் பிறந்தவர் என்றும் கருதித்தான், அவரால் செய்யப்பட்டதாகச் சொல்லும் விஷயங்களில் அனேகத்தை நான் புகழ்கிறேன். அதற்காகவே அவரையும் நான் பாராட்டுகிறேன். அப்படிச் சொல்லப்படுபவைகளே அந்த மார்க்கத்துக்கு ஒரு பெருமை என்றும் நினைக்கிறேன். ஆனால் மற்ற மதத்துக்காரர்களோ தங்கள் மதத்தலைவரை ஒரு மனிதர் என்றாலே கோபித்துக் கொள்கிறார்கள். கழுதை, நாய். குதிரை இவற்றினுடைய வயிற்றில் இருந்து பிறந்தவர் என்றாலும் ஒப்புக்கொள்கிறார்கள்"

*என்று கூறியது மிகவும் பொருள் நிறைந்த சொற்கள்.*

*நபிகள் நாயகம் மானுடம் போற்றுகிற ஒரு இறைத்தூதராக விளங்கிய போதிலும் மிகவும் சாதாராணமான, மனிதப் பண்புகளும் உணர்ச்சிகளும் நிறைந்த ஒரு எளிய மனிதராக நம்மிடையே வாழ்ந்த ஒரு வரலாற்று நாயகர். அவருடைய வாழ்வில் அற்புதங்கள் நடக்காமல் இல்லை. அவர் இறைத்தூதரானதும், இறை மொழிகள் அவரூடாக இறக்கப்பட்டதும் மிகப்பெரிய அற்புதங்கள்தான். மிகவும் ரகசியமாக அவர் யத்ரிபை (மதீனா) நோக்கிப் புலம் பெயர்ந்து சென்றதும், தேடி வருபவர் களிடமிருந்து தப்பிப்பதற்காக ஒரு மலைக்குகையில் ஒளிந்து கொண்டபோது அல்லாஹ்வின் அருளால் சிலந்தி ஒன்று குகை வாயிலில் வலை பின்னி அவரைக் காத்ததும், மலைப்புறா ஒன்று குகைக்குள் யாருமில்லை என்கிற தோற்றம் ஏற்படுமாறு அடைகாத்துக் கொண்டிருந்ததும் கூட நபிகள் வாழ்வில் நடைபெற்ற அற்புதங்கள்தான். 'இரவுப் பயணம்' என இஸ்லாமிய மரபில் அழைக்கப்படும் நிகழ்வில் ஜிப்ரீல் என்கிற வானவர் முஹம்மதை விண்ணிற்கு அழைத்துச் சென்றார். (மிஃராஜ்) என்கிற இந்த இஸ்லாமிய நம்பிக்கையும் கூட ஒரு அற்புதத்தைத் தான் சுட்டிக் காட்டுகிறது.*

*ஆனால் இந்த நம்பிக்கைகள் அனைத்திலும் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்த அற்புதங்கள் எதுவும் நபிகளால் நிகழ்த்தப்*

பட்டவையல்ல; நபிகள் மீது நிகழ்ந்தவைகள் என்று வேண்டுமானால் சொல்லலாம். இவற்றை நிகழ்த்தியது ஏக இறைவன் என்பதே இஸ்லாமிய நம்பிக்கை. இந்த அற்புதங்களையும் மீறி நபிகள் ஒரு மனிதராகவே வாழ்ந்தார்.

இக்கட்டுகளிலிருந்து அவரையும், தோழர்களையும், இதர இஸ்லாம் ஆனவர்களையும் அல்லாஹ் காப்பாற்றுவான் என்கிற நம்பிக்கை இருந்ததெனினும் ஆபத்தான சந்தர்ப்பங்களில் கூட அவர் அற்புதங்கள் செய்து தப்பித்ததில்லை. மற்ற மதங்கள் அனைத்திலும், பவுத்தம் நீங்கலாக, இறைத்தூதர்கள் அல்லது இறையம்சங்களாகத் தோன்றியோர் அற்புதங்களை நிகழ்த்துவார்கள். மக்களை வியக்க வைப்பார்கள். கருணையையும் அன்பையும் போதித்த கிறிஸ்துவும் கூட இதற்கு விதி விலக்கல்ல.

எந்த அதிசயத்தையும் நிகழ்த்திக் காட்டாமல் தமது ஏக இறைக் கொள்கையை முன்வைத்து கடும் எதிர்ப்புகள், கொலை முயற்சிகள் மத்தியில் கொள்கை அடிப்படையில் மக்களைத் திரட்டியவர் நபிகள்.

தமது பாதையை ஏற்பது என்பது கொள்கை வழிப்பட்ட ஒரு செயல். உடனடிப் பலன்கள் என்பன எதிர்மறையாகக் கூட இருக்கலாம். கடும் எதிர்ப்புகளையும், வெறுப்பையும், கொடுமைகளையும் சந்திக்க நேரலாம். அல்லாஹ் இறுதியில் உங்களைக் காப்பாற்றுவான் என்கிற நம்பிக்கையோடு துன்பங்களை எதிர்கொள்ளுங்கள் என்பதாகத்தான் முஹம்மதின் அறிவுரைகள் அமைந்தன.

முஹம்மதின் வாழ்வை அறிய மிக முக்கியமான சமகால சாட்சியமாக அமைவது திருக்குர்ஆன் தான். மோஸசுக்கு அருளப்பட்ட பத்து கட்டளைகளைப் போலவோ, யூதர்களின் ‘டோராஹ்’வைப் போலவோ, கிருஷ்ணனின் பகவத் கீதையைப் போலவோ ஒரே தருணத்தில் இறக்கப்பட்டதல்ல திருக்குர்ஆன். இருபத்து மூன்று ஆண்டு காலத்தில் அவ்வப்போது சூழலுக்கேற்ப அருளப்பட்டது அது.

என்றென்றைக்குமான உண்மைகள் என்பது தவிர அவ்வப்போதைய பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளாகவும் அவை அமைந்ததன் விளைவாகத் திருக்குர்ஆனின் ஊடாகவே நபிகளின் வரலாற்றையும் நாம் உய்த்தறியவும் இயலும்.

திருக்குர்ஆனின் தொகுப்பு வரிசையும், அருளப்பட்ட வரிசையும் ஒன்றல்ல. விரிவான அத்தியாயங்கள் முன்னதாகவும், சுருக்கமானவை பின்னதாகவும் தொகுக்கப்பட்டுள்ளன என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு அத்தியாயமும் எத்தகைய தருணங்களில் இறக்கப்பட்டவை என்பது இன்று மிகத் துல்லியமாகக் கணிக்கப் பட்டுள்ளது.

*நபிமொழி மரபுகளைத் தொகுத்தளித்துள்ள 'ஹதீஸ்'கள், குறிப்பாக முஹம்மத் இப்ன் இஸ்மாயில் அல்புகாரியாலும், முஸ்லிம் இப்ன் அல்ஹிஜ்ஜாப் அல்குஷாய்ரியாலும் தொகுக்கப்பட்ட 'அல்புகாரி'யும், அல்முஸ்லிமும் (கி.பி. 9-ம் நூற்றாண்டு) நபிகளின் வாழ்க்கையை அறியப் பயன்படும் அடுத்த ஆதாரங்கள். நபிகளின் ஆதாரபூர்வமான முதல் வரலாற்று நூலாசிரியர்களான முஹம்மத் இப்ன் இஷாக் (767), முஹம்மத் இப்ன் சாத் (845), அபுஜஅஃபர் அல்தபரி (923), முஹம்மத் இப்ன் உமர் அல் வாஹித் (820) ஆகியோரது நூற்கள் அதுபோலவே மிக முக்கியமானவை.*

*ஏசுவின் வாழ்வை விவரிக்கும் புனித பால், மாற்கு, மத்தேயு, லூக்கா, யோவான் ஆகியோரின் 'சுவிசேஷங்கள்' அவரது வாழ்வை விவரிப்பது என்பதைக் காட்டிலும் அவரது போதனைகள், மரணம், திரு உயிர்ப்பு ஆகியவற்றின் இறையியல் முக்கியத்துவத்தையும், அர்த்தங்களையும் சுட்டிக்காட்டுபவையாகவே உள்ளன.*

*ஆனால் முஹம்மதின் வாழ்க்கைச் சம்பவங்களாக நமக்குக் கிடைப்பவையோ மண்ணின் மணங் கமழும் மானுட வாழ்வின் சிதறல்கள். கருணை மிக்க ஏசுவை மட்டும் நாம் கிறிஸ்தவ இறை நூற்களில் காண இயலும். கலகலவெனச் சிரிக்கிற ஒரு ஏசுவை நீங்கள் அதில் கண்டுவிட முடியாது. ஆனால் முஹம்மதோ கருணை மிக்கவராக மட்டுமன்று கலகலவென நகைக்கிற, வேடிக்கை பேசுகிற, கோபம் கொள்கிற. துன்பங்களைக் கண்டு சற்றே நெகிழ்ந்து போகிற, உற்ற தோழரின் மரணத்துக்காக குமுறி அழுகிற, புதிதாய்ப் பிறந்த மகனைப் பற்றி மகிழ்ச்சியடைகிற, மனைவியரால் உருவாகும் சில பிரச்சினைகளால் சற்றே சஞ்சலமுறுகிற இந்த மண்ணின் மகனாக முஹம்மது நம்முன் காட்சியளிக்கிறார்.*

*மனிதன் மட்டுமே தவறுகள் செய்யும் வாய்ப்புப் பெற்றவன். வானவர்களுக்கோ, இறைவனுக்கோ அது சாத்தியமல்ல.*

> "(நபியே!) உம்மை இறைவன் ஒரு அனாதையாகக் காணவில்லையா? அடைக்கலமும் புகலிடமும் அளிக்கவில்லையா? வழி தவறுபவராகக் காணவில்லையா? சரியான வழிகாட்டவில்லையா? தேவைகள் நிறைந்தவராக உம்மைக் காணவில்லையா? தேவையான அனைத்தையும் தரவில்லையா?" (93:6-8)

*என்பன இறைமொழிகள். நபித்துவம் அடைந்த முஹம்மதிடம் நிறைந்திருந்த மனிதத்துவத்தை இறைவனே இதன் மூலம் ஏற்றுக்கொள்வது குறிப்பிடத்தக்கது. நபிகளின் வாழ்வில் நிகழ்ந்த சில நிகழ்வுகள் அவரது மனித மாண்புகளை வெளிப்படுத்துவதைப் பார்ப்போம்.*

இஸ்லாமியச் சட்டங்கள் நெகிழ்ச்சியற்றவை. இறுக்கமானவை என்றுதான் இங்கே செய்திகள் பரப்பப்படுகின்றன. ஒருமுறை ஒரு ஏழை மனிதர் சிறிய குற்றமொன்றைச் செய்து விடுகிறார். செய்த குற்றத்திற்குத் தண்டனையாக ஏழைகளுக்குத் தருமம் செய்யுமாறு ஆணையிடுகிறார் நபிகள். தருமம் செய்வதற்குத் தன்னிடம் உணவோ, உடமைகளோ இல்லையே என்று முறையிட்டார் அந்த ஏழை. அந்த நேரம் பார்த்து பள்ளிவாசலுக்குள் ஒரு கூடை நிறைய பேரீத்தம் பழங்கள் வந்திறங்கின. முஹம்மதுக்கென யாரோ அனுப்பிய பரிசு. "இங்கே வா, இதை எடுத்துச் சென்று ஏழைகளுக்குக் கொடு" என்றார் நபிகள். அந்த ஏழையோ, "இறைத்தூதரே! என்னிலும் ஏழை இந்த ஊரில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நான் யாருக்குத் தருமம் அளிப்பது?" என்றொரு நியாயமான அய்யத்தை எழுப்பினார். கலகலவென நகைத்த நபிகள் கூறினார் "இந்தப் பழங்கள் அனைத்தையும் நீயே சாப்பிடு." அதுதான் உனக்குத் தண்டனை.

இப்படிச்சிரித்த நபிகள், நெகிழ்ந்த சம்பவங்களும் உண்டு. கி.பி. 619-ம் ஆண்டில் அவரது மனைவியும், நண்பராய், ஆலோசகராய் இதுகாறும் வாழ்ந்து வந்த கதீஜா அம்மை மரணமடைந்தார். பெரும் பக்கபலமாகவும், குறைஷிகள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடையவரு மாகவிருந்த பெரியப்பா அபூதாலிப் அவர்களும் நபிகளை விட்டுப் பிரிந்தார். அபூதாலிப் ரொம்பவும் வித்தியசாமான ஒரு மனிதர். கருவாக இருந்தபோதே தந்தையை இழந்த நபிகளைப் பெறாத தந்தையாக இருந்து வளர்த்தவர் அவர். தமது நம்பிக்கைகளுக்கு எதிராகப் புதிய சிந்தனைகளைப் பரப்பி மக்களைத் திரட்டி வந்த முஹம்மதைக் குறைஷிகள் ஒன்றும் செய்ய இயலாமல் இருந்ததற்கு அபூதாலிப் அவர்களும் ஒரு காரணம். அவரை விரோதித்துக் கொள்ள அவர்கள் தயாராய் இல்லை. அவர் மூலமாகவே முஹம்மதை 'வழி'க்குக் கொண்டு வரவும் அவர்கள் முயற்சித்தனர். அவர்களுக்காக ஏக இறைக் கொள்கையைக் கைவிடுமாறு நபிகளை அபூதாலிப் கேட்டுக் கொண்டபோது நபிகள் அவரது வேண்டுகோளைப் பணிவாக மறுத்தார். தமது கொள்கை உறுதியை வெளிப்படுத்தினார். இறுதிவரை நபிகளின் 'புதிய' மார்க்கத்தை, ஏற்றுக் கொள்ளாதவராயினும், அவர் தமது கொள்கையைப் பிரச்சாரம் செய்வதற்கான உரிமையை அபூதாலிப் மதித்தார். புரட்சிகர வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் அனைவரும் நிச்சயமாக இத்தகைய சனநாயக சக்திகளைத் தம் வாழ்வில் சந்தித்திருப்பார்கள். இயக்கங்களின் செயற்பாடுகளுக்கு இத்தகையோரின் இருப்புகள் மிகவும் அவசியமாக இருந்து வந்துள்ளன.

நபிகளின் எதிரிகள் அவருக்கு எல்லாவிதமான இடையூறுகளையும் செய்தனர். கொலை முயற்சி, கல்லால் அடித்தல், கழிவுகளை மேலே வீசுதல், திட்டுதல் எனப் பல கொடுமைகளை முஹம்மது சகித்து வந்தார். ஒரு முறை நபிகளார் கஅபாவிலிருந்து தொழுகை முடித்துத் திரும்பி

வந்து கொண்டிருந்தபோது ஒருவர் குப்பைக் கூளங்களை அவர் மீது வீசி எறிந்தார். முகத்திலும் தலையிலும் குப்பை வழிய வீடு வந்து சேர்ந்த நபிகளாரைக் கண்டு கண்ணீர் விட்டப் புதல்வி பாத்திமா அவரைக் கழுவித் தூய்மை செய்தார். "அழாதே மகளே, உன் தந்தையை இறைவன் ஒருக்காலும் கைவிடமாட்டான்" என்று தேற்றிய நபிகள், "பெரிய தந்தை அபூதாலிப் உயிருடன் இருந்திருந்தால் இப்படி நடந்து இருக்குமா?" என்று மனம் நெகிழ்ந்ததை அறியும்போது நபித்துவத்திற்குள் கனிந்திருந்த அவரது மானுடத்தை நாம் அனுபவிக்கிறோம்.

# 11

# கதீஜா

*தான் ஒரு இறைத்தூதர் என்பதை வெளிப்படுத்தியும் ஓரிறைக் கொள்கையை முன் வைத்தும் முஹம்மது இயங்கத் தொடங்கியபோது மக்கா நகர் குறைஷிச் சமூகம் மேற்கொண்ட கொடுத்தாக்குதல்களில் மிகப் பெரிய ஆறுதலாக இருந்தவர் அன்னை கதீஜா. பிறக்கும் முன்பே தந்தையையும், ஆறாவது வயதில் அன்னையையும், எட்டாம் வயதில் ஒரே ஆதரவாக இருந்த தந்தை வழிப் பாட்டனையும் இழந்து பெரியப்பர் அபூதாலிப்பின் ஆதரவில் வாழ்ந்து கொண்டிருந்த இளைஞர் முஹம்மதுக்கு அல்லாஹ் அளித்த அருங்கொடை கதீஜா. சொல்லப் போனால் அல்லாஹ் முஹம்மதை அடையாளம் காணும் முன்பாகவே அவரைக் கண்டு தேர்வு செய்தவர் கதீஜா.*

*குறைஷியருள் அஸத் கிளையைச் சேர்த்த பணக்கார விதவையான கதீஜா முஹம்மதைத் திருமணம் செய்து கொண்டபோது நாற்பது வயதை எட்டியிருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண். இருமுறை விதவையானவரும் முந்தைய கணவர்களுக்குப் பல குழந்தைகளை ஈன்றவருமான கதீஜா ஒரு பெண்ணான போதிலும் மக்கா போன்ற ஒரு வணிக நகரத்தில் வாழ நேர்ந்ததால் ஒரு முக்கிய வணிகராகப் பரிணமித்திருந்தார். எனினும் சிரியா போன்ற நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்து வருவதற்கு அவருக்கு ஒரு ஆண் உதவியாளர் வேண்டியிருந்தது. நேர்மையாளர் ('அல் அமின்'), வாக்குத் தவறாதவர் என்றொல்லாம் பெயர் பெற்றிருந்த முஹம்மதின் பால் அவரது கவனம் சரிந்தது.*

*பெரியப்பர் அபூதாலிப் மற்றும் ஒன்றுவிட்ட சகோதரர்களின் ஆதரவுகள் இருந்தபோதிலும் மிகுந்த ஏழ்மை நிலையிலிருந்தவர் முஹம்மது. தனது இளமைக்கால அனாதை வாழ்வின் விளைவாகத் தானோ என்னவோ இறுதிவரை அனாதைகளின்பாற் மிகுந்த கரிசனம் உடையவராக விளங்கினார் அவர். அனாதைகளுக்கு ஆதரவளிப்பதை முஸ்லிம்களின் முக்கிய கடமையாகவும் ஆக்கினார். இளம் வயதில் கல்வி பயிலும் வாய்ப்பு முஹம்மதுக்குக் கிடைக்கவில்லை. எனினும் அக்காலக் குறைஷி இளைஞர்கள் பெற்ற போர்ப் பயிற்சிகளை முழுமையாகக் கற்றுக்கொண்டார். இளமையிலேயே அவரிடம் பின்னாளைய நபித்துவக் கூறுகளைச் சிலர் அடையாளம் கண்டதாக மரபு வழி வரலாறுகள் பதிவு செய்துள்ளன. சிறுவனான முஹம்மது வளர்ப்புத் தாய் ஹலீமாவின் வீட்டில் வளர்ந்து கொண்டிருந்தபோது வெள்ளை ஆடை அணிந்த வானவர் இருவர் அவனது உடலிலிருந்து இதயத்தை எடுத்து அதைப்*

பனியால் சுத்தம் செய்தனர் எனவும் ஒரு தராசில் அவரை நிறுத்துப் பார்த்து அனைத்து அரபியரைக் காட்டிலும் அதிக நிறைவுடையவராக நீ உள்ளாய் என வாழ்த்தி ஆசி பகர்ந்துச் சென்றதாகவும் ஒரு பதிவு உண்டு. ஹலீமாவின் பிள்ளைகள் முஹம்மது சுருண்டு வீழ்ந்ததைக் கண்டு ஓடிச்சென்று பெற்றோர்களிடம் கூறினர். தங்கள் பொறுப்பிலிருக்கும்போது முஹம்மதின் உயிருக்கு ஏதும் ஆபத்து வந்துவிடலாகாது என்று அச்சமுற்ற ஹலீமாவும் அவரது கணவர் அல்-ஹரீத்தும் உடனடியாகச் சிறுவன் முஹம்மதை மக்காவுக்கு எடுத்துச் சென்றனர். பிற சாதாரண மானுடக் குழந்தைகள் போன்றவரல்ல முஹம்மது என்பதை அறிந்திருந்த அன்னை ஆமீனா, அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார். எனினும் மகனைத் தம் அருகிலேயே வைத்துக் கொண்டார்.

இதுபோன்று அவரது அசாதாரணத் தன்மையைப் பற்றிய வேறு ஓரிரு பதிவுகளும் உண்டென்ற போதிலும் அவரது இளம் வயது மிகச் சாதாரணமாகவே கழிந்தது. எனினும் ஆடு மேய்க்கச் சென்றபோதும் பிற சந்தர்ப்பங்களிலும் மற்ற சிறுவர்களுடன் கலகலவெனப்பழகி விளையாடாமல் சிந்தனை வயப்பட்டவராகவும், தனிமையை நாடிச் சென்றவராகவும் முஹம்மதை நாம் காண்கிறோம். இத்தனைக்கும் ஊடாக வணிகத்திறமையும் நேர்மையும் மிக்க ஒரு இளைஞனாக அவர் உருப்பெற்றார்.

இருபதுகளை அவர் வயது கடந்து கொண்டிருந்தபோது எல்லோரையும் போல அவருக்கும் திருமண ஆசை வந்தது. அபூதாலிப்பின் மகள் உம்ம்ஹனியை (ஃபக்ஹிடா)த் திருமணம் செய்து கொள்ளும் ஆசையையும் அவர் வெளிப்படுத்தினார். ஆனால் பெரியப்பரின் விருப்பம் வேறாக இருந்தது. மக்ஸூம் கிளையைச் சேர்ந்த ஒரு உயர் குடி இளைஞனை அவர் தேர்வு செய்தார்.

இந்நிலையில்தான் அதிர்ஷ்டக் காற்று முஹம்மதின் பக்கமாக வீசத் தொடங்கியது. 595-ம் ஆண்டில் சிரியா வரையிலான ஒரு வணிகப் பயணம் ஒன்றைப் பொறுப்பேற்று நடத்திச் செல்லுமாறு கதீஜா கேட்டுக்கொண்டபோது அதனைச் சிறப்புறவும், லாபகரமாகவும், மிகுந்த நேர்மையுடனும் நிறைவேற்றிக் கொடுத்தார் முஹம்மது. பயணத்தில் கூடச் சென்றிருந்த மைசரா என்கிற உதவியாளர் அவரது திறமையை வியந்ததோடன்றி பயணத்தின்

போது சந்தித்தத் துறவி ஒருவர் பிற்காலத்தில் முஹம்மது ஒரு இறைத் தூதர் ஆவார் எனக் கூறியதாகவும், கடும் வெயிலின்போது வானவர் இருவர் முஹம்மதுக்கு நிழல் அளித்துப் பாதுகாத்ததாகவும் கதீஜாவிடம் கூறினார். ஹனீஃப்களில் ஒருவரும் கதீஜாவின் உறவினருமான வராகாஹ்வும் முஹம்மது இறைத்தூதராக இருக்கலாம் என்பதை உறுதி செய்தார் எல்லாவற்றைக் காட்டிலும் முஹம்மதின் நேர்மையும் கம்பீரமுமே கதீஜாவை ஈர்த்தன.

தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் ஆசையை கதீஜா வெளிப்படுத்தியபோது முஹம்மதுக்கு வயது 25. வயது வேறுபாட்டைக் காட்டிலும் பொருளியல் ஏற்றத்தாழ்வைக் கருதியே தயங்கினார் முஹம்மது. எனினும் அவர்களின் திருமண வாழ்வு எடுத்துக்காட்டான ஒன்றாக அமைந்தது. முஹம்மதின் மீது வசை பாடுகிறவர்கள் கதீஜாவை அவர் பொருளுக்கு ஆசைப்பட்டுத் திருமணம் செய்து கொண்டார் எனக் கூறுவதுண்டு. எனினும் அவர்களின் மண வாழ்வைக் கூர்ந்து கவனித்தால் இக்கூற்று அபத்தம் என்பது விளங்கும். கதீஜாவும் முஹம்மதும் ஆறு குழந்தைகளை ஈன்றனர். அல்காஸிம், அப்துல்லாஹ் என்னும் இரு ஆண்பிள்ளைகள் குழந்தைப் பருவத்திலேயே மரணமுற்ற போதிலும் ஸைனப், ருகையா, உம்ம் குப்தூம், பாத்திமா ஆகிய நான்கு பெண்களும் நீண்ட நாட்கள் நபிகளுடன் வாழ்ந்தனர். முதல் முஸ்லிம்களில் ஒருவராகவும் விளங்கினர்.

கதீஜாவுடன் முஹம்மது சுமார் 25 ஆண்டுகள் வாழ்ந்தார். முஹம்மதின் பிற திருமணங்கள் யாவும் கதீஜாவின் மறைவுக்குப் பின்பே நடந்தன. கதீஜா உயிருடன் இருந்தபோது அவர் யாரையும் நினைத்ததில்லை. கதீஜா மறைந்த பின்னும் கூட பிற மனைவியரிடம் அவரைப் புகழும் வழக்கமும் முஹம்மதிற்கு இருந்தது. இதனால் எரிச்சலூற்ற ஆயிஷா ஒருமுறை, ‘‘ஏன் அந்தப் பல் போன கிழவியையே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?’’ அவர்தான் இறந்து போனார். ‘‘கடவுள் உங்களுக்கு இன்னும் சிறந்தவற்றால் அதை ஈடு செய்துள்ளாரே’’ எனச் சீறிய சம்பவங்களும் உண்டு.

கதீஜாவின் உறுதியையும் புத்தி கூர்மையையும் பெருந்தன்மையையும் இப்ன் இஷ்ஹாக் போன்ற வரலாற்றாசிரியர்கள் புகழ்ந்துள்ளனர். முஹம்மதின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அவர் துணையாய் இருந்தார். தனது எளிய, சிக்கன வாழ்வை மாற்றிக்கொள்ளாத முஹம்மது கதீஜாவின் பெருஞ்செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்கு வாரி வழங்கியதையும் அவர் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்.

நாளாக நாளாக முஹம்மது தம் மக்கள் குறித்துச் சிந்திப்பதும், கவலை கொள்வதும் அதிகமாகின. அடிக்கடி ஹிரா மலைக்குச் சென்று அங்கொரு குகையில் சிந்தனையில் ஆழ்ந்துவிடுவார். அப்போதுதான் ஒருநாள் (610, ரமளான் 7ம் நாள்) அவருக்கு அந்த இறையனுபவம் வாய்த்தது. இதுகுறித்துப் பின்னர் அவர் விவரிப்பதைக் கேட்கும்போது யாருக்கும் மனமிறங்கும். ஒரு வானவர் தனக்கு முன் தோன்றி ‘ஓதுவீர்’ எனக் கட்டளை இட்டதும் ‘நான் ஓதுபவன் அல்ல’ என மறுக்க மட்டுமே அவரால் முடிந்தது. எனினும் அந்த வானவர் முஹம்மதை எலும்பு நொறுங்க இறுக அணைத்தார். ‘படைத்த இறைவனின் பெயரால் ஓதுவீர்’ என அவரிடம் திருக்குர்ஆன் (96:1) இறங்கத் தொடங்கியது. தன்னை ஏதோ பிடித்தாட்டுகிறதோ என அச்சம் ததும்ப அவர் ஓடி வந்தபோது, ‘‘ஓ,

முஹம்மத்! நீரே இறைத்தூதர். நான் ஜிப்ரீல்'' என்ற குரல் கேட்டு அவர் நிமிர்ந்தார். மானுட உருவில் கப்ரியேல் நின்றிருந்தார்.

ஹீப்ரு இறைத்தூதர்கள் பலரும் (இசையா, ஜெரெமியா) இது போன்ற இறையனுபவங்களால் சொல்லொண்ணா அதிர்ச்சியையும், வலியையும் உணர்ந்ததைப் புனித நூற்களிலிருந்து அறிகிறோம். அவர்களுக்கேனும் ஏற்கனவே நிறுவப்பட்ட மதங்கள் இருந்து ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்தன. ஆனால் முஹம்மதுக்கோ இந்த அனுபவத்தைப் புரிந்துணர இயலவில்லை. அச்சமயத்தில் அவருக்கு ஒரே ஆறுதலாக விளங்கியவர் கதீஜாதான். ''என்னைப் போர்த்து, போர்த்து'' என்று கதறிய வண்ணம் ஒடோடி வந்து மடியில் வீழ்ந்த முஹம்மதை அள்ளி அணைத்து ஆறுதலளித்தார் கதீஜா.

கதீஜா முஹம்மதின் அன்பு மனைவியாகவும், இளமையிலேயே தாயை இழந்தவருக்கு இனிய ஆறுதலாகவும் இருந்தது மட்டுமின்றி அவரது இறையனுபவத்தைப் பகிர்ந்து கொள்பவராகவும் முதற்கட்ட இறை நடவடிக்கைகளில் பக்கத் துணையாகவும் விளங்கினார். தனக்கு ஏற்பட்ட இந்த விசித்திர அனுபவத்தையும் புனித இறைமொழி இறக்கத்தையும் கேலி செய்யாமல், அய்யம் கொள்ளாமல் நம்பி ஏற்றுக்கொள்வதற்கு நபிகளுக்கு ஒரு சக மனித உறவு தேவைப்பட்டபோது அதை வாரி வழங்கியவராக கதீஜா விளங்கினார். அந்த வகையில் நபிகளின் இறை நெறியை ஏற்ற முதல் முஸ்லிமாகவும் அவர் விளங்கினார். இரண்டு ஆண்டுகள் வரை முஹம்மது தன்னிடம் இறங்கிய அருள் வெளிப்பாடுகளைப் பகிரங்கமாக்காமல் நம்பிக்கைக்குரியவர்களிடமே பிரச்சாரம் செய்தபோது கதீஜாவும் குடும்பத்தாருமே முஹம்மதிற்கு பெரும் பக்கத் துணையாக விளங்கினர்.

இரண்டாண்டுகளுக்குப் பின்பு அல்லாஹ்வின் இறை நெறியை நபிகள் பிரச்சாரம் செய்யத் தொடங்கியபோது ஏற்பட்ட கடும் எதிர்ப்புகள், இடையூறுகள் ஆகியவற்றையும் இந்த உயர் குடிப் பெண்மணி சகித்துக் கொண்டார். குடும்பத்தாரைத் தாண்டி அபூபக்ரும் உமரும் முஸ்லிமாகியதொன்றே அவர்களுக்கு ஆறுதலாகவும் ஒரளவு பாதுகாப்பாகவும் அமைந்தது.

பல்வேறு இடையூறுகளின் உச்சகட்டமாக முஹம்மதின் உறவினர்கள் மீது சமூக விலக்கு நடவடிக்கை ஒன்றை 617 வாக்கில் அபூ ஜஹ்ல் மேற்கொண்டான். ஹஷிம் மற்றும் அல் முத்தலிப் கிளைகளைச் சேர்ந்தோர் யாரிடமும் மண உறவோ வணிக உறவோ வைத்துக் கொள்ளக்கூடாது எனப் பிற கிளையினர் அனைவரிடம் கைச் சாத்து பெற்ற அபூ ஜஹ்ல் அதைப் புனித கஅபாவில் தொங்கவிடவும் செய்தான். இதன்படி இவ்விரு கிளையினருக்கும் யாரும் உணவு கூட அளிக்கலாகாது என்கிற நிலை ஏற்பட்டது. பாதுகாப்பு கருதி ஹஷிம் மற்றும் அல் முத்தலிப் கிளையினர் அனைவரும், முஸ்லிம்களும் முஸ்லிம்

*அல்லாதவர்களும் அபூதாலிப் வசித்த தெருவிற் குடியேறினர். முஹம்மதும் கதீஜாவும் கூட அங்கு வர வேண்டியதாயிற்று. சமூக விலக்கு செய்யப்பட்ட ஒரு குடியிருப்பாக அது மாறியது. எனினும் மற்ற பல கிளையினரின் உறவினர்களும் அங்கு இருந்ததன் விளைவாக அவ்வப்போது இவர்களுக்கு உணவுப் பொருட்கள் ஏதோ ஒரு வழியில் வந்து கொண்டுதானிருந்தன. இதைத் தடுத்து நிறுத்த அபூ ஜஹ்ல் மேற்கொண்ட முயற்சிகள் பலவும் வெற்றி பெறவில்லை.*

*சமூக விலக்குச் செய்யப்பட்ட அந்த நாட்கள் துயரம் நிறைந்தவையாக இருந்தன. பழங்குடி உணர்வுகளின் அடிப்படையில் இவ்விரு கிளையினைச் சேர்ந்தோர் அனைவரும் முஹம்மதுக்காக இத் துன்பங்களைச் சகித்துக் கொண்டனர். வன்முறை தடை செய்யப்பட்ட புனித மாதங்களில் முஹம்மது கஅபா தலத்திற்குத் தொழச் செல்லும்போதும் வரும்போதும் இழித்துரைக்கப்பட்டார். ஒருமுறை முஹம்மது செல்லும் வழியில் நெருப்புத் துண்டங்களை வீசவும் செய்தனர்.*

*சமூக விலக்குச் செய்யப்பட்ட சிறிது காலத்தில் ஸஹ்ம், அஸத், ஜுமாஹ் கிளைகளைச் சேர்ந்த பெரியவர்கள் சிலர் சமாதான முயற்சியில் இறங்கினர். மக்ஸூம் கிளையைச் சேர்ந்த பெரியவர் வாலித் இதனை முன்னெடுத்தார். முஸ்லிம்கள் அல்லாஹ்வை வணங்குவது எனவும் மற்றையோர் அல்லாத், அல் உஸ்ஸா, மனாத் ஆகிய தேவதைகளைத் தொடர்ந்து வணங்குவது எனவும் சமரசத் திட்டம் மொழியப்பட்டபோது முஹம்மது அதை முற்றாக நிராகரித்தார். 'நிராகரிப்பு அத்தியாயம்' என வழங்கப்படும் திருக்குர் ஆனின் 109-ம் சுராவை ஓதி முஹம்மது அச்சமரசத்தை மறுத்தார்.*

*சமூகத் தடை இரண்டாண்டுகள் தொடர்ந்தது. முஹம்மதின் உறுதி ஏனையோரை உலுக்கியது. அபூ ஜஹ்ல் மற்றும் அவனது மக்ஸூம் கிளையின் கை ஓங்குவதைக் கண்டு கவலையுற்ற சிலரும் ஹஹிம் மற்றும் அல் முதலிப் கிளையுடன் மண உறவுடைய சிலரும் கூடித் தடையை முடிவுக்குக் கொண்டு வர முயன்றனர். மக்ஸூம் கிளையைச் சேர்ந்த அல் ஸூஹைர் இப்ன் அபூ உமையா முன்னின்று தடைக்கு எதிராகச் செயல்படுவது என முடிவாயிற்று.*

*குறிப்பிட்ட நாளில் வெள்ளுடை அணிந்த ஸூஹைர் கஅபா திருத்தலத்தை இடம் சுற்றி வந்து வணங்கிய பின் நகரப் பெரியவர்களை நோக்கித் தடைக்கு எதிராகக் குரல் எழுப்பினார். அபூ ஜஹ்ல் எதிர்த்து வாயாடியபோது அல்முஅடிம், அபூ அல் பக்டஹ்ர், சமா ஆகியோர் அவனை மறுத்துப் பேசினர். இரு கிளையினரை இப்படி இத்தனை காலம் ஒதுக்கி வைத்திருப்பது என்ன நியாயம்? - என்கிற கேள்விக்கு யாரும் பதிலளிக்க இயலவில்லை. கஅபாவை நோக்கிச் சென்ற அல்முஅடிம் அங்கு தொங்கிக் கொண்டிருந்த தடை ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.*

*அதை அவர் கையில் எடுத்தபோது 'அல்லாஹ்வின் பெயரால்' என்கிற சொற்களைத் தவிர பிற அனைத்தும் பூச்சிகளால் அரிக்கப்பட்டிருந்தன என நம்புவது முஸ்லிம் மரபு.*

*முஸ்லிம் சமூகத்திற்கு இது பெரிய மகிழ்ச்சியை அளித்தது என்பதைத் சொல்ல வேண்டியதில்லை. அபிசீனியாவிற்குப் புலம் பெயர்ந்திருந்தவர்களின் சுமார் முப்பது குடும்பங்கள் மக்காவுக்குத் திரும்பின. மகள் ருகையாவும் மருமகன் உத்மானும் திரும்பி வந்ததில் முஹம்மதுக்கும் கதீஜாவுக்கும் கூடுதல் மகிழ்ச்சி. எனினும் அது அதிக நாள் நீடிக்கவில்லை. 619-ல் அன்னை கதீஜா முஹம்மதை நிரந்தரமாகப் பிரிந்தார். அன்றைய அரபு வழக்கப்படி சக்ரானின் விதவையான சவ்தாவை முஹம்மது திருமணம் செய்து கொண்டார்.*

*வன்முறையும் அறியாமையும் நிறைந்த ஒரு சமூகத்தில் வாழ்ந்தவர் நபிகள். நவீன கால மதிப்பீடுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு கால கட்டத்தில், ஒரு தேங்கிய சமூக அமைப்பிற்குள் இயங்க நேர்ந்தவர் அவர். இந்த உண்மையை நாம் மனம் கொள்ளும்போதுதான் அவரது வாழ்வையும், செயற்பாடுகளையும், அரசியலையும் புரிந்து கொள்ள முடியும். சொந்த வாழ்வின் தேவைகளுக்காக மட்டுமின்றி அன்றைய அரசியல் நோக்கங்களுக்காகவும், வலிமையான கூட்டமைப்பு (Confederacy) ஒன்றைக் கட்டுவதற்காகவும், கதீஜா அம்மையாரின் மரணத்திற்குப் பிறகு அன்றைய அரபு வழக்கப்படிப் பல மனைவியரை அவர் மணந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த அன்பு மனைவியர்களாலும் கூட சாதாரண மனிதர்களுக்கு ஏற்படும் சில பிரச்சினைகள் நபிகளுக்கும் எற்படத்தான் செய்தன. எளிய மானுடரின் இயல்பான உணர்வுகளோடு அவற்றை எதிர்கொண்டார் நபிகள். பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு இறை வழிகாட்டல்கள் அவருக்குத் துணை புரிந்தன.*

# 12 நபிகளின் மனைவியர்

போர்கள், உடன்படிக்கைகள், இஸ்லாத்தைப் பரப்புகிற, வலுப்படுத்துகிற முயற்சிகள் என்பதாகவே நபிகளின் மதீனா வாழ்க்கை அமைந்தது. கூர்ந்த மதி நுட்பத்துடனும், அரசியல் அறிவுடனும், கொள்கை உறுதியுடனும் அவரது செயற்பாடுகள் அமைந்தன. ஒவ்வொரு செயலும் அவர் தமது இறைக் கொள்கையின் அடிப்படையில் கட்டமைத்த அரசியலை வலுப்படுத்தும் முகமாகவே அமைந்தன. அவருடைய திருமணங்கள் பலவும் இக்காலக்கட்டத்திலேயே அதாவது அவரது 54 முதல் 59 வயதுகளுக்கு இடைப்பட்ட ஆண்டுகளிலேயே நடைபெற்றன. அவரது வாழ்நாளில் அவர் பதின்மூன்று மனைவியர் வரை திருமணம் செய்து கொண்டதாகத் தெரிகிறது. இவர்களில் பலர் விதவையர். முந்தைய கணவருக்குப் பிறந்த குழந்தைகளுடன் அவர்கள் நபிகளை திருமணம் செய்து கொண்டனர். இறைத்தூதராக இருந்த போதும், சாதாரண மனிதருக்கு ஏற்படும் பிரச்சனைகள் நபிகளுக்கு நேர்ந்தன. குறிப்பாக மனைவியரோடு அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் யாருக்கும் நடக்கக்கூடியவை.

நபிகளின் பல திருமணங்கள் இஸ்லாமிய எதிரிகளால் தொடர்ந்து விமர்சிக்கப்பட்டும், காமநுகர்வுதான் காரணமென்று கொச்சைப் படுத்தப்பட்டும் வருகின்றன. எத்தகைய காலக்கட்டத்தில், எத்தகையச் சூழலில், எதற்காக நபிகள் பல திருமணங்கள செய்ய நேர்ந்தது என்ற பின்னணிகளையெல்லாம் ஆராயாமல் அவற்றை புறந்தள்ளிவிட்டு தங்களின் வெறுப்பை வெளிப்படுத்துவதிலேயே அவர்கள் குறியாக இருக்கின்றனர். ஒரு சில பின்னணிகளை இங்கே பார்ப்போம்.

ஹுதைபியா (கி.பி. 628) உடன்படிக்கைக்குப் பின்னர் முஹம்மதின் கவனம் வடக்குத் திசை நோக்கித் திரும்பியது. மதீனா முற்றுகையின்போது மோசமாக நடந்து கொண்டு ஆபத்துக்ளை விளைவித்த கைபர் நகர யூதக் குடியிருப்பை அப்படியே விட்டுவிடலாகாது என அவர் கருதினார். கைபரிலுள்ள யூதர்கள் தொடர்ந்து ஊறு விளைவித்து வருவதற்கு ஒரு முடிவு ஏற்படுத்தும் நோக்குடன் முஹம்மதின் முயற்சியில் உருவாகியிருந்த உம்மாவின் (முஸ்லிம் சமூகத்தின்) பாதுகாப்புக் குழு 600 முஸ்லிம் வீரர்களடங்கிய படையுடன் கைபரை நோக்கிப் புறப்பட்டது. இந்தப் போரின் மூலம் பெரு வருமானம் கிடைக்கும் என்பதை ஊகித்து அதில் பங்குபெறும் நோக்குடன் வந்த பெதோய்ன் பழங்குடியினரை முஹம்மது இம்முறை தவிர்த்தார். ஹுதைபியாவில் ஏமாற்ற

மடைந்திருந்த முஸ்லிம்களின் துடிப்பிற்கும் ஆவேசத்திற்கும் ஒரு வடிகால் அமைத்துக் கொடுக்க அவர் விரும்பினார். எரிமலை வெளிகள், பலமான கோட்டைகள் ஆகியவற்றால் சூழப்பட்டிருந்த கைபரை வெல்வது அரிது என்பதால் முஹம்மதின் இம்முயற்சியை ஒரு தற்கொலை நடவடிக்கையாகவே குறைஷிகள் கருதினர்.

எனினும் கைபரிலுள்ள யூத இனக் குழுக்களிடையே இருந்த ஒற்றுமையின்மையையே ஆதாரமாக்கி முஹம்மது தனது படை எடுப்பை மேற்கொண்டார். ஒற்றுமையும் வலிமையும் நிறைந்த உம்மா, தமக்குள் போரிட்டுக் கொண்டிருக்கும் எதிரிகள் இவற்றுக்கிடையேயான மோதல்களில் முஹம்மதின் அரசியல் நுட்பம் வெற்றி வாகைகளைத் தொடர்ந்து சூடி வந்தது. கருத்து மாறுபட்டிருந்த சில யூதக் குழுக்களுடன இங்கும் அவர் சில ஒப்பந்தங்களை மேற்கொண்டு அவர்களைப் போரிலிருந்து ஒதுங்கியிருக்கச் செய்ததாகவும் தெரிகிறது. கூடைகளுடனும் வெட்டுக் கத்திக்களுடனும் விடியலில் வேலைக்குக் கிளம்பிய கைபர் யூதர்கள் இரவில் வந்து குவிந்திருந்த முஸ்லிம் படைகளைக் கண்டு அஞ்சி ஓடினர். "அல்லாஹு அக்பர்" என்று முழங்கிய முஹம்மது "கைபர் அழிந்தது" என்று கூவினார். அவரது படைகள் கைபரை முற்றுகையிட்டன.

முற்றுகை ஒரு மாதம் வரை நீடித்தது. ஒவ்வொரு கோட்டையாகச் சரணடையும் வரை அவை அம்புகளால் தாக்கப்பட்டன. சேமித்து வைத்திருந்த செல்வங்கள் மட்டுமின்றி பிணைக் கைதிகளும் கைப்பற்றப்பட்டனர். வெற்றி சாத்தியமில்லை என்பதை உணர்ந்த யூதர்கள் சமாதான உடன்படிக்கைக்கு முன்வந்தனர். குர்ஆனியக் கோட்பாடுகளுக்கிணங்க கைபர் மக்களுக்குப் பெரிய இழப்புகளின்றி முஹம்மது ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கினார். பெதோய்ன் பழங்குடி இனக் குழுக்களுக்கும் அரபியர்களுக்குமிடையில் அக்காலக்கட்டத்தில் வழக்கமாக உருவாக்கப்படும் வடிவில் அது அமைந்தது. பேரீச்சம் பழ விளைச்சலில் பாதியை கைபர் மக்கள் தந்துவிட வேண்டும்; பதிலாக அவர்களுக்குரிய இராணுவப் பாதுகாப்பை மதீனாவிலுள்ள முஸ்லிம்கள் அளிப்பார்கள் என்பதே அதன் சாரம். பழங்குடியினருக்கு இதுகாறும் கைபர் மக்கள் செலுத்தி வந்த கப்பத் தொகையை மதீனாவின் பக்கம் திருப்பியது முஹம்மதின் போர்த் தந்திரம்.

இந்த ஒப்பந்தத்தை வேறு வகைகளிலும் உறுதி செய்யும் பொருட்டு இப்போரின்போது விதவையானவரும் பழைய எதிரியான ஹுயாய் என்பவரின் மகளுமான அழகிற்சிறந்த பதினேழு வயது ஸஃபியாவை மணமுடித்துக் கொண்டார் முஹம்மது. இஸ்லாத்திற்கு மாறுவதற்கு ஸஃபியா தயாராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முஹம்மதும் படைகளும் மதீனாவிற்குத் திரும்பி வருவதற்கும் அவர் கேட்டுக் கொண்டபடி அபிசீனியாவிலிருந்த முஸ்லிம்கள் வந்து சேருவதற்கும் சரியாக இருந்தது. பதிமூன்று ஆண்டுகளுக்குப் பின் சந்திக்க

நேர்ந்த தனது ஒன்றுவிட்ட சகோதரர் ஜஅஃபரைக் கட்டித் தழுவி நெற்றியில் முத்தமிட்ட முஹம்மது, "கைபரில் பெற்ற வெற்றியா; இல்லை உன்னைச் சந்தித்ததா; எது அதிக மகிழ்ச்சியானது என எனக்கு விளங்கவில்லை"□எனச் சிறு பிள்ளையைப் போல மகிழ்ந்தார்.

அபிசீனியாவிலிருந்து வந்திருந்தவர்களில் முஹம்மதின் மனைவி ரம்லா எனப்படும் உம்ம் ஹபீபாவும் ஒருவர். அபிசீனியாவிலிருந்த போது கிறிஸ்தவராக மதம் மாறி அங்குள்ள முஸ்லிம்களுக்குச் சங்கடம் ஏற்படுத்தி இறந்து போன மைத்துனர் உபயதுல்லாவின் விவாகரத்து பெற்ற மனைவியே உம்ம் ஹபீபா. இந்தச் செய்தியை அறிந்த நபிகள் நாயகம், அபிசீனிய மன்னர் மூலம் ஹபீபாவின் அனுமதி பெற்று மதீனாவிலிருந்தவாறே அவரைத் திருமணப் பதிவு செய்திருந்தார். அரசியல் காரணங்களுக்காகச் செய்து கொண்ட ஒரு திருமணமே இதுவும். மக்காவில் நபிகளுக்குப் பல இடையூறுகளைச் செய்து வந்த அபூஜஹலின் பேத்தியும், சக்தி வாய்ந்த உம்மயாத் குடும்பத்தைச் சேர்ந்த அபு சுஃப்யானின் மகளுமே உம்மு ஹபீபா என்பது குறிப்பிடத்தக்கது.

நபிகளின் இளம் மனைவி ஆயிஷாவுக்கு இத்திருமணங்கள் உவப்பு அளிக்கவில்லை. உம்மு ஹபீபா பற்றிக்கூட அவருக்குப் பிரச்சனை இல்லை. அந்த அழகிய யூதப் பெண் சஃபியாவைக் கண்டே அவர் எரிச்சலுற்றார். போதாக்குறைக்கு சஃபியா பற்றி என்ன நினைக்கிறாய்? என நபிகள் வேறு அவரைக் கேட்டு வைத்தார். "எல்லா யூதப் பெண்களையும் போலத்தான் அவளும்" என்று வெடுக்கெனப் பதில் அளித்தார் ஆயிஷா. "அப்படிச் சொல்லாதே. சஃபியா இஸ்லாத்தை ஏற்றது மட்டுமின்றி அதனை முழுமையாகவும் திருப்திகரமாகவும் கடைப்பிடிப்பவராக உள்ளார்" என்றார் நபிகள். எனினும் முஹம்மதின் மனைவியர் சஃபியாவைப் பழித்துரைப்பது தொடர்ந்தது. அவரது தந்தை ஹுயையையும் அவர்கள் இழித்துரைத்தனர். கண்களில் நீர் வழிய முஹம்மதிடம் வந்த சஃபியா, "என் தந்தை ஆரோன். சித்தப்பா மோசஸ் என்று அவர்களிடம் சொல்லுங்கள்" என்று அழுதார். முஹம்மது அவருக்கு ஆறுதல் சொன்னார். எனினும் விரைவில் ஆயிஷாவும், சஃபியாவும் நண்பரானார்கள். முஹம்மதின் மூன்று இளம் மனைவியர்களான ஆயிஷா, ஹஃப்ஸா, சஃபியா ஆகியோர் இணைபிரியாத் தோழிகளாயினர் (பார்க்க: முஹம்மது இப்ன் ஸஅத்தின் 'அல் கபீர்' ஏழாம் தொகுதி மற்றும் மார்ட்டின் லிங்ஸின் 'முஹம்மத்').

மனைவியர்களுள் ஏற்பட்ட பிரச்சினைகளால் முஹம்மது மிகுந்த மனத் துயரடைந்த சம்பவங்களும் உண்டு. இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்துப் பன்னாட்டு மன்னர்களுக்கும் கடிதங்கள் எழுதியது போலவே எகிப்திய மன்னன் முகவ்கீசுக்கும் முஹம்மது கடிதம் அனுப்பியிருந்தார். அழைப்பை ஏற்காதபோதும் முகவ்கீஸ் தனது நல்லெணத்தையும் ஆதரவையும் வெளிப்படுத்தும் வகையில் ஏராளமானப் பரிசுப்

பொருட்களை அனுப்பியிருந்தார். அவற்றுள் காப்டிக் கிறிஸ்தவ அடிமைப் பெண்கள் இருவரும் அடக்கம். அச்சகோதரியருள் மர்யத்தை நபிகள் ஏற்றுக்கொண்டார். தனியே அவருக்கென ஒரு இல்லத்தை உருவாக்கி அங்கே அவரைக் குடியமர்த்தினார். திருமணத்திற்கு அப்பால் இப்படி ஒரு உறவைப் பேணும் வழக்கம் அன்று அரபியர் மத்தியிலும் யூதர்கள் மத்தியிலும் இருந்து வந்தது. இறைத்தூதர் இப்ரஹீமுக்கு இஸ்மாயிலை ஈன்றெடுத்த அன்னை ஹகரும் கூட முறைப்படி திருமணம் செய்து கொள்ளப்பட்டவரல்ல.

மர்யத்திடம் முஹம்மது கொண்டிருந்த அன்பு மற்றவர்களுக்குச் சொல்லொணாக் கோபத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. போதாக்குறைக்கு முஹம்மதுக்கு ஒரு ஆண் குழந்தையும் ஈன்றளித்தார் மர்யம். அக்குழந்தைக்கு முஹம்மது 'இப்ராஹீம்' எனப் பெயரிட்டார். ஆயிஷாவும் ஹஃப்ஸாவும் மர்யத்தை எதிர்த்து இல்லத்திற்குள் ஒரு பெரும் கொந்தளிப்பை உருவாக்கினார்.

இதனூடாக நடந்த இன்னொரு நிகழ்வும் இங்கே கருதத்தக்கது. பெண்கள் குறித்து முஹம்மது அளவிற்கு முற்போக்கான பார்வை இல்லாதவரும், மதீனாவிற்குப் புலம்பெயர்ந்து வந்த பெண்கள் பல தீயகுணங்களை வளர்த்துக் கொண்டனர் என்கிற கருத்துக் கொண்டவரும், நபிகளின் உற்ற தோழருமான உமர் வாயிலாக அறியப்படும் செய்தி இது. போர் மூலம் கிடைக்கிற பொருள்களை உம்மாவிலுள்ளவர்கள் மத்தியில் சமமாகப் பகிர்ந்தளிப்பதை வழக்கமாக்கியிருந்தார் முஹம்மது. ஆனால் இறைத்தூதரின் மனைவியராகியத் தமக்கு அதிகப் பங்கு வேண்டும் என நபிகளிடம் அவர் மனைவியர் வம்பு செய்து கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்ட உமர் அங்கு விரைந்தார். உள்ளே நுழைய அனுமதி கேட்டு அவர் குரலெழுப்பியவுடன் பெண்கள் அனைவரும் மவுனமாயினர். இறைத்தூதர் சங்கடத்துடன் புன்னகை புரிந்தார். உமரைக் கண்ட பெண்கள் அவசரமாகத் திரைக்குப்பின் மறைந்தனர். "எனக்குக் காட்டுகிற இந்த அச்சத்தையும் மரியாதையையும் நீங்கள் இறைத் தூதருக்குக் காட்டினால் நல்லது" என்று கடுகடுத்த உமர் திரை மறைவிலிருந்த பெண்களை நோக்கி, "உங்களுக்கு நீங்களே எதிரியாகிப் போனவர்களே, இறைவனின் தூதருக்கு அஞ்சாத நீங்கள் எனக்குப் பயப்படுகிறீர்களா?" எனச் சீறினார். "ஆமாம்" என்று திரைக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் வந்தது. "ஏனெனில் இறைத்தூதரைவிட நீங்கள் கடுமையானவர், முரட்டுத் தனமானவர்" (அல்புகாரி, ஹதீஸ் LX III, 6).

மர்யத்திடம் இறைத்தூதர் சற்றுக் கூடுதலாக நெருக்கம் காட்டுவது ஒரு பெரிய பிரச்சனைக்கு இட்டுச் சென்றது. ஒவ்வொரு மனைவியின் வீட்டிலும் ஒருநாள் என முறை வைத்து தங்கி வந்தார் முஹம்மது. ஹஃப்ஸாவின் வீட்டில் தங்க வேண்டிய முறை நாள் ஒன்றின் போது அவர் தன் தந்தை உமர் வீட்டிற்குச் சென்றிருந்தார். ஹஃப்ஸா வீட்டில்

இல்லாததையறிந்த முஹம்மது மர்யத்தை அங்கு வரவழைத்தார். தனது முறை நாள் என்பதால் அவசரமாக வீட்டுக்குத் திரும்பிய ஹஃப்ஸா இருவரையும் தன் வீட்டில் கண்டவுடன் கொதித்தெழுந்தார். இதை ஒரு பிரச்சினை ஆக்க வேண்டாம். இனிமேல் மர்யத்தைச் சந்திக்கவே மாட்டேன் என முஹம்மது வேண்டிக் கொண்டும் ஹஃப்ஸா ஓயவில்லை. இவ்விஷயத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு தன் மகள் ஹஃப்ஸாவிடம் உமர் கேட்டுக் கொண்டும் பிரச்சினை ஓயவில்லை. மர்யத்தை இனி பார்ப்பதில்லை என முஹம்மது ஹஃப்ஸாவிடம் கூறிய பின்னரும் பிரச்சினை முற்றியது. ஆயிஷாவுடனும் ஹஃப்ஸாவுடனும் சேர்ந்து கொண்டு இதர மனைவியரும் சிக்கலை அதிகமாக்கினர். எல்லோரையும் பிரிந்து செல்வதாகச் சொல்லி முஹம்மது அவர்களை விட்டு அகன்ற செய்தி காட்டுத் தீயாய் முஸ்லிம்களிடத்தில் பரவியது.

கைபர் போருக்குப்பின் மதீனாவிலுள்ள முஸ்லிம்களின் வாழ்வு சற்றுச் செழிப்புற்றது. கைபருக்கு முன் வயிறு நிரம்பப் பேரீத்தம் பழங்களை உண்டதில்லை என ஆயிஷாவே ஒருமுறை கூறியுள்ளார். புதிதாய் உருவாகியிருந்த பொருள் வளம் அவர்கள் மத்தியில் ஆசைகளையும் ஆடம்பரங்களையும் உருவாக்கியிருந்தது குறித்து முஹம்மது கவலை கொண்டிருந்தார். பொதுப் பங்கீட்டில் கூடுதலான பங்கைத் தம் இல்லத்தாரே கோரியது அவரை வேதனையுறச் செய்தது. இதை அவர் அனுமதிக்கக் தயாராக இல்லை. அதே நேரத்தில் இல்லத்திலிருந்து விலகியிருப்பதோ அவர்களை மணவிலக்கு செய்வதோ அவரைப் பொருத்தமட்டில் ஒரு சொந்தப் பிரச்சினை மட்டுமல்ல. அது பல்வேறு அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடியது. பல தோழமைகளை, ஒருங்கிணைவை, உம்மாவின் ஒற்றுமையைச் சிதைக்கக்கூடியது. அபூபக்கர், உமர் முதலான தோழர்களுடன் உறவு கெடுவது அன்றைய சூழலில் மிகப்பெரிய இழப்பாக முடியும் என்பதை முஹம்மது உணர்ந்தார். மனைவியரைப் பிரிந்தார்.

செய்தியறிந்து முஸ்லிம்கள் அனைவரும் கூடினர். யாருக்கும் எதுவும் பேசத் தோன்றவில்லை. மசூதி முன் பெருங்கூட்டம் கூடியது. கூரை மீதிருந்த சிறிய அறைக்குள்ளிருந்தார் முஹம்மது. உமர்தான் அவரிடம் போய் இதுகுறித்துப் பேச இயலும். ஆனால் உமரையும் கூட முஹம்மது சந்திக்க விரும்பவில்லை. எப்படியோ இறுதியாக உமர் அனுமதிக்கப் பட்டபோது அவர் கண்ட காட்சி நெஞ்சை நெகிழ்த்துவதாக இருந்தது. அது ஒரு சிறிய, எளிய குடில். பதனிடப்படாத மூன்று தோல்களைத் தவிர அங்கு வேறெதும் இல்லை. ஒரு போர்வை கூட இன்றிப் பாயின் மீது அவர் அமர்ந்திருந்தார். சோகம் கப்பிய முகம். அவரது சிவந்த கன்னங்களில் பாயின் முரட்டுக் கோரைகள் தடம் பதித்திருந்தன. உமர் மெதுவாகப் பேச்சைத் தொடங்கினார். தனது மனைவியருடன் தனக்குள்ள அனுபவங்கள் சிலவற்றை முஹம்மது உமரிடம் பகிர்ந்து கொண்டார். உடனடியாக மணவிலக்கு செய்யும் நாட்டம் நபிகளிடம் இல்லை என்பதை

*அறிந்து உமர் நிம்மதி அடைந்தார். இறுக்கம் சற்றே தளர்ந்தவுடன் நபிகள் அருகில் தரையில் அமர்ந்த உமர் மெதுவாக, "அல்லாஹ் ஏன் இறைத்தூதருக்குச் சில சுகபோகங்களை அருளக்கூடாது? பைசாண்டிய அல்லது பாரசீக மன்னர்கள் எவ்வளவு ஆடம்பரங்களோடு வாழ்கிறார்கள்?" என்று கேட்டார். "ஆனால் அவர்களது மகிழ்ச்சியும் இன்பமும் இந்த உலகத்தோடு முடிந்துவிடுகிறதே" என்று பேச்சைத் துண்டித்தார் நபிகள் நாயகம். ஒரு மாதம் முடிந்த பின்பே முஹம்மது மீண்டும் மனைவியரை நாடிச் சென்றார். முதலில் ஆயிஷாவின் வீட்டிற்குத் தான் சென்றார். "ஒரு மாதம் வரமாட்டேன் எனச் சொன்னீர்கள்? இருபத் தொன்பது நாள்தானே ஆகிறது?" என ஆயிஷா குறும்பாகக் கேட்டபோது "இந்த மாதத்தில் 29 நாட்கள் தானே" என நினைவூட்டினார் முஹம்மது.*

*நபிகளின் வாழ்வில் தோன்றிய இப்பிரச்சனை வெறும் அந்தப்புரச் சச்சரவன்று. பாலியல் உறவுகள் தொடர்பான பொறாமைகளின் அடிப்படையிலானதுமன்று. புதிதாய் உருவான பொருளாசையின் விளை பொருளே அது. இறை வழிகாட்டலின் அடிப்படையில் மனைவியர் முன் இரு சாத்தியங்களை முன்வைத்து ஒன்றைத் தேர்வு செய்து கொள்ளுமாறு நபிகள் கோரினார். இஸ்லாமிய வாழ்முறையை ஏற்றுக் கொள்வதா, மணவிலக்குப் பெறுவதா என முடிவு செய்து கொள்ளுங்கள் என்பதாகவே இறை வாக்கும் அமைந்தது. மர்யம் குறித்தோ அந்தப்புரச் சர்ச்சைகள் குறித்தோ இறை வசனம் எதையும் குறிப்பிடவில்லை; ஆடம்பரங்கள், பொருளாதாய ஆசைகள் குறித்தே இறைவாக்கு அழுத்தம் தந்தது.*

> "நபியே! உமது மனைவியரிடம் கூறும்: 'நீங்கள் இவ்வுலக வாழ்வையும் அதன் அழகையும், அணிகலன்களையும் விரும்பினால் இப்போதே வாருங்கள். அவற்றை நான் உங்களுக்கு அளித்து அன்புடன் அனுப்பிவிடுகிறேன். ஆனால் நீங்கள் அல்லாஹ்வையும், அவனது தூதரையும், மறு உலகையும் நாடுகிறீர்களெனில் உங்களில் நற்செயல் புரிவோருக்கு அல்லாஹ் மகத்தான கூலியைத் தயாராக வைத்துள்ளான். நபியின் மனைவியரே உங்களில் யாரேனும் வெளிப்படையாகத் தீங்குகளைச் செய்தால் அவருக்கு இரட்டிப்பு வேதனை அளிக்கப்படும். அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிந்து வாழ்ந்து நற்செயல்கள் புரிந்தால் இருமடங்கு கூலி வழங்கப்படும்". (33:28-31)

*அல்லாஹ்வின் நிபந்தனைகளை அன்பு மனைவியர் ஏற்றனர். சமுதாயத்தில் அவர்கள் இதன்மூலம் தனிச்சிறப்பு பெற்றனர். 'விசுவாசமானவர்களின் அன்னையர்' எனத்திருக்குர்ஆன் அவர்களை அழைத்தது. நபிகள் நாயகத்தின் மரணத்திற்குப் பின் அவர்கள் வேறு யாரையும் மணம் புரியலாகாது எனவும் விதித்தது. தூய்மை கெடும் என்கிற அடிப்படையிலல்ல. பிறக்கும் சந்ததியினரிடையே வேறுபாடுகள் உருவாகி இறுதியில் அது சமுதாயத்தையே சிதைப்பதற்கு வழிவகுத்துவிடும் என்பதற்காகவே.*

# 13

# எளியவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் மதம்

*வேறு பல மதங்களைப் போல இஸ்லாம் கன்னிமையையோ, துறவையோ இறைமையை அடைவதற்கான வழியாகச் சொல்லவில்லை. உடலின் அடிப்படையான சில தேவைகளையும் உந்துதல்களையும் நிரந்தரமாகத் தடுத்துக் கொள்வதன் மூலம் இறைவனை அடையலாம் அல்லது சுவனத்திற்குச் செல்லலாம் என்பது இஸ்லாமிய இறைக் கொள்கையன்று.*

*எல்லாவிதமான உலகியல் தேவைகளையும் நிறைவேற்றிக்கொண்டும், ஆசாபாசங்களை ஏற்றுக்கொண்டும், இவற்றினூடாக இங்கு ஒரு நீதியும் சமத்துவமும் உள்ள சமூகத்தை இறை வழியில் நின்று உருவாக்குவதையே இஸ்லாம் வற்புறுத்துகிறது.*

*பிற மதங்கள் இந்த அடிப்படையில் சில அறிவுக்குப் பொருந்தாத விஷயங்களை மத நம்பிக்கைகளாக முன் வைக்கின்றன. இயேசுவின் அன்னை மரியாள் தன் கன்னிமை கலையாமல் கர்த்தரின் மகனைக் கருத்தரித்தார் என்கிற நம்பிக்கை இவற்றுள் ஒன்று. இஸ்லாத்தில் இது போன்ற நம்பிக்கைகள் கிடையாது. நபிகள் நாயகம் எல்லாச் சாதாரண மனிதர்களையும் போலவே கருவானவர், உருவானவர், வாழ்ந்தவர், நோயுற்று மறைந்தவர்.*

*இஸ்லாமிய மரபிலுள்ள ஒரு கதையாடல் இங்கே நினைவுகூரத்தக்கது. முஹம்மதின் தந்தை அப்தல்லாஹ்விற்குத் திருமணம் செய்வது என்று முடிவெடுத்தபோது அப்தல்லாஹ்வின் தந்தையும் முஹம்மதின் தாத்தாவுமான அப்த் அல் முத்தலிப்பும் ஒரு திருமணம் செய்து கொள்வது என முடிவெடுத்தார். ஸுஹ்ரா குலத்துடன் இறுக்கமான ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய தேவை முத்தலிப்புக்கு அன்று வணிகரீதியிலும் அரசியல் ரீதியிலும் இருந்தது. ஸுஹ்ரா வணிகர் ஒருவரின் உறவினராக ஹாலா பின்த் உஹாயப் அவர்களை முத்தலிப்பும், பின்னாளில் முஹம்மதை ஈனும் பேறு பெற்ற ஆமீனா பின்த் வாஹ்ப் அவர்களை அப்துல்லாவும் திருமணம் செய்து கொள்வதேன முடிவாகித் தந்தையும் மகனும் மக்கா வீதியொன்றில் சென்று கொண்டிருந்தனர். அப்போது திடீரென எதிர்ப்பட்ட ஒரு பெண் அப்துல்லாஹ்வின் தோற்றத்தில் மயங்கி அன்றிரவு தன்னுடன் தங்கிச் செல்லுமாறு*

அழைத்தார். தந்தை அருகில் இருந்ததால் சங்கடப்பட்ட அப்துல்லாஹ், தான் தந்தையுடன் சென்று கொண்டிருப்பதாகவும் இரவு அவருடன் தங்கவிருப்பதாகவும் கூறி அடுத்த நாள் காலை வருவதாகக் சொல்லி அப்பெண்ணின் விருப்பை மறுத்துவிட்டுச் சென்றார்.

அன்றே திருமணங்கள் நடைபெற்றன. மட்டுமின்றி அன்றிரவே அன்னை ஆமினாவின் வயிற்றில் நபிகள் நாயகம் எனப் பின்னாளில் உலகோர் வியந்து போற்றப் போகும் முஹம்மது பின் அப்துல்லாஹ் அவர்கள்கரு உயிர்த்தனர். அடுத்த நாள் காலை அப்துல்லாஹ் அவர்கள் முந்தைய நாள் சென்ற வீதி வழியே திரும்பி வரும்போது எதிர்ப்பட்ட அந்தப் பெண்ணுக்கு இன்று அந்த விருப்பமில்லை. முதல் நாள் அப்துல்லாஹ்வின் கண்களில் வீசிய ஒரு அற்புத ஒளி இறைத்தூதர் ஒருவரை அவர் கரு உயிர்க்கப் போவதை வெளிப்படுத்தியது. ஆமினாவின் வயிற்றில் அந்தக் கருவை உருவாக்கியுவுடன் அப்துல்லாஹ்வின் கண்களில் இருந்த அந்த ஒளியும் மறைந்தது. எனவே முந்தைய நாள் அப்தல்லாஹ்வின் மீது ஏற்பட்ட ஆர்வமும் அந்தப் பெண்ணுக்கு மறைந்தது. ஏசு கரு உயிர்த்த வரலாற்றிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முஹம்மதின் இளமைக்காலம் கடும் வறுமையில் கழிந்தது. அவர் பிறக்கும் முன்னரே தந்தை அப்தல்லாஹ் மரணமுற்றார். அய்ந்து ஒட்டகங்களும் யஹிரா என்ற இளம் அடிமைப் பெண்ணும் மட்டுமே அப்தல்லாஹ் விட்டுச் சென்ற சொத்துக்கள். எனினும் இறைத்தூதரை வயிற்றில் சுமந்திருந்த காலத்தில் அன்னை ஆமீனா எந்தச் சிறிய துயரையும் உடற்சோர்வையும் அனுபவிக்கவில்லை. ரபியுல் அவ்வல் 12ம் நாள் அன்று முஹம்மது இம்மண்ணில் தோற்றம் கொண்டவுடன் பாட்டனார் முத்தலிப் பெருமகிழ்ச்சியுற்றார். பேரக் குழந்தையை கஅபாவிற்குத் தூக்கிச் சென்று வணங்கினார்.

பிறந்த குழந்தையை நகரத்தில் வைத்து வளர்க்காமல் கிராமப் பகுதியில் யாரேனும் ஒரு வளர்ப்புத் தாயின் மூலம் வளர்ப்பதே அன்று குறைஷிகள் மத்தியில் பெருமைக்குரிய வழக்கமாக இருந்தது. பெதோய்ன் பழங்குடி இனக்குழு மக்கள் அவ்வாறு குறைஷி ஒருவரின் குழந்தையை எடுத்துச் சென்று வளர்ப்பது என்பதில் ஆர்வமுடையவர்களாக இருப்பர். அதன்மூலம் வளர்ப்பவரின் குடும்பத்திற்கு ஆதரவும் நிறைய பரிசுப் பொருட்களும் கிடைக்கும் என்பதால். ஆனால் முஹம்மது பிறந்தது அரபுலகம் முழுவதும் பசியும் பஞ்சமும் தலைவிரித்தாடிய ஓராண்டில் பரம ஏழையான ஆமினாவின் குழந்தையை ஹலிமா பின் அபு துய்ப் என்னும் பனீசஅத் இனக்குழுவைச் சேர்ந்த பெண் எடுத்துச் சென்றார். தன்னுடைய சொந்தக் குழந்தைக்கே பால் கொடுக்க இயலாத ஹலிமாவிற்கு முஹம்மது இன்னொரு சுமை. அவரது ஒட்டகங்களுக்கும் பால் வற்றியிருந்தது.

எனினும் என்ன வியப்பு. முஹம்மதை அள்ளி அணைத்தவுடன் ஹலிமாவின் மார்பில் ஏராளமாகப் பால் சுரந்தது. முஹம்மதிற்கு மட்டுமல்ல. ஹலிமாவின் குழந்தைக்கும் பசி தீர்ந்தது. அது மட்டுமன்று. ஓட்டகங்களிலும் ஏராளமாகப் பால் சுரந்தது. எங்கும் பஞ்சம் தலை விரித்தாடிய அந்தச் சூழலில் ஹலிமாவின் இல்லத்தார் பசியின்றி மகிழந்திருந்தனர். ஆசிர்வதிக்கப்பட்ட ஒரு குழந்தை தமக்கு வளர்ப்பாகக் கிடைத்துள்ளமையை உணர்ந்தனர். ஹலிமாவின் வாய்மொழிக் கூற்றினூடாக இவ்வரலாற்றை இப்ன் இஷாக் பதிவு செய்துள்ளார்.

ஏழை எளியோரை, ஒடுக்கப்பட்டோரை, அடிமைகளைத் தனது புதிய மார்க்கத்தின் மூலம் விடுதலை பெறச் செய்து நீதியும் சமத்துவமும் மிக்க ஒரு சமூகத்தை நிறுவப் போகிறவர் என்பதற்கான அடையாளம் பிறவியிலேயே முஹம்மதிடம் முளைவிட்டிருந்தது. மக்காவிலிருந்த குறைஷியரிடையே ஒருவரையொருவர் ஆதிக்கம் செலுத்த முயன்ற இரு குழுக்கள் இருந்தன. மக்காவில் வந்து முதன் முதலில் குடியேறிய (5ம் நூற்றாண்டு இறுதி) குறைஷியாகிய குசய்யின் மகன் அப்து-அத்-தர்ரும் அவரது ஆதரவாளர்களும் 'அஹ்லஃப்' (கூட்டாட்சியினர்) என அழைக்கப்பட்டனர். குசய்யின் இளைய மகன் அப்த் மனஃப்பும் அவரது அதரவாளர்களும் இன்னொரு குழுவினர். தமக்குள் ஒப்பந்தம் செய்து கொண்ட இரண்டாவது குழுவினர் அதற்கு அடையாளமாக ஒரு கிண்ணத்தில் நிறைந்திருந்த வாசனைத் திரவியத்தில் கையை நனைத்து உறுதி செய்து கொண்டனர் என்பதால் அவர்கள் 'முதய்யபுன்' (வாசனை பூசியோர்) என அழைக்கப்பட்டனர். முழுமையான ஒரு மோதலை விரும்பாத இரு குழுவினரும் ஒரு மாதிரி சமரசம் செய்து கொண்டு வாழ்ந்தனர். முதய்யபுன்களிடம் உண்மையான அதிகாரம் இருந்தபோதும் அஹ்லப்களுக்கு முக்கிய சில உரிமைகள் அளிக்கப்பட்டன. எனினும் முஹம்மது சிறுவராக இருந்த காலத்தில் வணிக ரீதியில் அஹ்லஃபினரின் கை ஓங்கியிருந்தது. முதய்யபுன்கள் ஓரங்கட்டப்பட்டு இருந்தனர்.

இச்சூழலில் நடைபெற்ற ஒரு சம்பவம் முஹம்மது எப்போதும் அநீதிக்குள்ளானோர் பக்கமே நிற்கக்கூடியவர் என்பதை உறுதி செய்தது. அப்துல் முத்தலிப் மிகவும் மூப்பெய்தியிருந்த காலம் அது. அஹ்லஃப்களில் ஒன்றான சஹ்ம் குலத்தைச் சேர்ந்த ஒரு முக்கிய மனிதரிடம் ஏமன் நகரத்து வணிகர் ஒருவர் சில பொருட்களை விற்றார். அதற்குரிய நிதி வேண்டி அவ்வணிகர் குறைஷிகளிடம் நின்றார். முதய்யபுன்களில் ஒன்றான தய்ம் குலத் தலைவர் இதுகுறித்து ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினார். நீதியிலும் நேர்மையிலும் அக்கறையுடையோர் வரவேண்டுமென அவர் அறிவித்தார். ஹஷிம், அல் முத்தலிப், அஸத், ஸுஹ்றா குலங்களைச் சேர்ந்தோர் அனைவரும் திரண்டனர். இவர்கள் அனைவருமே முதய்யபுன்கள் என்பதும் அப்தல் முத்தலிப்பின் தந்தையே ஹஷிம் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த ஆலோசனைக்கூட்டத்தில் கைச்சாத்தான ஒப்பந்தம் ஹில்ஃப் அல்ஃபுதுல்

எனப்படும். ‘நற்பண்புடையோரின் அணி’ என இதனைப் புரிந்து கொள்ளலாம் என்பது சிலர் கருத்து (வேறு மாதிரிப் பொருள் கொள்வதும் உண்டு). ஒப்பந்தம் கைச்சாத்தானவுடன் அனைவரும் கஅபாவிற்குச் சென்று ‘தாம் அனைவரும் இனி அநீதி இழைக்கப்பட்டோர் பக்கமும் ஒடுக்கப்பட்டோருடனுமே நிற்போம்’ என உறுதி எடுத்துக் கொண்டனர். சிறுவன் முஹம்மது அந்த நிகழ்வில் உற்சாகத்தோடு பங்கெடுத்துக் கொண்டதோடு இந்த வீரஞ் செறிந்த அணியை வெகுவாகப் பாராட்டி உரைத்தது வரலாறுகளில் பதியப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் வணிக ரீதியில் ஒடுக்கப்பட்டுக்கிடந்த முதய்யபுன்கள் மேலெழுந்து வருவதும் சாத்தியமானது.

அருள் வெளிப்பாடுகள் தோன்றத் தொடங்கி முதலிரண்டு ஆண்டுகள் வரை அல்லாஹ்வின் ஏக இறை மார்க்கப் பிரச்சாரத்தை மிகவும் இரகசியமாகவே நபிகள் செய்ய வேண்டியதாயிற்று. கதீஜா அம்மை, அபூபக்ர் தவிர முதற்கட்டத்தில் புதிய மார்க்கத்தை தழுவியவர் ஸைத் இப்ன் ஹாரித் என்னும் கல்ப் குலத்தைச் சேர்ந்த அடிமை என்பது குறிப்பிடத்தக்கது. திருமணத்தின்போது கதீஜா, முஹம்மதிற்கு அளித்த பரிசுப் பொருள்தான் அந்த அடிமை. அடிமையாயினும் ஸைதைத் தன் மகனைப் போலவே நடத்தினார் முஹம்மத். கதீஜா மூலம் பிறந்த இரு ஆண் குழந்தைகளும் மரித்துப்போன பின்னணியில் ஸைத், முஹம்மதின் மகனாகவே திகழ்ந்தார். ஸைதின் குடும்பத்தார் அவரது இருப்பை அறிந்து அடிமை நிலையில் இருந்து விடுதலை செய்வதற்கான ஈட்டுப் பணத்துடன் வந்த போது ஸைத், முஹம்மதைப் பிரிந்து செல்லத் தயாராக இல்லை. தனது குடும்பத்தாரிடமும் அவர் இதைக் கூறினார். முஹம்மத் எந்த ஈட்டுத்தொகையும் பெறாமல் அவரை விடுதலை செய்தார். நபிகளின் வளர்ப்பு மகனாக ஸைத் உருப்பெற்றார். முதல் முஸ்லிம்களில் ஒருவராகவும் ஆயினர். பின்னாளில் மதீனாவிற்குப் புலம் பெயர்ந்த போது மக்காவில் இருந்து புலம் பெயர்ந்த குடும்பத்துப் பெண்களும் வந்து சேர்ந்த பின் ஸைதிற்கு அவரது வயதை ஒத்த ஒருவரைத் திருமணம் செய்விக்கவேண்டும் என்று நபிகளுக்குத் தோன்றியது. அப்போது அவர் தேர்வு செய்த மணப்பெண் நபிகளின் அத்தை மகள் ஸைனப் பின் ஜாஹ்ஷ் அவர்களே. ஸைனப் உயர்ந்த குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவர். வட அரபியாவைச் சேர்ந்த தாழ்ந்த குலத்தவரும் முன்னாள் அடிமையுமான ஸைதிற்குத் தன் நெருங்கிய உறவினரும் உயர் குலத்தவருமான ஸைனபைத் திருமணம் செய்வித்தது, தாம் பேசுகிற சமத்துவத்தை நடைமுறைப்படுத்துவதில் எள்ளளவும் தயங்காதவர் நபிகள் நாயகம் என்பதற்கோர் வரலாற்றுச் சான்றாக உள்ளது. சற்றே குட்டையாகவும், கருப்பாகவும், சப்பை மூக்குடனும் இருந்த ஸைத் அன்றைய அரபிய அழகியல் மதிப்பீடுகளின் படி ஒரு கவர்ச்சிகரமான இளைஞர் அல்ல. உயர்குல அழகியான ஸைனப்பிற்கு வேறு உயர் விடுப்புக்கள் இருந்தபோதிலும் நபிகளின் விருப்பு அது என அறிந்தவுடன் அந்தத் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தார்.

*முதற்கட்ட முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் ஒடுக்கப்பட்ட குலங்களைச் சேர்ந்தோர், ஏழைகள், அடிமைகள் என்பது குறிப்பிடத்தக்கது. கடும் எதிர்ப்புகள், ஒதுக்கி வைத்தல்கள், பொருளாதாரத் தடைகள், சித்திரவதைகள் எல்லாவற்றையும் தாண்டி நபிகளின் ஏக இறை இயக்கம் தமக்கு விடுதலை அளிக்கும் என நம்பி அவர்கள் இஸ்லாத்தை நாடினர். அவர்களின் நம்பிக்கை வீண் போகவில்லை. நபிகள் மறைந்து நாற்பது ஆண்டுகளுக்குப் பின் பிறந்தவரும், தன் வாழ்நாள் முழுமையையும் தொடக்கக்கால முஸ்லிம் இயக்க வரலாற்றை ஆய்வு செய்தவருமான இப்ன் ஷிஹான் அல் ஸுரி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.*

> "இறைத்தூதர் இஸ்லாம் குறித்த அழைப்பை முதலில் இரகசியமாகவும் பின்னர் வெளிப்படையாகவும் முன் வைத்தார். இளைஞர்கள் மத்தியிலும் பலவீனமானவர்கள் (ஒடுக்கப்பட்டவர்கள்) மத்தியிலுமிருந்தவர்களில் கடவுளால் விரும்பப்பட்டவர்கள் இந்த அழைப்பிற்கு ஆர்வத்தோடு செவிசாய்த்தனர். நம்பத் தொடங்கியவர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. நம்பிக்கையற்ற குறைஷிகளும் கூட இதில் பெரிய தவறு எதையும் காணவில்லை. தம்மை முஹம்மது கடந்து செல்லும் போது அவர்கள் தங்களுக்குள் இவ்வாறு பேசிக் கொண்டார்கள்' அந்த இளைஞர் பனூ அப்த் அல் முத்தலிப் குலத்தைச் சேர்ந்தவர். சுவனத்தைப் பற்றிப் பேசுகிறவர்''' (மாக்சிம் ரோடின்சனின் மேற்கோள். பக்.100)

*என்கிற வாசகங்களிலுள்ள பலவீனமான/ஒடுக்கப்பட்ட (ஷ்மீணீளீ) என்றும் சொல் குறிப்பிடத்தக்கது. திறந்த மனத்தவர்களாக இருந்தவர்களும், பழைய கொள்கைகளைச் சுமந்து மூடுண்ட மனத்தவராக மாறாதிருந்த இளைஞர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் புதிய சமநிலைக் கொள்கையை ஏற்றனர். 'பலவீனமான' என்கிற மேற்குறித்த சொல் ஒரு அரபிய இனக்குழுப் பிரயோகம், பல்வேறு குலங்களின் படிநிலை வரிசையைச் சுட்டுவதற்குப் பயன்படும் சொல் எனக் குறிப்பு எழுதுகிறார் கரேன் ஆர்ம்ஸ்ட்ராங். எப்படியாயினும் அடிநிலை மக்களை அச்சொல் குறிப்பிடுகிறது என்பதில் அய்யமில்லை.*

*முஹம்மது தமது இயக்கப் பிரச்சாரத்தைத் தொடங்கியபோது மக்காவிலிருந்த குறைஷிகளின் குலங்களைப் பொருளியல் மற்றும் ஆதிக்க அடிப்படையில் கீழ்க்கண்ட மூன்று தொகுதிகளாகப் பிரிக்கிறார் மான்ட்கோமரி வாட்.*

*அவை:*

*அ: ஹஷிம், அல்-முத்தலிப், ஸுஹ்றா, தைய்ம், அல்-ஹாரித் இப்ன் ஃபிஹ்ர், அதீ.*

ஆ. அப்த் ஷம்ஸ், நவ்ஃபல், அஸத், அமிர்

இ. மக்ஸூம், ஸஹ்ம், ஜுமாஹ், அப்து-அத்-தார்.

'அ. என்னும் குழுவின் கீழ் உள்ளவை நாம் இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்ட 'ஹில்ஃப் அல்-புதூல்' ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பலவீனமான குலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 'அதீ' குலம் என்பது சமீபகாலமாகத் தாழ்ந்த நிலையை அடைந்த ஒன்று. அதேபோலச் சமீபமாகத்தான் அஸத் குலம் சற்றே பலமடைந்திருந்தது. நபிகளைத் தொடக்க காலத்தில் பின்பற்றியவர்களில் பெரும் பான்மையோர் இந்த பலவீனமான முதல் குழுவிலிருந்து வந்தவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக முதல் முஸ்லிம்களில் முக்கியமானவர்களான அபூபக்ர், தல்ஹா இருவரும் 'தைய்ம்' குலத்தைச் சேர்ந்தவர்கள். அபூபக்ர் தனது தனிப்பட்ட திறமைகளால் முன்னேறிய வணிகராக இருந்தபோதிலும் அவர் சார்ந்த தய்ம் குலம் மிகவும் பலவீனமான ஒன்றாகவே இருந்தது. பின்னாளில் அப்தர் ரஹ்மான் எனப் பெயர் மாற்றிக்கொண்ட இளம் வணிகர் அப்துல் கஅபா அவர்கள் ஸுஹ்ரா குலத்தைச் சேர்ந்தவர்.

முஹம்மதின் எதிரிகள் பலரும் 'ஆ' மற்றும் 'இ' குழுவில் வரக்கூடிய ஆதிக்கக் குலங்களைச் சேர்ந்தோர் என்பதும் அடிமைகளில் பலர் நபிகளை நாடி வந்து இவ்வுலகிலேயே சமநிலைச் சமுதாய வாழ்வை ஏற்றனர் என்பதும் நம் நெஞ்சை விட்டகலா உண்மைகள்.

14

# ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை

*இருக்கும் நிலையைத் தக்க வைப்பதே தமது ஆதிக்கம் தொடர்வதற்கு வழி எனக் கருதியவர்கள் நபிகளைப் பரம வைரியாக நோக்கியதில் வியப்பில்லை. நபிகள் வாயிலாக முன் மொழியப்பட்ட புதிய மார்க்கம் தம் ஆதிக்க நிலைக்கு உலை வைத்துவிடும் என அவர்கள் உறுதியாக நம்பினர். முஹம்மதையும் அவரைப் பின்பற்றியோரையும் பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்தி தண்டிக்க முனைந்தனர். பனூ மக்ஸூம் குலத்தைச் சேர்ந்த செல்வாக்கு மிகுந்த வணிகனான அபூ ஜஹ்ல் இவர்களுள் முதன்மையானவனாக இருந்தான்.*

*எனினும் முதற்கட்ட முஸ்லிம்கள் எல்லோர் மீதுமான தாக்குதல்களும் ஒரே மாதிரியாக இல்லை. முஸ்லிம்களில் ஓரளவு செல்வாக்கு உடையவர்கள் மீதான தாக்குதல்கள் - கேலி செய்தல், வணிக/பொருளாதாரத் தடைகளை விதித்தல் என்கிற மட்டத்தில் மட்டும் இருந்தது. எடுத்துக்காட்டாகப் பெரியப்பா அபூதாலிப் உயிருடன் இருக்கும் வரை நபிகளின் மீது கை வைக்க அவர்கள் தயங்கினர். முஹம்மதின் உயிருக்கு ஆபத்து விளைவித்தால் மொத்த ஹஷிம் குலத்தவரையும் அல்-முத்தலிப் வழியினரையும் விரோதித்துக் கொண்டதாக ஆகும். அபூ ஜஹ்லின் நடைமுறைகள் எவ்வாறு இருந்தன என்பது பற்றி இப்ன் இஷ்ஹாக் கீழ்க்கண்டவாறு கூறுவார்:*

> "ஒருவர் முஸ்லிம் ஆகிவிட்டதாக அவன் கேள்விப் படுவானே யானால் அவ்வாறு முஸ்லிம் ஆனவர் சமூக முக்கியத்துவம் வாய்ந்தவராகவும் பாதுகாப்பதற்கு உறவினர்கள் உடையவராகவு மிருந்தால் அவரைவெளிப் படையாகக் கண்டித்துக் கேலி செய்வான். 'நீ உன் தந்தையின் மதத்தைக் கைவிட்டுவிட்டாய். அவர் எத்தனை உயர்ந்த மனிதர். உன்னை மரமண்டை எனவும் முட்டாள் எனவும் நாங்கள் அறிவிப்போம். உன் மரியாதையை அழிப்போம்' என்று கூறுவான். அவர் வணிகராக இருக்கும் பட்சத்தில், 'நாங்கள் உன் பொருட்களை வாங்க மாட்டோம். உன்னைப் பிச்சைக்காரனாக்குவோம்' என்பான். முஸ்லிமாகியவர் ஒரு சமூக மரியாதையற்ற விளிம்பு நிலையினராக இருக்கும் பட்சத்தில் அவரை அவன் அடித்துத் துன்புறுத்துவான். மற்றவர்களையும் அவருக்கு எதிராகத் தூண்டுவான்.

எப்போதுமே தண்டனைகளும் துன்புறுத்தல்களும் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வேறுபட்டுத்தானே அமைந்தன. இங்கும் மிக அதிகமாகத் துன்புற்றவர்கள் அடிமைகள்தான். ஏனெனில் அவர்களைக் காப்பதற்கு அங்கே உறவினர்களோ குலங்களோ கிடையாது.

அபிசீனிய முஸ்லிம் அடிமையாகிய பிலாலை உச்சி வெயிலில் கைகளைக் கட்டி நெஞ்சில் பெரும் பாறாங்கல்லை ஏற்றிச் சுடும் மணலில் படுக்க வைத்துத் துன்புறுத்துவார்கள். எதற்கும் கலங்காத பிலால், "ஏகன், ஏகன்" எனத் தனது இறைக்கொள்கையை உரத்துக்கூவிய வண்ணம் துன்பங்களைச் சகிப்பார். கணீரென்ற அவரின் வெண்கலக் குரல் நகரெங்கும் எதிரொலிக்கும்.

எனினும் பிலாலின் துன்பத்தை முஸ்லிம் சமூகம் சகித்துக் கொண்டிருக்கவில்லை. பிலாலை அடிமை கொண்டிருந்தவனும் அவரை இப்படிக் கொடுமையாய்த் துன்புறுத்தி வந்தவனுமான உமையாவிடம் ஈட்டுத்தொகை கொடுத்து அவரை அபூபக்ர் விடுதலை செய்தார். இதே போல இன்னும் ஏழு அடிமைகளை அவர் விடுதலை செய்தார் என்று அறிகிறோம்.

இவ்வுலகில் நீ அடையும் துன்பங்களுக்கெல்லாம் மறு உலகில் உனக்குச் சன்மானங்கள் கிடைக்கும் என ஆறுதல் அளிப்பதோடு இஸ்லாம் நிற்கவில்லை. இவ்வுலகிலேயே நீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவதற்கு சாத்தியமானதைச் செய்வதற்கும் இஸ்லாம் தயங்கியதில்லை.

"ஏகன், ஏகன்" என்று எல்லாத் துன்பங்களுக்கும் மத்தியில் பிலால் கூவிய ஒலி காதில் ஒலித்துக்கொண்டிருந்ததோ என்னவோ மதீனாவில் கட்டி முடிக்கப்பட்ட மசூதியில் 'பாங்கு' ஒலித்துத் தொழுகைக்கு அழைப்பது என்கிற முடிவெடுக்கப்பட்டபோது அந்தப் புனிதப் பணிக்குப் பொருத்தமானவராகப் பிலாலைத் தேர்வு செய்தார் நபிகள் நாயகம்.

ஆம். கி.பி. 623 ஏப்ரல் மாதத்தில் அது நிகழ்ந்தது. புலம் பெயர்ந்து வந்த ஏழாம் மாதம் பள்ளிவாசல் கட்டி முடிக்கப்பட்டது. செங்கற் சுவரில் எருசலேமை நோக்கி 'கிப்லா' திசைக்கல் ஒன்று பதிக்கப்பட்டது. தொழுகைக்கெனப் பெரிய முற்றம் ஒன்று கட்டுவிக்கப்பட்டது. முதலில் எந்த அழைப்புமின்றித் தொழுகை நேரத்திற்கு அனைவரும் வந்து குழுமினர். எனினும் ஒரே நேரத்தில் அனைவரும் வந்து குழுமுவது என்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன.

இன்றளவு மணிப்பொறிகள் எல்லாம் இல்லாத காலம் அது என்பதையும் நாம் நினைவு கொள்ள வேண்டும். எனவே அனைவரையும் தொழுகைக்கு அழைப்பதற்கு ஏதாவது செய்யலாம் எனத் தோன்றியது.

யூதர்களைப் போல ஆட்டுக்கொம்பொன்றை ஊதலாம். அல்லது கீழைத்தேசக் கிறிஸ்தவர்களைப் போல மரத்தால் ஆன முரசொன்றை அறையலாம் என நபிகளுக்குத் தோன்றியது. புலம் பெயர்ந்து வந்தவர்களில் ஒருவர் தனக்குத் தோன்றிய கனவொன்றைக் குறிப்பிட்டார். பச்சை மேலாடை அணிந்த ஒருவர் அவர் கனவில் தோன்றி "அல்லாஹூ அக்பர்" (இறைவனே பெரியவன்) என்று மும்முறை ஒலித்து அழைக்கலாம் எனக் கூறியதாகச் சொன்னார். அந்த அழைப்பு இவ்விதமாக இருந்தது.

> "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதற்கு நான் சாட்சியம் பகர்கிறேன். முஹம்மது அவர்களே இறைத்தூதர் என்பதற்கும் நான் சாட்சியம் பகர்கிறேன். தொழ வாருங்கள், தொழ வாருங்கள் இறைப் பணிக்கு வாருங்கள். இறைப் பணிக்கு வாருங்கள். அல்லாஹ் மிகப் பெரியவன். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை".

இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்ட முஹம்மது, பிலாலை அழைத்து அந்தப் பணியைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னாளில் வெற்றிகரமாக மக்காவுக்குத் திரும்பியபோது கஅபாவின் உச்சியில் ஏறி அந்தக் கறுப்பு அடிமை பாங்கு ஒலித்து அல்லாஹ்வே பெரியவன், அவனைத் தவிர வேறு இறைவனில்லை□ என விண்ணதிர முழங்கியபோது குறைஷிச் சமூகமே வியந்து, திகைத்து நின்றது.

பள்ளிவாசலைக் கட்டிக் கொண்டிருந்தபோது நடந்த இன்னொரு சம்பவமும் குறிப்பிடத்தக்கது.

பனூ குறைஸா யூதர்களில் ஒருவரின் பாரசீக அடிமையாகிய சல்மான் என்பவர் முஹம்மதை அணுகித் தன் கதையைச் சொன்னார். இஸ்ஃபஹனிற்கு அருகில் பிறந்தவர் அவர். கிறிஸ்தவராக மாறி சிரியாவிற்கு வந்தார். அரேபியாவில் ஒரு இறைத்தூதர் தோன்றி இருப்பதாகக் கேள்விப்பட்ட அவர், ஹிஜாஸை நோக்கிப் பயணமானார். வரும் வழியில் கைது செய்யப்பட்டு மதீனாவிற்கு கொண்டு வரப்பட்டார். பின்னாளில் சல்மான் இஸ்லாத்தில் மிக உயரிய நிலையில் வைத்து மதிக்கப்படக்கூடியவராக ஆனார்.

அரேபியர் அல்லாத கீழைத் தேசத்தைச் சேர்ந்தவரான போதிலும் இறை மார்க்கத்தில் உயர்நிலை அடைவதற்கு இனமோ, மொழியோ, வர்க்க நிலையோ, சாதியோ இஸ்லாத்தில் தடையாக இருப்பதில்லை என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக சல்மானும், பிலாலும் விளங்குகின்றனர். ஒவ்வொரு நாள் காலையும் பள்ளிவாசலுக்கு அருகில் பிலால் கீழ்த்திசையில் ஆதவன் உதித்தவுடன் பாங்கு ஒலிப்பதற்கு முன் தன்னிரு கரங்களையும் விரித்து, "இறைவா, நான் உன்னைப் புகழ்கிறேன். உன்னுடைய மார்க்கத்தை குறைஷிகள் அனைவரும் ஏற்றுக்கொள்வதற்கு

உன் உதவியைக் கோருகிறேன்'' என்றுரைப்பார் என்பது வரலாறு (இப்ன் இஷ்ஹாக், பக். 280).

இறையனுபவம் வாய்க்கப் பெற்று மூன்றாண்டுகள் வரை தனது அனுபவங்களை முஹம்மது மிகவும் இரகசியமாகவே வைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. அன்னை கதீஜா, சிறுவன் அலீ முதலிய ஒரு சிலரே புதிய மார்க்கத்தை ஏற்றுக்கொண்டனர். கிட்டத்தட்ட ஒரு தலைமறைவு இயக்க வாழ்க்கையைப் போலவே ஆரம்ப நாட்கள் அமைந்தன. நபிகளின் வளர்ப்பு மகன் ஸைதும், உற்ற தோழர் அபூபக்ரும் புதிய மார்க்கத்தை விரும்பி ஏற்றனர். அலீயோ பத்து வயதே உடைய சிறுவன், ஸைதோ ஒரு அடிமை. ஒரளவு குறைஷிகளால் மதிக்கத் தகுந்த மனிதராக இருந்தவர் அபூபக்ர் மட்டுமே. நபிகளைப் பின்பற்றுமாறு அவர் இதர நெருக்கமான குறைஷியரிடம் இரகசியப் பிரச்சாரம் மேற்கொண்டு வந்தார். ஸுஹ்ரா கோத்திரத்தைச் சேர்ந்த அப்த்-அம்ரும். பனூ அல் ஹாரித் கோத்திரத்தைச் சேர்ந்த அபூ உபைதாவும் அபூபக்கரின் கருத்துக்களை ஏற்று புதிய மார்க்கத்தின் இரகசிய உறுப்பினர்கள் ஆயினர்.

ஷம்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த காலித்திற்கு ஒரு பயங்கர அனுபவம் ஏற்பட்டது. ஒரு நெருப்புக் குழியில் விழ இருந்த அவரை வலிமையான இரு கரங்கள் இடுப்பைப் பற்றி விழாமல் காத்ததாக ஒரு கனவுக் காட்சி. அபூபக்ரிடம் காலித் இதைப் பகிர்ந்து கொண்டபோது அவ்வாறு அவரைக் காத்தது 'அல்அமீனாகிய' முஹம்மத் தான் என்பதை அவர் விளக்கினார். முஹம்மதின் புதிய மார்க்கத்தில் சேருமாறு அவர் கேட்டுக் கொண்டதை காலித்தால் மறுக்க இயலவில்லை.

இப்படிச் சிறிய அளவில் புதிய மார்க்கம் வளர்ந்து கொண்டிருந்த நிலையில், கி.பி. 615-ல் குறைஷிகள் மத்தியில் தமது இயக்கத்தை முஹம்மது அவர்கள் பகிரங்கப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. எவ்வளவு காலந்தான் இரகசியமாகவும் தலைமறைவு இயக்கமாகவும் வாழ்வது. நெருங்கிய உறவினர்களை இஸ்லாத்திற்கு அழைக்குமாறு நபிகளுக்கு இறை வாக்கும் அருளப்பட்டது (26:214).

எந்த அளவிற்கு இது சாத்தியம் என்பது நபிகளுக்கு விளங்கவில்லை. எனினும் ஒரு எளிய விருந்தொன்றை ஏற்பாடு செய்து ஹஹிம் குலத்தைச் சேர்ந்த நாற்பது முக்கிய நபர்களுக்கு அழைப்புக் கொடுத்தார் நாயகம். எளிய விருந்து என்பதே அழைக்கப்பட்டவர்களுக்கு ஒரு செய்தியை உணர்த்தியது. தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலை நாட்டுவதற்காகப் பிரம்மாண்டமான ஆடம்பர விருந்துகளை அரேபியர்கள் நடத்திக் கொண்டிருந்த காலம் அது.

> "உறவினர்களுக்கும் வரியவர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் அவரவருக்குரிய உரிமையை வழங்கிவிடுங்கள். ஆனால் வீண்செலவு செய்யாதீர். திண்ணமாக வீண் செலவு செய்வோர் ஷைத்தானின்

சகோதரர்களேயாவர்." (17:26-27)

*என்கிற இறைவாக்கியத்திற்கேற்ற எளிய விருந்து அது.*

*விருந்து முடிந்த பின்பு முஹம்மது மெல்ல வாய் திறந்தார். தனது அருள் அனுபவங்களை அவர் சொல்லத் தொடங்கியவுடன் சீறி எழுந்தான் அபூதாலிப்பின் ஒன்றுவிட்ட சகோதரன் அபூலஹப். மூர்க்கமாக இடை மறித்து விருந்தினர்களைக் கலைத்துச் சென்றான்.*

*முஹம்மது மனம் தளரவில்லை. அடுத்த நாள் மீண்டும் அனைவரையும் அழைத்தார். இஸ்லாத்தை அவர்களோடு பகிர்ந்தார். புதிய மார்க்கத்தில் சேருமாறு கேட்டுக்கொண்டார்.*

"அப்துல் முத்தலிப்பின் பிள்ளைகளே! நான் உங்களுக்காகக் கொண்டு வந்திருப்பதைக் காட்டிலும் உன்னதமான ஒரு செய்தியைத் தம் மக்களுக்குக் கொண்டு வந்த எந்த அரேபியனையும் நான் இதுவரை கண்டதில்லை. இந்த உலகத்தில் மட்டுமன்று, மறு உலகிலும் ஆகச் சிறந்ததை நான் உங்களுக்குக்கொண்டு வந்துள்ளேன். தன்னிடம் உங்களை அழைக்குமாறு இறைவன் எனக்கு ஆணையிட்டுள்ளான். இந்தப் புனிதப்பணியில் உங்களில் யார் என்னோடு இணையப் போகிறீர்கள்? என் சகோதரராக, என்கருத்துக்களைச் செயல்படுத்து பவராக, என்னைப் பின் தொடர்பவராக உங்களில் யார் வரப் போகிறீர்கள்?"

*என்று கல்லும் கரைந்துருக நாயகம் கேட்டபொழுது அங்கு ஒரு பெருத்த அமைதியே நிலவியது.*

# சாத்தானின் பாடல்கள்

## 15

பெரியவர் அபூதாலிப்போ இல்லை முஹம்மதின் சம வயதினர்களான அப்பாஸ் அல்லது ஹம்ஸாவோ யாரும் வாய் திறக்கவில்லை. சிறுவனாயினும் அந்த அருவெறுக்கத்தக்க அமைதியை அலீயால் சகித்துக்கொணடிருக்க இயலவில்லை. விடலைப் பருவத்தினனான அவன் எல்லோர் முன்னும் தைரியமாக பேசத் தொடங்கினான். அதுகுறித்து அவனே சொல்வதைக் கேளுங்கள்.

> “அங்கிருந்தவர்களிலேயே வயதிற் சிறுவனாயினும், கலங்கிய கண்கள், சற்றே பருத்த உடல், பலவீனமான கால்களை உடையவனாயினும் நான் சொன்னேன். ‘இறைத்தூதரே! இந்த விஷயத்தில் நான் உங்களின் உதவியாளனாக இருப்பேன்’. என் கழுத்தின் பின்புறத்தைத் தன் கரங்களால் தொட்டுத் தடவியவாறே அவர் (நபிகள்) சொன்னர் ‘இவன் என் சகோதரன், என் கருத்துக்களைச் செயல் படுத்தப்போகிறவன், உங்களில் என் வழியில் எனக்குப் பின்னால் வரப்போகிறவன். அவன் சொல்வதைக் கேளுங்கள். அவனைப் பின்பற்றுங்கள்.”

இப்படிச் சொன்னால் சகித்துக் கொள்வார்களா அவர்கள்? எழுந்து வெளியேறினர். கேலியும் கிண்டலுமாக அபுதாலிப்பை நோக்கி, “உன் மகன் சொல்லைக் கேட்டு நடக்குமாறு உனக்கு உத்தரவு போட்டிருக்கிறார் முஹம்மது, அப்படியே செய்!” என்று கூறி நகையாடிச் சென்றனர்.

முஹம்மதைப் பின்பற்றிப் பலரும் முஸ்லிம்கள் ஆனதன் விளைவாகக் குடும்பங்களுக்குள் பகைகள் தோன்றின. பிளவுகள் ஏற்பட்டன. அன்னை கதீஜாவீன் மருமகனும் அப்த் ஷாம்ஸ் குடும்பத்தைச் சேர்ந்தவருமான அபூஅல் அஸ்இப்ன்ராபி, முஹம்மதின் மூத்த மகள் ஸைனபைத் திருமணம் செய்திருந்தார். எனினும் அபு அல் முஸ்லிமாகவில்லை. அவரது குடும்பத்தினர் ஸைனப்பை மணவிலக்குச் செய்யுமாறு வற்புறுத்தினர். அபூ அல் அஸ்ஸூம் ஸைனப்பும் ஒருவரையயாருவர் ஆழமாக நேசித்தனர். “ஸைனப்பின் புதிய மார்க்கத்திற்கு நான் மாறமாட்டேன். எனினும் நான் அவளை மணவிலக்குச் செய்யவும் மாட்டேன்” என உறுதியாக கூறினார். அதேபோல கதீஜாவின் ஒன்று விட்ட சகோதரர் நவ்ஃபல் இஸ்லாத்தைக் கடுமையாக வெறுத்தார்.

எனினும் அவரது மகன் அஸ்வத் முஸ்லிம் ஆனார். கதீஜாவின் இன்னொரு மருமகன் ஹகிம் இப்ன் ஹிஸம், அவர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தபோதும் முஸ்லிமாக விரும்பவில்லை. ஆனால் ஹகிமின் சகோதரர் காலித் புதிய மார்க்கத்தைத் தழுவினார். அபூபக்ர் குடும்பத்திலும் இதே போன்ற பிரச்சனைகள். அவரது மனைவி உம்ம் ருமானும் பிள்ளைகள் அப்துல்லாஹ்வும் அஸ்மாவும் அல்லாஹ்வின் வழிக்கு வந்தபோதிலும் அவர்களின் இன்னொரு மகன் அப்த்-அல்-கபா புதிய மார்க்கத்தை கடுமையாக எதிர்த்தார். இயேசு மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டைப் போலவே முஹம்மதும் குடும்பங்கள் சிதைவதற்குக் காரணமாகக் கருதப்பட்டார்.

நபிகளின் சமூகச் சமத்துவக் கருத்துக்களைத் தொடக்க ஆண்டுகளில் யாரும் பெரிதாக விமர்சிக்கவில்லை. வணிக ரீதியில் வெற்றிகரமாக இருந்தவர்களும் கூட இதுகுறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. பணத்தாசை கொண்டுச் சுயநலமாகச் செயல்படுவோர் எல்லோரும் தங்களின் ஆசையையும் சுயநலத்தையும் ஆதரித்துப் பேசிக் கொண்டிருப்பார்களா என்ன? கண்டும் காணாமல் தமது சுயநல நடவடிக்கைகளைத் தொடர்வது என்பதே அவர்களின் நடைமுறையாக இருந்தது.

புனித குர்ஆனை நாம் ஆழ்ந்து பயிலும்போது தொடக்க கால எதிர்ப்புகள் யாவும் முஹம்மது நபிகள் முன்வைத்த ‘இறுதித் தீர்ப்பு’ என்கிற கருத்தை மய்யமாக வைத்தே அமைந்திருந்தன என்பது விளங்கும். யூத-கிறிஸ்தவ மரபுகளிலிருந்து ‘இறுதித் தீர்ப்பு’ குறித்த இறையியற் சிந்தனையை முஹம்மது ஏற்றுக்கொண்டிருந்தார். அவரவர் செயல்களுக்கு அவரவர்களே பொறுப்பு என்கிற கருத்துக்கு முஹம்மதில் இறங்கிய செய்திகள் அதிக அழுத்தம் கொடுக்கலாயின. குல அந்தஸ்து அல்லது இனப் பாதுகாப்பு என்பன இறுதி நாளில் எந்தப் பயனையும் அளித்து விடாது என்பதை ‘இறுதித் தீர்ப்பு’ குறியீட்டு ரீதியாக உணர்த்தியது.

இறுதித் தீர்ப்பு நாளில் சேர்த்து வைத்திருக்கும் சொத்தின் அடிப்படையிலும் உங்களுக்குத் தீர்ப்பு வழங்கப்படப் போவதில்லை. உங்களிலுள்ள அனாதைகளுக்காக நீங்கள் ஏன் கவலை கொள்ளவில்லை? - என்பன போன்ற கேள்விகளுக்கே நீங்கள் பதில் சொல்ல வேண்டி வரும். சுயநல நோக்குடன் இத்தனை சொத்து சேர்த்திருப்பது எப்படிச் சரியாகும்? உங்களில் ஏழையானவர்களுக்கு நீங்கள் ஏன் இதைப் பகிர்ந்தளிக்க வில்லை? - இத்தகைய கேள்விகள் உயர் வர்க்கக் குறைஷிகளுக்கு அச்சத்தையும் எரிச்சலையும் ஊட்டியதில் வியப்பில்லை. தமது இனக்குழுச் சமூகத்தின் சமத்துவ மரபுகளை இன்று தாம் புறக்கணித்துவிட்டது குறித்தக் குற்ற உணர்வு அவர்களுக்கு இருந்தபோதிலும் திருக்குர்ஆனும் முஹம்மது நபிகளும் வற்புறுத்திய சமூக சமத்துவக் கருத்துக்களை அவர்கள் வெறுக்கவே செய்தனர்.

*சமத்துவக் கருத்துக்களுக்கு அடிப்படையாக இருந்த 'இறுதித் தீர்ப்பு' என்கிற கருத்தாக்கத்தைக் கேலி செய்தனர். "பண்டைக் காலத்துக் கட்டுக் கதைகள்" என்றனர் (7:17); "அப்பட்டமான பொய். நாம் இறந்து மண்ணாகி எலும்புக் கூடாகிய போதும் மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவோமா? செத்து மடிந்த நம் மூதாதையர்களும் எழுப்பப்படுவார்களா?" எனப் பரிகசித்தனர் (37:16,17) மரணத்திற்குப் பின் வாழ்வில்லை என்கிற பழைய அரபு நம்பிக்கை அவர்களுக்கு ஆறுதல் அளித்தது. உலகியல் ஆசைகளுக்கும் பொருளீட்டும் நடவடிக்கைகளுக்கும் அதுவே அவர்களுக்கு நியாயம் வழங்கியது.*

*தமது சமூக நடவடிக்கைகள் தவறானவை என்பதையறிந்த குற்ற உணர்வுடையவர்கள்தான் இறுதித் தீர்ப்பு என்கிற கருத்தாக்கத்தை மறுக்கிறார்கள் என்பதைத் திருக்குர்ஆன் வாயிலாக நபிகள் அறிவுறுத்தினார். "தீய செயல்கள் புரிவோரும் வரம்பு மீறுபவர்களும் மட்டுமே இறுதித் தீர்ப்பை ஏற்கமாட்டார்கள்" என்பது இறைவாக்கு (83:12). ஒரு துளி விந்திலிருந்து ஒரு மனிதரை அல்லாஹ்வால் உருவாக்க முடியும் எனில், இந்த உலகத்து அதிசயங்களையெல்லாம் படைக்க முடியுமெனில், இறந்த உடலை ஏன் அவனால் உயிப்பிக்க முடியாது? எனத் திருக்குர்ஆன் வினவியது (36:72-83).*

*குறைஷிகளின் இத்தனை எதிர்ப்புகளுக்கும் மத்தியில் நபிகளின் தொடக்கக் கால இயக்கப் பணிகள் வெற்றி முகத்திலேயே அமைந்தன. அல்லாஹ்வின் மார்க்கத்தில் அனைவருமே திரும்பக்கூடும் என்கிற நிலையொன்று வந்தபோது முஹம்மது ஒரு நெருக்கடியைச் சந்திக்க நேர்ந்தது.*

*அது நிகழ்ந்தது கி.பி. 616-ல். அதுவரை அரபு மக்கள் மத்தியில் அன்று வணக்கத்திலிருந்த பிற கடவுளரைப் பற்றி முஹம்மது அதிகாரப் பூர்வமாகக் கண்டித்ததில்லை. அல்லாத், அல்உஸ்ஸா, மனாத் முதலான தம் பழைய கடவுளரைத் தொடர்ந்து வணங்கிக் கொண்டே புதிய மார்க்கத்திலும் இருக்கமுடியும் எனக் குறைஷிகள் நம்பினர். அருள் வெளிப்பாட்டின் ஏக இறைக்கொள்கைக்கு அழுத்தம் கொடுத்துப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை முஹம்மது உணர்ந்தார். வெளிப்படையாக வலியுறுத்தத் தொடங்கினார். புதிய மார்க்கத்திற்கு மாறியோர் 'பனத் அல்லாஹ்' எனப்படும் அல்லாஹ்வின் மகன்களாகக் கருதப்பட்ட இந்த இணை வைப்புகளை வணங்கலாகாது என அவர் தெளிவாக வரையறுத்தபோது தமது ஆதரவாளர்களில் பலரை அவர் ஒரே நாளில் இழக்க நேரிட்டது. குறைஷிச் சமூகம் இரண்டாகப் பிளந்தது.*

> "நான் கேள்விப்பட்டவரைக்கும் அல்லாஹ் ஆணையிட்டது போல இறைத்தூதர் இஸ்லாத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த வரை அவரது மக்கள் அவரிடமிருந்து ஒதுங்கவில்லை, அவருக்கு எதிராகத்

திரும்பவுமில்லை. அவர்களின் கடவுளரை அவர் தாழ்த்திப் பேசிய போதே அது நிகழ்ந்தது. அப்படி அவர் செய்த போது அதை அவர்கள் பெருத்த தாக்குதலாகக் கருதினார்கள். ஒட்டு மொத்த சமூகத்தின் எதிரியாக அவரை வரையறுத்தார்கள். இத்தகைய தீமைகளில் இருந்து இஸ்லாம் மூலம் இறைவனால் காக்கப்பட்டவர்கள் மட்டுமே அவருடன் இருந்தார்கள். எனினும் அவர்கள் மிகச் சிறுபான்மையினரே."

*என்பார் இப்ன் இஷ்ஹாக் (பக். 118).*

*மரபுகளும், பழம் நம்பிக்கைகளும் எப்போதும் புதுமைகளுக்கும் மாற்றங்களுக்கும் எதிராகத்தான் இருந்து வந்துள்ளன. இருக்கும் அமைப்பை, அதன் கொடுமைகளைப் பற்றிக் கவலைப்படாமல் காக்க நினைப்பவர்களுக்கு மரபு தான் பெரிய அரணாக இருந்து வந்துள்ளது. நமது சுப்பிரமணிய பாரதியார் சொன்னது போல "அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக உப்புத் தண்ணீரைக் குடிக்கவும் சித்தமாக இருக்கிறார்கள்" நம் மக்கள். புதிய செய்திகளைச் சொன்னவர்கள் சாக்ரடீஸ் தொடங்கி நபிகள் வரை துன்புறுத்தப்பட்டதே வரலாறு.*

*நபிகளின் ஏக இறைக் கொள்கை என்பது வெறும் அறிவு ரீதியான ஒப்புதலை மட்டும் கோரவில்லை. அது அவர்களது இறைப் பிரக்ஞையிலேயே ஒரு மாற்றத்தைக் கோரியது. சமூக இருப்பின், அற நியாயப்பாடுகளின் அடிப்படைகளையே கேள்விக்குள்ளாக்கியது. எனவே தான் நபிகள் நாயகம் அன்றைய அரபுச் சமூகத்திற்கே ஒரு ஆபத்தாகக் கருதப்பட்டார். தந்தையர்களின் மதத்தைப் புறக்கணித்தவராகவும் தங்களது கடவுளரை மறுப்பவராகவும் குற்றம் சாட்டப்பட்டார்.*

*கிறிஸ்தவத்தின் வரலாற்றிலும் இதுபோன்ற ஒரு நெருக்கடியை நாம் காண முடிகிறது. இந்த நெருக்கடியிலிருந்து தப்புவதற்காக தொடக்கக்கால கிறிஸ்தவ 'மாப்புவாதிகள்' (Apologists), தம்மை வெறுத்த பகன் வழி பாட்டாளர்களை நெருங்கும் முகமாகத் தமது கொள்கைகளில் சிறிது சமரசம் செய்து கொள்ள முனைந்தனர். பலஸ்தீனிய இறையியலாளராகிய ஜஸ்டின் இரு 'மன்னிப்புப் பிரகடனங்கள்' (கி.பி. 150, 155), எழுதினார். பிளேட்டோ தொடங்கி வைத்தப் பாதையில்தான் தாம் சென்று கொண்டிருப்பதாகவும், புதிதாக எதையும் செய்துவிடவில்லை எனவும் இறைஞ்சினார்.*

*இதுபோன்ற ஒரு தருணம் முஹம்மது அவர்களுக்கும் கூட ஏற்பட இருந்ததைப் புனித குர்ஆன் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். தம்மிடமிருந்து விலகிய குறைஷியர்களை அவர் நெருங்க வேண்டிய அவசியம் நேர்ந்ததை எதிரிகள் பயன்படுத்த முனைந்தது குறித்து,*

"(நபியே!) இம் மக்கள் உம்மைக் குழப்பத்திலாழ்த்தி திசை திருப்பும் முயற்சியில் எந்தக் குறையும் வைக்கவில்லை. நாம் உமக்கு அருளிய

வஹீயை (இறைச் செய்தி) விட்டு உம்மைத் திசைமாற்றுவதில் கிட்டத்தட்ட நெருங்கி வந்தனர். வேறு எதையாவது நம் மீது புனைந்துரைக்குமாறு செய்வதற்காக அவ்வாறு நீர் செய்திருந்தீரானால் அவர்கள் உம்மைத் தம் நண்பராக ஏற்றுக் கொண்டிருப்பார்கள். நாம் உமக்கு உறுதிப்பாட்டை வழங்காதிருந்தால் நீர் அவர்களின் பக்கம் சிறிதேனும் திரும்பியிருக்கக் கூடும். நீர் அவ்வாறு திரும்பியிருந்தால் உலக வாழ்வில் இரு மடங்கு வேதனையையும், மரணத்திற்குப் பிறகு இரு மடங்கு வேதனையையும் நீர் சுவைக்கும்படிச் செய்திருப்போம்." (17:73 - 75)

*என்று அல்லாஹ் நபிகளுக்கு நினைவூட்டுவது குறிப்பிடத்தக்கது.*

*இஸ்லாத்தையும் இறைத் தூதரையும் இழிவு செய்யும் பொருட்டு 'சாத்தானின் பாடல்கள்' என்பதான ஒரு கதையை அவிழ்த்து விடுகிற மேற்கத்திய ஆய்வாளர்கள் சிலர் மேற்குறித்த இறை வசனம் இதனையே குறிப்பதாக விளக்கம் எழுதுவர்.*

*'சாத்தானின் பாடல்கள்' குறித்த கதையாடலுக்கு ஆதாரமாக அமைவது இப்ன் ஸஅத் மற்றும் தபரியின் வரலாறுகள். இந்தக் கதைகளின்படி திருக்குர்ஆன் 53-வது அத்தியாயம் நபிகளுக்கு அருளப்பட்டுக் கொண்டிருந்தபோது அது நிகழ்ந்தது. எல்லோரும் தம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டனரே என நபிகள் வருந்திக்கொண்டிருந்த நிலையில் அந்த அத்தியாயம் அருளப்பட்டது என்கிறார் தபரி. கஅபாவில் அது நிகழ்ந்தபோது ஏராளமான குறைஷிகள் அருகில் இருந்தனர். முஹம்மது,*

"இந்த அல்லாத், அல் உஸ்ஸா மற்றும் மூன்றாவது தேவதையான மனாத் ஆகியவற்றின் உண்மை நிலை பற்றி நீங்கள் எப்போதும் சிந்தித்தது உண்டா?"

*என ஓதத் தொடங்கினார். அல்லாஹ்வின் மக்களாகக் கருதப்பட்ட இத்தேவதைகளைப் பற்றிச் சொல்லக்கூடிய எதுவும் அன்று மிக முக்கியமான விவாதப் பொருளாக இருந்ததால் அனைவரும் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினர். தபரியின் கதைப்படி இந்தத் தருணத்தில் சாத்தான் கீழ்க்கண்ட இரு கூற்றுக்களை நபிகளின் உதடுகளின் ஊடாக நழுவவிட்டான்.*

"இவை மூன்றும் உன்னதப்பட்ட 'கரானிக்' பறவைகள். அவற்றின் (கடவுளுக்கும் மக்களுக்குமான) இடைநிலைத் தன்மை ஏற்றுக் கொள்ளப்படுகிறது."

*என்பனவே அவ்வரிகள். கரானிக் என்பது மிக உயரத்தில் பறக்கக்கூடிய நாரை போன்ற ஒரு பறவை. கடவுளுக்கும் மனிதருக்கும் இடைப்பட்ட ஜின்கள், ஜிப்ரீல் போன்ற வானவர்களின் இருப்பைத் திருக்குர்ஆன்*

ஏற்றுக்கொள்வதை (53:26) நாம் அறிவோம். கரானிக் பறவை என்பது நிச்சயம் அல்லாஹ்விற்குச் சமமான ஒன்றல்ல. எனவே இதர வானவர்களைப் போல இந்தத் தேவதைகளையும் ஏற்றுக்கொணடதாகப் பொருள் கொண்டாலும் கூட நபிகள் இதன்மூலம் லாத், உஸ்ஸா, மனாத் ஆகியவற்றைத் தேவதைகளாக ஏற்றுக் கொள்வதாகி விடுகிறது.

தபரி முன்வைக்கும் கதையைத் தொடர்வோம். நபிகளின் வாயிலாக இந்த ஏற்பைக் கேட்ட குறைஷிகள் பெருமகிழ்ச்சியுற்றனர். கடவுளுக்குச் சமமாகவே இந்த தேவதைகளைத் திருக்குர்ஆன் ஏற்றுக்கொண்டதாக அவர்கள் நம்பினர். முஸ்லிம்களோடு சேர்ந்து அனைத்துக் குறைஷியரும் தொழ முன் வந்தனர். இனி இஸ்லாமால் தமது நம்பிக்கைகளுக்குத் தீதில்லை என நம்பினர். எனினும் மிக விரைவில் இன்னொரு இறைவாக்கு ஒன்றின் மூலமாகக் தேவதைகளை ஏற்கும் முன் கூற்று சாத்தானால் திணிக்கப்பட்டது என்பது தெளிவாகியது எனவும் அதன்பின் சாத்தானால் திணிக்கப்பட்ட கூற்றும் திருத்தப்பட்ட கூற்றும் திருக்குர்ஆன் தொகுப்பிலிருந்து நீக்கப்பட்டு இம்மூன்று தேவதைகளும் வெறும் கற்பனையே என்கிற உண்மை நிலை வெளிப்பட்டதாகவும் தபரி உரைப்பார்.

இஸ்லாமையும் நபிகளையும் தூற்ற நினைப்பவர்களுக்கு இது போதாதா? சாத்தானின் கூற்றையும் இறைவனின் வாக்கையும் பிரித்தறிய இயலாத ஒருவர் எப்படி இறைத்தூதராக இருக்க இயலும்? முஹம்மது வெறும் ஏமாற்றுக்காரரே எனத் தாக்கத் தொடங்கினர். 'சாத்தானின் பாடல்கள்' என்கிற தலைப்பில் சல்மான் ருஷ்டியின் நாவல் வெளிவந்த போது இந்தப் பிரச்சனை மீண்டும் மேலுக்கு வந்தது.

மார்க அறிஞர்களோடு மான்ட்கோமரி வாட், மாக்ஸிம் ரோடின்சன் போன்றோரும் இதுகுறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு உண்மை நிலையை விளக்கியுள்ளனர்.

# 16

# சாத்தானும் – ஷைத்தானும்

*சாத்தானின் பாடல்கள் குறித்த தபரியின் கதையை முஸ்லிம்களில் பெரும்பாலோர் ஏற்பதில்லை. அய்யத்திற்குரிய இடைச் செருகல் என அதனைப் புறந்தள்ளுவர். சாத்தானின் பாடல்கள் குறித்துத் திருக்குர்ஆனின் தெளிவான குறிப்புகள் இல்லை என்பதையும் மிகவும் நம்பிக்கைக்கு உரிய தொடக்ககால ஆதார நூலாகிய இப்ன் இஷ்ஹாக்கிலும் இது குறித்த பதிவுகள் இல்லை என்பதையும் இவர்கள் சுட்டிக் காட்டுவர். ஒன்பதாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட புகாரி மற்றும் முஸ்லிம் மரபு வழித் தொகுப்புகளிலும் (ஹதீஸ்கள்) கூட சாத்தானின் பாடல்கள் குறித்து எந்தப் பதிவும் இல்லை.*

*இஸ்லாமியர்களைப் பொருத்தமட்டில் தமது நம்பிக்கைகளுக்கு மாற்றாக விளக்கமளிக்கத் தக்கவையாக உள்ள எந்த ஹதீஸையும் அவர்கள் ஒதுக்குவதில்லை. போதுமான ஆதாரங்கள் இல்லை என்றால் மட்டுமே அது புறக்கணிக்கப்படும். எனினும் கூட இஸ்லாம் குறித்தும் நபிகள் குறித்தும் எதிர்மறையாகச் சிறிய கூற்று ஒன்று கிடைத்தாலும் அதை ஊதிப் பெருக்கித் துரும்பைத் தூணாக்கத் தவறாத மேற்கத்தியர்கள் சாத்தானின் பாடல்கள் குறித்த இக்கதையை இஸ்லாத்திற்கு எதிராகப் பயன்படுத்துவதில் சளைப்பதில்லை.*

*1988-ல் சல்மான் ருஷ்டியின் 'சாத்தானின் பாடல்கள்' நூல் வெளி வந்தபோது அதற்கு விதிக்கப்பட்ட ஃபத்வாவை ஒட்டி இப் பிரச்சனை மீண்டும் எழுப்பப்பட்டது என்றேன். முஹம்மது நபிகளின் வாழ்வை மறைமுகமாகக் கேலி செய்யும் நூலாக அதை முஸ்லிம்கள் கருதினர். இறைத்தூதர் குறித்து ஏமாற்றுக்காரர், அதிகார ஆசைகள் கொண்டவர், பெண்ணாசை பிடித்தவர், அவரது ஆரம்பகாலத் தோழர்கள் அனைவரும் மனிதாபிமானமற்றவர்கள் என்பன போன்ற அவதூறுகளை மீண்டும் ருஷ்டியின் நூல் உயர்த்திப் பிடிப்பதாக வேதனைப்பட்டனர்.*

*எல்லாவற்றிற்கும் மேலாகத் திருக்குர்ஆன் அருளப்பட்டது குறித்த அடிப்படை நம்பிக்கையையே அந்நூல் கேலி செய்வதாக வெகுண்டனர். 'சாத்தானின் பாடல்கள்' என்கிற தலைப்பே திருக்குர்ஆன் நன்மையையும் தீமையையும் பிரித்தறிய இயலாத நூல் என்பதைக் குறிப்புணர்த்துவதாகக் கோபங் கொண்டனர்.*

*உலக முஸ்லிம்களின் இந்த நியாயமான கோபத்தைச் சாக்காக வைத்துக்கொண்டு ஆய்வு மற்றும் கலைச் சுதந்திரங்களை ஏற்காத சகிப்புத்தன்மையற்ற மதம் என இஸ்லாத்தை மேற்கத்தியர்கள் இழித்துரைத்தனர். வரலாற்றிற்கு முஸ்லிம் கலாச்சாரம் அளித்த கொடைகளையும் மேற்கத்திய அறிவுத்துறை மற்றும் தத்துவச் செயற்பாடுகளுக்கு இஸ்லாம் ஊற்றுக்கண்ணாக இருந்ததையும் கண்டு கொள்ள மறுத்தனர். ருஷ்டியின் நாவலில் இறைத்தூதர் நேரடியாகக் கேலி செய்யப்படாதபோதும் உளவியல் பிரச்சினைகளில் சிக்குண்ட பாத்திரங்களில் ஒன்றின் கனவுலக மாயாக் காட்சிகளாக நபிகளும் தோழர்களும் கேலி செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*மேலை இறை மரபில் முன் வைக்கப்படுகிற 'சாத்தான்' என்கிற கருத்தாக்கத்திற்கும் யூத மற்றும் அரபு மரபில் முன்வைக்கப்படும் 'ஷைத்தான்' என்பதற்குமுள்ள நுணுக்கமான வேறுபாடுகளும் சிந்திக்கத் தக்கன. கிறிஸ்தவ உலகில் சாத்தான் என்பது கொடூரமானது, பூதாகரமான தீமையின் வெளிப்பாடு, திருக்குர்ஆனிலும் கூட 'ஷைத்தான்' என்பது இறைத்தன்மையின் எதிர்மறையாகவே குறிக்கப்பட்ட போதிலும் அது ஒரு சமாளிக்கப்படக்கூடிய தீமைதான்.*

*இறைவனின் பேரருளிலிருந்து ஷைத்தான் வீழ்ச்சியடைந்தது குறித்த திருக்குர்ஆனின் கூற்றுப்படி, இறைவன் மானுடத்தைப் படைத்த போது வானவர்கள் அனைவரையும் ஆதம் முன்பு பணியுமாறு ஆணையிட்டான். 'ஷைத்தான்' எனப்படும் இப்லீஸ் மட்டும் ஆணையை ஏற்க மறுத்ததால் இறையருகாமையிலிருந்து விரட்டப்பட்டான். கிறிஸ்தவம் இதை மன்னிக்கவே இயலாத முழுமையான ஆதிப்பாவமாகக் கருதுகிறது. திருக்குர்ஆனோ.*

> "அல்லாஹ்: நீ (இப்லீஸ்) இங்கிருந்து கீழே இறங்கிவிடு; இங்கு பெருமை அடிக்க உனக்கு உரிமை கிடையாது. நீ வெளியேறி விடு. தமக்குத் தாமே இழிவைத் தேடியவர்களில் நீயும் ஒருவனாகிவிட்டாய். இப்லீஸ்: இவர்கள் அனைவரும் திரும்ப எழுப்பப்படும் நாள் வரையிலும் எனக்கு அவகாசம் அளிப்பாயாக. அல்லாஹ்: நீ அவகாசம் அளிக்கப்பட்டவர்களில் ஒருவனவாய்." (7:13:15)

*என்று அல்லாஹ்விற்கும் இப்லீஸுக்கும் இடையிலான உரையாடலைப் பதிவு செய்கிறது. இதன்படி ஷைத்தான் இறுதி நாளில் மன்னிப்புக்குரியவனாகிறான். சூஃபிகளில் சிலர் வானவர்களிலேயே இறைவனை அதிகமாக நேசித்தது ஷைத்தான்தான் எனவும், அதனாலேயே அவன் இறைவனுக்குரிய மரியாதையை அவனது படைப்பாகிய மனிதனுக்கு அளிக்க விரும்பவில்லை எனவும் விளக்கமளிப்பது உண்டு.*

*கிறிஸ்தவ இறையியற் கோட்பாடாகிய மாபெரும் வீழ்ச்சி (Fall) என்பதை அப்படியே இஸ்லாமியம் ஏற்பதில்லை. மனிதனின் சுதந்திர*

விருப்பு (free will) தீமைகளைத் தேர்வு செய்வதாகவே அமையும் என்கிறது கிறிஸ்தவத் தத்துவம். இந்த அடிப்படையில் மனிதன் தேர்வுகளை செய்வதற்குத் தகுதியற்றவன் என்றார் புனித அகஸ்டின். இந்து மதமும் கூட மனிதனைச் சுய தருமம் பேணுகிறவனாகத்தான் கருதுகிறதேயொழிய சுய தேர்வுகளை அது அனுமதிப்பதில்லை.

ஷைத்தானின் பாவத் தூண்டலுக்கு ஆதம் ஆட்பட்டதைத் திருக்குர்ஆனும் ஏற்றுக்கொள்கிறது. எனினும் ஆதம் இவ்வாறு தனது சுதந்திர விருப்பைச் செயற்படுத்தி விலக்கப்பட்டதைத் தேர்வு செய்ததை முஸ்லிம்கள் மானுட வளர்ச்சியின் ஒரு அவசியமான நிலையாகவே (stage) கருதுகின்றனர். பாவத்தைப் புரிந்தவரான போதிலும், சாத்தானின் தூண்டுதலுக்கு ஆட்பட்டவரான போதிலும் ஆதமை முதல் இறைத் தூதராக இஸ்லாம் ஏற்றுக்கொள்கிறது. ஷைத்தானை மானுடத்தின் பேரழிப்பாளனாக அது கருதுவதில்லை.

முஸ்லிம்கள் ‘ஷைத்தான்’ என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தும் போது கிறிஸ்தவ ‘சாத்தானி’லிருந்து மொழியியல் ரீதியாக வேறுபடுகிற இந்த முக்கிய புள்ளியை நாம் மறந்துவிடலாகாது.

இடையூறு செய்யக்கூடியவன் தான் ஷைத்தான், எனினும் இறை வலிமை மனிதனை அத்தகைய இடையூறுகளிலிருந்து காக்க வல்லது என்கிற நம்பிக்கையை இஸ்லாம் கொண்டுள்ளது.

> “(நபியே) உமக்கு முன்பு நாம் அனுப்பிய எந்தத் தூதரானாலும் ஒரு விஷயம் நடைபெற வேண்டுமென அவர் விரும்பும்போது ஷைத்தான் அவருடைய விருப்பத்தில் இடையூறு விளைவிக்காமல் இருந்ததில்லை. இவ்வாறு ஷைத்தான் ஏற்படுத்தும் இடையூறுகளை அல்லாஹ் நீக்கி விடுகிறான். பின்னர் தனது வசனங்களை அல்லாஹ் உறுதிப்படுத்துகிறான். அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவன்.” (22-52)

என்பது இஸ்லாமிய இறை வாக்கு.

பாரம்பரிய பகன் வழிபாடு பன்மைத்தன்மையானது. ஏக இறைக்கொள்கை ஒற்றைத் தன்மையானது. சகிப்புத் தன்மையற்றது என்பது போலத் தோன்றிய போதும் அன்றைய அரசியல் - சமூகச் சூழலில் சிதறுண்டு கிடந்த அரபு இனத்தை வலிமையான குழுமமாக ஒன்றுபடுத்துவதற்கு ஏக இறைக்கொள்கை முஹம்மதுக்கு அவசியமாகியது. வரலாற்றில் இதுபோன்ற காட்சிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. கி.பி. 616-ல் இந்தத் தேவை முஹம்மதுக்கு ஏற்பட்டது. நவீன சூழலுக்கு உங்களின் சிறு தெய்வங்கள் பயன்படாது என்பதை இறை வாக்குகளின் துணையோடு வற்புறுத்தினார் நபிகள். “ஏக இறைவனே உங்களுக்குப் புனித நூலை அளித்தவன். உங்களில் சரியானவர்களை அவன் ஏற்பான்” என்பது இறை வாக்குகள் மூலம்

*திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டது.*

*இத்தகைய இறை ஒருமை, அதன்மூலமாக இறைப் பாதுகாப்பு என்பது முஸ்லிம் இறையியலின் அடிப்படையாக உள்ளது. இத்தகைய இறை ஒருமையை லட்சியமாக்கி ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட சுயமாகத் தன்னை உருவாக்கிக் கொள்ளுதலே ஒரு முஸ்லிமின் தொடர்ந்த முயற்சியாகிறது. "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, இல்லை என்பதற்கு நான் சாட்சியம் பகர்கிறேன்" என்று அவன் கூறுகிற போதெல்லாம் இந்த இறை ஒருமையை நோக்கி அவன் சிந்தையும் செயல்களும் குவிகின்றன. பொருள்: இந்த உலக வெற்றிகள், அவை மூலம் கிடைக்கும் ஆதாரங்கள், சுகங்கள் இவையனைத்தும் அளிக்கும் மகிழ்ச்சிகளும், இன்பங்களும் தற்காலிகமானவையே. இறுதி மகிழ்ச்சி, இறுதிப் பாதுகாப்பு, இறுதித் திருப்தி என்பது ஏக இறைமையை நோக்கிய மனக் குவிப்பே. எனது பாதுகாவலன் அல்லாஹ். அவனே எனக்குப் புனித நூலை அருளியவன். அவனே எனக்கு இறுதி நபியை நல்கியவன்.*

17

# இறையனுபவம் அழகிய திருக்குர்ஆன்

*மக்காவிலிருந்த முஸ்லிம் அல்லாதவர்களால் இழைக்கப்பட்ட அநீதிகளைத் தாங்க இயலாத முஹம்மதும் தோழர்களும் முதற் கட்டமாகக் கொஞ்சம் பேரைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைப்பது என முடிவெடுத்தனர். அருகிலிருந்த கிறிஸ்தவ நாடாகிய அபிசீனியாவின் மன்னர் நஜ்ஜாஷியிடம் புகலிடம் கேட்டுப் பார்க்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. குறைஷிகளுடன் தனக்கிருந்த சமீப காலப் பகைமையை மறந்து ஒப்புதல் அளித்தார் நஜ்ஜாஷி.*

*கி.பி. 616-ல் 83 முஸ்லிம்கள் குடும்ப சகிதமாய் அபிசீனியா சென்றடைந்தனர். அவர்களுள் முக்கியமானவர் உத்மான் இப்ன் மசூம். முஹம்மதின் மகள் ருகையா, அவரது கணவர் உத்மான் இப்ன் அஃப்பான் உட்படப் புகலிடம் சென்றவர்களில் அடக்கம். அபுஜஹ்ல் விதித்த வணிகத் தடைகளுக்கு எதிராகத் தெற்கு நோக்கிய ஒரு வணிகப்பாதையை உருவாக்கும் முயற்சியாகவும் நபிகள் இதனைச் செய்தனர்.*

*அபுபக்ருக்கும் நபிகளுக்கும் உள்ள நெருக்கத்தைக் கண்டு சற்றே வெறுப்புற்றதாலேயே உத்மான் இப்ன் மசூமும் உபைதுல்லா இப்ன் ஜஹ்ஷிம் மக்காவை விட்டு வெளியேறினர் என்றொரு கருத்தும் உண்டு. அபிசீனியாவிலிருந்தபோது உபைதுல்லா கிறிஸ்தவத்திற்கு மாறினார். ஆனால் உத்மானோ மக்கா திரும்பிய பிறகும் கூட நபிகளின் தோழராகவே விளங்கினார்.*

*மக்காவிலிருந்த குறைஷிகள் சும்மா இருக்கவில்லை. இருமுறை தூதுவர்களை அனுப்பி முஸ்லிம்களைத் திருப்பி அனுப்புமாறு நஜ்ஜாஷியை வேண்டினர். மக்காவிலுள்ள குறைஷிகளின் இறை நம்பிக்கையை முஸ்லிம்கள் இழிவு செய்து, சமூகத்தைச் சிதைத்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டது. புகலிடம் வந்தவர்களை அழைத்து மன்னர் நஜ்ஜாஷி விசாரித்தார். அபுதாலிபின் மகன் ஜஅஃபர் இதற்கு பதிலளித்தார். உண்மைதான். இறைவனின் திருத்தூதரே முஹம்மது என்பதைச் சொன்ன அஃபர் திருக்குர் ஆனிலிருந்து மேற்கோள் காட்டிக் கீழ்வருமாறு ஓதினார்:*

"நபியே! இப்புனித நூலில் மரியம் பற்றி நினைவு கூர்வீராக. தம்

குடும்பத்தினரை விட்டுக் கிழக்கிலுள்ள ஓர் இடத்திற்கு அவர் ஒதுங்கிச் சென்றபோது அவர்களை விட்டு ஒதுங்கி ஒரு திரையிட்டுக்கொண்டார். அப்போது அவரிடம் ரூஹ் (வானவரை) அனுப்பினோம். (அவரைக் கண்டவுடன்) 'நான் அளவற்ற அருளாளரிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். இறையச்சம் உடையவராயின் இங்கிருந்து சென்றுவிடும்' என்றார் மர்யம்.

அவர், 'தூய ஆண் குழந்தை ஒன்றை அல்லாஹ்விடமிருந்து உனக்கு நன்கொடையாக அளிக்க வந்த இறைத்தூதன் நான்' என்றார்.

மர்யம், 'எந்த மனிதரும் தீண்டாத நிலையிலும், நடத்தைத் தவறியவளாக இல்லாத நிலையிலும் எவ்வாறு எனக்குக் குழந்தை உண்டாகும்?' என்றார்.

'அது அப்படித்தான். அது எனக்கு மிகவும் சுலபமானதே. அக்குழந்தை மனிதர்க்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், நமது அருட்செயலாகவும் இதைச் செய்கிறோம். இது தீர்ப்பாக்கப்பட்ட காரியம்' என இறைவன்சொல்கிறான் என்றார் வானவர். பின்னர் மர்யம் ஏசுவைக் கருவுற்றார்.

*திருக்குர்ஆனின் அழகிய வசனங்கள் நஜ்ஜாஷியை உருக்கின. அவர் தாடி முழுவதும் நனையும் அளவிற்கு அவரது கண்களிலிருந்து நீர் பெருகத் தொடங்கியது. அருகிலிருந்து துறவியர், அமைச்சர்கள் அனைவரும் கண்ணீர் பெருக்கத் தொடங்கினர்.*

*எப்படியாயினும் திருக்குர் ஆன் கிறிஸ்துவின் இறைமைப் பண்மை ஏற்கவில்லை என்றெல்லாம் தூதர்கள் சொல்லிப் பார்த்தனர். எனினும் முஸ்லிம்களைத் திருப்பி அனுப்ப இயலாது என்பதை நஜ்ஜாஷி உறுதியாகச் சொன்னார். அபிசீனியக் கிறிஸ்தவர்களில் ஒரு சிலரின் எதிர்ப்பையும்கூட நஜ்ஜாஷி மன்னர் பொருட்படுத்தவில்லை.*

*இங்கே மக்காவில் திருக்குர்ஆன் அருளப்படுவது குறித்து கடுமையான எதிர்க் கருத்துக்களை அபூஜஹ்ல் பிரச்சாரம் செய்தான். குறைஷி சமூகத்தின் இன்னும் முக்கியமானப் பலரும் இருக்க, இறைவன் ஏன் முஹம்மது போன்ற ஒரு எளியவரைத் தேர்ந்தெடுத்தார்? ஒரு வானவர் மூலமாகவே தம் செய்தியை அனுப்பியிருக்கலாகாதா? சினாய் மலையில் ஒரே வீச்சில் மோசசுக்குப் புனிதநூல் இறக்கப்பட்டது போல முஹம்மதிற்கும் இறக்கப்படாமல் கொஞ்சம் கொஞ்சமாக அருளப் படுவது ஏன்? - என்றெல்லாம் கேள்விகள் எழுப்பினான்.*

*கி.பி. 616-ல் கஅபாவில் புனித யாத்திரை நடந்து கொண்டிருந்த போது அரபு நாட்டின் எல்லாத் திசைகளிலிருந்தும் மக்காவிற்கு யாத்ரீகர்கள் வந்த வண்ணமிருந்தனர். நகரத்தின் ஒவ்வொரு நுழைவாயிலிலும் தனது ஆட்களை நிறுத்தினான் அபுஜஹ்ல். உள்ளே நுழையும் யாத்ரீகர்களை*

*நிறுத்தி முஹம்மதை அவதூறு செய்தார்கள் அவர்கள். முஹம்மது குறித்த எச்சரிக்கையும் செய்யப்பட்டது. யாத்ரீகர்களாக வந்தவர்களுள் அல்-துஃபாய்ல் இப்ன் அம்ர் என்றொரு கவிஞர். ட்க்ஷிவ்ஸ் எனப்பட்ட மேற்குத் திசை இனக்குழு ஒன்றைச் சார்ந்தவர் அவர். முஹம்மது பற்றிய எச்சரிக்கைகளைக் கேட்டு அச்சமுற்ற கவிஞர் தன் காதுகளைப் பஞ்சால் அடைத்துக் கொண்டார். முஹம்மதின் கவர்ச்சி மொழிகளுக்குத் தான் மயங்குவதில்லை என உறுதி செய்து கொண்டார். கஅபாவில் நுழைந்தவுடன் முஹம்மது அங்கே தொழுது கொண்டிருந்ததை அவர் காண நேரிட்டது. குற்ற உணர்வால் அவர் உடல் சில்லிட்டது.*

*“இறைவன் என்னை ஆசீர்வதிக்கட்டும். நான் விவரமானவன். கவிஞன், சுய சிந்தனை எனக்குள்ளது. நன்மையையும் தீமையையும் பிரித்தறியத் தெரிந்தவன் நான். இந்த மனிதர் கூறுவதைக் கேட்பது எப்படித் தவறாக இயலும்? நன்மையாயின் ஏற்றுக்கொள்வோம். கெட்டதாயின் சட்டென மறப்போம் என்று கூறிய துஃபாயில், காதுகளில் இருந்த பஞ்சைத் தூக்கி எறிந்துவிட்டு நபிகளை அணுகினார். அவர் தனது இறை மதத்தைக் கவிஞருக்கு விளக்கினார். பின்னர் குர்ஆனை ஓதினார். வியப்பால் உறைந்த துஃபாயில், “அல்லாஹ்! இதைவிட அழகியதும் நீதியானதுமாக நான் இதுவரை எதையும் கேட்டதில்லை” என்று ஆரவாரித்தார். ஊர் திரும்பிய கவிஞர் தனது குலத்தைச் சேர்ந்த எழுபது குடும்பங்களை முஸ்லிம்களாக்கினார் என்பது வரலாறு. திருக்குர்ஆனின் அழகின் முன் அபுஜஹ்ல் போன்றோர் விதித்த தடைகள் காதில் பொதிந்த பஞ்சுகளாய் சிதைந்தன.*

*ஒருநாள் குறைஷிகள் ஒரு புதுத்தந்திரத்தை மேற்கொண்டனர். உத்பா இப்ன் ரபிபீயா என்பவரை அனுப்பி முஹம்மது தனது ஏக இறைப் பிரச்சாரத்தை நிறுத்தி விட்டுச் சும்மா இருந்தால் அவருக்கு வேண்டிய பணம், பதவி ஆகியவற்றைத் தரத் தயார் எனப் பேரம் பேசினர். மக்காவின் மன்னராக வேண்டுமானாலும் முஹம்மது முடிசூட்டிக் கொள்ளலாம் எனவும் பேரம் பேசப்பட்டது. உத்பா சொல்லி முடிக்கும் வரை காத்திருந்த முஹம்மது நபிகள், ‘கவனி’ என்று கூறிவிட்டு திருக்குர்ஆனின் 41-ம் அத்தியாயத்தை ஓதத் தொடங்கினார்.*

> “இது அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடைய இறைவனிடமிருந்து இறக்கியருளப்பட்டது... (இது) அறிவுள்ள மக்களுக்கு நற்செய்தி சொல்லக் கூடியதும் எச்சரிக்கை செய்வதாகவும் உள்ளது. ஆனால் இந்த மக்களில் பெரும்பாலோர் (இதனைப்) புறக்கணித்து விட்டனர். மேலும் அவர்கள் செவிமடுப்பதுமில்லை.
>
> அவர்கள் கூறுகின்றனர்; “எதன் பக்கம் நீர் எம்மை அழைத்துக் கொண்டுள்ளீரோ (அதன்புறம் நோக்காதபடி) எம் உள்ளங்கள் உறையிடப்பட்டுள்ளன, எம் காதுகள் செவிடாகியுள்ளன. எமக்கும்

உமக்கும் இடையே ஒரு திரை விழுந்துள்ளது. நீர் உம் பணியைச் செய்யும். நாம் எம் பணியைச் செய்வோம்." நபியே! கூறும்: நான் ஒரு மனிதன் தான். உம்மைப் போன்றவனே. வஹீயின் மூலம் எனக்கு அறிவிக்கப்படுகிறது. 'உம் இறைவன்' ஒருவனே. அவனது திசையிலேயே நிலை கொள்ளுங்கள். அவனிடம் மன்னிப்புக் கோருங்கள்." (41:1-6)

*இறுக்கப்பட்ட இதயங்கள், பஞ்சடைத்த காதுகள் ஆகியவற்றிற்கும் அவற்றைத் துளைக்கவல்ல தமது ஆற்றலுக்குமிடையிலான உறவு குறித்துத் திருக்குர்ஆன் அடிக்கடி கூறுகிறது. ஓதி முடித்து முஹம்மது விழுந்து தொழத் தொடங்கியதைக் கண்ட உத்பாவிற்கு உடல் அதிர்ந்தது. எனினும் அவர் முஹம்மதோடு தொழவில்லை. அவர் திரும்பி வந்ததைக் கண்ட குறைஷியர்களுக்கு அவர் ஒரு அதிர்ச்சிகரமான அனுபவத்தைச் சந்தித்துள்ளது மட்டும் புரிந்தது.*

*குர்ஆனின் அழகிய வசனங்கள் உத்பாவை நிலை தடுமாற செய்திருந்தன. குர்ஆனைக் கேட்ட அனுபவத்தை அவரால் விவரிக்க இயலவில்லை. அது என்னவாக இருந்தது என்று சொல்வதைக் காட்டிலும் என்னவாக எல்லாம் அது இல்லாதிருந்தது என்றே அவரால் சொல்ல முடிந்தது. அது வெறும் அறிவு உரைக்கும் அற வெளிப்பாடாகவும் இல்லை. அது ஒரு கூர்ந்த பார்வையற்ற வெற்று அசரீரியாகவுமில்லை. "அந்த மனிதரை விட்டுவிடுங்கள். நான் செவியுற்ற அச்சொற்கள் உலகை ஆளும்" என்றார் உத்பா (இப்ன் இஷ்ஹாக். பக். 132-3).*

*இன்றும் நாம் குர்ஆனை வாசிக்கும்போது அதன் இலக்கிய அழகு நம்மை அள்ளுகிறது. மொழியாக்கங்கள் வழி பயிலுவதைக் காட்டிலும் மூல மொழியில் வாசித்தால் எப்படி இருக்கும் என்கிற ஏக்கத்தை ஏற்படுத்துகிறது.*

*திருக்குர்ஆனை ஓதும்போதும், திருக்குர்ஆன் வசனங்களால் அழகு செய்யப்பட்ட உயர்ந்த சுவர்களடங்கிய மசூதியில் அமர்ந்துள்ள போதும் விளக்க இயலாத ஒரு இறையுணர்வைத் தாம் அனுபவிப்பது குறித்து முஸ்லிம்கள் கூறக் கேட்டுள்ளேன். இறைவனின் 'வார்த்தை' ஆகிய ஏசு எப்படி கிறிஸ்தவ நம்பிக்கையின் மய்யமாக உள்ளனரோ அதுபோலவே திருக்குர்ஆன் என்பது இஸ்லாமிய இறை அனுபவத்தின் மய்யப்புள்ளியாக அமைகிறது. இந்திய மரபில் வந்த ஒருவருக்குத் 'தியானம்' அளிக்கும் அனுபவம் போல ஒவ்வொரு முஸ்லிமுக்கும் திருக்குர்ஆன் ஓதுதலின் மூலம் இறையனுபவம் வாய்க்கிறது. கூடித் தொழுவதன் மூலம் அந்த உன்னத இறையனுபவம் ஒப்புயர்வற்ற சமூக அனுபவமாகவும் சக மனித நேயமாகவும் மலர்கிறது.*

*சொந்தச் சமுகத்தினராலேயே இறைத் தூதராக ஏற்றம் பெறாது அவர்களால் துன்புறுத்தப்பட்டுத் துரத்தப்பட்ட வாழ்வை ஏற்றவர் நபிகள்.*

எனினும் அவரது இறை இயக்கச் செயற்பாடுகள் தொடர்ந்து பின்னடைவுகளையே சந்தித்துக் கொண்டிருந்தன எனச் சொல்ல இயலாது. அபிசீனியாவுக்குச் சிலரை அனுப்பியதாகட்டும், மதீனாவிற்குப் புலம் பெயர்ந்ததாகட்டும் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கின் பல்வேறு நிலைகளே அவை. புலம் பெயர்ந்த மதீனா வாழ்வில் அவரது அரசியற் சாதுர்யங்களும் போர்த் திறமைகளும் வெளிப்பட்டன. அவை அரேபியாவை மட்டுமன்றி உலக வரலாற்றையே மாற்றியமைத்தன. சமூக நீதி மிக்க ஒரு சமநிலைச் சமுதாயத்திற்கு வழியமைத்தன. தேவை ஏற்படின் அதற்காக அவர் எத்தகைய துயரங்களையும் எதிர்கொள்ளத் துணிந்தார். வாளேந்தவும் அவர் தயங்கியதில்லை. நீதிக்கான புனித யுத்தங்களைக் கண்டு அவர் ஒதுங்கியதில்லை.

சிலுவையில் தொங்கிய ஏசு என்கிற பிம்பத்துடன் கட்டமைக்கப்பட்ட மேலைச் சமூகம் இறுதி இறைத்தூதரின் இந்தப் பரிமாணத்தைச் செரித்துக் கொள்ள இயலாமல் இன்றுவரை சிரமப்படுவதை நாம் அறிவோம். உடலை வருந்திய தனிமைத் தவம், யோகம் ஆகியவற்றின் மூலம் இறுதி விடுதலை அடைதல் என்கிற கீழைத் தேய மரபும் கூட வாளேந்திய இறைத் தூதரைச் சகித்துக்கொள்ள இயலாதுதான். எனினும் சக்கரமேந்திப் பொய்கள் உரைத்தும் தந்திரங்கள் செய்தும் எதிரிகளை நிர்மூலம் செய்த கீதாசாரியனை ஏற்கும் இந்து மரபு ‘ஜிஹாத்’தைக் கேலி செய்வதும், வெறுத்து ஒதுங்குவதும் வேடிக்கை.

இறைமை என்பது தன்னை வருத்திக்கொள்வது மட்டுமன்று. இறைவன் அருளிய இவ்வுலக இன்பங்கள், கொண்டாட்டங்கள் அனைத்தையும் துறப்பதுமன்று. கண் முன் நடக்கும் சமூக அநீதிகளைக் கண்டும் காணாமல் அற உபதேசம் செய்து கொண்டிருப்பதும் அன்று. ‘அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே, கொல்லாதே, திருடாதே...’ என்றெல்லாம் மட்டும் எதிர்மறை உபதேசம் *(Negative Ethics)* செய்து கொண்டிருப்பதுமன்று. இவ்வுலகில் ஒரு சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க என்ன செய்யவேண்டும் என்றும் *(Positive Ethics)* அது உரைத்தாக வேண்டும். இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் நபிகள் நாயகம்.

வேதங்களையும் வருணாசிரமத்தையும் வேள்விகளையும் எதிர்த்தெழுந்த புரட்சிகர மதமான பவுத்தத்தை நிறுவிய புத்த பகவன் தன் கண்முன் தனது சமூகம் அழிக்கப்பட்டுப் பேரரசு ஒன்றால் உள் வாங்கப்படுவதை பார்த்துக் கொண்டு மட்டுமே இருக்க நேர்ந்ததை முன்பே குறிப்பிட்டுள்ளேன். ஆனால் நபிகளின் பாதை வேறாக இருந்தது.

# 18 வாளேந்திய இறைத்தூதர்

'ரோமன் தியாக மரபியல்' எனும் நூல் கிறிஸ்துமஸ் நாள் பற்றிச் சொல்ல வரும் போது 'உலகமெங்கும் அமைதியிலாழ்ந்திருந்தபோது' கிறிஸ்து பிறந்தார் என்று கூறும். நபிகளுக்கு இத்தகைய பேறு வாய்க்கவில்லை என்றே கூறவேண்டும். குழப்பமும், போரும், அமைதியன்மையும், அறியாமையும் ('ஜாஹிலியா') தலைவிரித்தாடிய போதில் பிறந்தவர் நபிகள். அவரது தொடக்க காலச் செயற்பாடுகளிலும் பிரச்சாரங்களிலும் அரசதிகாரம் நோக்கிய குறிப்புகள் ஏதும் தென்படுவதில்லை. சமூக நீதி, சமநிலைச் சமுதாயம் ஒன்றைச் சமைத்தல் என்தைத் தாண்டி அவர் எதையும் பேசவில்லை. எனினும் மதீனாவிற்குப் புலம் பெயர்ந்த பின் எதிர்கொண்ட நிகழ்வுகள் அரசியலதிகாரத்தை நோக்கி அவரை இட்டுச் சென்றன.

இனக்குழுக்கள் தமக்கிடையே சதா போரிட்டுக் கொண்டிருக்கும் தகைமையற்ற ஒரு சமநிலைச் சமூகம் என்பது அவர் மக்காவிலேயே கண்ட கனவுதான் என்ற போதிலும், அதற்கான அரசியல் தீர்வு குறித்த சிந்தனை மதீனா வாழ்விலேயே உருப்பெற்றது. முழுமையான நில மானியச் சமூகமாகக் கூட உருப்பெற்றிராத அன்றைய சூழலில் இந்த அரசியல் தீர்வு தவிர்க்க இயலாதவாறு மதவழிப்பட்டதாகவே இருந்தது.

எனினும் 'ஹிஜ்ரத்'தைத் தொடங்கியபோது இதுகுறித்த தீர்மானகரமான பார்வையோ, தெளிவானத் திட்டமோ முஹம்மதிடம் கிடையாது. எந்தப் பெரும் அரசியல் திட்டங்களுடனும் அவர் களத்தில் இறங்கவில்லை. அவர் எதிர்கொண்ட நிகழ்வுகளின் எதிர் விளைவாகவே அவரது செயற்பாடுகள் படிப்படியாக விரிந்தன. சிதைந்து வீழ்ந்து கொண்டிருக்கும் பழைய ஒழுங்கிற்கு மாற்றான புதிய உலகு குறித்துத் தீர்க்கமான சிந்தனைகள் விரைவில் உருப்பெற்றன. எல்லாச் செயற்பாடுகளிலும் ஏக இறைவனே அவரது முதல் முன்னுரிமையாக அமைந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மதீனாவிற்குப் புலம் பெயர்ந்ததற்குப் பின் நபிகளின் செயற்பாடுகள் அரசியல் தன்மை பெறத்தொடங்கியதற்கு இணையாகத் திருக்குர்ஆனின் தொனியும் மாறத் தொடங்குகிறது. கவிதைகளுக்கே உரித்தான ஒருமையின்மை, வார்த்தைகளுக்கு வயப்படாத உண்மைகளை

உரைநடைக்குரிய சரளமற்று வெளிப்படுத்தல் என்கிற தன்மைகளெல்லாம் போய் மிகவும் நடைமுறை சார்ந்த உரைநடையாய், தெளிவான சட்ட வரைவுகளாய், அரசியல் நிகழ்வுகள் மீதான கூரிய விமர்சனக் கூற்றுகளாய்த் திருக்குர்ஆன் வெளிப்படத் தொடங்குகிறது. இதன் பொருள் குர்ஆனின் இறையியற் கூறுகள் குறையத் தொடங்குகின்றன என்பதல்ல. புனித குர்ஆனின் எந்த ஒரு இறை வசனத்தின் அடிநாதமாகவும் இறையியலே அமைந்துள்ளது என்று உறுதிபடச் சொல்ல இயலும். ஏக இறைவனையும் அவன் மீதான நம்பிக்கையையும் மய்யமாகக் கொண்டு திருக்குர்ஆன் நகர்ந்து செல்கிறது.

புனிதப் போரில் (ஜிஹாத்) இறங்குமாறு மதீனாவிலுள்ள முஸ்லிம்களைத் திருக்குர்ஆன் வற்புறுத்துவது உண்மைதான். ‘ஜிஹாத்’ என்பது போரையும், கொலையையும், ரத்தப் பெருக்கையும் உள்ளடக்கியதுதான். ஆனால் ‘ஜ்ஹ்த்’ எனப்படும் (jhd) அரபு வேர்ச் சொல்லின் பொருள் வெறும் ‘புனிதப்போர்’ என்பதைக் காட்டிலும் ஆழமான அர்த்தங்களைக் கொண்டது. ஆயுதமேந்திய மோதல்களைச் சுட்டுவதற்கு ஏராளமான சொற்கள் அரபு மொழியில் உண்டு. ‘ஹார்ப்’ (யுத்தம்), ‘சிர்ஆஆ’ (சண்டை), ‘மஅராக்கா’ (பொருதல்), ‘கிடால்’ (கொல்லுதல்) முதலியன அவற்றில் சில.

வெறும் போரைக் குறிப்பிடுவதுதான் திருக்குர்ஆனின் நோக்கம் எனில் மேற்குறித்த சொற்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்திருக்கக்கூடும். ஆனால் தெளிவற்ற அதே சமயத்தில் பல்வேறு வளமான அர்த்த சாத்தியங்களுள்ள ‘ஜிஹாத்’ எனும் சொல் தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. ‘ஜிஹாத்’ என்பது இஸ்லாத்தில் அய்ந்து தூண்களில் ஒன்று அல்ல. இஸ்லாமிய மதவியலின் மையக்கூறும் ‘ஜிஹாத்’ அல்ல.

ஆனால் மேலைத் தேயத்திலும் கீழைத் தேயத்திலுமுள்ள இஸ்லாமிய வெறுப்பாளர்கள் ‘ஜிஹாத்’ குறித்த நேர்மாறான கருத்தையே தமது மூளைகளில் நிரப்பியுள்ளனர். ‘இஸ்லாமின் வெறி’ (Rage of Islam), ‘இஸ்லாமின் வாள்’ (Sword of Islam), ‘பரிசுத்த வெறி’ (Sacred Rage), ‘புனித பயங்கரம்’ (Holy Terror) என்றெல்லாம் அவர்களின் தொலைக்காட்சி மற்றும் திரைப்படச் சொல்லாடல்கள் விரிவதை நாம் அறிவோம். நேரடியான இத்தகைய சொற் பிரயோகங்கள் இல்லை எனினும் மணிரத்னம், அர்ஜுன், விஜயகாந்த் முதலியோர் பங்குபெறும் தமிழ்த் திரைப்படங்களில் இத்தகைய தொனி ஒலிப்பதை நாம் உணர முடியும். ‘இஸ்லாமியத் தீவிரவாதிகள்’ (ஜிஹாதிகள்) குழந்தைகள் செல்கிற பேருந்து ஒன்றை வெடி வைத்துத் தகர்ப்பது போன்ற காட்சிகளைத் தமிழ் திரைப்படங்களில் நாம் பார்த்துள்ளோம்.

இஸ்லாத்தைப் பொருத்தமட்டில் அறவியல், இறையியல், அரசியல் எனச் சகல தளங்களிலும் ஒரு நல்ல முஸ்லிம் போராட வேண்டியவனாகவுள்ளான். ஏழைகளும், பலவீனமானவர்களும்

*சுரண்டப்படாத, கடவுள் எவ்வாறு மனிதர்கள் வாழ வேண்டும் என நினைத்தானோ அது போலவே மனிதர்கள் வாழ்கிற, நீதியும் சமத்துவமும் நிலவுகிற ஒரு சமநிலைச் சமுதாயத்தை இம் மண்ணில் படைப்பதற்காக ஒரு முஸ்லிம் இவ்வாறு சகல களங்களிலும் போராட வேண்டியவனாக உள்ளான். போரொன்று முடிந்துத் திரும்பி வரும்போது சின்ன "'ஜிஹாத்'தில் இருந்து பெரிய 'ஜிஹாத்'திற்குத் திரும்பியுள்ளோம்" என நபிகள் கூறினர் என ஒரு ஹதீஸ் உரைப்பதை முஸ்லிம்கள் அறிவர். இன்னும் தந்திரமான, வெல்வதற்குக் கடினமான எதிரி நம் ஒவ்வொருவருள்ளும், நம் ஒவ்வொரு சமூகத்திற்குள்ளும் உள்ளனர். அவர்களை வெல்வது இன்னும் பெரிய காரியம், இன்னும் பெரிய ஜிஹாத் அதற்குத் தேவையாக உள்ளது என்பதே அக்கூற்றின் பொருள்.*

*நீதிக்கான ஒரு போரை குர்ஆன் வலியுறுத்தத் தயங்குவதில்லை. புகல் வந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறிய மதீனாவின் உதவியாளர்கள் இரண்டாவது அகாபாவின்போது போர் உறுதி எடுத்ததை முன்பே பார்த்தோம். அகாபாவிலிருந்து மக்காவிற்குத் திரும்பியவுடன் புகலிடம் செல்லும் அகதிகளுக்குப் போர் செய்யும் உரிமையை அளிக்கும் அருட்செய்தி ஒன்றும் நபிகளுக்கு இறங்கியது.*

> " 'இங்கிருந்து அனைவரும் இறங்கிவிடுங்கள்! என்னிடம்மிருந்து உங்களுக்கு நேர் வழி வரும்போது எனது நேர் வழியைப் பின் பற்றுவோருக்கு எந்த அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்' என்று கூறினோம்.
>
> '(நம்மை) மறுத்து நமது வசனங்களைப் பொய்யெனக் கருதியோர் தாம் நரகவாசிகள். அதில் நிரந்தரமாக இருப்பார்கள்' (என்றும் கூறினோம்.) இஸ்ராயீலின் மக்களே! உங்களுக்கு நான் வழங்கிய அருட்கொடையை எண்ணிப் பாருங்கள். என் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். உங்கள் உடன்படிக்கையை நான் நிறைவேற்றுவேன். என்னையே அஞ்சுங்கள்". (2:38-41)

*என்கிற இறை வாக்கு இதை உறுதி செய்கிறது. நாம் நம்மைக் காத்துக் கொள்ளாவிட்டால், அதற்கான முயற்சி மேற்கொள்ளாவிட்டால் மட்டுமின்றி நமது நம்பிக்கைகளும் அழிந்துவிடும் என்கிற இறுதி நிலையிலேயே ஜிஹாத் பரிந்துரை செய்யப்படுவது கவனிக்கத்தக்கது. அப்போதும் கூட குறைஷிகளால் துரத்தப்பட்டு வீடு வாசல்கள் இழந்து புகல் வந்த அகதிகளுக்கு மட்டுமே அது பரிந்துரைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.*

*மதீனாவிலுள்ள உதவியாளர்களுக்கும் மக்காவுக்கும் நேரடிப் பகை ஏதுமில்லை என்பதால் அவர்களுக்கு அனுமதியில்லை. மக்கா மீதான இறுதிப் பெரும் யுத்தம் எதுவும் இங்கே பரிந்துரை செய்யப்படவில்லை என்பதும் சிந்திக்கத்தக்கது. தற்காப்பு மற்றும் தற்காலிகமான*

சிறுதாக்குதல்களே இங்கே மனங்கொள்ளப்படுகின்றன.

வணிகக் குழுக்கள் மீதான சூறைத் தாக்குதலுக்கே இந்த அனுமதி வழங்கப்படுகிறது. பஞ்ச காலங்களின் இயல்பான நடைமுறையாக அன்று அரபு நாட்டில் இருந்த வழமை அது. அங்கு மட்டுமின்றி இந்தியாவிலும், இங்கிலாந்திலும் கூட இவ்வாறு பஞ்ச காலங்களில் பிரபுக்களின் சேமிப்புகள் கொள்ளையடிக்கப்பட்டு பகிர்ந்து கொள்ளப்பட்டமை குறித்து மார்க்சிய அறிஞர்கள் விரிவாக எழுதி உள்ளனர். உணவுக் கலவரங்கள், உணவுக் கொள்ளைகள் என இவற்றைக் குறிப்பர்.

அரேபியாவில் அன்று வழமையிலிருந்த இத்தகைய சூறைத் தாக்குதல்களைத் தனியார் யுத்தங்கள் (Private Wars) எனக் குறிப்பார் அறிஞர் மாக்ஸிம் ரோடின்சன். 'கஸுஃ' என அரபியர்கள் இதனைக் குறிப்பர். அரசு குறித்தக் கருத்தாக்கம் விளங்காத சமூகம் அது. எந்த ஒரு சிறு குழுத்தலைவனும் தனது ஆட்களைத் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏவக்கூடிய சூழல் அன்றிருந்தது. விளைவுகளைச் சந்திப்பதற்கு அவன் தயாராக இருக்க வேண்டும் என்பது தவிர அவன் தனது முடிவுக்கு யாருக்கும், எதற்கும் பொறுப்பல்ல. எனவே அறவியற் காரணங்கள் தவிர வேறெந்த நியாயமும் முஹம்மது நபிகள் இத்தகைய சூறைத் தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தடையாக அன்று இல்லை.

புலம் பெயர்ந்து வந்திருந்த முஸ்லிம்கள் அனைவரும் வணிகர்கள், வங்கித் தொழில் செய்திருந்த நிதியாளர்கள். வாழ வழியற்று இங்கு அடைக்கலம் புகுந்திருந்த இவர்களுக்குப் பேரீச்சை விவசாயத்தின் அரிச்சுவடி கூடத் தெரியாது. எவ்வளவு காலம்தான் அவர்கள் மதீனத்து உதவியாளர்களை நம்பிக் கொண்டிருக்க முடியும்? சமுதாயத்திற்குச் சுமையாகச் சும்மா இருக்க இயலும்? மக்காவைப் போல இங்கே வணிகம் புரிவதற்கான வாய்ப்பும் கிடையாது. இருந்தாலும் மிகக் குறைவே. மக்காவே வணிகத்தை ஏக போகமாக்கிக் கொண்டிருந்தது.

நாடோடி வாழ்வில் கையகப்பட்ட சொத்துக்கள் நேர்மையாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டு ஓரிடத்தில் குவியாமல் சுழன்று பயன்படுகிற வழிமுறைகளில் ஒன்றாக இத்தகைய சூறைப் போர்கள் அமைந்தன. சூறையாடுபவர்கள் 'எதிரி'களின் வணிக அணிவகுப்பையோ, இனக்குழு இருப்பிடங்களையோ திடீரெனத் தாக்கி அவர்களின் ஒட்டகங்கள், ஆடு மாடுகள், வணிகப் பொருட்கள் ஆகியவற்றைக் கொள்ளை கொள்வர்.

சங்க காலத்தில் நமது தமிழ்க் குறுநில மன்னர்கள் மேற்கொண்ட 'ஆநிரை கவர்தல்' போல சூறைப்போர்களின் ஒரே நிபந்தனை அதிக ரத்தம் சிந்தலாகாது என்பதே. அப்படியாயின் ஒருவகைச் சொத்துப் பகிர்வு, உள்ளூர் அற வடிவம் என்பதைத் தாண்டிப் பழிக்குப் பழி என்கிற நிலையை எடுத்துத் தொடர்ச்சியான ரத்தக் களறிக்கு அது வழி வகுக்கும். கஸுஃக்களில் இதற்கு இடமில்லை. மக்காவிலிருந்து வரும் வணிகக்

குழுக்களைத் தாக்கிக் கொள்ளையடிப்பதற்கு ஏற்ற வாய்ப்பான இடமாக அமைந்திருந்தது மதீனா. மிகச் சிறு எண்ணிக்கையிலான வணிகர்களின் குழுவாக மட்டுமே சிரியா வரை மக்கா நகர வணிகர்கள் சென்று வந்து கொண்டிருந்தனர். அப்படித்தான் கி.பி. 623-ல் ஒரு நாள் புலம் பெயர்ந்தவர்களிலிருந்து இரு குழுக்களை அமைத்து மக்காவிலிருந்து சென்று கொண்டிருந்த வணிகக் குழுக்கள் மீது தாக்குதல் தொடுக்குமாறு ஆணையிட்டார் நபிகள் நாயகம்.

19

# நீதிக்கான போர்: ஒடுக்குமுறையை எதிர்ப்பதே

*முதற்கட்டச் சூறைத் தாக்குதல்களில் நபிகள் நேரடியாகப் பங்கு பெறவில்லை. குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவிற்கு லாபகரமான தாக்குதல்களாகவும் இவை அமையவில்லை. ரத்தம் பெருக்கெடுத்தோடிய பெரும் போர்களல்ல இவை. எனினும் மக்கா நகரத்துக் குறைஷியர் மத்தியில் இவை சொல்லொணா எரிச்சலையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தவே செய்தன. அவர்கள் மிகவும் எச்சரிக்கையோடு தமது வணிகப் பயணங்களை அமைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பாதுகாப்பான வணிகப் பாதையாகக் கருதப்பட்ட செங்கடற்கரை ஓரம் வசித்திருந்த பெதோய்ன் பழங்குடியினரை முஸ்லிம்களின் இத்தாக்குதல்கள் ஈர்த்தன. முக்கிய நிலைகளில் வசித்த பழங்குடிகளுடன் முஸ்லிம்கள் சில முக்கிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கு இந்த முதற்கட்டத் தாக்குதல்கள் வழிவகுத்தன. செப்டம்பர் 623-ல் உமையாவின் தலைமையில் பெரும் வணிகக் குழு ஒன்று வருவதை அறிந்த நபிகள் இம்முறை தாக்குதலுக்குத் தானே தலைமை ஏற்றுச் சென்றார். 200 முஸ்லிம்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். எனினும் இம்முறையும் போர் ஏதும் நிகழவில்லை.*

*624 ஜனவரியில் புனித ரஜப் மாதத்தில் நடைபெற்ற ஒரு தாக்குதல் இங்கே குறிப்பிடத்தக்கது. அது மழைக்காலம். மழை நேரங்களில் குறைஷிகள் மதீனா வழி செல்வதில்லை. ஏமனை நோக்கித் தெற்குத் திசையில் செல்வர். தெற்கு நோக்கிய பாதையும் கூட ஆபத்தற்ற ஒன்று எனக் குறைஷிகள் கருதலாகாது என்று நினைத்தவர் போல அப்துல்லாஹ் இப்ன் ஜஹ்த் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட சூறைப் படை ஒன்றை அத்திசையில் அனுப்பினார் முஹம்மது. தாக்குதல் குறித்த அறிவுறுத்தல்களை முத்திரையிட்ட உறை ஒன்றில் பொதிந்து தந்த நபிகள் இரண்டு நாள் பயணம் முடிந்த பின்பே எடுத்துப் படிக்க வேண்டும் என ஆணையிட்டார். தவிரவும் இம்முறை மக்காவை மிக நெருக்கமாக அண்மிப்பதால் ஆபத்துக்கள் அதிகம். எனவே கூட வரும் தோழர்களை எந்த முடிவையும் நோக்கி வற்புறுத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.*

*கடிதத்தில் என்ன கண்டிருந்தது என்பது குறித்து இருவேறு தகவல்களுள்ளன. இப்ன் இஷ்ஹாக்கின் கூற்றுப்படி மக்காவிற்கும்*

தய்ஃபிற்கும் இடையில் இருந்த நக்லாஹ் வரை சென்று அவ்வணிகக் குழுவை வெறுமனே உளவறிய வேண்டும் என்று மட்டுமே கடிதத்தில் கண்டிருந்தது. ஆனால் முஹம்மதின் போர்களைப் பற்றி எழுதியுள்ள வரலாற்றாசிரியர் வாஹிதி நக்லாஹ்வுக்குச் சென்று குறைஷிகளைத் தாக்கு மாறு அக்கடிதத்தில் ஆணையிடப்பட்டு இருந்தது என்கிறார். அதாவது முஸ்லிம்கள் புனித மாதத்தில் சண்டையிடக்கூடாது என்கிற விதியை மீறித் தாக்க வேண்டும் என்றாகிறது. எந்தப் பழைய பகன் இணை வைப்பு வழிபாடுகளை முஹம்மது கண்டித்தாரோ அந்த வழிபாட்டு நெறியின் அடிப்படையிலேயே இந்தப் புனித மாதங்கள் வரையறுக்கப் பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அப்துல்லாஹ்வுடன் சென்றவர்களில் இருவர் வழியிலேயே தமது ஒட்டகங்களைத் தொலைத்துவிட்டு அவற்றைத் தேடிச் சென்றனர். மீதி எழுவருடன் அவர் நக்லாவிற்கு வந்தபோது அங்கே ஒரு சிறிய வணிகக்குழு முகாமிட்டிருந்தது. இப்போது தாக்கினால் அவர்களை எளிதாக வீழ்த்திவிடலாம். ஆனால் அன்று ரஜாப் மாதத்தின் கடைசி நாள். ஒரு நாள் தாமதித்தால் வணிகக் குழு மக்காவை நெருங்கிவிடும்.

தாக்குவது என முடிவெடுத்தார் அப்துல்லாஹ். அவர்கள் வீசிய முதல் அம்பு முகாமிட்டிருந்த மூவரில் ஒருவரின் உயிரைக் குடித்தது. எஞ்சிய இருவரும் உடனடியாகச் சரணடைந்தனர். வெற்றி கொண்ட வணிகப் பொருட்களுடன் அவ்விருவரையும் மதீனாவிற்குள் கொண்டு சேர்த்தார் அப்தல்லாஹ். ஆனால் மதீனத்து மக்கள் அவ்வெற்றியைக் கொண்டாடவில்லை. மாறாக புனித விதியை மீறியதற்காகக் கடுமையாகக் கண்டித்தனர். மக்கா நகரத்தார்களைப் போல மதீனாவாசிகள் முஹம்மதின் ஒரிறைக் கொள்கையால் அதிகம் கலக்கமுறவில்லை. ஓரிறைக் கொள்கையாளர்களான யூதர்களுடன் கொண்டிருந்த நெருக்கமே இதற்குக் காரணம். எனவேதான் முஹம்மதையும் இதர முஸ்லிம் களையும் அவர்கள் விரும்பி ஏற்றனர். எனினும் புனித மாதம் குறித்த பற்றுக்களையெல்லாம் அவர்கள் துறந்தவர்களுமல்ல. மதீனத்து முஸ்லிம்களான அன்சாரிகளுக்கும் இது ஒரு பிரச்சினைதான்.

எனவே முஹம்மதும் கூட அப்தல்லாஹ்வின் தாக்குதலைக் கண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இஸ்லாத்தின் முழுமையான நெறிகளையும் விதிமுறைகளையும் வரையறுத்து முடித்த பின் பணியைத் துவங்கியவரல்ல முஹம்மது. நடைமுறை சார்ந்தும், சாத்தியங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டும், இறைவழிகாட்டல்களின் துணையோடும் படிப்படியாக நெறியை அமைத்தவர் அவர். முதலில் ஒன்றைச் செய்து பார்த்துவிட்டுத் தேவையெனில் அதைப் பின்னர் மாற்றிக்கொள்ளவும் அவர் தயங்கியதில்லை என்பதற்கு ‘கிப்லா’ மாற்றம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

*அப்தல்லாஹ்வும் தோழர்களும் சோர்ந்து போனார்கள். அவர்களைத் தேற்ற வேண்டிய கடமை முஹம்மதுக்கு இருந்தது. நீதியான போர் குறித்த அவரது கருத்தியலை வளர்த்துக் கொள்ளும் ஒரு வாய்ப்பாக இதனை அவர் பயன்படுத்திக் கொள்ள முனைந்தார். புனித மாதங்களில் போரிடுவது தவறுதான். ஆனால் மக்களை ஒடுக்குவதும், அமைப்பில் இருந்து வெளியேற்றி நாட்டை விட்டுத் துரத்துவதும் அதைவிடக் கொடுமையல்லவா? இறைவனை விசுவாசிப்பவன் எதற்கு முன்னுரிமை அளிப்பது? இத்தருணத்தில் வெளிப்பட்ட இறை வழிகாட்டல் அவரை மட்டுமல்ல அய்யங்கொண்ட மற்றவர்களையும் தெளிவுப்படுத்தியது.*

> "தடைசெய்த மாதத்தில் போர் செய்வது பற்றி உம்மிடம் கேட்கின்றனர். நீர் கூறுவீராக. 'அதில் போர் செய்வது மிக்க கொடியதுதான். ஆனால் அல்லாஹ்வின் வழியில் செல்லவிடாமல் மக்களைத் தடுப்பது, இன்னும் அவனுக்கு மாறு செய்வது, மேலும் மஜ்தில் ஹராமுக்கு வரவிடாமல் தடுப்பது மற்றும் அங்கு வசிப்பவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது ஆகியவை அதைவிடக் கொடியனவாகும். மேலும் குழப்பம் செய்வது கொலையை விடக் கொடியது. அவர்களுக்குச் சாத்தியமானால் உங்கள் தீனை விட்டு உங்களைத் திருப்பிவிடும் வரை உங்களுடன் அவர்கள் போர் புரிந்து கொண்டே இருப்பார்கள்'". (2:217-218)

*என்கிற இறைவாக்குகள் சூழலின் இறுக்கத்தைக் குறைத்தன. அப்தல்லாஹ், அவரது தோழர்கள், அன்சாரிகள் உள்ளிட்ட முஸ்லிம்கள் அனைவரும் இந்த இறை வழிகாட்டலில் திருப்தியுற்றனர். போரில் வெற்றி கொள்ளப்பட்ட வணிகப் பொருட்கள் புலம் பெயர்ந்தோரிடையே சமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் 1600 திர்ஹம்கள் பிணைத் தொகையாக அறிவிக்கப்பட்டது. புலம் பெயர விரும்பி, ஆனால் மக்காவாசிகளால் மறுக்கப்பட்ட இருவரை அதற்கு அனுமதித்தால் இரு போர்க் கைதிகளையும் அதற்கீடாக விடுதலை செய்வதாக அறிவித்தார் முஹம்மது. ஆனால், இதற்கிடையில், போர்க் கைதிகளில் ஒருவரான ஹகிம் இப்ன் கெய்சர் மதீனா வாழ்வால் ஈர்க்கப்பட்டு முஸ்லிமாக மாறி அங்கேயே தங்க விருப்பம் தெரிவித்தார்.*

*நடைமுறையைக் கணக்கில் கொண்டு கொள்கையைச் செழுமைப் படுத்திக் கொள்வது, அடிப்படைகளை விட்டுக் கொடுக்காமல் சமகாலச் சூழல்களை அனுசரிப்பது என்கிற நபிகளின் செயல்பாட்டிற்கு இந்நிகழ்வு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லா மாதிரியான எதிரிகளையும் அன்பு நெறி, பேச்சு வார்த்தை ஆகியவற்றின் மூலம் சந்தித்துவிட இயலாது. அடக்கு முறையாளர்களை, ஒடுக்குமுறைச் சக்திகளை, அநீதியின் பக்கம் பிடிவாதமாய் நிற்பவர்களை வாள் கொண்டுதான் சந்திக்க*

வேண்டுமெனில் அப்படிச் சந்திக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதே முஹம்மதின் வழியாக இருந்தது.

நக்லாஹ் தாக்குதல் முஸ்லிம்கள் மத்தியில் மிகுந்த தன்னம்பிக்கையையும் எதிரிகளிடம் பழிவாங்கும் வெறியையும் ஏற்படுத்தியது. சில மாதங்களுக்குப் பின்னர் ரமளான் மாதத்தில் (மார்ச் 624) சிரியாவில் இருந்து அபூ சுஃப்யான் தலைமையில் கடற்கரை ஓரமாக வந்து கொண்டிருந்த மக்கா நகர வணிகர் குழு ஒன்றை வழிமறிக்கும் நோக்குடன் முஹம்மது தலைமையில் 350 முஸ்லிம்கள் கொண்ட படை ஒன்று புறப்பட்டது. இவர்களில் 70 பேர்களே புலம் பெயர்ந்தோர். மற்றவர்கள் அன்சாரிகள். தொடக்ககால இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய திருப்பமாக அமைந்த இத்தாக்குதல் மிகச் சாதாரணமாகவே திட்டமிடப்பட்டது. உறுதியான முஸ்லிம்கள் பலர் அப்போரில் கலந்து கொள்ளவில்லை. அந்த அளவிற்கு முக்கியமானதாக அது கருதப்பட வில்லை. மனைவியின் உடல் நிலையைக் காரணம் காட்டி முஹம்மதின் மருமகன் உத்மான் இப்ன் அஃபான் கூட இதில் பங்கு பெறவில்லை. செங்கடலோரத்தில் ஆண்டு தோறும் பெரிய வணிகச் சந்தை ஒன்று நடைபெறுகிற 'பத்ர்' கிணறு என்னுமிடத்தில் மக்கத்து வணிகர் குழுவை மறித்துப் போர் செய்யத் திட்டமிட்டார் முஹம்மது.

அபு சுஃயானும் திறமையிற் சளைத்தரல்ல. ஹிஜாஸிலிருந்து மக்காவுக்குச் செல்லும் வழக்கமான பாதையைத் துறந்து கடற்கரையில் வலப் பக்கமாகத் திரும்பி குழுவை நடத்திச் சென்றார் அவர். கிஃபார் என்னும் பழங்குடியைச் சேர்ந்த டம்டம் என்பவரை உதவி கோரி மக்காவுக்கு விரட்டினார்.

"குறைஷிகளே! அபு சுஃயான் கொண்டு வரும் உங்களின் சொத்துக்களை முஹம்மதும் அவரது ஆட்களும் கொள்ளையடிக்கக் காத்துள்ளனர். உதவி! உதவி!!" என டம் டம் அலறிய போது குறைஷிகள் சினந்தெழுந்தனர். என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார் இந்த முஹம்மது? நக்லாஹ் தாக்குதலையாவது பொறுத்துக் கொள்ளலாம். அது ஒரு சின்ன இழப்பு. இம்முறை இதை எப்படிச் சகிப்பது? கிட்டத்தட்ட குறைஷி இன ஆண்கள் அனைவரும் முஸ்லிம்களுக்கு எதிராகத் திரண்டனர். பெரியவர் உமையா இப்ன் கல்ஃப், அப்பாஸ், அபுதாலிபின் மகன்களாகிய தாலிப், அகில் மற்றும் கதீஜா அம்மையின் மருமகன் ஹகிம் இப்ன் ஹிஸம் எனப் பலரும் இதில் அடங்குவர்.

ஆயிரம் பேர் கொண்ட படை வருவதை அறிந்தபோது முஹம்மதுக்கும் சிறிது கவலை ஏற்படத்தான் செய்தது. உம்மாவின் தலைவரான போதிலும் இராணுவ ரீதியான முடிவை எடுக்கும் அதிகாரம் அவருக்கு இல்லை. தவிரவும் வந்திருந்த முஸ்லிம்கள் ஒரு சூறைத் தாக்குதலைத் தான் எதிர்பார்த்திருந்தனரே ஒழிய ஒரு பெரிய போரை

எதிர்பார்த்துப் புறப்படவில்லை. இந்நிலையில் திரும்பிச் செல்லுதல் உசிதமா? படைகள் வருமுன் வணிகக் குழுவைத் தாக்குவதா? இல்லை படைகளை எதிர்கொள்வதா? முடிவறிய ஒரு ஆலோசனைக் கூட்டமொன்றைக் கூட்டினார் முஹம்மது. அபுபக்ரும் உமரும் போருக்கு ஆதரவாக ஆவேசமாக உரையாற்றினர். புலம் பெயர்ந்த எழுபது பேரும் என்ன நிகழ்ந்தாலும் பத்ரைவிட்டு அகல்வதில்லை என உறுதியாயிருந்தனர். நன்றி கூறிய நபிகள் மதீனாவாசிகளின்பால் திரும்பினார். இரண்டாவது அகாபாவின்போது அவர்கள் அளித்த உறுதிமொழியின்படி மதீனாவிலிருக்கும் போது முஹம்மதைத் தாக்கினால் மட்டுமே அவர்கள் போரிட வேண்டும். ஆனாலும் அவர்கள் இந்நிலையில் இதர முஸ்லிம்களைக் கைவிடத்தயாராக இல்லை. அவர்கள் சார்பாகப் பேசிய ஸஅத் இப்ன் முஆத் இந்த உறுதியை அளித்தார். "நாங்கள் உம்மை நம்புகிறோம். நீங்கள் எமக்குச் சத்தியத்தைக் கொண்டு வந்துள்ளீர்கள் என்பதையும் ஏற்கிறோம். நீங்கள் இந்தக் கடலைத் தாண்டச் சொன்னால் தாண்டுவோம். நீங்கள் அமிழ்ந்தால் நாங்களும் அமிழ்வோம்" என்றவர் கூறியபோது அங்கு கனிந்த ஒற்றுமை உணர்வு விழியோரங்களில் ஈரமாய்க் கசிந்தது.

போரிடுவதில் உறுதியாக இருந்தபோதிலும் அதற்கான வாய்ப்பில்லாமல் மக்காவிலிருந்து படைகள் வருமுன்னரே அபுசுஃயானின் சொத்துக்களை வசப்படுத்துமாறு நிகழ்வுகள் அமையாதா என்கிற நப்பாசையும் முஸ்லிம்கள் மத்தியில் இருக்கத்தான் செய்தது. ஆனால் பத்ர் கிணறுகளில் நீரெடுக்க வந்த எதிரிப் படையாட்கள் இருவரைப் பிடித்து விசாரித்தபோது படைகள் வருவது உண்மை எனத்தெரிந்தது. சற்றே அதிர்ச்சியடைந்த போதிலும் எதிரிகளை உறுதியாக எதிர்கொள்ள அவர்கள் தயாராயினர். அப்போது பெய்த மழை தரையை உறுதியாக்கி அவர்களை முன்னேறிச் செல்வதை எளிதாக்கியது. குறைஷிகள் வருவதற்கு முன்பாக பத்ரிலுள்ள கிணறுகளை முஸ்லிம்கள் வசமாக்கிக் கொண்டனர். படைகளுக்குத் தேவையான தண்ணீரை உத்தேசித்து இந்த இடத்திலேயே முஸ்லிம்களைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது முஹம்மதின் போர்த் தந்திரம்.

குறைஷிகள் மத்தியில் போரைத் தவிர்க்கலாம் என்கிற எண்ணமுடையவர்களும் இருந்தனர். அபுசுஃபானுக்கேகூட போரின்றித் தப்பிச் செல்வதே நோக்கமாயிருந்தது. எனினும் முஹம்மதின் மீது பழி உணர்வு மிக்க அபு ஜஹல் அதற்குத் தயாராக இல்லை. "பத்ரை நோக்கிச் செல்வோம். மூன்று நாட்கள் அங்கே தங்குவோம். ஒட்டகங்களை வெட்டுவோம். விருந்துண்போம். குடித்து மகிழ்வோம். நமது பெண்கள் நம்மை உற்சாகமூட்டுவர். அரேபியர்கள் நம்மை மதிப்பர்" என்று முழங்கினான். எனினும் ஸுஹ்ரா மற்றும் அதீ இனக்குழுவினர் பின்வாங்கினர். தாலிப் உட்பட வேறு சிலரும் கூடப் பின்வாங்கினர்.

எஞ்சிய குறைஷிகள் பத்ரை அடைந்து முகாம் அமைத்துத் தங்கினர். உளவறியச் சென்ற உமைர் இப்ன் வாஹ்ப் மணற்குன்றுக்குப் பின் மறைந்திருந்த முஸ்லிம்களின் கண்களில் தெரிந்த உறுதியைக் கண்டு கலங்கினார். "அவர்களது ஒட்டகங்கள் நமக்குச் சாவைச் சுமந்து வந்துள்ளன" என எச்சரித்தார், அரேபியர்கள் தேவையற்ற முறையில் போரிட்டு உயிரிழப்புகளை ஏற்படுத்திக் கொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தேவையாயின் தோல்வியை ஏற்று ஒப்பந்தங்கள் செய்து கொள்வது வழக்கமாக இருந்தது. ஹகிம் இப்ன் ஹிஸம், உத்பா இப்ன் ரபீயா ஆகியோரும் போர் வேண்டாமென்று வற்புறுத்தினர். யார் யாரைக் கொன்ற போதிலும் அது அவர்களது மாமன், மைத்துனர், இரத்த உறவினராகத்தானே இருக்க முடியும் என்பதையும் உத்பா சுட்டிக்காட்டினார். ஆனால் அபு ஜஹல் வெறித்தனமாக இருந்தான். உத்பாவைக் கோழை எனத் திட்டினான்.

அரபு வழக்கத்தை ஒட்டி முதலில் தனி நபர் வாய்சண்டைகள் தொடங்கின. முஸ்லிம்களில் ஹம்ஸா, அலீ, உபைதா இப்ன் அல் ஹாரித் ஆகிய மூவரும் உத்பா, ஷய்பா, அல் வாலித் இப்ன் உத்பா ஆகிய குறைஷியரை எதிர்கொண்டனர். குறைஷியர் மூவரும் அங்கேயே கொல்லப்பட்டனர். முஸ்லிம்களில் உபைதா மரணக் காயமுற்றார். பின் முழு அளவில் போர் தொடங்கியது.

அரபுக்களின் வழக்கமான பாணியில் குறைஷிகள் போரிட்டனர். ஒற்றைத் தலைமையின் கீழ் அவர்கள் போரிடவில்லை. ஒவ்வொரு இனக்குழுவும் தனித் தனி தலைமையுடன் இயங்கியது. கிழக்கு நோக்கி நின்று சூரியக் கதிர்கள் கண்ணில் படும் வண்ணம் அவர்கள் போரிட வேண்டியதாயிற்று. தாகமும், அவர்களை வாட்டியது. அவர்களில் முக்கிய தலைவர்களும் வீழ்ந்துவிட்டனர். நூறு ஒட்டகங்களும் நூறு குதிரைகளும் வைத்திருந்தும் அவர்களால் முன்னேற இயலவில்லை.

முஸ்லிம்களோ ஒற்றைத் தலைமையில் ஒரே உணர்வுடன் இயங்கி முன்னேறினர். தனக்கென அமைக்கப்பட்டிருந்த பாசறையில் இறைவனைத் தொழுது கொண்டிருந்த நபிகள் வெளியே வந்து எதிரிகளை நோக்கி ஒரு கை நிறையக் கூழாங்கற்களை வீசி, "தீமை அவர்களின் முகங்களைச் சாரட்டும்" என்று இரைந்தார். கடும் யுத்தம் தொடங்கியது. முஸ்லிம்களை நெருக்கமாக அணிவகுத்து நிற்கச் செய்து தொடர்ந்து அம்புகளை வீசச் செய்தார் முஹம்மது. மக்கத்து வணிகர்கள் முஸ்லிம்களின் இந்த உக்கிரத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. பழைய ரத்த உருத்துக்களைப் போரில் மாய்ப்பதற்கும் அவர்களில் சிலர் தயங்கினர். மதியத்திற்கு முன்னர் அவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. பலர் ஓடத் தொடங்கினர். அபு ஜஹ்ல் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் போர்க் களத்திலேயே மரணமடைந்தனர். சுமார் எழுபது பேர்கள் வரை அவர்கள் இழந்திருந்தனர்.

*முஸ்லிம்கள் வெற்றிக்களிப்பில் இருந்தனர். அரபு வழக்கத்தின்படி கைதிகளைச் சுற்றி வளைத்துக் கொல்ல முற்பட்டனர். கொல்வதை நிறுத்துமாறு முஹம்மது ஆணையிட்டார். கைதிகளை மீட்புத் தொகை பெற்று விடுதலை செய்யலாம் என இறைவாக்கும் அமைந்தது. வெற்றி கொண்ட பொருட்களைப் பிரித்துக் கொள்வதில் முஸ்லிம்களிடையே ஏற்பட்ட சச்சரவையும் நபிகள் முடிவுக்குக் கொண்டு வந்தனர். கைப் பற்றப்பட்ட 150 ஒட்டகங்கள், பத்து குதிரைகள், ஆயுதங்கள் ஆகியன சமமாகப் பிரித்துக்கொள்ளப்பட்டன. கைதானவர்களுடன் முஸ்லிம்களின் படை மதீனாவை நோக்கித் திரும்பியது. கைதானவர்கள் சுமார் 70 பேர். சுஹய்ல், அப்பாஸ், அகில், நவ்ஃபல் ஆகியோர் இவர்களுள் அடக்கம். இவர்களுள் பலர் முஹம்மதின் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது இறங்கிய ஒரு இறைவாக்கு*

> "நபியே! உங்கள் கைவசத்திலுள்ள கைதிகளிடம் நீர் கூறும். உங்கள் உள்ளங்களில் (சிறிதளவாவது) நன்மை இருப்பதாக அல்லாஹ் அறிவானாகின் உங்களிடமிருந்து வாங்கப்பட்டதைக் காட்டிலும் சிறப்பானதை அவன் உங்களுக்கு வழங்குவான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். மேலும் அல்லாஹ் பெரும் மன்னிப்பானாகவும் கருணைமிக்கவனாகவும் இருக்கின்றான். எனினும் அவர்கள் உமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ய நினைத்தால் - இதற்கு முன் அவர்கள் அல்லாஹ்வுக்கே நம்பிக்கைத் துரோகம் செய்தவர்கள் ஆவார்கள். அதனால்தான் அல்லாஹ் உம்மைக் கொண்டு அவர்களைக் கைது செய்தான். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாகவும் நுண்ணறிவாளனாகவும் உள்ளான்" (8:70-71)

*என்றவாறு கைதிகளைக் கையாள்வது குறித்த வழிகாட்டலை நபிகளுக்கு அளித்தது.*

20

# பத்ர் போர்: ஓர் இறை மீட்பு

*சிறை பிடிக்கப்பட்டவர்களில் இருவரை மட்டுமே கொல்ல ஆணையிட்டார் முஹம்மது. யூத, பெர்சிய மூல இறைநூற்களையெல்லாம் கற்றுத் தேர்ந்திருந்த அவர்கள் அறிவுப் புலத்தில் நபிகளுக்குப் பல்வேறு இடையூறுகள் புரிந்தவர்கள். முஹம்மதின் ஊடாக இறைச் செய்திகள் இறக்கப்படுவதைக் கேள்விக்குள்ளாக்கியவர்கள். அவர்களுக்கு இரக்கம் தேவையில்லை எனக் கருதினார் நபிகள். மரண தண்டனையை அறிந்த அவர்களில் ஒருவர் "என் பிள்ளைகளை யார் பார்த்துக்கொள்வார்கள் முஹம்மத்?" என வினவியபோது "நரகம்" எனக் கூறுமளவிற்கு நபிகள் அவர்கள் மீது கோபம் கொண்டிருந்தார்.*

*பத்ர் போரில் பெற்றவெற்றி இஸ்லாமிய இயக்க வளர்ச்சிக்குப் பல்வேறு நிலைகளில் பேருதவியாக அமைந்தது. கைதிளுக்குக் கிடைத்த மீட்புத் தொகை மூலம் பெற்ற வருமானங்கள் மட்டுமன்று. பல ஆண்டுகளாக அரபு உலகின் கேலிக்கு ஆளாகி வந்த நபிகளின் பெருமை இதற்குப் பின் வானளாவ உயர்ந்தது. அரபு உலகில் ஒரு வலுமிக்க சக்தியாக அவரை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.*

*வெற்றி வீரர்களை மதீனா மக்கள் பேருவுவகையுடனும் கொண்டாட்டங்களுடனும் வரவேற்றனர். எரிச்சலுற்றவர்கள் அங்கிருந்த மூன்று யூத இனக் குழுவினர் தான். அவர்களோடு முஹம்மதின் ஏற்றத்தைப் பொறுக்க முடியாதிருந்த மதீனாவாசியாகிய உபையும் மிகுந்த வெறுப்புற்றான்.*

*எனினும் நபிகள் இவ்வெற்றியில் அகந்தை கொள்ளவில்லை. முஹம்மதின் வரலாறை எழுதிய அனைவரும் இவ்வெற்றியை ஒட்டி அவர் காட்டிய பொறுமையையும் அகந்தையின்மையையும் புகழ்வது வழக்கம்.*

> "உண்மையாதெனின் நீங்கள் அவர்களைக் கொல்லவில்லை: அல்லாஹ்தான் அவர்களைக் கொன்றான். மேலும் (நபியே, நீர் அவர்கள் மீது கூழாங்கற்களை வீசியபோது) உண்மையில் எறிந்தவர் நீரல்லர். மாறாக அல்லாஹ்வே அதையும் செய்தான். நம்பிக்கை யாளர்களை நன்மை தரக்கூடிய சோதனையில் ஆழ்த்தி வெற்றியடைய வைப்பதற்காகவே (இதனை அவன் செய்தான்)." (8:17)

என்று இறைவாக்கும் அமைந்தது. வெற்றிக்குப் பிந்திய பொறுமையை வற்புறுத்திய மற்றொரு இறைவாக்கும் *(8:66,67)* அடிக்கடி மேற்கோள் காட்டப்படக்கூடிய ஒன்று.

அன்றைய அரபு நாட்டின் மிக வலுவான சக்தியாகிய குறைஷிகளுடன் இவ்வாறு ஒரு முழுமையான போருக்குத் தள்ளப்பட்ட போதிலும் அக்குலத்தை முற்றாக அழித்தொழித்துவிட வேண்டும் என்கிற எண்ணம் நபிகளுக்குக் கிடையாது. பரோவா மன்னனையும் அவனது படைகளையும் செங்கடலில் மூழ்கடித்துக் கொன்றது குறித்த யூத நம்பிக்கையின் அடிநாதமாக இருப்பது போன்ற 'முழுமையான அழித் தொழிப்பு' என்பது முஸ்லிம்களின் அணுகுமுறையாக அமையவில்லை. போரில் எதிரிகளைக் கொல்வதையும் கைதிகளாகக் கைப்பற்றப்பட்ட பின் அவர்களை நடத்த வேண்டிய விதத்தையும்,

> "இறை நிராகரிப்பாளர்களை நீங்கள் போரில் சந்திக்க நேர்ந்தால் முதல் வேலை கழுத்துகளை வெட்டுவது தான். அவர்களை நீங்கள் முற்றிலும் அடக்கி ஒடுக்கிவிட்டால் கைதிகளை இறுக்கமாகக் கட்டிவிடுங்கள். அதன்பின் (அவர்கள் மீது) கருணை காட்டலாம் அல்லது ஈட்டுத்தொகை பெறலாம்" (47-4)

என்று திருக்குர்ஆனும் போரில் எதிரிகளை எதிர்கொள்வதையும் கைதிகளாக அவர்களை நடத்துவதையும் துல்லியமாகக் கோடிட்டுக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. "நீங்கள் உண்பது போலவே அவர்களுக்கும் உணவு அளிக்க வேண்டும். நீங்கள் உடுத்துவது போலவே அவர்களுக்கும் உடையளிக்க வேண்டும். கடினமான வேலை எதையும் அவர்களுக்கு அளித்தீர்களானால் அதை நிறைவேற்றுவதில் அவர்களுக்கு நீங்கள் உதவ வேண்டும்" என்று ஆணையிட்டார் முஹம்மது.

பத்ர் போரில் கைதானவர்கள் முகம் தெரியாத எதிரிகளல்லர். புலம் பெயர்ந்தவர்களின் நண்பர்களாகவும், உறவுகளாகவும் அறியப் பட்டவர்களே. தனது மைத்துனன் சுஹாய்ல் ஒரு மூலையில் கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் பரிதாபமாக அமர்ந்திருந்ததைக் கண்ணுற்றபோது முஹம்மதின் மனைவியரில் ஒருவரான சவ்தாவால் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலவில்லை. புதிய முஸ்லிம் கருத்தியல் சற்றே பின்னுக்குத் தள்ளப்பட்டுப் பழைய பழங்குடி உணர்வு முன்னெழுந்தது. "ஓ! அபூயாஸித்" என்று கதறிய சவ்தா, "இப்படி அவமானப்பட்டு நிற்கிறாயே. போர்க்களத்தில் வீரமாய்ச் செத்திருக் கலாமே?" என்று அழுதார், இறுகிய முகத்துடன் உள்ளே நுழைந்த அவரது கணவர், "சவ்தா! இறைவனுக்கும் அவனது தூதருக்கும் பிரச்சினை உருவாக்க விரும்புகிறாயா?" என்று அதட்டிய பின்னரே அவர் அமைதியடைந்தார்.

சவ்தாவைக் கண்டித்துவிட்டாரேயொழிய உறவுகளின் மீதான கருணை

நினைவுகளை நபிகளாலும் முற்றிலுமாக உதறிவிட இயலவில்லை. அவர்களின் நிலையை எண்ணி இரவில் உறக்கம் வராமல் தவித்தார். பலரை விடுதலை செய்ய ஆணையிட்டார். கைது செய்யப்பட்டிருந்தவர்களில் முஹம்மதின் மருமகன் அபூ அல் அஸ்சும் ஒருவர். முஸ்லிமாக மாறாமல் பகன் வழிபாட்டைத் தொடர்ந்தவர். கொழுந்தன் அம்ரிடம் மீட்புத் தொகையைக் கொடுத்து கணவரை மீட்டு வருவதற்காக மதீனாவிற்கு அனுப்பி வைத்தார் நபிகளின் புதல்வி ஸைனப். மீட்புத் தொகையுள் அன்னை கதீஜாவின் கைவளை ஒன்று இருந்ததைக் கண்டபோது நபிகளின் முகம் வெளுத்தது. கண்கள் கலங்கின. நினைவுகள் நெஞ்சை உலுக்கின. மீட்புத் தொகை பெறாமலேயே அபுஅல்அஸை விடுதலை செய்யலாம் என முஸ்லிம்களிடம் கேட்டுக் கொண்டார் நபிகள் நாயகம். அவர்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். இதற்குப் பின்பேனும் மருமகன் இறைவழிக்குத் திரும்புவார் என நபிகள் எதிர்பார்த்திருப்பார் போலும். ஆனால் அது நடக்கவில்லை. மகள் ஸைனபையும் பேத்தி உமாமாவையும் மதீனாவுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பத்ர் போருக்குப் பின் மக்காவில் தம் ஆதரவாளர்களின் நிலைமை மோசமாக இருக்கும் என்பது மட்டும் இதற்குக் காரணமல்ல. தான் போருக்குச் சென்றிருந்தபோது மரித்துப் போன மகள் ருகையாவின் பிரிவை ஸைனபின் வருகை ஈடு செய்யும் எனவும் அவர் நினைத்திருக்க வேண்டும். பத்ரிலிருந்து திரும்பிய பின் இளைய மகள் பாத்திமாவை அழைத்துக் கொண்டு ருகையாவின் அடக்கத் தலத்திற்குச் சென்று கலங்கி நின்றார் நபிகள். மனைவியின் பிரிவால் வாடியிருந்த உத்மானுக்கு தனது இன்னொரு மகள் உம்ம் குப்துமை மணம் செய்வித்தார். இளைய மகள் பாத்திமாவை அபுபக்ர், உமர் இருவரும் விரும்பினர். எனினும் ஏழையான போதிலும் இளையவர் அலீயையே தேர்வு செய்தார் நபிகள்.

தோழமை உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் பொருட்டும் அரசியல் காரணங்களுக்காகவும் திருமணங்கள் சிலவற்றை நபிகள் செய்து கொள்ள நேர்ந்ததும் இக்கால கட்டத்திலேயே. உமரின் விவாகரத்து செய்யப்பட்ட மகள் ஹஃப்ஸாவை நபிகள் மணந்து கொண்டதும் (625 தொடக்கம்) இப்போதுதான். ஹப்ஸாவை உத்மானுக்குத் திருமணம் செய்விப்பதே உமரின் விருப்பம். ஆனால் முஹம்மது அவரைத் தன் மருமகனாக்கிக் கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்தபோது உமர் தமது மகளை அபுபக்ர் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அபு பக்ர் அதற்கு மவுனம் சாதித்தாரேயொழிய பதிலளிக்கவில்லை. உமர் இது குறித்து முஹம்மதிடம் தன் வருத்தத்தைப் பகிர்ந்து கொண்ட போது தானே ஹஃப்ஸாவைத் திருமணம் செய்து கொள்வதாக அவர் அறிவித்தார். இந்தத் திருமணங்களின் மூலம் நண்பர்களிடையேயான நெருக்கம் வலுப்பெற்றது.

கைதிகள் அன்புடன் நடத்தப்பட்டதன் விளைவாகப் பலர்

முஸ்லிம்களாயினர். உமைர் இப்ன் வஹ்ப் அவர்களில் ஒருவர். மக்காவுக்குத் திரும்பிய அவரை மீண்டும் மதீனா சென்று முஹம்மதைக் கொன்று வருமாறு சஃப்வான் பணித்தான். மதீனா சென்ற அவர் நபிகளைக் கொல்வதற்கு மாறாக அவரது இறைவழியை ஏற்றுக்கொண்டார்.

மதீனாவுக்குப் புலம் பெயர்ந்தபோது நபிகள் அங்குள்ள யூதர்களை அனுசரித்துச் சென்றது குறித்து முன்பே குறிப்பிட்டோம். யூதர்களைப் போலவே எருசலேமை நோக்கிக் 'கிப்லா' அமைத்துக் கொண்டதும் அவர்களது 'அஷுரா' நோன்பை முஸ்லிம்களுக்கும் கடமையாக்கியதும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. எனினும் அவர்கள் அதற்குத் தகுதியாக நடந்து கொள்ளவில்லை. நபிகளின் தூதுத்துவத்தையும் திருக்குர்ஆன் அவர் வழி இறக்கப்படுவதையும் அவர்கள் ஏற்காததோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு முழு விசுவாசமாக நடந்துகொள்ளவும் இல்லை. முஸ்லிம்களின் தனித்துவத்தை நிலை நாட்டும் முகமாகப் பத்ர் போருக்குச் சில வாரங்கள் முன்பு மக்காவை நோக்கிக் 'கிப்லா'வை முஹம்மது மாற்றியதை நாம் அறிவோம். நோன்பு குறித்தும் தனித்துவமான முடிவை எடுக்க வேண்டிய தருணம் வந்து விட்டதை நபிகள் இப்போது உணர்ந்தார்.

ஒருவகையில் பத்ர் போர் முஸ்லிம்களுக்குக் கிடைத்த எதிர்பாராத வெற்றியென்றே சொல்ல வேண்டும். இத்தனை பெரிய படை தம்மை எதிர்கொள்ளும் என்று அறிந்திருந்தால் அவர்கள் போரைத் தவிர்த்திருக்கக்கூடும். இறையருளாலேயே இந்த வெற்றி அவர்களுக்குக் கிட்டியது என அவர்கள் நம்பினர். எதிர்பாராத ஒரு வெற்றி, அதைத் தொடர்ந்து நிலைமைகள் மிகவும் சாதகமாக மாறுதல் என்பதான வரலாற்று நிகழ்வுகளைக் கடவுளின் இடையீட்டினால் ஏற்பட்ட அற்புதங்களாக ஏற்கும் தன்மை கிறிஸ்தவம், யூதம், இஸ்லாம் ஆகிய மூன்று ஒரிறைக் கொள்கையுடைய மதங்களிலும் நிலவுவதை மாக்ஸிம் ரோடின்சன், கரேன் ஆர்ம்ஸ்ட்ராங் முதலியோர் சுட்டிக்காட்டுகின்றனர். இறைமையும் வரலாறும் சந்திக்கும் புள்ளியாக இத்தகைய நிகழ்வுகளை இம்மதங்கள் வியக்கும். இறை மீட்பின் (Salvation) ஒரு வடிவமாக வணங்கும். செங்கடலில் பரோவாவும் அவனது படைகளும் மூழ்கடிக்கப்படும் நிகழ்வை யூத மதம் மட்டுமின்றித் திருக்குர்ஆனும் கூட ஒரு இறை மீட்பாகவே ('ஃபுர்கான்') ஏற்கும்.

> "முன்பு நாம் மோசசிற்கும் ஆரோனுக்கும் ஃபுர்கானையும் இறையச்சமுடையோருக்கு ஒளியையும், அறவுரையும் அருளினோம்... ஆசீர்வதிக்கப்பட்ட இந்த அறிவுரையை இப்போது நாம் உங்களுக்காக இறக்கியுள்ளோம்". (21:48:50)

எனத் திருக்குர்ஆனும் நபிகளூடாக அவ்வப்போது அன்றைய வரலாற்றுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை இறக்கியருளும் அற்புதத்தையும் ஒரு இறை மீட்பாகவே முன்வைக்கும்.

இந்த வகையில் பத்ர் போரும் கூட ஒரு ஃபுர்கான் தான். இறை மீட்பின் அடையாளம்தான். நீதியையும் அநீதியையும் வேறுபடுத்திக் காட்டிய ஒரு நிகழ்வுதான். பத்ர் போர் நடைபெற்ற நாளில் அல்லாஹ் முஸ்லிம்களையும் உம்மாவையும் குறைஷிகளிடமிருந்து காத்தருளினார். இது ஏதோ ஒரு தொன்மமோ, கற்பிதமோ, வெறும் நம்பிக்கையோ அல்ல. முஸ்லிம்கள் இதனைக் கண்ணால் கண்டனர். அதோ குறைஷியரின் உடல்கள் போர்க்களத்தில் கிடக்கின்றன. பலர் அஞ்சி ஓடுகின்றனர். எஞ்சியோர் இதோ கைதிகளாய். அல்லாஹ் பெரியவன். அவனுக்கே புகழனைத்தும். அவரது திருத்தூதரைப் போற்றுவோம்.

மதீனாவுக்குப் புலம் பெயர்ந்தவுடன் அங்குள்ள யூதர்கள் அஷூரா நோன்பிருப்பது குறித்து நபிகள் ஆவலுடன் வினவியதைத் தபரி குறிப்பிடுகிறார். பரோவாவைச் செங்கடலில் அமிழ்த்தி மோசசைக் கடைத்தேற்றிய நாள் இது என அவர்கள் பதிலுரைத்தனர். “இந்நன்னாளின் மீது எமக்கு மேலும் அதிக உரிமையுள்ளது” என்று கூறிய நபிகள் ‘அஷூரா’ நோன்பை முஸ்லிம்களுக்கும் கடமையாக்கினார். ஆனால் இன்று அதையொத்த ஒரு அற்புதத்தை அல்லாஹ் அவர்களுக்கே நிகழ்த்திக் காட்டியுள்ளான். பத்ர் போரே முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்ட தனித்துவமான ஃபுர்கான் ரமளான் மாதம் ஒன்பதாம் நாள் அன்று நபிகள் ஒரு முக்கிய அறிவிப்பைச் செய்தார். இனி அஷூரா நோன்பிருப்பது முஸ்லிம்களுக்குக் கடமை அல்ல. முஸ்லிம்கள் ரமளான் மாதத்தில் இனி நோன்பிருப்பர். மார்ச் 625 அன்று முதல் ரமளான் நோன்பு தொடங்கியது. இஸ்லாமியர்கள் கடைபிடிக்கவேண்டிய அய்ந்து அவசிய மதக் கடமைகளில் ரமளான் நோன்பும் ஒன்றாகியது.

கிப்லா மாற்றத்தைப் போலவே இந்த நோன்பு மாற்றம் முஸ்லிம்கள் மத்தியில் தன்னம்பிக்கையையும் புத்தெழுச்சியையும் உண்டாக்கியது. அதே நேரத்தில் மதீனாவிலிருந்த மூன்று யூதக் குழுவினரும் நபிகளிடமிருந்தும் உம்மாவிடமிருந்தும் விலகி விரோதம் பாராட்டுதல் அதிகரித்தது. மதீனத்து அரேபியனும் முஹம்மதின் மீது பொறாமையுற்றவனுமான இப்ன் உபை யூதர்களின் முஸ்லிம் வெறுப்பிற்கு ஆதரவாகவும் தூண்டுகோலாகவும் அமைந்தான். முஹம்மதின் செயல்பாடுகளும் இஸ்லாமும் மதீனாவின் பாதுகாப்பிற்கு ஊறு விளைவித்துள்ளது என்றும் தேவையற்ற பகைகளை எதிர்கொள்ள வைத்துவிட்டது என்றும் உபை பிரச்சாரம் செய்தான். பனூநாதிர் என்னும் யூத குலத்தைச் சேர்ந்த கஅப் இப்ன் அல்அஷ்ரப் என்கிற புலவன் முஹம்மதுக்கும் இஸ்லாமுக்கும் எதிராகக் கவிதைகள் புனைந்து பிரச்சாரம் செய்தான். கவிதைகள் மூலம் இப்படிப் பிரச்சாரம் செய்வதென்பது அன்றைய அரபுலகின் ஒரு அரசியற் செயற்பாடாக இருந்தது. முஹம்மது இதுபோன்ற கவிதை எதிர்ப்புகளைக் கண்டு சற்றுக் கலக்கமுற்றவராகவே இருந்தார். மக்காவிற்குப் புலம் பெயர்ந்த கஅபின் கவிதைகள் குறைஷியரை மதீனாவுக்கு எதிராக எழுச்சி கொள்ள வைத்தன.

மக்காவில் பத்ர் போருக்குப் பின் முக்கிய தலைவனாகத் திகழ்ந்த அபூசுஃபியான் சில வாரங்களுக்குப் பின் 200 பேர் அடங்கிய ஒரு படையுடன் மதீனாவை நோக்கி ஒரு சூறைத் தாக்குதலுக்குக் கிளம்பினான். மதீனா எல்லையில் முகாம் அமைத்து அவர்கள் தங்கினர். பனி நாதிர் யூதர்கள் பகுதிக்குச் சென்ற அபுசுஃப்யானை அவர்களின் தலைவன் சல்லாம் வரவேற்று முஸ்லிம்கள் குறித்த முக்கிய உளவுகளைத் தந்தான். அடுத்த நாள் சுஃப்யானின் படைகள் வயல்வெளிகளை நாசமாக்கின. சில பேரீத்த மரங்களை எரித்தன. பேரீத்த மரங்களுக்குப் போரில் தீங்கு விளைவிப்பதில்லை என்கிற அரபு மரவை மீறி இந்த அட்டூழியங்களைச் செய்த சுஃப்யானின் படையினர் இரண்டு அன்சாரி களையும் கொன்றுவிட்டு அகன்றனர். செய்தியறிந்த முஹம்மது படை யொன்றுடன் அவர்களை விரட்டிச்சென்றார். கொண்டு வந்திருந்த உணவுப் பொருட்களை எல்லாம் விட்டுவிட்டு அவர்கள் விரைந்தோடித் தப்பித்தனர்.

யூதர்களின் இருப்பு உம்மாவின் பாதுகாப்பிற்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதை முஹம்மதின் கூர்த்த அறிவு உணர்ந்தது. வட திசையிலிருந்து குறைஷியர் தாக்கும்போது பின்புறமாக யூதர்கள் தாக்கினால் இடையிலகப்பட்டு முஸ்லிம்கள் முற்றாக அழிய நேரிடும் என்பதை அவர் உணர்ந்தார். பனூ கைனூபா எனும் சிறிய யூதக் குலம் முஹம்மதுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை மீறித் தமது பழைய கூட்டாளி உபையுடன் நெருக்கம் பேணுவதைக் கவனித்த நபிகள் அவர்களை அணுகித் தாம் இறைத்தூதர் என்பதை அவர்கள் வெளிப்படையாக ஏற்கவேண்டும் என்று வற்புறுத்தினார். “முஹம்மதே! என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்? போர் நுட்பங்கள் அறியாது பத்ரில் உம்மாவிடம் தோற்றோடியவர்களல்ல நாங்கள்” என அவர்கள் எள்ளி நகையாடியதைக் கண்டு திரும்பிய நபிகள் சரியான தருணம் பார்த்துக் காத்திருந்தார்.

அப்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பெரும்பாலும் தச்சு, கொல்லுத்தொழில் புரிந்த கைவினைஞர்களான பனூ கைனூபா குலத்தைச் சேர்ந்த ஒரு யூதன் ஒரு முஸ்லிம் பெண்ணைக் கடைத் தெருவில் வம்பிழுத்தான். நடுக்கடை வீதியில் அந்த முஸ்லிம் பெண்ணின் கீழாடைகள் விலகுமாறு குறும்பு செய்த அவனை அந்தப் பெண் ஆத்திரம் கொண்டு ஏசினார். தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில் ஒரு முஸ்லிமும் ஒரு யூதரும் கொல்லப்பட்டனர். இருபுறமும் உயிரிழப்புகள் சமமாக அமைந்தன. முஹம்மது சமாதான முயற்சிகளில் இறங்கினார். பனூ கைனூபா யூதர்கள் அதை ஏற்கவில்லை. தமது கோட்டைக்குள் அடைந்து கொண்ட அவர்கள் முஹம்மதுடன் போர் செய்யப் பிற அரபுகளைத் துணைக்கு அழைத்தனர். உபை அவர்களுக்கு ஆதரவாக மதீனா வாசிகளைத் திரட்ட முயற்சிகள் மேற்கொண்டான். எனினும் அது தோல்வியிலேயே முடிந்தது.

கோட்டைக்குள்ளிருந்த கைனூப் யூதர்கள் 700 பேர். அவர்கள்

எதிர்பார்த்தது போல் உதவிகள் கிட்டியிருந்தால் முஸ்லிம்களுக்கு அது ஒரு பெரிய பிரச்சினையாயிருக்கும். ஆனால் நிலைமை வேறாக இருந்தது. முஹம்மதின் படை கைனூப் யூதர்களின் கோட்டையை முற்றுகையிட்டது. இரண்டு வார முற்றுகைக்குப் பின் பணிவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்றாகியது. முஹம்மதை அணுகிய உபை அவர்களுக்குக் கருணை காட்டுமாறு வற்புறுத்தினான். முஹம்மது மசியவில்லை. அரபு வழக்கப்படி தோற்றுச் சரணடைந்த அனைத்து யூதர்களையும் கொல்லும் உரிமை அவருக்கு இருந்தது. எனினும் முஹம்மது அதைச் செய்யவில்லை. மதீனாவைவிட்டு அவர்கள் ஓடினால் அவர்களை ஒன்றும் செய்வதில்லை என்று கூறினார். போர்க் காலங்களில் இவ்வாறு ஒரு குழுவை வெளியேற்றித் தண்டிக்கும் வழக்கம் அன்றிருந்தது. வேறு வழியின்றி பனூ கைனூபா யூதர்கள் மதீனாவை விட்டு வெளியேறினர். சிரியா நாட்டு எல்லையிலிருந்த வாதி அல் குரா என்னும் யூத இனம் அவர்களுக்கு அடைக்கலமளித்தது.

கைனூபா யூதர்கள் மீதான முஹம்மதின் பகை முற்றும் அரசியல் ரீதியானது. இன வெறுப்பின் அடிப்படையிலானதல்ல. ஒப்பந்தத்தை மதித்துச் செயல்பட்ட இதர சிறிய யூதக் குலங்களுடன் அவர் பகைமை பாராட்டவில்லை.

கைனூபா யூதர்களுக்கு ஏற்பட்ட கதி பிற எதிர்ப்பாளர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருந்தது. முஹம்மது அவ்வளவு எளிதான ஒரு நபரல்ல என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். பனூ நாதிர் குலத்தைச் சேர்ந்தவனும் நபிகளை எதிர்த்துத் தொடர்ந்து கவிதைப் பிரச்சாரம் செய்து வந்தவனுமான புலவர் கஅப் மதீனாவுக்குத் திரும்பிய போது முஹம்மதின் ஒப்புதலுடன் அவன் கொல்லப்பட்டான். “மாற்றுக் கருத்துக்களை என்னால் சகித்துக் கொள்ள முடியும். ஆனால் துரோகங் களை மன்னிக்க இயலாது” என நாதிர் யூதர்களிடம் நபிகள் சொல்லவும் செய்தார். பழைய ஒப்பந்தத்துடன் அவர்களின் பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் உறுதி செய்யும் புதிய உடன்படிக்கை ஒன்றை முஹம்மது முன் வைத்தபோது நாதிர் யூதர்களால் தட்ட முடியவில்லை. உட்பகைகளை முஹம்மது சமாளித்த விதம் அவரது பெருமையையும் வலிமையையும் அரபுலகில் மேலும் உயர்த்தியது.

மக்கத்துக் குறைஷியரின் தூண்டுதலால் தம்மைத் தாக்க முனைந்தவர் களை உக்கிரமாகப் போரிட்டு அழித்தன நபிகளின் படைகள். அந்த ஆண்டு கோடையில் ஸஃப்வான் இப்ன் உமையாவின் தலைமையில் ஒரு வணிகக் குழு ஈராக்கை நோக்கிச் செல்லும் நஜ்த் சாலை வழியே செல்வதையறிந்த நபிகள் அதன் மீதான சூறைத் தாக்குதலுக்கு ஸைத் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். கராடா கிணற்றருகில் ஸைதின் படைகளை சற்றும் எதிர்பாராமல் எதிர்கொண்ட குறைஷி வணிகக் கூட்டம் கொண்டு வந்த பொருட்களையெல்லாம் அப்படியே விட்டு விட்டு அச்சத்தில் கலைந்து சிதறியது.

# 21

# வெற்றியும் தோல்வியும்...

625 ம் ஆண்டு மார்ச் 11 அன்று 3000 வீரர்கள் 3000 ஒட்டகங்கள், 200 குதிரைகள் கொண்ட குறைஷியர் படை மதீனாவைத் தாக்கப் புறப்பட்டது. அஹாபிஷ், தகீஃப், அப்த் மனத் போன்ற பெதோய்ன் பழங்குடிகளும் குறைஷிகளுடன் இணைந்து கொண்டனர். அடுத்த பத்தாம் நாள் மதீனாவிற்கு வட மேற்கே உள்ள உஹுத் மலையருகிலுள்ள சமநிலத்தில் அவர்கள் படை இறங்கியது. இதற்குச் சற்று ஒரு வாரத்திற்கு முன்னதாகத்தான் மதீனா நோக்கிப் படை வருவதை முஹம்மதும் இதர முஸ்லிம்களும் அறிந்தனர். விவசாய நிலங்களை அவர்களால் காப்பாற்ற இயலவில்லை. எனினும் புறநகர்ப் பகுதிகளில் குடியிருந்தோரை அவர்களின் ஒட்டகங்கள், ஆடு மாடுகளுடன் நகரத்திற்குள் கொண்டு வர முடிந்தது.

போர்க்கால ஆலோசனைக் குழுவை அவசரமாகக் கூட்டினார் முஹம்மது. நகரத்திற்கு வெளியே சென்று தாக்குவது ஆபத்தாக முடியும் என மூத்தவர்கள் கூறினர். எதிரியால் முற்றுகையை வெகு நாட்களுக்குத் தொடர இயலாது என்பது அவர்கள் வாதம். இளைஞர்களும் நகருக்கு வெளியே விவசாய நிலங்களை வைத்திருந்தோரும் உடனடியாக வெளியே சென்று எதிரியை எதிர்கொள்ள வேண்டுமென்றனர். பத்ர் போரில் அல்லாஹ் நமக்கு உதவவில்லையா? வெறும் 350 வீரர்களைக் கொண்டு பெரும் படையைத் தோற்கடிக்கவில்லையா? விவாதத்தில் இவர்களின் குரலே ஓங்கியிருந்தது. வெளியேறித் தாக்குவது என்கிற முடிவை நோக்கி அவை நகர்ந்தது. எனினும் ஸஅத் இப்ன் முஆத் போன்றோர் இது அழிவுக்கே இட்டுச் செல்லும் என எச்சரித்தபோது அவர்களும் கூட உள்ளிருக்கச் சம்மதித்தனர்.

ஆனால் முஹம்மது முடிவை மாற்றத் தயாராக இல்லை. "ஒரு முறை ஒரு இறைத்தூதர் ஆயுதம் தரித்துவிட்டால் பின்னர் போர் முடியும் வரை அதைக் கழற்றுவது முறையாக இராது" என்று கூறிய நபிகள் கவசமணிந்து, வாளேந்தித் தனது பிரியத்துக்குரிய ஷவ்வாப் குதிரையின் மீது ஆரோகணித்து உஹுத்தை நோக்கிப் புறப்பட்டபோது அவருக்குப் பின் ஆயிரம் வீரர்கள் திரண்டிருந்தனர். 'சப்பாத்'தைக் காரணம் காட்டி யூதர்கள் உதவ மறுத்துவிட்டனர். மதீனாவுக்கும் உஹுத்திற்கும் இடையே படை இறங்கியபோது முஸ்லிம்களுக்கு இன்னொரு பெரிய சரிவு ஏற்பட்டது.

இப்ன் உபை 300 வீரர்களுடன் பின்வாங்கினான். “முஹம்மது ஆலோசனைகளைக் கேட்க மறுக்கிறார். சின்னப் பசங்களுக்குச் செவி சாய்க்கிறார். இது ஒரு தற்கொலைப் போர். இதில் பங்கு பெறுவது அபத்தம்” என்பது போன்ற ‘காரணங்களை’ அவன் முன் வைத்தான். எந்தத் துரோகிகள்தான் தமது செயலுக்குக் ‘காரணங்கள்’ சொல்லாமல் இருந்துள்ளனர்? வெற்றி நிச்சயமில்லை என உணர்ந்தபோது பு.ஆத் (617) போரிலும் கூட இப்படி இடையில் பின்வாங்கியவன்தான் இப்ன் உபை.

மார்ச் 23 அன்று இரு படைகளும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டன. எஞ்சிய 700 வீரர்களே அடங்கிய முஸ்லிம்களின் படை ஒப்பீட்டளவில் பலவீனமாகவே இருந்தது. மாறாகக் குறைஷிகள் உற்சாகத்தின் விளிம்பிலிருந்தனர். அபூ சுஃப்யானின் வலப்புறம் வாலித்தின் மகன் காலித்தும் இடப்புறம் அபூஜஹ்லின் மகன் இக்ரிமாஹ்வும் நின்றிருந்தனர். மதீனத்து அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் குலங்களைச் சேர்ந்தோரை நோக்கி, “உங்களோடு எங்களுக்கு பகையயான்றுமில்லை. திரும்பிச் செல்லுங்கள்” என அபூ சுஃப்யான் முழங்கியபோது, “இறைத்தூதரை விட்டு விட்டு நாங்கள் செல்லமாட்டோம்” என அன்சாரிகள் எதிர்க் குரல் எழுப்பினர். மக்காவுக்கு ஓடிப்போய் எதிரிகளுடன் இணைந்து கொண்டவனும் அவ்ஸ் குலத்தைச் சேர்ந்தவனுமான அபூ அமிர் ஏதோ பேச முயன்றபோது எழுந்த எதிர்ப்பைக் கண்டு அவன் வாயடைத்துப் பின்வாங்கினான்.

அன்றைய அரபு வழக்கப்படி குறைஷிப் படைகளுடன் வந்திருந்த பெண்கள் முரசை ஒலித்துக் கொண்டே உற்சாகப் பாடல்கள் பாடத் தொடங்கினர். அபூ சுஃப்யானின் மனைவி ஹிந்த் முன்னணியில் நின்று கொண்டு,

> “முன்னேறிச் சென்றால் உங்களைத் தழுவிக் கொள்வோம், மெல்லிய பஞ்சுக் கம்பளங்களை உங்களுக்கென விரிப்போம், பின்வாங்குவீர்களே யானால் உங்களை விட்டகல்வோம், உங்களை அன்பு செய்ய மாட்டோம்” (இப்ன்இஷ்ஹாக்)

எனப் பாடினாள்.

போர் தொடங்கியது. முதற்கட்டத்தில் முஸ்லிம்கள் முன்னேறுவதைப் போலத் தோன்றியது. பத்ர் போரில் செய்ததைப் போலத் தமது படைகளை நெருக்கமாக அணிவகுக்கச் செய்திருந்தார் முஹம்மது. எனினும் விரைவில் குழப்பம் ஏற்பட்டது. முஸ்லிம் வில் வீரர்கள் ஆணையை ஏற்க மறுத்தனர். சிதறி ஓடினர். காலித்தின் குதிரைப் படை பின்புறமாகக் தாக்கியது. பின்னாளில் முஸ்லிம்களின் புகழ்மிக்க ஒரு தளபதியாக விளங்கப் போகிறவர்தான் இந்த காலித் இப்ன் வாலித் என்பது குறிப்பிடத்தக்கது. சிதறி ஓடிய படைகளை நிறுத்தி வைக்கும் முயற்சியில் முஹம்மது முழு வெற்றி பெற இயலவில்லை. முதன் முதலில் களத்தில்

நேரடியாகப் பங்கு கொண்ட முஹம்மதைக் காக்கும் நோக்குடன் சுமார் 15 வீரர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அவரைச் சூழ்ந்து நெருங்கினர். ஓங்கிய கையில் எறி ஈட்டியுடன் நின்றிருந்த முஹம்மதின் முகத்தில் எறியப்பட்ட ஒரு கல் அவர் உதட்டைக் கிழித்துப் பற்களை உடைத்தன. இன்னொரு கல் அவரது கன்னங்களைப் பாதுகாத்துக் கொண்டிருந்த கவசப் பகுதியில் ஒன்றைத் தகர்த்தது. நபிகளின் முகம் குருதியால் நிறைந்தது. குறைஷிப் படைவீரன் ஒருவன் வலிமையாகத் தாக்கியபோது அவர் பின்புறம் சரிந்தார். தடுமாறி விழுந்த அவரைத் தோழர்கள் இருவர் தாங்கிக் கொண்டனர். நபிகள் மாண்டு போனார் என்ற செய்தி பரவியது. முஸ்லிம்கள் மேலும் சிதறினர். தப்பி ஓடினர். உயிர் தப்பிய முக்கியமானவர்களில் முஹம்மதின் மருமகன் உத்மானும் ஒருவர், கொல்லப்பட்டவர்களில் முக்கியமானவர் ஹம்ஸா. அபிசீனிய அடிமை வாஹ்ஷி வீசிய கட்டாரி அவரை வீழ்த்தியது. ஹம்ஸாவைக் கொன்றால் வாஹ்ஷியை விடுதலை செய்துவிடுவதாக அவரது உரிமையாளன் உறுதியளித்திருந்தான். பத்ர் போரில் தனது உறவினரை ஹம்ஸா கொன்றதற்குப் பழியாக வாஹ்ஷிக்கு இந்த உறுதியை அவன் அளித்திருந்தான். ஹம்ஸாவைக் கொன்ற பிறகு ஆயுதங்களை எறிந்துவிட்டு அமைதியாகத் திரும்பினார் வாஹ்ஷி. அவருக்கு வேறு நோக்கம் ஏதுமிருக்கவில்லை. காயம்பட்டவர்களைக் குறைஷிகள் வெறியுடன் கொன்று தீர்த்தனர். அன்றைய அரபு வழக்கப்படி குறைஷி மகளிர் கொல்லப்பட்டோரின் உடல்களைத் துண்டாக்கி மாலைகளாக அணிந்து கொண்டனர். பத்ர் போரில் தன் தந்தையைக் கொன்ற ஹம்ஸாவின் மார்பைப் பிளந்து ஈரலை எடுத்துக் கடித்துத் துப்பினாள் ஹிந்த்.

உஹத் மலைப் பாறைகளில் இரவைக் கழித்தார் முஹம்மது. அவருடன் 15 தோழர்களும்கூட இருந்தனர். வெற்றி பெற்ற குறைஷிகள் மதீனாவிற்குள் புகுந்து மேலும் அழிவைச் செய்வார்களா? சுமார் எழுபது முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர். முஸ்லிம் படை தோற்றுச் சோர்ந்திருக்கும் இந்தத் தருணம் குறைஷிகளுக்கு மிகவும் வாய்ப்பான ஒன்றாக இருந்தபோதிலும் அவர்களின் சிந்தனை வேறாக இருந்தது. பத்ர் போரில் இறந்தவர்களுக்குப் பழி தீர்ந்தாயிற்று. மதீனாவிற்குள் புகுந்தால் மதீனாவைக் காக்கும் நோக்கில் யூதர்களும், உபையும் கூட முஸ்லிம்களுடன் இணைந்து தாக்குகிற சூழல் ஏற்படும். இந்த ஒற்றுமை உணர்வை எதிரிக்கு ஏற்படுத்தலாகாது. தவிரவும் போரில் வெற்றி பெற்றிருந்த போதிலும் பலரும் காயமடைந்திருந்தனர். பெரும்பாலான குதிரைகளை முஸ்லிம் வீரர்களின் அம்புகள் வீழ்த்தியிருந்தன. எனவே பின்வாங்கிச் செல்லுதலே உசிதம் எனக் குறைஷிகள் தீர்மானித்தனர்.

சாலையில் பெரும் குழிகளை வெட்டி இறந்தவர்களைப் புதைத்தார் முஹம்மது. தப்பிப் பிழைத்தவர்களும் காயமடைந்தவர்களும் மெதுவாக மதீனாவை நோக்கித் திரும்பினர். போர்க்களத்தில் முஹம்மது இறந்து

போனதாக அறிந்துக் கலங்கியிருந்த மதீனத்துப் பெண்கள் அன்றைய அரபு வழக்கப்படித் திரும்பியவர்களை ஓலமிட்டு அழுது எதிர்கொண்டனர்.

தான் பட்டிருந்த காயங்களைக் கூடக் கவனியாமல் நல்ல நிலையிலிருந்த சில வீரர்களைத் திரட்டிக் கொண்டு அபு சுஃப்யானைப் பின் தொடர்ந்தார் முஹம்மது. மூன்று நாட்கள் வரை இது தொடர்ந்தது. இரவு நேரங்களில் ஆங்காங்கு பந்தங்களைக் கொளுத்தி வைத்து ஏராளமான படையுடன் தான் பின்தொடர்ந்து வருவது போன்ற ஒரு தோற்றத்தையும் அவர் ஏற்படுத்தினார். முஹம்மது உயிருடன் இருப்பதையும் படைகளுடன் பின்தொடர்ந்து வருவதையும் அறிந்த அபு சுஃப்யானின் படைகள் வேகமாகப் பின்வாங்கின. சுற்றியுள்ள அரபு இனக் குழுக்கள் மத்தியில் தமது தோல்வி ரொம்பவும் கேலிக்குரியதாக மாறி விடாதிருக்கவும் இம்முயற்சியை முஹம்மது மேற்கொள்ள வேண்டியிருந்தது.

ஆனாலும் முஸ்லிம்களுக்கு இதொன்றும் பெரிய ஆறுதலாக அமையவில்லை. அவர்கள் மிகவும் சோர்வுற்றிருந்தனர். பத்ர் போர் இறைவன் முஹம்மதை கைவிட்டுவிட்டதன் அடையாளமோ என்கிற அய்யம் அவர்களைப் பிடித்தாட்டியபோது இறைவாக்கின் துணையோடு அவர்களைத் தெளிவூட்டினார் முஹம்மது.

> "(நபியே!) நீர் அதிகாலையில் புறப்பட்டு முஸ்லிம்களை உஹதுப் போர்க்களத்தில் அணிவகுத்தி நிறுத்திய கணத்தை முஸ்லிம்களுக்கு நினைவூட்டுவீராக. அல்லாஹ் எல்லாவற்றையும் கேட்பவனாகவும் அறிபவனாகவும் உள்ளான். உங்களில் இரு பிரிவினர் கோழைத்தனம் காட்ட முனைந்த நேரத்தை நினைவு கூறும்". (3:121,122)

என முஸ்லிம்களிடையே இருந்த ஒற்றுமையின்மையும், ஆணைக்குக் கீழ்ப்படாத ஒழுங்கின்மையுமே தோல்விக்குக் காரணம் என்பதைத் திருக்குர்ஆன் தெளிவுபடுத்தியது. உண்மை முஸ்லிம்களையும், கோழைகளையும் இப்ன்உபை போன்ற துரோகிகளையும் பிரித்து இனம் காட்ட உஹத் போர் பயன்பட்டது.

உபையும் யூதர்களும் முஹம்மதுக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டனர். நபிகள் ஒரு உண்மையான இறைத்தூதர் அல்ல என்றனர். அவர்களை வெட்டிச் சாய்க்க ஆவேசம் கொண்ட உமரை அமைதிப் படுத்தினார் முஹம்மது. குறைஷிகளால் உம்மாவுக்கு இனி ஒரு தோல்வி நிகழாது. கஅபாவில் நாம் தொழும் நாள் விரைவில் வரும் என்கிற நம்பிக்கையை முஸ்லிம்கள் மத்தியில் ஊட்டினார். உஹத் போருக்குப் பின் உபையையும் அவனது குழுவினரையும் 'முனாஃபிகின்' என்ற சொல்லால் அழைக்கத் தொடங்கியது திருக்குர்ஆன். போலிகள், (hypocrites), ஏமாற்றுக்காரர்கள், வஞ்சகர்கள் என இச்சொல்லை மொழியாக்குவது வழக்கம். எனினும் 'புழு', 'எலி' என்பதே சரியான

*மொழியாக்கம் என மாண்ட்கோமரி வாட் குறிப்பிடுவார். உஹத் போரில் புழுக்களைப் போல அவர்கள் நழுவவில்லையா?*

*போருக்குப் பிந்திய நடைமுறைச் சிக்கல்கள் உம்மாவிற்கெனப் பல புதிய சட்டங்களையும், விதிமுறைகளையும், வழமைகளையும் உருவாக்கிக் கொள்ளப் பயன்பட்டன. முஸ்லிம்கள் நான்கு மனைவியர் வரை மணம் செய்து கொள்ளலாம் என்கிற இறைவாக்கு இத் தருணத்திலேயே அருளப்பட்டது. போரில் இறந்து விட்டவர்கள் விட்டுச் சென்ற மனைவி மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு உம்மாவுக்கு இருந்தது.*

> "நீங்கள் அனாதைகளின் பொருட்களை அவர்களுக்கே வழங்கி விடுங்கள். (அவற்றிலுள்ள) நல்லவற்றிற்குப் பதிலாக கெட்டவற்றை மாற்றி விடாதீர்கள். அவர்களுடைய பொருட்களை உங்களுடையதாக்கி ஏப்பம் விட்டு விடாதீர்கள். நிச்சயமாக அது பெரும் பாவமாகும். அனாதைகளிடம் நியாயமாக நடந்து கொள்ள மாட்டோம் என நீங்கள் அஞ்சினால் உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு பேரைத் திருமணம் செய்து கெள்ளலாம். அவர்கள் எல்லோருக்கும் சமமமாக நியாயமாக நடந்துகொள்ள இயலாது என அஞ்சினால் ஒரு பெண்ணை மட்டும் மணம் முடித்துக் கொள்ளுங்கள். அல்லது உங்கள் கைகள் சொந்தமாக்கிக் கொண்ட பெண்களையே மனைவியாக்கிக் கொள்ளுங்கள்" (4-2,3).

*என்பதே பலதார மணம் குறித்த இறை வழிகாட்டல். திருமணத்தின்போது மணப்பெண்ணுக்கு மணமகன் மஹர் தொகை அளிக்க வேண்டிய கட்டாயத்தையும் அவ்வாறு அளிக்கப்பட்டதன் ஒரு பகுதியைக் கூட அவளது அனுமதியின்றி அனுபவிக்கலாகாது என்பதையும் அடுத்த இறைவாக்கு தெளிவுபடுத்தியது. அனாதைப் பெண்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களின் பாதுகாப்பாளர்கள் திருமணம் செய்து கொள்வதையும் திருக்குர்ஆன் தடை செய்கிறது* ***(4:24)****.*

*முஸ்லிம்களின் பலதார மணம் குறித்த கொச்சையான எதிர்ப் பிரச்சாரங்களுக்கெல்லாம் ஆதாரமாக அமைவது மேற்குறித்த இறைவாக்கே. ஆனால் அது எத்தகைய நேரத்தில் அருளப்பட்டது என்பதை அவர்கள் அறியார்கள்; அல்லது அறிந்தே அதுகுறித்துப் பேசாதிருப்பார்கள். அனாதைகள் குறித்த கவலை முஹம்மதுக்குத் தொடக்கம் முதலே இருந்து வந்தது. உஹத் போரில் அப்பிரச்சினை உச்சமாகியது. இறந்து போகிறவர்கள் மனைவியை மட்டும் விட்டுச் செல்வதில்லை. மகள்களை, குழந்தைகளை, சகோதரிகளையும் அவர்களுக்கு உரித்தான சொத்துக்களையும் கூட விட்டுச் செல்கின்றனர். இறப்புக்குப் பின் பொறுப்பேற்றுக் கொள்கிறவர்கள் இவர்களைத் தவறாகப் பயன்படுத்தக்கூடும். பாலியல் ரீதியான சுரண்டல்களோ*

*அல்லது சொத்துக்கு ஆசைப்பட்டுத் திருமணமே செய்விக்காமல் வைத்திருப்பதோ கூடச் சாத்தியம்.*

*அன்றைய அரபு நாட்டில் ஆண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததையும், ஆண்கள் ஏராளமான பெண்களை அந்தப்புரத்தில் வைத்திருப்பதைப் பெருமையாகக் கருதும் மரபு இருந்ததையும் இத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும். இந்தப் பின்னணியில் நான்கு மனைவியருக்கு மேல் திருமணம் செய்யக்கூடாது, அப்படிச் செய்தாலும் எல்லா அம்சங்களிலும் அவர்களைச் சமமாக வைத்திருக்க வேண்டும் என்கிற நிபந்தனைகள் எத்தகைய கலகத் தன்மையுடையதாக இருந்திருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.*

*திருக்குர்ஆன் பெண்களுக்குச் சம உரிமை வழங்கவில்லை என்கிற குற்றச்சாட்டும் வரலாற்றைப் புரிந்து கொள்ளாமை அல்லது திரித்தலின் விளைவே. குடும்பச் சொத்தில் ஆண் வாரிசுகளுக்குள்ள உரிமையில் பாதியே பெண் வாரிசுகளுக்கு உண்டு எனத் திருக்குர்ஆன் விதிக்கிறது. அதுபோல பெண்களின் சாட்சியங்கள் வழக்குகளில் ஏற்கப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டாலும் ஆண்களின் சாட்சியத்தில் பாதி அளவே அது மதிப்புடையது எனவும் குர்ஆன் விதிக்கிறது. இந்த இரு அம்சங்களையும் சுட்டிக் காட்டியே மேற்குறித்த விமர்சனம் வைக்கப்படுகிறது. இஸ்லாமுக்கு முந்திய அரபுலகில் பெண்களின் நிலையை அறியாதவர்கள் வைக்கும் விமர்சனமே இது. பெண்களுக்குச் சொத்துரிமையே இல்லாத நிலையில் இத்தகைய விதி உருவாக்கப்படுவது கவனிக்கத்தக்கது. தவிரவும் ஆண்கள் தம் மனைவியருக்கு மஹர் அளிக்க வேண்டிய கடப்பாடு இருப்பதால் அவர்களுக்கு கூடுதல் பங்கு வழங்கப்படுவதைக் கவனிக்க வேண்டும். இவ்வாறு வழங்கப்பட்ட மஹர் பங்கை அம்மனைவி எப்படி வேண்டுமானாலும் செலவு செய்யலாம். விவாகரத்து செய்யப்பட்ட போதிலும் கூட அவர்கள் மஹர் தொகையைத் திருப்பித் தர வேண்டிய கட்டாயமில்லை. அடிமைகளாக நடத்தப்பட்டு, எந்த விதமான சட்ட இருப்பும் (leagal existence) அவர்களுக்கு அனுமதிக்கப்படாத நிலையில் அவர்களது சாட்சியம் ஏற்கப்பட வேண்டும் என இறை வாக்கு அமைந்தது எந்த அளவிற்குப் புரட்சிகரமானது என்பதைச் சிந்திக்கவேண்டும். புரட்சிகரத்தன்மை என்பது காலத்தோடு தொடர்புடைய ஒன்று. ஒரு காலத்திய புரட்சி இன்னொரு காலத்தில் சாதாரணமாகத் தோன்றக்கூடும்.*

*ஏராளமான பெண்கள் அடங்கிய அந்தப்புரங்களுக்கு (Harem) இஸ்லாமுக்குப் பிந்திய காலங்களில் இறை ஏற்பு கிடையாது. நான்கு திருமண எல்லை என்பது அந்தப்புர மரபுக்கு எதிரானதே. தவிரவும் பெண் சிசுக்கொலையைத் திருக்குர்ஆன் தொடர்ந்து கண்டித்து வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஏழைகளுக்கும் அடிமைகளுக்கும் திருமணம் செய்விப்பதை ஊக்குவிக்கும் திருக்குர்ஆன் அவர்களின் எதிர்காலம்*

*சிறப்பாக விளங்கும் என்கிற நம்பிக்கையையும் விதைக்கிறது (24:33) எதிர்காலத்தின் மீது நம்பிக்கை ஊட்டும் இப்பண்பு குறிப்பிடத்தக்கது.*

*19-ம் நூற்றாண்டு வரை பல்கலைக் கழகங்களிலும் நேற்று வரை வாக்குச்சாவடிகளிலும் பெண்களை அனுமதிக்காத மேலைக் கிறிஸ்தவச் சமூகமும் கணவனின் இறப்புக்குப் பிறகு மனைவி உயிர் வாழ்தலை அனுமதிக்காத இந்துச் சமூகமும் இஸ்லாமியப் பெண்கள் நிலை குறித்துப் பேச எந்தத் தகுதியும் உடையவை அல்ல. தமிழ்நாட்டில் கூட பெண் சிசுக்கொலை என்பது ஒரு இந்து சமூகப் பழக்க வழக்கமாகவே உள்ளது. கிறிஸ்தவர்களிடமும் முஸ்லிம்களிடமும் இப்பண்பு இல்லை. இஸ்லாமியப் பெண்கள் நிலை, விவாகரத்து, சொத்துரிமை முதலியன குறித்து இன்று முஸ்லிம்கள் மத்தியிலேயே நல்ல ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற்று வருவதையும் நாம் மனம் கொள்ள வேண்டும்.*

# முகத்திரை எதற்கு?

22

உஹத் போருக்குப் பின்பு முஸ்லிம்கள் எந்த அளவிற்குப் பலவீனமாகக் கருதப்பட்டார்கள் என்பதற்குச் சான்றாக இரு நிகழ்வுகளைச் சொல்லலாம். நஜ்த்தைச் சேர்ந்த பெதோய்ன் குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க இஸ்லாமை விளக்கவும் திருக்குர்ஆன் ஓதும் பயிற்சி அளிக்கவும் முஹம்மதால் அனுப்பப்பட்ட திறன்மிக்க ஆறு முஸ்லிம்களை மனாத் என்னும் கடவுளை வணங்கும் ஹுதாய்ல் தலைவர்கள் தாக்கினர். மூவர் அங்கேயே கொல்லப்பட்டனர். தப்பியோட முயற்சித்தவர் ஒருவர் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டார். மீதி இருவரையும் குறைஷிகளிடம் விற்றனர். இருவரையும் அவர்கள் சிலுவையில் கொன்றனர்.

அதே நேரத்தில் பனூ அமீர் எனப்பட்ட பெதோய்ன் பழங்குடி ஒன்றின் தலைவரும் முஹம்மதின் புதிய மாமனாருமான அபூ பாராவின் வேண்டுகோளுக்கிணங்க நாற்பது இஸ்லாமியப் பிரச்சாரகர்களை அனுப்பி வைத்தார் நபிகள். அபூ பாராவின் எதிரி ஒருவனின் தூண்டுதலால் சுலாயம் குழுவினர் இந்தப் பிரச்சாரகர்கள் அனைவரையும் வெட்டிக் கொன்றனர். தப்பி வந்த ஒருவர் வரும் வழியில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த அமீர் குலத்தைச் சேர்ந்த இருவரைக் கொன்று விட்டு மதீனா வந்தடைந்தார். தோழர்கள் கொல்லப்பட்டதால் முஹம்மது சோர்வுற்றிருந்தபோதும் இதற்குத் தொடர்பில்லாத அமீர்கள் இருவர் கொலை செய்யப்பட்டதை அவர் ஒப்பவில்லை. ஈட்டுப் பணம் தருவதாக அபூ பாராவிடம் வாக்களித்தார். இது அமீர்கள் மத்தியில் மட்டுமின்றி சுலாயம்கள் மத்தியிலும் முஸ்லிம்கள் மீது மரியாதை ஏற்படுத்தியது. பலர் இஸ்லாமில் இணைய முடிவெடுத்தனர்.

ஈட்டுத் தொகையை மதீனாவாசிகளிடம் முஹம்மது திரட்டத் தொடங்கியபோது பனூ நாதிர் குல யூதர்கள் அதுகுறித்து ஆலோசனை செய்து அறிவிப்பதாக முஹம்மதையும் தோழர்களையும் காத்திருக்கச் சொன்னார்கள். காத்திருந்த நபிகள் திடீரென அவ்விடத்தை விட்டு அகன்றார். நாதிர் குலத்தைச் சேர்ந்த புலவன் கஅப்பைக் கொலை செய்வதற்குப் பழி வாங்கும் பொருட்டு தனது தலையில் கல் ஒன்றை உருட்டிக் கொலை செய்யும் முயற்சி பற்றி கப்ரியல் எனும் வானவர் தன்னை எச்சரித்ததால் அவ்வாறு அகன்றதாகப் பின்னர் முஹம்மது

கூறினார். அத்தகைய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டதை வரலாற்றசிரியர்களும் உறுதி செய்கின்றனர்.

அவ்ஸ் குலத்தைச் சேர்ந்த முஹம்மத் இப்ன் மசால்மா என்பவரை அனுப்பி ஒப்பந்தத்தை மீறிக் கொலை செய்ய முயன்ற பனூ நாதிர்கள் உடனடியாக மதீனாவை விட்டு வெளியேற வேண்டும் என எச்சரித்தார் முஹம்மது. காலம் மாறிவிட்டது என்பதை மசால்மா அவர்களுக்கு உணர்த்தினார். எனினும் இப்ன் உபையின் தூண்டுதலில் பனூ நாதிர்கள் வெறியேறாமல் தம் கோட்டைக்குள் சரண் புகுந்தனர். கைனூபா யூதர்களை முற்றுகையிட்டது போலவே நாதிர் யூதர்களையும் முற்றுகையிட்டன முஹம்மதின் படைகள். இருவாரங்கள் ஆகியும் உபை வாக்களித்தது போல எந்த உதவிகளையும் செய்யவில்லை. போதாக்குறைக்கு ஓர் அதிரடி நடவடிக்கையாக அவர்களின் பேரீத்த மரங்களையும் வெட்ட ஆணையிட்டார் முஹம்மது. வேறு வழியின்றிச் சரணடைந்த யூதர்கள் தம்மை உயிருடன் விட்டுவிட வேண்டினர். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஆண்கள் அனைவரையும் கொன்றுவிட்டுப் பெண்களையும் சொத்துக்களையும் கைப்பற்றுவதே அன்றைய அரபு வழக்கமாயிருந்த போதிலும் முஹம்மது அவர்கள் உயிருடன் வெளியேறச் சம்மதித்தார். ஒட்டகங்களில் ஏற்றிச் செல்லுமளவிற்கு தம் சொத்துக்களை எடுத்துச்செல்லவும் அனுமதித்தார். தாரை தப்பட்டைகள் முழங்க கிட்டத்தட்ட எல்லாவற்றையும் ஏற்றிக்கொண்டு சிரியா செல்லும் வடக்குச் சாலையை நோக்கி நாதிர் யூதர்கள் அகன்றனர். சிலர் மட்டும் கைபரிலேயே தங்கி அபு சுஃப்யானுக்கு ஆதரவு திரட்டும் பணியைத் தொடங்கினர்.

இவ்விரு நிகழ்வுகள் தவிர முஹம்மது அடுத்தடுத்து மேற்கொண்ட சில நடவடிக்கைகள் அரபுலகில் உஹத் போருக்குப் பின் அவர் இழந்த மரியாதையை மீண்டும் உறுதிப்படுத்தின. உஹத் போர் முடிந்து திரும்பும் போது தைரியமிருந்தால் அடுத்த ஆண்டு பத்ர் சந்தையின் போது தம்மை எதிர்கொள்ளுமாறு சவால் விட்டுச் சென்றிருந்தான் அபூ சுஃப்யான். ஏப்ரல் 626-ல் 1500 பேர் கொண்ட படையுடன் பத்ரில் முகாம் அமைத்துத் தங்கினார் முஹம்மது. சுஃப்யான் இதை எதிர்பார்க்கவில்லை. முஸ்லிம்கள் வரமாட்டார்கள் என நம்பித் தனது படைகளைத் திரட்டி அனுப்பிய சுஃப்யான் முஸ்லிம்களின் வருகையை அறிந்தவுடன் இரண்டே நாட்களில் தனது படையைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். இது குறைஷிகள் மத்தியில் மட்டுமின்றி அரபுகள் மத்தியிலும் அவனுக்குப் பெரும் இகழ்வை ஏற்படுத்தியது. அதே சமயத்தில் பெதோயன் இனக்குழுக்கள் முஸ்லிம்களை மீண்டும் வியப்புடனும் மரியாதையுடனும் நோக்கத் தொடங்கினர்.

திருமணமாகி எட்டே மாதத்தில் (ஜனவரி 626) முஹம்மதின் புதிய மனைவி ஸைனப் பின்ட் குஸைமாஹ் இறந்தார். இதற்குச் சில மாதங்களுக்குப் பின் இறந்துபோன அபு சலாமாவின் விதவையான உம்

சலாமாவை முஹம்மது திருமணம் செய்ய விருப்பம் தெரிவித்தார். சக்தி வாய்ந்த அவரது மக்ஸூம் குலத்துடன் தொடர்பை இறுக்கமாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் முஹம்மதுக்கு இருந்தது. உம் சலாமா அதை ஏற்கவில்லை. தனக்கு வயதாகிவிட்டது என்றும் பொறாமை உணர்வுடைய தான் முஹம்மதின் இதர மனைவியருடன் சுமூகமாக இருக்க இயலாது என்றும் கூறினார். "எனக்கும் கூடத்தான் வயதாகி விட்டது" என்று முறுவலித்த முஹம்மது, "உன் பொறாமையை இறைவன் பார்த்துக் கொள்வார்" என்றார்.

உம்சலாமா ஊகித்தது சரிதான். அவரது மனைவியருக்குள் பிரச்சினை எழவே செய்தது. உம்மாவுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் முஹம்மதின் குடும்பத்திற்குள்ளும் பிரதிபலித்தன. புலம் பெயர்ந்தவர்களுள் பிரபுக் குலத்தைச் சேர்ந்த மக்ஸூம் குலத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியவர் உம்சலாமா. ஆயிஷா, ஹஃப்ஸா போன்றோர் அடித்தளப் பிரிவுகளைச் சேர்ந்தோர். புதிதாக யார் வந்தாலும் ஏதேனும் ஒரு குழுவில் அவர் தம்மை இணைத்துச் சொல்வது வழக்கம். உம் சலாமா பாத்திமாவையும் இதர வீட்டுப் பெண்களையும் (அஹ்ல்-அல்-பெய்த்) தம்மோடு இணைத்துக்கொள்ள முயன்றார். பின்னர் முஹம்மது மணந்து கொண்ட ஸைனப் பின்ட் ஜஹ்ஷூம் உம் சலாமாவுடேனேயே தன்னை இணைத்துக் கொண்டார். முஹம்மதின் மறைவுக்குப் பின் உம்மாவிலிருந்து இந்த இரு பிரிவுகளுக்கிடையே வேறுபாடுகள் பெரிதாய் வளர்ந்தன. இன்றும் அது தொடர்வது குறிப்பிடத்தக்கது. பாத்திமாவும் அலியும் முஸ்லிம் சமூகத்திற்குத் தலைமை ஏற்கவேண்டும் என வற்புறுத்திய அஹ்ல்-அல்-பெய்த்களே பிறகு 'ஷியா' முஸ்லிம்களாயினர்.

இத்தருணத்தில் தனது அத்தை மகளும் வளர்ப்பு மகன் ஸைதின் விவாகரத்து பெற்ற மனைவியுமான 35 வயது ஸைனைப் பின்ட் ஜஹ்ஷ்சை முஹம்மது திருமணம் செய்து கொண்டது உம்மாவில் சில பிரச்சினைகளை ஏற்படுத்தியது. வால்டேர் போன்ற முஹம்மதின் மேலை விமர்சகர்கள் இதை முன்வைத்து நிறைய அவதூறுகளைச் செய்துள்ளனர். இதுகுறித்துச் சொல்லப்படும் கதையொன்றின்படி (பார்க்க: மார்ட்டின் லிங்ஸ்) ஸைத்தைப் பார்ப்பதற்காக ஒரு நாள் மாலை அவரது வீட்டிற்கு நபிகள் சென்றபோது அங்கு தனியே இருந்த ஸைனப்பை அரைகுறை ஆடையில் காண நேரிடுகிறது. திகைத்துத் திரும்பினார் முஹம்மது. ஸைதுடன் வாழ்வதில் விருப்பமற்ற அழகியும் உயர்குலப் பெண்ணுமான ஸைனப் இந்நிகழ்வு குறித்துப் பெருமையோடு பேசத் தொடங்கினார். மன வருத்தமுற்ற ஸைத் முஹம்மதை அணுகி அவர் விரும்பினால் மனைவியைத் தான் விவாகரத்து செய்துவிடுவதாகக் கூறினார். கடவுளுக்கு அஞ்சி நடக்குமாறும் மனைவியைக் கை விட்டுவிட வேண்டாம் எனவும் அவருக்கு அறிவுரை கூறினார் முஹம்மது. எனினும் பிரச்சினை முற்றியது. ஸைனைப்பை ஸைத் விவாகரத்து செய்தார். ஸைனபைத்

திருமணம் செய்து கொள்ள வேறு யாரும் தயாராக இல்லை. இறுதியில் இறைத்தூதரே அவரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டியதாயிற்று.

வளர்ப்பு மகனின் விவாகரத்து செய்யப்பட்ட மனைவியை இறைத்தூதர் எப்படித் திருமணம் செய்து கொள்ளலாம் என்கிற பிரச்சினை எழுந்தபோது அது தடை செய்யப்பட்ட திருமணம் அல்ல என விளக்கி ஒரு இறைவாக்கு எழுந்தது. ஸைதுக்கு முஹம்மது அளித்த அறிவுரையை நினைவு கூர்ந்த அல்லாஹ் முஹம்மதுக்கும் ஸைனப்பிற்கும் திருமணம் செய்வித்ததற்கான பொறுப்பை தானே ஏற்றுக்கொண்டான். இறைத்தூதர் இங்குள்ள எந்த ஆணுக்கும் தந்தையல்லர் என்றும் அறிவித்தான் (33:37-40). இதன் பின்னரே பிரச்சினை ஓய்ந்தது. தத்து எடுத்துக் கொள்வதை ஒரு ரத்த பந்தமாக இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை. எனவே அறிவிக்கப்பட்ட திருமணத் தடைகள் எதுவும் தத்து உறவுக்குப் பொருந்தாது.

ஸைனப்பின் திருமணக் கொண்டாட்டங்களின் ஊடாக நடைபெற்ற இன்னொரு நிகழ்வும் குறிப்பிடத்தக்கது. ‘திரை வாக்குகள்’ (verses of the curtain) எனப்படும் திருக்குர்ஆன் வாசகங்கள் இறக்கப்பட்டதே அது. உம்மாவிலுள்ள இதர பெண்களிடமிருந்து முஹம்மதின் மனைவியர் பிரித்தறியப்பட வேண்டும் என அது உரைத்தது. முஸ்லிம் மரபில் ‘ஹிஜாப்’ எனப்படும் முகத்திரை அணியும் வழக்கம் எவ்வாறு உருவாகியது என்பது குறித்துப் பல கதைகள் உண்டு. முஹம்மதின் மனைவியர் இரவு நேரங்களில் உடற் கடன்களை நிறைவேற்றுவதற்காக வெளியே செல்லும்போது உபையின் ஆட்கள் (முனாஃபிகின்கள்) அவர்களைக் கேலி செய்தனர் எனவும் இதை ஒட்டிப் பெண்கள் குறித்து பழமைக் கருத்துக்கள் நிரம்பிய உமர் முஹம்மதின் மனைவியரைத் திரையிட்டுப் பார்வையிலிருந்து மறைக்க வேண்டும் என்கின்ற வழக்கத்தைக் கொண்டு வந்தார் எனவும் கூறுவார் உண்டு. அரபுச் சமூகத்தில் முஹம்மதின் முக்கியத்துவம் வளர வளர அன்றைய பாரசீக மற்றும் பைசான்டிய வழக்கங்களில் ஒன்றான உயர்குலப் பெண்களைப் பிரித்து நிறுத்தும் பழக்கத்தை நபிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று எனச் சொல்வாரும் உண்டு. பாலியல் உறவுக் கட்டுப்பாடுகள் மிகவும் தளர்ந்திருந்த காலகட்டம் அது. ஒரு சிறிய பிரச்சினை ஏதும் கிடைத்தால் கூட அதை வைத்து முஹம்மது குடும்பத்தின் மீதே பெரும் அவதூறுகளைச் செய்ய உள் எதிரிகள் காத்திருந்த சூழலில் முஹம்மது கடும் எச்சரிக்கைகளைக் கடைபிடிக்க வேண்டியிருந்தது.

ஸைனப்பின் திருமணத்தை ஒட்டி நடந்த விருந்தின்போது சிலர் அதிக நேரம் தங்கிப் பிரச்சினைகளை உருவாக்கினர். அச்சமயத்தில் எழுந்ததே,

“நம்பிக்கையாளர்களே இறைத்தூதரின் இல்லத்தில்

அழைக்கப்பட்டாலன்றி நுழையாதீர். (அழைக்கப்பட்ட போதும்) விருந்து தயாராவதற்கு முன்பாகப் போய் காத்திருக்காதீர். ஆனால் அழைக்கப்பட்டால் செல்லுங்கள்; விருந்து முடிந்த பின் கலையுங்கள்; வெட்டிப் பேச்சுக்களில் ஈடுபடாதீர்கள். அது இறைத்தூதருக்குச் சங்கடங்களை உருவாக்கும். உங்களை வெளியேறச் சொல்ல அவர் வெட்கப்படக்கூடும். ஆனால் அல்லாஹ்வோ உண்மையை வெளிப்படுத்த வெட்கப்படுவதில்லை. இறைத்தூதரின் மனைவியரிடம் நீங்கள் எதையும் கேட்க விரும்பினால் திரைக்குப் (ஹிஜாப்) பின்னிருந்து கேளுங்கள். இது உமது உள்ளத்தையும் அவர்களின் உள்ளத்தையும் பரிசுத்தமாக்கும். இறைத்தூதருக்குச் சங்கடம் விளைவிப்பது உமக்கு ஏற்றதல்ல. அவரது மனைவியரை அவரது காலத்திற்குப் பின் நீங்கள் திருமணம் செய்து கொள்வதும் கூடாது" (33:53)

*என்னும் 'திரைவாக்கு'.*

*முஹம்மதுக்கென தனி இல்லமோ அலுவலகமோ கிடையாது என்பதும் ஒவ்வொரு நாளும் மனைவியரில் யாரேனும் ஒருவர் இல்லத்தில் அவர் தங்குவார் என்பதும் நினைவிற்குரியது. மதீனாவில் அவரது முக்கியத்துவம் அதிகமாக அதிகமாகப் பலரும் அவரை அணுகிப்பேசவும், கலந்தாலோசிக்கவும், தீர்ப்புகள் கேட்கவும் அணுக வேண்டிய நிலை ஏற்பட்டது. சிலர் முஹம்மதின் மனைவியரை அணுகி அவர்கள் மூலமாக நபியிடம் சில கருத்துக்களைத் தெரிவிக்கும் நிலையையும் எடுத்தனர். வயதில் இளையவரும் கலகலவென எல்லோரிடமும் பேசக் கூடியவருமான ஆயிஷாவை இதற்கெனவே சிலர் அணுகினர். இந்தச் சூழலை அவதூறுகளுக்கான களனாக எதிரிகள் பயன்படுத்திக் கொண்டால் அது உம்மாவின் பிளவுக்குக் காரணமாகும் என்கிற சூழலிலேயே மேற்குறித்த இறைவாக்கு எழுந்தது. பெண்கள் மீதான ஒடுக்குமுறையாக 'ஹிஜாப்' பழக்கம் திணிக்கப்படவில்லை. தவிரவும் முஹம்மது குடும்பத்துப் பெண்களுக்குத்தான் இது விதிக்கப்பட்டதே தவிர முஸ்லிம் பெண்கள் அனைவரும் திரையிட்டு முகமலர் மறைக்க வேண்டும் எனத் திருக்குர்ஆன் எந்த இடத்திலும் வரையறுக்கவில்லை. முஸ்லிம் பெண்கள் கண்ணியமாக உடை உடுத்த வேண்டும் என்பது மட்டுமே அறிவுறுத்தப்படுகிறது. இது ஆண்களுக்கும் கூடத்தான் விதிக்கப்பட்டுள்ளது. பெண்டிர் திரையிட்டுத் தம்மை ஆண்களிடமிருந்து மறைத்துக் கொள்ள வேண்டும் என்றோ வீட்டில் பிறர் பார்வையில் படாமல் தனியே முடங்கிக் கிடக்க வேண்டும் என்றோ திருக்குர்ஆன் விதிக்கவில்லை. 'ஹிஜாப்' அணிவது என்பது முஹம்மதின் மரணத்திற்குப் பல தலைமுறைகளுக்குப் பின்னரே இஸ்லாமிய உலகில் வழக்கமாயிற்று. பாரசீக மற்றும் பைசாண்டிய வழக்கமான இது இஸ்லாமின் வளர்ச்சிக் கட்டத்தில் அத்துடன் இணைந்து கொண்ட ஒன்று. இன்று நடைமுறையில் பல்வேறு முஸ்லிம் நாடுகளில் பல்வேறு மட்டங்களில் இவ்வழக்கம் கடைபிடிக்கப்படுவதும் முஸ்லிம்*

பிரிவினர்களிலேயே இது பல்வேறு வகைகளில் கடைபிடிக்கப்படுவதும் கவனிக்கத்தக்கது. சிலர் வெறுமனே முக்காடிட்டுக் கொள்கின்றனர். சிலர் முழுமையாகத் தம்மை மறைத்துக் கொள்கின்றனர்.

முஹம்மதின் மனைவியருக்கு 'ஹிஜாப்' அணிவது வற்புறுத்தப்பட்டது என்பது கூட அவர்களது நிலையும் கவுரமும் உயர்ந்ததன் அடையாளமே ஒழிய அவர்கள் ஒடுக்கப்பட்ந்தன் விளைவு அல்ல. இறைத்தூதரின் மரணத்திற்குப் பின்னர் அவரது மனைவியர் இறையியலில் மட்டுமன்றி அரசியலிலும் முக்கிய பங்காற்றினர். இவை தொடர்பான பிரச்சினைகளில் அவர்களது கருத்தைக் கேட்கும் வழக்கமிருந்தது. நான்காவது கலீபாவான அலீக்கு எதிரான புரட்சியில் (656) ஆயிஷா முக்கிய பங்கு வகித்தது குறிப்பிடத்தக்கது. முஹம்மது வீட்டுப் பெண்கள் மட்டும் தம் உயர் நிலையைக் குறிக்கும் 'ஹிஜாப்' அணிந்திருந்ததைக் கண்டு பிற முஸ்லிம் பெண்டிரும் அப்பழக்கம் தமக்கும் வேண்டும் எனக் கேட்டதாகவும் சமநிலைக் குறிக்கோளுடைய முஸ்லிம் சமூகம் இதை ஏற்றுக் கொண்டதாகவும் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆக ஹிஜாப் அணிதல் என்பது முஸ்லிம் பெண்களின் பெருமைக்குரிய சின்னமாகவே தொடங்கியது.

முஹம்மது இத்தனை எச்சரிக்கைகளைக் கடைபிடித்ததும் கூட அவர் குடும்பத்தின் மீது எதிரிகள் ஒரு பெரிய அவதூறைச் செய்யும் நிலை ஏற்பட்டதைத் தடுக்க இயலவில்லை. பனூ அல் முஸ்தாலிக் என்னும் குழுவினர் மதீனா மீது படை எடுக்க இருந்ததையறிந்த முஹம்மது தமது படையுடன் அவர்களை மதீனாவின் வடமேற்கே செங்கடல் ஓரமான முராய்ஸி கிணற்றருகில் எதிர்கொண்டார். மிக எளிதான வெற்றியாக அது அமைந்தது. 2000 ஒட்டகங்கள், 5000 ஆடுகள் தவிர 200 பெண்களும் முஸ்லிம் படை வசமாயினர். பெண்களுள் முஸ்தாலிக் இனத் தலைவன் அல் ஹாரித்தின் மகள் ஜுவாய்ரியாவும் அடக்கம். பேரழகியான ஜுவாய்ரிபாவைக் கண்டு முஸ்லிம் படையுடன் அழைத்துச் செல்லப்பட்டிருந்த ஆயிஷா அதிர்ச்சியும் அச்சமும் அடைந்தார். "என் கண்ணில் பட்டது போல முஹம்மதின் கண்களிலும் அவள் படக்கூடுமே" (இப்ன் இஷாக்) எனக் கலங்கினார். ஜுவாய்ரியா இஸ்லாமுக்கு மாறச் சம்மதித்தவுடன் முஹம்மது அவரைத் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணத்தின் மூலம் இன்னொரு எதிர்க் குழுவினர் முஸ்லிம்களின் கூட்டாளியாயினர்.

இது நிற்க. திரும்பி வரும் வழியில் ஓரிடத்தில் ஓய்வுக்காகப் படை இறங்கியது. உடற்கடன்களை நிறைவேற்றுவதற்காக முகாமிலிருந்து அகன்ற ஆயிஷா திரும்பி வந்தபோது தனது அணிகலன் ஒன்று கழன்று விழுந்துவிட்டதை அறிந்து மீண்டும் அவ்விடத்திற்கு சென்றார். ஆயிஷா முகாமிற்குத் திரும்பி வந்தபோது படை அங்கிருந்து புறப்பட்டுவிட்டது. ஒட்டகத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த கூண்டில் ஆயிஷா இருப்பதாகக்

கருதி ஒட்டக ஓட்டி புறப்பட்டுவிட்டார். என்ன செய்வதென அறியாமல் திகைத்துக் களைத்திருந்த நேரத்தில் முன்பே ஆயிஷாவுக்கு பழக்கமாகியிருந்த இளைஞன் சஃப்வான் அங்கு வந்தான். ஹிஜாப்பை அணிந்து கொண்ட ஆயிஷா வேறு வழியின்றி அவனருகில் ஒட்டகத்தில் அமர்ந்து படை நகர்ந்த திசையில் செல்ல வேண்டியதாயிற்று.

வெறும் வாயை மென்று கொண்டிருந்த உபை மற்றும் இதர முனாஃபிகின்களுக்கு அவல் கிடைத்ததாக இச்சம்பவம் அமைந்தது. ஆயிஷாவின் நடத்தையிற் களங்கம் கூறி அவதூறுகள் பரப்பப்பட்டன. முஸ்லிம் விசுவாசிகள் பலரும் கூட இதை நம்பத் தொடங்கினர். பயணம் முடிந்து வந்த ஆயிஷா நோயுற்றுப் படுத்த படுக்கையானதால் அவருக்கு இச்செய்தி சற்றுத் தாமதமாகவே அறியக் கிடைத்தது. அந்தச் சின்னப் பெண்ணால் இதைத் தாங்க இயலவில்லை. முஹம்மதும் அனுதாபமாகப் பேசவில்லை என்பதைக் கவனித்த ஆயிஷா அவர்கேட்டுக் கொண்டதன் பேரில் தன் பெற்றோர் வீட்டிற்குச் சென்றார். இப்பிரச்சினையில் சற்றே மனம் குழம்பியிருந்த முஹம்மதுக்கு தெளிவுபடுத்தத் தக்க இறை வாக்குகளும் வந்தடையவில்லை. இது குறித்து அவர் தம் நெருங்கிய தோழரான அபுபக்ரிடமும் பேச இயலாது. ஏனெனில் அவர் பெற்ற மகளே ஆயிஷா. உமரோ இறுக்கமான கருத்துக்கள் உடையவர். பிரச்சினையோ மிகவும் நெகிழ்ச்சியுடன் அணுகப்பட வேண்டிய ஒன்று. இளைஞர்களே இதுபோன்ற விசயங்களில் சரியான கருத்துக் கூறமுடியும் எனக் கருதிய முஹம்மது ஸைதின் மகன் உஸாமாவிடம் ஆயிஷா குறித்துக் கருத்துக் கேட்டபோது அவரது பதில் முஹம்மதுக்கு ஆறுதலாக அமைந்தது. “ஆயிஷா பற்றி நல்ல செய்திகளை மட்டுமே நான் அறிவேன். அவரிடம் ஏதேனும் குறை சொல்ல வேண்டுமானால் சற்றே கவனக் குறைவானவர். மாவைப் பிசைந்து வைத்துவிட்டுப் பார்த்துக்கொள்ளச் சொல்லிச் சென்றால் அவரது பிரிய ஆடு அதை சாப்பிடுவதைக் கூட கவனிக்கமாட்டார்” என்றார் உஸாமா. ஆனால் அலீயின் பதிலோ வேறு விதமாக இருந்தது. “பெண்கள் பல மாதிரியான பண்புகள் மிக்கவர்கள். அவசியமானால் ஒருவரை விட்டுவிட்டு இன்னொருவரைத் தேடிக்கொள்ள வேண்டியது தான்” என்றார் அவர். இந்தக் கூற்றுக்காக அலீயை ஆயிஷா இறுதிவரை மன்னிக்கவில்லை.

இப்ன் உபை தொடர்ந்து அவதூறுப் பிரச்சாரத்தை வலிமையாக மேற்கொள்ளவே முஹம்மது ஆலோசனைக் குழுவைக் கூட்டினர். உபை கஸ்ரஜ் குலத்தைச் சேர்ந்தவன். எனவே இதையொட்டி கஸ்ரஜ் மற்றும் அவ்ஸ் குலங்களுக்கிடையேயான முரண்பாடுகள்தான் வெளிப்பட்டனவே ஒழிய உருப்படியான முடிவு ஏதும் கிடைக்கவில்லை. உம்மாவுக்குள் ஒற்றுமை குன்றி இருந்ததே மீண்டும் வெளிப்பட்டது.

இறுதியாக முஹம்மது ஆயிஷாவிடம் நேரடியாகச் சென்றார். ஆற்றமுடியாத சோகத்திலிருந்த ஆயிஷா அழுது கொண்டிருந்தார். அழகிய

பெண்களுக்கு இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என அவரது அன்னை உம் ரூமன் தேற்றிக் கொண்டிருந்தார். அபூபக்ருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மூவரும் அழுது கொண்டிருந்த நிலையில் அவர்களது சிறிய இல்லத்திற்குள் முஹம்மது நுழைந்தார். கணவரைக் கண்ட ஆயிஷா அழுவதை நிறுத்தினார். “தவறு செய்திருந்தால் இறைவன் மன்னிப்பார். உண்மையைச் சொல்” என வேண்டினார் நபிகள். நபிகளின் விழிகளை ஏறிட்டு நோக்கினாள் அந்தப் பதினாறு வயதுப் பெண். பேசுவதில் என்ன பயன் விளையும்? செய்யாத தவறைச் செய்ததாகச் சொல்ல இயலாது. உண்மையைச் சொன்னால் யாரும் நம்பப் போவதில்லை. இறைவனின் உதவி கோரிப் பொறுமையைக் கடைபிடிப்பது மட்டுமே இப்போது சாத்தியம் என்று கூறிவிட்டு அமைதியாய்ச் சென்று படுக்கையில் வீழ்ந்தார்.

இப்பதிலால் முஹம்மது திருப்தியுற்ற நேரம் அவருக்கு இறைவாக்கு இறங்கியது. மயங்கி உடல் வியர்த்துப் பெருகியது. அபுபக்ர் ஒரு தலையணையை அவரது தலையின் கீழ் வைத்தார். எழுந்து என்ன சொல்லப் போகிறாரோ எனப் பெற்றோர் தவித்து நின்றனர். தான் குற்றமற்றவர் என்பதை அறிந்திருந்த ஆயிஷா மட்டும் அமைதியாக இருந்தார். விழித்தெழுந்த முஹம்மது ஆயிஷா களங்கமற்றவர் என இறைச்சான்று கிடைத்த நற்செய்தியை உற்சாகத்தோடு முழங்கினார். எழுந்து வந்து முஹம்மதுக்கு நன்றி சொல்லுமாறு பெற்றோர் ஆயிஷாவை வற்புறுத்தினர். “நான் எழுந்து வரவும் முடியாது. அவருக்கு நன்றி சொல்லவும் முடியாது. இந்த அவதூறை மறுக்காமல் வெறுமனே கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கும் கூட நன்றி சொல்ல முடியாது. இறைவனுக்கு மட்டுமே நன்றி சொல்ல நான் எழுவேன்” என்பதே அவர் பதிலாக இருந்தது. முஹம்மது வெளியேறி கூடியிருந்தோர் மத்தியில் புதிய இறைச் செய்தியைக் கூறி அவதூறுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

பின்னாளில் ஆயிஷாவே அவரது பிரியத்துக்குறிய மனைவியாய் இருந்தார். அவரது மடியிலேயே அண்ணலின் உயிரும் பிரிந்தது.

23

# சம கால அரசியலில் நின்ற இறைத்தூதர்

*மார்ச் 627-ல் குறைஷிகள் மற்றும் அவர்களின் கூட்டணியினரின் 10,000 பேர் கொண்ட பெரும்படை மதீனாவை நோக்கிப் புறப்பட்டது. கைபரிலிருந்து யூதர்கள் அனுப்பிய பெரும் படையும் அஸத், கத்ஃபவான் சுலாய்ம் போன்ற அரபுக் குழுக்கள் அனுப்பிய படைகளும் கூட்டணிக்கு வலு சேர்த்தன. முஹம்மதின் கீழ் அவரது பெதோய்ன் கூட்டாளிகளையும் சேர்த்து மூவாயிரம் பேரே இருந்தனர். உஹத் போரைப் போல இது முடிந்து விடலாகாது என்பதில் முஹம்மது உறுதியாக இருந்தார். இம்முறை மதீனாவிற்குள்ளே இருந்துவிடுவதே பாதுகாப்பானது என அவர்கள் முடிவெடுத்தனர். முப்புறமும் மலைச் சிகரங்களாலும் எரிமலையை ஒட்டிய சமதளங்களாலும் சூழப்பட்ட மதீனா ஒப்பீட்டளவில் எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்கு ஏற்ற ஒரு பாதுகாப்பான இடந்தான். வடதிசையிலிருந்து நெருங்கும் வழிதான் அவர்களுக்குச் சற்றுப் பலவீனமான பகுதி. அந்த திசையில் ஒரு பெரிய அகழியை வெட்டுவதாக முஸ்லிம்கள் முடிவு செய்து அந்தக் கடும் பணியில் இறங்கினர். மக்கத்துப் படைகள் மெதுவாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. முற்றுகையிட வரும் பெரும் படையுடன் இருந்த ஒட்டகங்களுக்கும் குதிரைகளுக்கும் உணவு கிடைக்கக்கூடாது என்னும் நோக்கில் புறநகர்ப் பகுதியில் விளைந்திருந்த அனைத்தையும் ஒட்ட அறுத்து வந்து ஊருக்குள் சேர்த்தனர்.*

*ஒவ்வொரு குடும்பமும் ஒரு பகுதி எனப் பிரித்துக் கொண்டு அகழியைத் தோண்டினர். கோட்டை வலுவாக இருந்த இடங்கள் தவிர்க்கப்பட்டன. இதர முஸ்லிம்களை உற்சாகப்படுத்திக் கொண்டும், அவர்களிடம் நகைச்சுவையாக பேசிக்கொண்டும் தானும் அகழி வெட்டும் வேலையில் ஈடுபட்டார் முஹம்மது. அகழி வெட்டிய மண்ணைக் கொண்டு செங்குத்தான மண் சரிவு ஒன்றை முஸ்லிம்கள் உருவாக்கி அதைத் தம்மை மறைத்துக் கொள்வதற்கும், தாக்கு தளமாகவும் பயன்படுத்தினர். ஆறே நாளில் அகழி வெட்டும் பணி முடிந்தது.*

*அபூ சுஃப்யான், காலித், இக்ரிமாஹ் ஆகியோரின் தலைமையில் மதீனாவை அடைந்த குறைஷிப் படையினர் அகழியைக் கண்டு திகைத்தனர். வடக்கிலும் வடமேற்கிலும் இரு முகாம்களை அமைத்துத் தங்கினர். அரபு வழக்கப்படி இருபுறமும் திரண்டிருந்த 13,000 படை*

வீரர்களும் உரை நடையாகவும், கவிதையாகவும் வசை பாடி நின்றனர். அம்புகளையும் வீசிக் கொண்டனர். இரண்டு மூன்று வாரங்கள் இப்படியே கழிந்தன. முற்றுகையிட்டவர்களில் மூவரும் கோட்டைக்குள் இருந்தவர்களில் அய்வரும் உயிரிழந்தனர்.

முற்றுகையிட்டிருந்தவர்கள் கொண்டு வந்த குதிரைப்படை பயனற்றுப் போனது. கால்நடைகளுக்கு உணவு இல்லாததால் அவை வாடின. ஆத்திரத்தில் அகழியைத் தாண்ட முயன்றோர் தாக்குண்டு செத்தனர். கைபரிலிருந்து வந்த உதவிகள் அவர்களுக்குப் போதவில்லை. மதீனாவின் தென்கிழக்குப் பகுதியிலிருந்த பனூ குரைஸா யூதர்களைத் தூண்டிவிட்டு முஸ்லிம்களைத் தாக்கும் முயற்சியில் குறைஷிகள் இறங்கினர். கைபருக்குத் துரத்தப்பட்ட பனூ நாதிர் குலத் தலைவனும் முஸ்லிம்களை ஒழிப்பதென அபூ சுஃப்யானுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவனுமான ஹுயய் இப்ன் அக்தாபை இதற்கு அவர்கள் பயன்படுத்தினர். முதலில் பெண்களையும் குழந்தைகளையும் கொன்றுவிட்டுப் பின் முஸ்லிம்களைத் தாக்குவது என்கிற ஆலோசனையை யூதர்கள் விவாதித்தனர். அவர்களில் பதினொரு பேர் அடங்கிய குழு ஒன்று முஸ்லிம்களைத் தாக்க முனைந்தது என்று கூறுவாரும் உண்டு.

குறைஸாக்கள் இப்படிச் செய்யக்கூடும் என எதிர்பார்த்துக் கவலையுற்றிருந்த முஹம்மது புலப்பெயர்வுக்கு முன்பு அவர்களின் தோழராக இருந்த ஸஅத் இப்ன் முஆத்தை தூது அனுப்பினார். குறைஸாக்கள் மசியவில்லை. திமிராகப் பேசினர். யார் அந்த இறைத்தூதர்? முஹம்மதுக்கும் எங்களுக்கும் எந்த ஒப்பந்தமும் இல்லை□என்றும் பதிலளித்தனர். முஹம்மது பொறுமையைக் கடைபிடித்தார். உடனடி நடவடிக்கை எடுக்காமல் காலம் கடத்தினார். வெளியே காத்திருந்தவர்கள் பொறுமையின்றித் தவித்தனர். எதிர்க் கூட்டணியிலிருந்த அரபுக் குலங்களுடன் பேரீச்சை அறுவடையில் மூன்றில் ஒரு பகுதியைத் தருவதாகக் கூறிப் பேரம் பேசிப் பார்த்தார். குறைஸாக்களுடன் பேச்சுவார்த்தைகள் எனக் காலம் கடத்துவதன் மூலம் குறைஷிகளுக்கு அவர்கள் மீது சந்தேகம் ஏற்படச் செய்தார். மூன்று வாரக் காத்திருப்பிற்குப் பின் அவர்கள் வேறு வழியின்றிப் பின் வாங்கினர். முதலில் அபூ சுஃப்யானும் பின்அவரைத் தொடர்ந்து கூட்டணிப் படையினரும் தோல்வியைச் சுமந்து திரும்பினர். உஹத் போரின்மூலம் அரபுலகில் அவர்கள் பெற்றிருந்த மரியாதையை இழந்து கேலிக்குரியவர்கள் ஆயினர்.

ஒருபக்கம் குறைஷி முற்றுகை, இன்னொரு பக்கம் குறைஸாக்களின் துரோகம், நடுவில் இப்ன் உபை போன்றோரின் எதிர்மறைப் பிரச்சாரங்கள் ஆகியவற்றால் சோர்ந்திருந்த முஸ்லிம்கள் உற்சாகமடைந்தனர். அல்லாஹ் மீண்டும் ஒருமுறை அவர்களுக்கு வெற்றி ஈட்டித் தந்து விட்டான்.

குறைஸா யூதர்களின் துரோகத்தை முஹம்மது மன்னிக்கத்

தயாராயில்லை. அவர்களின் இருப்பு முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பிற்கு எதிரானது என்பதை அவர் உணர்ந்தார். குறைஷிகளின் முற்றுகைக்கு எதிராகத் திரட்டி நிறுத்தப்பட்ட படையினரை குறைஸாக்களின் இருப்பிடத்தை நோக்கித் திரும்பினார். தமது துரோகம் கடுமையாகத் தண்டிக்கப்படும் என்பதை உணர்ந்திருந்த குறைஸாக்கள் கோட்டைக்குள் பதுங்கினர். முஹம்மது அவர்களின் கோட்டையை முற்றுகையிட்டார். இருபத்தைந்து நாட்கள் முற்றுகை தொடர்ந்தது.

குறைஸாக்கள் எக்காரணம் கொண்டும் போரிடத் தயாராக இல்லை. பனூ நாதிர்களை மன்னித்தது போலத் தம்மையும் அனுமதித்தால் மதீனாவை விட்டு வெறியேறிவிடுவதாகத் தூதனுப்பினார். பனூ நாதிர் யூதர்களுக்கு அளிக்கப்பட்ட கருணை இன்று பெரிய ஆபத்தாக விளங்கு வதை உணர்ந்த முஹம்மது இம்முறை அதற்குச் சம்மதிக்க வில்லை. அரபு வழக்கப்படி துரோகத்திற்குரிய தண்டனையை வழங்குவதே சரியாக இருக்கும் என்பதில் உறுதியாக இருந்தார். இறுதியில் முஹம்மதின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராகிக் குறைஸாக்கள் கோட்டையைத் திறந்துவிட்டனர். முஸ்லிம் படைகள் உள்ளே புகுந்தன.

குறைஸாக்களிடம் கருணை காட்டுமாறு அவ்ஸ் குலத்தார் முஹம்மதிடம் மன்றாடினார். கஸ்ராஜ் குலத்தைச் சேர்ந்த உபையின் வேண்டுகோளுக்கிணங்க கைனூபா யூதர்களுக்கு முஹம்மது உயிர்ப் பிச்சை அளிக்கவில்லையா? அவ்ஸ் குலத்தைச் சேர்ந்த மூத்தவர் ஸஅத் இப்ன் முஆத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வது என முடிவாயிற்று. குறைஷி முற்றுகையின் போது கடுமையாகக் காயம்பட்டிருந்த ஸஅத் ஒரு கோவேறு கழுதையில் அமர்த்திக் கொண்டு வரப்பட்டார். மதீனாவில் நிரந்தர அமைதி வேண்டும் எனக் கருதிய ஸஅத்தின் தீர்ப்பு கடுமையாக இருந்தது. குறைஸா இனத்தைச் சேர்ந்த 700 ஆண்களுக்கும் மரண தண்டனை; பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாக விற்கப்பட வேண்டும்; சொத்துக்களை முஸ்லிம்கள் பகிர்ந்து கொள்ளுதல் என்பதே அத்தீர்ப்பு. ஏழு வானங்களுக்கும் அப்பாலுள்ள அல்லாஹ்வின் தீர்ப்பையே நீங்கள் அளித்துள்ளீர்கள் ஸஅத் என்று உரக்கக் கூவினார் முஹம்மது.

அடுத்த நாள் மதீனாவில் வெட்டப்பட்ட ஒரு பெரும் குழியைச்சுற்றி நிறுத்தப்பட்டிருந்த எழுநூறு யூத ஆண்களில் மன்னிக்கப்பட்ட ஒரு சிலர் தவிர மற்ற அனைவரும் வெட்டி வீழ்த்தப்பட்டனர். ஒரு அப்பாவி முஸ்லிம் மீது பாறாங்கல் ஒன்றைத் தள்ளிக்கொன்ற ஒருயூதப் பெண்ணும் இவ்வாறு கொல்லப்பட்டார். தன்னருகில் நின்றிருந்த அப்பெண் பெயர் கூவி அழைக்கப்பட்டதும் சிரித்துக் கொண்டே சென்று மரணத்தைத் தழுவிய நினைவைப் பின்னர் ஒருமுறை ஆயிஷா பகிர்ந்து கொண்டார்.

குறைஸாக்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்துப் பல விமர்சனங்கள் உண்டு. அன்றைய அரபுச் சமூகத்தின் பின் தங்கிய நிலையையும், அங்கு வழக்கமாக இருந்த போர் மற்றும் தண்டனை

மரபுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டே இந்த நிகழ்வை நாம் மதிப்பிட வேண்டும். 21-ம் நூற்றாண்டின் அற, சட்ட மதிப்பீடுகளைக் கொண்டு அன்றைய நிலையை நாம் மதிப்பிட இயலாது. பெருந்திரளாக யூதர்களை இருமுறை மன்னித்தவர்தான் முஹம்மது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. வெறும் அரசியல் நோக்கிலிருந்து பார்க்கும்போது குறைஸா யூதர்கள் படுகொலை செய்யப்பட்டது ஒரு புத்திசாலித்தனமான நடவடிக்கை என்பதை யாரும் மறுக்க இயலாது.

முஹம்மது ஒரு வெறும் வரலாற்று நாயகரோ இறைத்தூதரோ மட்டுமன்று. வேறு பல இறைத்தூதர்களும் கூட வரலாற்றில் வாழ்ந்துள்ளனர். சில சந்தர்ப்பங்களில் அரசியல் பங்களிப்புகளையும் செய்துள்ளனர். ஆனால் முமுக்க முழுக்கச் சமகால அரசியலில் தன்னை நிறுத்திக் கொண்டு அங்கே செயல்பட்ட பல்வேறு அரசியல் சக்திகளை எதிர்கொண்டு அவற்றினூடாகத் தான் கருதிய ஒரு சமூகத்தையும் அரசையும் நிறுவியவர் முஹம்மது ஒருவரே. புத்தர் குறித்து முன்பே இருமுறை குறிப்பிட்டுள்ளேன். தனது சாக்கிய சமூகம் ஒரு பேரரசால் கண்முன் அழித்து உள்வாங்கப் படுவதை அவர் பார்த்துக்கொண்டு மட்டுமே இருந்தார். ஆனால் முஹம்மதோ இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தை எதிர்கொண்டபோது வாளெடுத்துக் களம் புகுந்தார். இறைத்தூதர்களாயினும் சமகால அரசியலின் நியதிகளைச் சரியாகக் கையாள இயலாதபோது அவர்கள் முன் வைத்த குறிக்கோளில் முழு வெற்றி பெற இயலாது என்பதை நாம் கவனிக்கத் தவறலாகாது.

எனினும் இவை எல்லாவற்றோடும் முஹம்மது ஆழமான மத உணர்வு நிறைந்தவர் என்பதையும் நாம் மறக்கலாகாது. தான் அல்லாஹ்வுடன் நேரடியாகத் தொடர்புடைய இறைத்தூதர் என்பதை முழுமையாக நம்பி ஏற்றுக்கொண்டு அல்லாஹ்வின் ஆட்சியையும் சட்டங்களையும் அரபுலகில் நிலைநாட்டும் கடமையைச் சிரமேற்கொண்டவர் அவர். அல்லாஹ்வைச் சரண் புகுதல், அதாவது இஸ்லாம் என்பது எல்லாப் பிரச்சினைகளுக்கும் விடிவளிக்கும்; உங்களை நல்லவர்களாகவும், நீதியாளர்களாகவும், உண்மையானவர்களாகவும் ஆக்கும்; மனிதரின் அடிப்படை உணர்வுகள், தேவைகள் எதையும் தத்தம் செய்யாமலே சக மனிதர்களுடன் ஒத்திசைந்து ஒரு சமநிலைச் சமுதாயமாக வாழ வழி வகுக்கும். ஆனாலும் இதை நிலைநாட்டுவதற்கு அவர் சமகால அரசியல் மற்றும் போர் வழிகளினூடாகத்தான் பயணம் செய்ய வேண்டியிருந்தது. ஒப்பந்தங்களை மீறாதிருத்தல் என்பது அன்றைய முக்கிய அரபு மதிப்பீடு, ஒப்பந்தங்களை மீறும்போது அந்தச் சமூகம் அளித்த தண்டனைகள் மிகக் கடுமையாகவே இருந்தன. மதீனாவில் வாழ்ந்தபோது இறைவழிகளையும் சிந்தனைகளையும் மக்கள் மனத்தில் ஊட்டுவது என்பதோடு அம்மக்களின் ஆற்றலையும், திறனையும் ஒருங்கு திரட்ட வேண்டிய கடமையையும் கூடவே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் முஹம்மதுக்கு இருந்தது. அதை அவர் வெற்றிகரமாக நிறைவேற்றியதையே வரலாறு

பறைசாற்றுகிறது. திருக்குர்ஆன் என்பது என்றென்றைக்குமான உண்மைகளைச் சொல்லும் ஒரு அடிப்படை இறை ஆவணமாக மட்டுமின்றி சமகால அரசியலை விவரிக்கும் செய்தித் தாளாகவும் அன்றன்றைய ஆணைகளை அறிவிக்கும் 'கெஸட்' *(Gazetteer)* ஆகவும் ஒரு சேர விளங்கியது.

இஸ்லாமை ஒரு நடைமுறை சார்ந்த, எல்லை நிலைகளை *(Extremes)* வலியுறுத்தாத நடுநிலை மதமாக முன்னிறுத்தினர் நபிகள். இந்திய மதங்களையோ கிறிஸ்தவத்தையோ போல் அது கடுந் துறவை வலியுறுத்தவில்லை. அதே நேரத்தில் இறையச்சமும் கட்டுப்பாடுகளும் இன்றி வெறும் இன்பம் துய்க்கும் நிலையையும் அது ஏற்கவில்லை. முஹம்மதின் வரலாற்றில் நடந்ததாக முஸ்லிம் மரபில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு நிகழ்வு இங்கே குறிப்பிடத்தக்கது.

620-ம் ஆண்டில் ஒருநாள், முஹம்மது அன்று தன் ஒன்றுவிட்ட சகோதரி உம்ம் ஹனி வீட்டில் தங்கியிருந்தார். அவரது வீடு கஅபா திருத்தலத்திற்கு மிக அருகில் இருந்ததால் நள்ளிரவில் அங்கு சென்று குர்ஆன் ஓதினார். ஓதி முடித்துக் களைத்து அங்கேயே அவர் படுக்க நேரிட்டது. அச்சமயத்தில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. வானவர் ஜிப்ரில் அவர் முன் தோன்றி புருக் என்னும் விண் குதிரையில் ஏற்றி எருசலேமுக்கு இட்டுச் சென்றார். பின் அவர்கள் கோயில் மலையில் இறங்கினர். அங்கே ஆபிரகாம், மோசஸ், ஏசு முதலிய பல இறைத்தூதர்கள் முஹம்மதை வரவேற்றனர். எல்லோரும் கூடித் தொழுதவுடன் முஹம்மது பருகுவதற்கு மூன்று கிண்ணங்களில் பானங்கள் அளிக்கப்பட்டன. ஒன்றில் நீரும் மற்றதில் பாலும் மூன்றாவதில் மதுவும் இருந்தன. முஹம்மது அவற்றில் பாலைத் தேர்வு செய்தார் என நம்புவது மரபு. இஸ்லாம் ஒரு நடுநிலைப் பாதையைச் சுட்டும் மார்க்கம் என்பதற்கு ஒரு குறியீடாக இந்நிகழ்வு அமைந்தது. புத்தரும் கூடத் தம் மதத்தை ஒரு நடுநிலை மதம் (மஜ்ஜிம பதிபாதம்) எனக் கூறுவது இங்கே சிந்திக்கத்தக்கது. முஸ்லிம் மரபில் இரவுப் பயணம் (மிராஃஜ்) என இந்நிகழ்வு அழைக்கப்படுகிறது.

பத்ர் மற்றும் அகழிப் போர் வெற்றிகளுக்குப் பின்பு மக்கா மற்றும் குறைஷிகளை வெற்றி கொள்வது என்பதிலிருந்து மொத்த அரபுலகையும் நோக்கி முஹம்மதின் கவனம் விரிந்தது. இதன் பொருள் பிற மதங்களை அழித்து உலக முழுமைக்குமான ஒற்றை மதமாக இஸ்லாமை நிறுவும் பெரு விருப்புடன் அவர் இயங்கத் தொடங்கினார் என்பதல்ல. வடதிசையிலிருந்து அரபுப் பழங்குடியினருக்கும், பைஸாண்டிய மதச் செல்வாக்குக்கு ஆட்பட்டிருந்த சிரியா மற்றும் ஈராக் அரபுக் குடியினருக்கும் அல்லாஹ்வின் செய்தியைக் கொண்டு செல்வதென்பதே அவரின் விரிந்த நோக்கம். புனித நூற்கள் அருளப்பட்டவர்களின் மீது தம் மதத்தைத் திணிக்கும் முயற்சியில் அவர் இறங்கவில்லை. எப்படி யாக்கோபின் பிள்ளைகளுக்கான மதமாக யூதம் இருந்ததோ அதேபோல

இஸ்மாயீலின் பிள்ளைகளுக்குப் புதிய அருட்செய்தியைக் கொண்டு செல்லவே முஹம்மது விரும்பினார். இத்தருணத்தில் பைஸாண்டிய மற்றும் பாரசீகப் பேரரசர்களுக்கும் அபீஸீனிய மன்னர் நெகஸுக்கும் எகிப்தின் முசாவ்கிஸ்சுக்கும் நிருபங்களையும் மதிப்புமிக்கப் பரிசுப்பொருட்களையும் முஹம்மது அனுப்பி வைத்தார் என்று நம்பும் மரபு ஒன்று முஸ்லிம்களிடையே உண்டு. தொடக்கக் கால வரலாற்று மூலங்களில் இதற்கான ஆதாரம் ஏதும் இல்லை என்பதால் இது உண்மையல்ல எனச் சொல்லும் ஆய்வாளர்களும் உண்டு.

இப்போது முஹம்மது தன் நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட ஒரு அகதி அல்ல. அரபுலகின் முக்கியமான 'சய்யீது'களில் ஒருவர். பிற அரசுகளுடன் அவர் வெளியுறவுகளைப் பேண வேண்டியிருந்தது. தவிரவும் மக்காவுக்கு வரக்கூடிய வெளிநாட்டு உதவிகளை நிறுத்த வேண்டிய அரசியல் நோக்கமும் அவருக்கு இருந்தது. இந்த நோக்கிலேயே அவர் வெளிநாட்டு அரசுகளுக்குக் கடிதம் அனுப்பியிருக்க வேண்டும். தன்னைத் தம் மக்களுக்கான இறைத்தூதர் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அக்கடிதங்களின் செய்தி. மன்னர்களுக்கு மட்டுமின்றி வட அராபியக் குலங்களான கஸ்ஸான், ஹனீஃபா ஆகியோருக்கும் முஹம்மது கடிதங்கள் அனுப்பினார். அவர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்தவர்கள். தமது நம்பிக்கைகளை விட்டு விட்டுப் புதிய மதத்தில் சேருங்கள் என அவர்களை வற்புறுத்துவதைக் காட்டிலும் மதீனாவில் எப்படிப் பிற நம்பிக்கையாளர்களும் கூட உம்மாவில் உள்ளது போல புதிய நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளாத போதும் ஒரே உம்மாவாக அரபுக் குலம் ஒன்றுபட வேண்டும் என்பதே முஹம்மதின் நோக்கம். அதன்பின் அவர்கள் விரும்பினால் அல்லாஹ்வின் வழிக்குத் திரும்பலாம். இதில் கட்டாயமில்லை.

627-628ம் ஆண்டுகளில் அரபிய இனக்குழுக்களை இணைத்துக் கூட்டமைப்பு (Confederacy) ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளில் முஹம்மது இறங்கினார். இது தவிர பெதோய்ன்களிலும் சில தனி நபர்கள் முஸ்லிம்களாகி மதீனாவிற்குப் புலம் பெயர்ந்துமிருந்தனர். மக்காவுடன் கூட்டமைப்பிலிருந்த இனக்குழுக்களின் மீதும் கைபர் யூதர்களுடன் இணைந்து தாக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்த ஸஅத் குழுவின் மீதும் முஹம்மதின் படைகள் சூறைத் தாக்குதல்களை நடத்தின. உம்மாவின் எதிரிகளுடன் கூட்டு சேர்வது தமக்கு ஆபத்து என்கிற எண்ணம் பெதோய்ன்கள் மத்தியில் வேரூன்றச் செய்வதில் முஹம்மது வெற்றி பெற்றார்.

மேலும் மேலும் பலர் முஸ்லிம்களாகிப் புலம் பெயர்ந்ததால் மதீனாவின் மக்கள் தொகை அதிகரித்தது. மதீனாவில் இறக்குமதித் தேவைகளை ஈடுகட்ட சிரியாவுடன் தனி வணிகத் தொடர்பை உருவாக்க வேண்டிய அவசியம் உருவாகியது. சிரியப் பாதையில் இருந்த டுமாட்

*அல்ஜந்தார் முதலிய வணிகச் சந்தைகளுக்கு முஸ்லிம்களின் வணிகக் குழுக்கள் சென்றன. அதே நேரத்தில் மக்கத்து வணிகப் பாதைகளைப் பாதுகாப்பில்லாமற் செய்ததன் மூலம் அதன் மீதான ஒரு பொருளாதாரத் தடையையும் வெற்றிகரமாகச் சாதிக்க முடிந்தது. குறைஷிகளை அழிப்பதோ மக்காவை வீழ்த்துவதோ முஸ்லிம்களின் நோக்கமன்று. அவர்களை வென்றெடுக்கும் நோக்குடன் தான் இம்முயற்சியில் மேற்கொள்ளப்பட்டன.*

*இம்முயற்சிகளில் சில பின்னடைவுகளும் நேரத்தான் செய்தன. ஸைத் தலைமையில் சென்ற ஒரு வணிகக் குழு தாக்கி அழிக்கப்பட்டது. எனினும் விரைவில் ஸைத் மேற்கொண்ட ஒரு சூறைப் போரில் மக்கத்து வணிகக் குழு ஒன்று வீழ்த்தப்பட்டது. இந்த வணிகக் குழுவில் இருந்தவர்களில் முஹம்மதின் மருமகன் அபூஅல் அஸ்சும் ஒருவர். தப்பிச்சென்ற அவர் மதீனாவிலிருந்த மனைவி ஸைனப்பிடம் அடைக்கலம் புகுந்தார். ஸைனப்பின் வேண்டுகோளுக்கிணங்க அபூஅல் அஸ்சின் உடைமைகளைத் திருப்பியளித்து அனுப்பி வைக்குமாறு முஹம்மது கேட்டுக்கொண்டார். திரும்பிச் சென்ற அபூஅல் அஸ் வணிகப் பொருட்களை உரியவர்களிடம் சேர்ப்பித்த பின் முஸ்லிமாகிப் புலம் பெயர்ந்தார். தான் நம்பிய பகன் கடவுளர் இனிமேல் தம்மைக் காக்கமாட்டார்கள் என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. மேலும் பல மக்காவாசிகள் இவ்வாறே முஸ்லிம்களாகிப் புலம் பெயர்வது தொடர்ந்தது. இவர்களில் பலர் உஹத் போரில் 'ஓ! அல் உஸா! ஓ! ஹ்யூபல்' எனப் பகன் கடவுளரின் பெயர்களைக் கத்திக்கொண்டு முஸ்லிம்களைத் தாக்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*மக்கத்து மக்களின் மன நிலையில் ஏற்பட்ட மாற்றம் குறித்து முஹம்மது தீவிரமாய்ச் சிந்தித்தார். மக்காவிற்குச் செல்ல வேண்டும். ஹஜ் புரிய வேண்டும் என்கிற எண்ணம் சதா அவரை ஆட்டிப்படைத்தது. பாரம்பரியமாக ஹஜ் யாத்திரை புரியும் புனித காலத்தில் (மார்ச் 628) அவருக்கு ஒரு கனவு வந்தது. யாத்ரிகர்களுக்குரிய வகையில் மழிக்கப் பட்ட தலை, உடைகளுடன் கஅபாவின் திறவுகோலுடன் அதன் முன் நிற்பதாக அக்கனவுக் காட்சி அமைந்தது.*

> "உண்மை யாதெனில் அல்லாஹ் தன் தூதருக்கு உண்மையான கனவையே காட்டியிருந்தான்... அல்லாஹ் நாடினால் நிச்சயம் நீங்கள் புனிதமிகு பள்ளியில் முழுப் பாதுகாப்புடன் நழைவீர்கள். உங்கள் தலைமுடியை மழித்துவிட்டு அல்லது குறைத்துவிட்டு அச்சமின்றி (நுழைவீர்கள்)" (48:27)

*என்கிற இறைவாக்கும் எழுந்தது.*

*அடுத்தநாள் காலை கஅபாவிற்குப் புனித யாத்திரை செல்வதென முஹம்மது அறிவித்தார். தோழர்களையும் பங்கு பெறுமாறு அழைப்பு விடுத்தார்.*

# 24

# போரல்ல சமாதானம்

கஅபா திருத்தலத்தை நோக்கி ஹஜ் செல்ல முஹம்மது விடுத்த அழைப்பு அங்கிருத்தவர்கள் மத்தியில் வித்தியாசமான உணர்வலைகளை ஏற்படுத்தின. ஒரு பக்கம் அதிர்ச்சி, இன்னொரு பக்கம் மகிழ்ச்சி, இன்னொரு பக்கம் அச்சம். இது படையெடுப்பு அல்ல. முழுக்க முழுக்க இறைநாட்டம் கொண்ட புனித யாத்திரை மட்டுமே என முஹம்மது தெளிவுபடுத்தினார். ஹஜ்ஜுக்குரிய வெள்ளை ஆடைகளை மட்டுமே முஸ்லிம்கள் உடுத்தி வரவேண்டும், ஆயுதங்கள் எதையும் எடுத்து வரக்கூடாது என அவர் சொன்னபோது பலர் தயங்கினர். உம்மாவின் உறுப்பினர்களாக இருந்தபோதும் இது ஆபத்தானது எனக் கருதிய பெதோய்ன் கூட்டணியினர் பலர் வரத் தயாராக இல்லை. எனினும் புலம் பெயர்ந்தவர்களிலிருந்தும் அன்சாரிகளிலிருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூர் நபிகளின் அழைப்பை ஏற்றனர். நபிகள் தொடர்ச்சியாய்ச் சாதித்த வெற்றிகளினால் நிலைகுலைந்திருந்த இப்ன் உபையும் சில முனாஃபிகின்களும் கூட யாத்திரைக்குத் தயாராயினர். மனைவியருள் உம் சலாமாவை மட்டும் அழைத்துச் செல்வதென முஹம்மது முடிவு செய்தார். இரண்டாவது அகாபாவின் போது அங்கிருந்த மேலும் இரு பெண்களும் அனுமதிக்கப்பட்டனர்.

புனித மண்ணில் குர்பானி (பலி)க்கென எழுபது ஒட்டகங்கள் சேகரிக்கப்பட்டன. தைக்கப்படாத இரு துணிகளில், ஒன்றை இடுப்பிலும் ஒன்றைத் தோளிலும் அணிந்தவாறு முஹம்மது எழுந்தபோது ஆபத்துகளுக்கான சாத்தியங்களை விளக்கிய உமர் அவசியம் ஆயுதங்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்றார். "ஆயுதங்களைத் தொடமாட்டேன்" என உறுதியாகக் கூறிய முஹம்மது, "யாத்திரை தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் நான் வரவில்லை" என்று அவ்விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அச்சமின்றி கஅபாவில் நுழையலாம் என்கிற இறைவாக்கு அவர் எண்ணத்தில் நிறைந்திருந்தது. வேட்டைக்கு மட்டுமே பயன்படக்கூடிய சிறிய கத்திகளை மட்டும் உறையிலிட்டு எடுத்துக் கொண்டு யாத்ரீகர்கள் அவரைத் தொடர்ந்தனர். குர்பானிக்கென நேர்ந்து விடப்பட்ட ஒட்டகம் ஒன்றின் கழுத்தில் மாலையிட்டு அதனை மக்காவை நோக்கித் திருப்பி நிறுத்திய முஹம்மது, "லப்பைக் அல்-லஹுமா லப்பைக்!" ("இறைவனே! இதோ உன் பணியில் நான்") என்று முழங்கிய

பின் பயணம் தொடங்கியது.

முஹம்மதின் முடிவு குறைஷிகளுக்குப் பெரும் நெருக்கடியை உண்டாக்கியது. ஹஜ்ஜுக்குரிய சடங்குகளை முழுமையாக நிறைவேற்றிக்கொண்டு புனித மண்ணில் வந்து குவிந்துள்ள ஆயிரக்கணக்கான அரபு யாத்ரீகர்களை ஹஜ்ஜுக்கு அனுமதிக்காமல் இருக்க இயலாது. அவர்களைத் தாக்குவதோ மிகப்பெரிய இழி பெயரை ஏற்படுத்தும். அனுமதித்தாலோ அது முஹம்மதுக்கு மாபெரும் வெற்றியாகிவிடும். சுஹாய்ல், இக்ரிமாஹ், ஸஃப்வான் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் எல்லோரும் எப்படியேனும் முஹம்மதைத் தடுத்தாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். அபு ஸஃப்யான் மட்டும் ஒன்றும் பேசவில்லை. முஹம்மதை அவ்வளவு எளிதாக எதிர் கொண்டுவிட முடியாது என்பதை உணர்ந்திருந்தான் அவன்.

முஹம்மதைத் தடுத்து நிறுத்துவதற்கென காலித் தலைமையில் 200 பேர் அடங்கிய படை ஒன்று அனுப்பப்பட்டது. மக்காவுக்கு வட கிழக்கில் இருபத்தைந்து மைல் தொலைவிலிருந்த உஸ்ஃபான் கிணற்றருகில் முஹம்மது வந்து கொண்டிருந்தபோது காலித் படைகள் எட்டு மைல் தொலைவிலிருப்பதை அறிந்தார். "போர் வெறி குறைஷிகளை விழுங்கியிருக்கிறது. என்னையும் என்னுடன் வந்துள்ள அரபுக்களையும் எங்கள் வழியில் செல்லவிட்டால் என்ன ஆகிவிடப் போகிறது இவர்களுக்கு? அல்லாஹ் மீது ஆணையாக இறைவன் எனக்கு இட்டுள்ள பணியை முடிக்காது திரும்ப மாட்டேன். வெற்றி அல்லது மரணம் எதுவாயினும் சரி" என்று கூறிய நபிகள் அஸ்லம் குலத்தைச் சேர்ந்த ஒரு வழிகாட்டியின் துணையோடு வேகமாகப் பயணத்தை துவங்கி மக்காவைச் சுற்றிப் போர் தடுக்கப்பட்டிருந்த சரணாலயப் பகுதியின் விளிம்பை எட்டினார். புனித மண்ணுக்குள் நுழையும் தருணத்தில் இப்பயணத்தின் இறை நோக்கத்தை மீண்டும் தெளிவுப்படுத்தினார் நபிகள். மனத்தை இறைவன் மீது குவித்து அவனிடம் மன்னிப்பை யாசிக்கச் சொன்னார். பிறகு சரணாலயத்தின் விளிம்பிலுள்ள ஹுதைப்பியா கிணற்றுக்குச் செல்லும் சாலை வழியில் தன்னைப் பின் தொடருமாறு பணித்தார்.

என்றாலும் கூட காலித் தலைமையில் படை அனுப்பப்படுவதை அவர் எதிர்பார்க்கவில்லை. என்ன நிகழப் போகிறது என்பது குறித்து அவராலும் முழுமையாக ஊகிக்க இயலவில்லை. வழக்கம் போல சூழலுக்குத் தக எதிர்வினையாற்றும் நோக்குடன் பயணத்தை தொடர்ந்தார். ஹுதைபியாவை அடைந்தவுடன் முஹம்மதின் ஒட்டகம் மண்டியிட்டு அமர்ந்தது. மேலே செல்ல மறுத்தது. கூட வந்தவர்கள் அதனை விரட்ட முயன்றபோது முஹம்மது அவர்களைத் தடுத்தார். "முன்பொருமுறை மக்காவை நோக்கி வந்த யானையைத் தடுத்து நிறுத்தியவனே இன்று (கஸ்வாவையும்) நிறுத்தியுள்ளான். இன்று குறைஷிகள் என்ன

நிபந்தனையை விதித்தாலும் ஏற்றுக்கொள்வேன்'' என்றார். போரல்ல சமாதானமே இப்பயணத்தின் நோக்கம் என்பதை மீண்டும் தெளிவுபடுத்திய முஹம்மது எல்லோரையும் அங்கேயே ஒட்டகங்களிலிருந்து இறங்கித் தங்குமாறு பணித்தார். அங்கு ஒரு கிணறும் ஒரு மரமும் இருந்தன. மரத்தடியில் அவர்கள் அமர்ந்து கொண்டனர். மக்காவிற்குள் அவர்கள் நுழையாத வண்ணம் தடுத்துக் கொண்டு காலித்தின் படை நின்று கொண்டிருந்தது.

பின்னாளில் மகாத்மாகாந்தி போன்றவர்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரஹப் போராட்டத்தின் ஒரு முன்னோடியாகவும் முன் மாதிரியாகவும் சொல்லத்தக்க ஒரு போராட்ட வடிவமாக அது அமைந்தது. அரபுலகின் பார்வை முழுவதும் அன்று மக்காவை நோக்கித் திரும்பியது. அமைதியான தரிசனத்துக்கு வந்த அரபு யாத்ரீகர்களைத் தாக்கத் துணிந்த செய்தி பெதோய்ன் குழுவினரிடையே பரவி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அரபுகள் அனைவருக்குமான புனிதக் கடமையை வாள் கொண்டு தடுக்க இவர்கள் யார்? செய்தியறிந்த குஸாஅ இனக்குழுவைச் சேர்ந்த புதாய்ல். முஹம்மதைச் சென்று சந்தித்து அவரது நோக்கத்தை அறிந்து பின் குறைஷிகளிடம் வந்தார். அவர் சொல்லுக்கும் குறைஷிகள் செவி சாய்க்கவில்லை. முஹம்மதின் நோக்கம் போரல்ல எனத் தெளிவு படுத்தியபோதும் அவர்கள் அவரை அனுமதிக்கத் தயாராக இல்லை.

முஸ்லிம்களிடையே பிளவுருவாக்கும் நோக்குடன் குறைஷிகள் ஒரு தந்திரம் மேற்கொண்டனர். முஹம்மதுக்குப் பலவகைகளில் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருந்த இப்ன் உபை வேண்டுமானால் கஅபாவிற்கு வந்து வணங்கிச் செல்லலாம் எனச் செய்தி அனுப்பினர். உபை இதற்கு முன் எத்தகைய துரோகங்கள் செய்திருந்த போதிலும் இம்முறை ஒரு நல்ல முஸ்லிமாகத் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார். முஹம்மதுக்கு முன்பாகத்தான் வந்து கஅபாவை சுற்றி வணங்க(தவ்வாஃப்)த் தயாராக இல்லை என்பதை அவர் வெளிப்படுத்தியது குறைஷிகளுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

சஃப்வானும் சுஹய்ல்லும் முஹம்மதுடன் பேசிப் பார்க்கலாம் என முடிவுக்கு வந்தனர். அவர்களின் பெதோய்ன் கூட்டாளிகளில் ஒருவரான ஹுலாய்ஸை முஹம்மதிடம் அனுப்பினர். ஏசு இறைக் கொள்கையை ஏற்காதவராயினும் ஹுலாய்ஸ் ஒரு நல்ல பக்தர். குர்பானிக்கென நிறுத்தப்பட்டிருந்த ஒட்டகங்களை அவரை நோக்கி அனுப்புமாறு முஹம்மது பணித்தார். அவற்றைப் பார்த்தவுடன் திரும்பி வந்த ஹுலாய்ஸ் முஹம்மதின் உயர் நோக்கத்தை விவரித்தபோது சஃப்வானும் மற்றவர்களும் அவரை அவமானப்படுத்தி அமரச் செய்தனர். சீறிச் சினந்த ஹுலாய்ஸ் அவர்களுடனான தமது உறவை முறித்துக் கொள்வதாகச் சொன்ன போது குறைஷிகள் அவரிடம் மன்னிப்புக் கோரினர்.

அடுத்து தகீஃஃப் குலத்தைச் சேர்ந்த உர்வாவை அனுப்பி வைத்தனர். ஆயுதம் தாங்கிய குறைஷிகள் முன்பு முஹம்மதும் முஸ்லிம்களும் என்ன செய்துவிட முடியும் என உர்வா பேசத் தொடங்கியபோது உமரும் மற்றவர்களும் அதனைக் கடுமையாக எதிர்கொண்டனர். அரபு வழக்கப்படி நட்பைக் காட்டும் முகமாக உர்வா முஹம்மதின் தாடியைத் தொட்டபோது ஒரு முஸ்லிம் அவர் கையைத் தட்டிவிட்டார். திரும்பி வந்த உர்வா முஹம்மதிடம் அவரைப் பின்பற்றியோர் காட்டிய பாசத்தையும் விசுவாசத்தையும் வியந்து போற்றினார். பாரசீக அல்லது பைசான்டியப் பேரரசர்களுக்குக்கூட இத்தனை மரியாதை இல்லை என்பதை பல தேசங்களுக்கும் பயணம் செய்திருந்த அந்த முதியவர் சொன்னபோது குறைஷிகள் மவுனம் காத்தனர்.

இப்போது முஹம்மது தன் சார்பில் ஒரு தூதுவரை மக்காவுக்கு அனுப்ப முடிவு செய்தார். பலரும் தயங்கவே நகரத்தில் பல உயர் மட்டத் தொடர்புகளை உடைய உத்மானை அனுப்புவதென முடிவாயிற்று. உத்மான் சொன்னதற்கும் அவர்கள் செவி சாய்க்கவில்லை. "வேண்டுமானால் நீர் தவ்வாஃப் செய்துவிட்டுப் போகலாம்" என அவரிடம் கூறப்பட்ட போது இப்ன் உபை போலவே உஸ்மானும் அதை மறுத்தார். உஸ்மானைப் பிணையாக வைத்துக்கொண்ட குறைஷிகள் அவரைக் கொன்றுவிட்டதாகச் செய்தி அனுப்பினர்.

முஸ்லிம்கள் மத்தியில் இது உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இது அவர்கள் எதிர்பாராத ஒரு நெருக்கடி. எல்லாம் தவறாக முடிந்துவிடுமோ என்ற அச்சம். முஹம்மது வியர்த்து வீழ்ந்தார். இறைவாக்கு இறங்கும்போது அடைகிற நிலையை அடைந்தார். முஸ்லிம்கள் அனைவரையும் அழைத்து சிறப்பு உறுதிமொழி ஒன்றை எடுக்கச் சொன்னார். 'பய்யத்-அல்-ரித்வான்' - மரத்தடிச் சபதம் எனப்படும் இதுகுறித்து வரலாற்றாசிரியர்களிடையே கருத்து மாறுபாடுகள் இருந்தபோதும் எத்தகைய நெருக்கடியிலும் முஹம்மதைக் கைவிட்டு விடுவதில்லை என்பதே அதன் உட்பொருளாக இருந்தது. இப்ன் உபை உட்பட ஒவ்வொருவராக நபிகளின் கரத்தைப் பற்றி உறுதிமொழி அளித்தனர். உறுதிமொழி எடுத்து முடிந்த சிறிது நேரத்தில் உத்மான் உயிருடன் இருக்கும் செய்தி கிடைத்தது. சற்று நேரத்தில் பேச்சுவார்த்தைக்காகச் சுஹாய்ல் இரு உதவியாளர்களுடன் முஹம்மதை நோக்கி வந்தான். நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின் உடன்படிக்கை ஒன்று உருவானது. ஆனால் அதன் பிரிவுகள் முஸ்லிம்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளிப்பதாகவே இருந்தன.

இந்த ஒப்பந்தத்தின்படி இம்முறை கஅபாவைத் தரிசிக்காமலே திரும்புவதற்கு முஹம்மது ஒத்துக்கொண்டார். ஆனால் அடுத்த ஆண்டு இதே நேரத்தில் முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்கு வருவர். அப்போது அவர்கள் அமைதியாக 'உம்ரா' சடங்குகளைச் செய்வதற்குத் தோதாக குறைஷிகள்

மூன்று நாட்கள் நகரத்தை விட்டு வெளியேற வேண்டும். பத்தாண்டு காலப் போர் நிறுத்தம் செய்யப்படும். ஆனால் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களின் சம்மதமின்றி முஸ்லிமாகிப் புலம் பெயர்ந்தவர்களைத் திரும்ப மக்காவுக்கு அனுப்ப முஹம்மது ஒத்துக்கொள்ள வேண்டும், ஆனால் மக்காவுக்கு ஒடி வந்த முஸ்லிம்கள் யாரையும் குறைஷிகள் திருப்பி அனுப்பத் தேவையில்லை. பெதோய்ன்கள் மக்காவுடனும் மதீனாவுடனும் மேற்கொண்டிருந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் ரத்து செய்யப்படுவதோடு இனி அவர்கள் யாரோடு வேண்டுமானாலும் புதிய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம். அமைதிக்கு வாய்ப்பிருக்கும் பட்சத்தில் எதிரியின் நிபந்தனைகளை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனத் திருக்குர்ஆன் கூறியுள்ளதற்கிணங்க நபிகள் இம்முடிவுகளுக்கு இணங்கினார்.

முஸ்லிம்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டது. இதுவரை அடைந்த பயன்கள் அனைத்தையும் ஒரே கணத்தில் முஹம்மது தொலைத்துவிட்டது போல அவர்கள் உணர்ந்தனர். புலம் பெயர்ந்து வந்திருந்த புதியவர்களைத் திருப்பி அனுப்புதல் என்பதை அவர்களால் ஏற்கவே இயலவில்லை. தவிரவும் குறைஷிகள் அதற்கிணையாக முஸ்லிம்களைத் திருப்பி அனுப்பத்தேவையில்லையாம். இது என்ன நியாயம்? ‘ஜிஹாத்’ என்கிற கருத்தாக்கத்தை முஹம்மது உடைப்பில் போட்டுவிட்டாரா? இதுவரை செய்த தியாகங்கள், கொடுத்த உயிர்ப்பலிகள் எல்லாம் வீண்தானா? “நாம் முஸ்லிம்கள் இல்லையா? அவர்கள் இறை மறுப்பாளர்கள் அல்லவா? நாம் ஏன் இந்த இழிவைச் சுமக்க வேண்டும்?” என அபூபக்ரிடம் பொறுமினார் உமர். அபூபக்ரும் அதிர்ச்சியடைந்திருந்த போதும் தாம் இன்றும் முஹம்மதிடம் நம்பிக்கை வைத்திருப்பதாகச் சொன்னார். தன்னோடு ஒரு நூறு பேர் வரத் தயாராக இருந்திருந்தால் தான் உம்மாவை விட்டே வெளியேறியிருக்கக்கூடும் என உமர் பின்னொரு முறை ஹுதைபியா பற்றி நினைவு கூர்ந்தார்.

முஹம்மதின் நோக்கம் உடனடிப் பலன்களைத் தாண்டியதாக இருந்தது. குறைஷிகளுடன் பேச்சுவார்த்தை என்கிற நிலை உருவானது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. இன்றில்லாவிட்டாலும் நாளையேனும் கஅபாவில் ஹஜ் சடங்குகளை நிறைவேற்றும் உரிமை இந்த ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்தாயிற்று. பெதோய்ன்கள் இனி முஸ்லிம்களை அங்கீகரித்து அவர்களுடன் கூட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளத் தடையில்லை. இதற்கேற்ப பழைய ஒப்பந்தங்களை முறித்துக்கொண்டு பழங்குடிகள் யாரிடம் வேண்டுமானாலும் புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள வழிவகுக்கும் பிரிவு ஒன்றும் ஹுதைபியா உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டது. இதன்படி முஹம்மதுடன் மணத் தொடர்பு கொண்டிருந்த குஸஅ குலம் குறைஷிகளுடன் உறவை முறித்துக் கொண்டு முஸ்லிம்களுடன் சேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தத்தை எழுத உட்கார்ந்த போதும் பிரச்சினைகள் எழுந்தன. 'பிஸ்மில்லாஹ்-அல்ரஹ்மான்-அல்ரஹீம்' என அலீ எழுதத் தொடங்கியதைக் குறைஷிகள் எதிர்த்தனர். இவற்றை நீக்கிவிட்டு பழைய வழக்கப்படி 'அல்லாஹ்வின் பெயரால்' என எழுத முஹம்மது ஒத்துக்கொண்டார். முஹம்மதுக்கு முன்னர் 'இறைத்தூதர்' என எழுதியதையும் அவர்கள் எதிர்த்தனர். அலீயிடம் அந்தச் சொல்லைக் காட்டச் சொல்லி அதனை முஹம்மது தன் கரத்தாலேயே அழித்தார். வெறுமனே 'முஹம்மத் இப்ன் அப்துல்லாஹ்வுக்கும், சுஹய்ல் இப்ன் அம்ர்க்கும் இடையில் செய்யப்பட்ட ஒப்பந்தம்' என்றே எழுதப்பட்டது.

சூழல் மேலும் நெருக்கடிக்குள்ளாகுமாறு அத்தருணத்தில் மேலும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. முஸ்லிமாக மாறிப் பல்வேறு தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணாயிருந்த அபூ ஜந்தால் (சுஹாய்லின் மகன்) ஓடிவந்து தன்னை அழைத்துச் செல்லுமாறு வீறிட்டார். எட்டிஉதைத்த சுஹாய்ல் அவரைக் கட்டியிருந்த சங்கிலியைப் பிடித்துக்கொண்டு விட மறுத்தான். "இறைவன் உன் துன்பத்திற்கு முடிவு கட்டுவான். பொறுமையாக இரு" என்று கூறி ஒப்பந்தத்திற்கு மதிப்பளித்து அவரை அழைத்துச் செல்ல மறுத்தார் முஹம்மது. கதறக் கதற அபு ஜந்தாலை இழுத்துச் சென்றனர். முஸ்லிம்கள் மேலும் வேதனையுற்றனர். பன்னிரண்டு ஆண்டுகளாக யாருக்குப் பணிந்து உற்ற தோழராய் இருந்தாரோ அந்த முஹம்மதை எதிர்த்து உமர் ஒன்று மாற்றி ஒன்றாகக் கேள்விகளை அடுக்கினார். மதீனாவை விட்டுப் புறப்படுமுன் கஅபாவை வணங்கி ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவோம் என வாக்குறுதி அளித்தீர்களே என அவர் கேட்டபோது அதை ஏற்றுக்கொண்டார் முஹம்மது. "ஆனால் இந்த ஆண்டு அதைச் செய்வோம் என்று நான் சொன்னேனா?" என வினவியபோது உமருக்குப் பதில் சொல்ல இயலவில்லை. "நானே இறைத்தூதன். இறைவனின் ஆணைகளுக்கு எதிராக நான் போக மாட்டேன். இறைவன் நான் தோற்கும்படிச் செய்யமாட்டான்" என முஹம்மது சொன்னபோது உமர் திருப்தியுற்றாரோ என்னவோ ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

கஅபாவில் செய்ய வேண்டிய யாத்திரைக் கடமைகளை இங்கேயே செய்வோம் என முஹம்மது சொன்னபோது அங்கு பெரும் அமைதி நிலவியது. தலையை மழிக்கவோ குர்பானி கொடுக்கவோ யாரும் தயாராயில்லை. விரக்தியுற்ற நபிகள் தம் கூடாரத்தை நோக்கித் திரும்பினார். நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த உம் சலாமா அவருக்கு ஆறுதல் மொழி கூறினார். மீண்டும் முஸ்லிம்கள் மத்தியில் சென்று யாருடனும் பேசாமல் தம் குர்பானியை நிறைவேற்றுமாறு உம் சலாமா ஆலோசனை கூறினார். அருமையான முடிவு. அந்த நிகழ்வு அங்கிருந்த இறுக்கத்தைத் தளர்த்தியது. யாரையும் திரும்பி நோக்காது நேராய்ச் சென்ற நபிகள் தான் நேர்ந்துவிட்டிருந்த ஒட்டகத்தை அணுகித் தன் குர்பானியை நிறைவேற்றினார். வழக்கமாகச் செய்வதுதான். ஆனால்

*அன்று அதற்கொரு புது அர்த்தம் இருந்தது. ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த வழமையை மீறுவதாக அது அமைந்தது. மக்காவில் செய்ய வேண்டிய சடங்கு இன்று மக்காவுக்கு வெளியே செய்யப்படுகிறது. அது அங்கொரு எழுச்சியை ஏற்படுத்தியது. இதர முஸ்லிம்கள் தத்தம் ஒட்டகங்களை நோக்கி ஓடினர். 'அல்லாஹ்வின் பெயரால்' என்கிற பழைய முழக்கத்துடன் 'அல்லாஹ்வே பெரியவன்' என்கிற புதிய முழக்கமும் இணைந்து விண்ணைப் பிளந்தது. அன்சாரிகளில் ஒருவரைத் தம் சிகையை மழிக்குமாறு முஹம்மது வேண்டியபோது அதைச் செய்ய அங்கிருந்த முஸ்லிம்களிடையே அத்தனை போட்டி. அந்தப் போட்டியில் நபிகளுக்கு உயிராபத்து ஏற்பட்டுவிடுமோ என உம் சலாமா அஞ்சுகிற அளவுக்குப் போட்டி.*

*ஹுதைபியாவை விட்டு யாத்ரீகர்கள் குழு புறப்பட்டபோது வீசிய பெருங்காற்று அங்கு திரண்டிருந்த முடிக்கற்றைகளைத் திரட்டிச் சென்று மக்காவில் சேர்த்தது எனவும் அதன்மூலம் இறைவனுக்கு அது அர்ப்பணிக்கப்பட்டது எனவும் நம்புவது இஸ்லாமிய மரபு.*

*திரும்பும் வழியில் முஹம்மது வழக்கத்தை விட அமைதியாக இருந்தார். தன்னுடன் கலகலப்பாகப் பேசாததைக் கண்டு உமர் கூட கலங்கிப் போனார். நபிகள் அழைக்கிறார் என ஒருவர் உமரிடம் வந்தபோது அவர் அஞ்சிக்கொண்டே சென்றார். ஒளி வீசும் முகத்துடன் நின்றிருந்த நபிகள், ''வேறெல்லாவற்றையும் விட எனக்கு முக்கியமாக ஒரு இறைச் செய்தி இறங்கியுள்ளது'', என்றார். திருக்குர்ஆனின் 48வது சூராவனா (அத்தியாயம்) 'அல்ஃபடா' ஹுதைபியா சம்பவங்களின் முக்கியத்துவத்தை முழுமையாக விளக்கியது. புனிதப் போரை மட்டுமல்ல புனித அமைதியையும் சமாதானத்தையும் வற்புறுத்துவதே இஸ்லாமிய இறையியல். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டும் பொறுமையும் மாண்பும் கிறிஸ்தவத்திற்கு மட்டுமின்றி இஸ்லாமுக்கும் விலக்கல்ல என்பதை ஹுதைபியா நிறுவியது.*

*ஹுதைபியா ஒரு தோல்வியல்ல என்கிற நம்பிக்கையூட்டிக் கொண்டே இந்த அத்தியாயம் துவங்குகிறது:*

> "(நபியே!) நாம் உமக்கு வெளிப்படையான வெற்றியை அளித்துள்ளோம். உம்முடைய முந்தைய, பிந்தைய குறைகளை அல்லாஹ் மன்னிப்பதற்காகவும் அவன் தனது அருட் கொடையை உம் மீது நிறைவு செய்து உமக்கு நேர்வழியைக் காட்டுவதற்காகவும் இன்னும் மகத்தான உதவியை உமக்கு வழங்குவதற்காகவும்தான்" (48:1-3)

*இறைவன் போரின் ஊடாகத் தன் இருப்பைப் பத்ரில் வெளிப் படுத்தினான். அது இறை மீட்பின் அடையாளமாகத் திகழ்ந்தது. அவமானமாகத் தோன்றுகிற ஹுதைபியாவிலும் கூட அவன் அங்கே*

*இருக்கத்தான் செய்தான். இறைவனின் சாந்தியை, அமைதியை, சமாதானத்தை*

*('ஸகீனா') அங்கு அவன் அருளினான்:*

> "அவன்தான் இறை நம்பிக்கையாளர்களின் இதயங்களில் ஸகீனாவை இறக்கியருளினான். அவர்கள் தம் நம்பிக்கையின்மேல் அதிக நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்காக"□(48.4)

*'ஸகீனா' என்பதன் மூலச்சொல் ஹீப்ரு மொழியிலுள்ள 'ஷெகினாஹ்' என்பது. 'கடவுள் உலகில் இருக்கிறார்'. என்பதே அதன் பொருள். பத்ர் மட்டுமல்ல ஹுதைபியாவும் கூட இறைமீட்பின் அடையாளமே. வரலாற்றில் இறைவன் தலையிடுவதே. போரில் மட்டுமன்று சமாதானத்திற்கும் அதிக மனத்துணிவும், நெஞ்சுரமும், நம்பிக்கையும் வேண்டும்.*

*ஆயுதங்கள் ஏதுமின்றி மக்காவை நோக்கி யாத்திரை புறப்பட்டது நம்பிக்கையின் ஒரு வெளிப்பாடு. அஞ்சி வர மறுத்த பெதோய்ன்களுக்கு அந்த நம்பிக்கையில்லை. மரத்தடியில் முஹம்மதிடம் உறுதியளித்தது நம்பிக்கையின் இன்னொரு வெளிப்பாடு. குறைஷிகளால் இங்கும் முஸ்லிம்களை அழிக்க இயலவில்லை. பத்ரில் பெற்ற வெற்றி நீதியையும் அநீதியையும் பிரித்துக்காட்டிய ஒரு 'ஃபுர்கான்' எனில் ஹுதைபியானின் வெற்றி நம்பிக்கையாளரையும் நம்பிக்கையற்றோரையும் பிரித்துக்காட்டிய ஒரு ஸகீனா.*

> "இறை நம்பிக்கையற்றோர் தங்களின் உள்ளங்களில் வைராக்கியத்தை ஏற்படுத்திக்கொண்டபோது அல்லாஹ் தன்னுடைய தூதர் மீதும் நம்பிக்கையாளர்கள் மீதும் ஸகீனாவை (அமைதியை) இறக்கியருளினான்"□(48:26)

*பத்ரும் ஹுதைபியாவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள், திருக்குர்ஆனின் இறைத் தரிசனத்தில் இவ்விரு நிகழ்வுகளும் சம முக்கியத்துவம் பெறுகின்றன. தேவையான சந்தர்ப்பங்களில் எவ்விதத் தயக்கமுமின்றிப் போரிடுவது எத்தனை அவசியமோ அத்தனை அவசியம் அமைதிக்காகப் பல தியாகங்களைச் செய்யத் தயங்காததும் கூட. திருக்குர்ஆன் போரை மட்டும் வற்புறுத்தும் இறைச் செய்தியல்ல. அது சமாதானத்தையும் வற்புறுத்துகிறது. போரும் சமாதானமும் ஒன்றின் மறுபக்கமாக இன்னொன்று அமைகின்றது. இரண்டுக்குமே நம்பிக்கையே அடிப்படையாகிறது. முஹம்மதால் மிக முக்கியமானதாகக் கூறப்பட்ட இந்த (48) அத்தியாயம் முந்தைய இரு அருள் வெளிப்பாட்டு மதங்களாகிய யூதம் மற்றும் கிறிஸ்தவத்துடன் இணைந்து நம்பிக்கையின் அடிப்படையிலான ஒரு உன்னதச் சமூகத்தை(உம்மா)க் சுட்டிக்காட்டி நிறைவுறுகிறது.*

"முஹம்மத் அல்லாஹ்வின் தூதர். அவருடன் இருப்பவர்கள் நம்பிக்கையற்றோர் விசயத்தில் கண்டிப்பானவர்களாகவும், தங்களுக்குள் மிக்க அன்புடையவர்களாகவும் இருப்பார்கள். குனிந்து சிரம் தாழ்த்தி வணங்குபவர்களாக அவர்களைக் காண்பீர்கள். அல்லாஹ்வின் அருளையும் பொருத்தத்தையும் எந்நேரமும் விரும்பியவர்களாக இருப்பார்கள்... தவ்ராத்(யூதவேதம்)தில் அவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் உவமையாவது: ஒரு பயிர் முதலில் குருத்தை வெளிப்படுத்துகிறது. பின்னர் அதை வலுப்படுத்துகிறது. பின்னர் அது பருக்கிறது. பிறகு தண்டின் மீது நிமிர்ந்து நிற்கிறது. இது விவசாயிகளை மகிழ்விப்பதற்காகவும் நிராகரிப்பாளர்கள் பொறாமை கொள்வதற்காகவும் தான். எவர் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வாக்களித்துள்ளான்" (48:28,29)

25

# இஸ்லாமிய அரசும் இறுதி வெற்றியும்

மக்காவிலிருந்து மதீனாவுக்குப் புலம்பெயர்வது ஹுதைபியா உடன்படிக்கை மூலம் தடை செய்யப்பட்டதென்பது தொடர்ந்து பல சிக்கல்களுக்குக் காரணமாகியது. கூர்த்த அரசியல் நுட்பம் வாய்ந்தவராகிய முஹம்மது உடன்படிக்கையின் ஓட்டைகளைப் பயன்படுத்திச் சில பிரச்சினைகளைச் சமாளித்தார். உத்மானின் ஒன்றுவிட்ட சகோதரி மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து வந்தபோது அவரைத் திருப்பி அனுப்ப நபிகள் மறுத்துவிட்டார். மதம் மாறிய பெண்களுக்கு உடன்படிக்கைப் பிரிவு பொருந்தாது என்பதே அவர் சொன்ன காரணம். இதன் விளைவாகப் பெண்கள் புலம் பெயர்வதற்குத் தடையில்லை என்கிற நிலைமை ஏற்பட்டது. காப்பாளர்களின் அனுமதியின்றி அவர்கள் வந்திருக்கும் பட்சத்தில் அவர்கள் பெற்றிருந்த திருமணப் பரிசுத் தொகை மட்டும் குறைஷிகளுக்குத் திருப்பி அனுப்பப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸுஹ்றா குலத்துடன் கூட்டாட்சியில் பங்கு பெற்றிருந்த அபூ பஸீர் புலம் பெயர்ந்து வந்தார். பஸீரைத் திருப்பி அனுப்புமாறு கூறி குறைஷிகள் ஒரு தூதுவரை அனுப்பினர். ஒரு உதவியாளருடன் தூதுவர் வந்து நின்றபோது முஹம்மதால் ஒன்றும் செய்ய இயலவில்லை. காப்பாளரின் அனுமதியின்றி வந்துள்ளதால் அவரைத் திருப்பியனுப்புவது தவிர வேறு வழியில்லை என்பதை வருத்தத்துடன் விளக்கினார். ஆனால் அபூ பஸீர் அவ்வளவு எளிதாகக் கையாளப்படக் கூடியவரல்லர். திரும்பிச் செல்லும் வழியில் மதீனாவிலிருந்து எட்டு மைல் தொலைவிலிருந்தபோது தூதுவரின் கத்தியை உருவி அவரைக் கொன்றுவிட்டுத் தப்பி வந்துவிட்டார். உதவியாளன் பயந்து நடுநடுங்கி ஓடோடி வந்து முஹம்மதிடம் அடைக்கலம் புகுந்தான். ஒருமுறை ஒப்பந்தத்தை மதித்து நடந்து கொண்டுவிட்டதால் மறுமுறை தன்னைத் திருப்பி அனுப்ப வேண்டியதில்லை என அபூ பஸீர் வாதிட்டார். தான் இதுவரை புலம் பெயராததால் இன்னும் முஸ்லிமாகவில்லை. எனவே தூதுவரின் ரத்தத்திற்கு முஹம்மது பொறுப்பல்ல என்றும் கூறிப் பார்த்தார். ஆனால் முஹம்மது அவரது வாதத்தை ஏற்கவில்லை. அதே சமயத்தில் அபூ பஸீரை அழைத்துக்கொண்டு கொல்லப்பட்ட தூதுவனின் உதவியாளன் தனியாக 200 மைல்கள் செல்வதற்கும் தயாராக இல்லை.

மதீனாவில் தங்க முடியாத போதும் வேறு எங்கும் தப்பிச் செல்வதற்குத் தடையில்லை என்பதை விளக்கிய முஹம்மது பட்டும் படாமல் அவரது துணிச்சலைப் பாராட்டிச் சில வார்த்தைகள் கூறவும் செய்தார்.

உற்சாகமடைந்த அபூ பஸீர் செங்கடல் ஓரத்திலிருந்த அல்இஸா முகாமிற்குச் சென்று தங்கினார். இச்செய்தி மக்காவுக்குப் பரவியவுடன் புலம் பெயரும் விருப்புடனிருந்த அபூ ஜந்தால் போன்றோர் உற்சாக முற்றனர். இதற்கு முஹம்மதின் மறைமுகமான ஆதரவும் உள்ளதை அறிந்த இவர்களில் சுமார் எழுபது இளைஞர்கள் மக்காவை விட்டுப் புறப்பட்டனர். ஆனால் இம்முறை அவர்கள் இலக்கு மதீனாவாக அல்லாமல் அபூ பஸீர் இருந்த அல் இஸா முகாமாக இருந்தது. ஹுதைபியா உடன்படிக்கையின்படி இதைத் தடுக்க இயலாது. தவிரவும் அபூ பஸீரும் புதிதாய் வந்த இளைஞர்களும் தங்கிய புகலிடம் சிரியா நோக்கிய குறைஷிகளின் வணிகப் பாதைக்கு அருகிலிருந்தது. உடன்படிக்கைக்குப் பிறகு ஏற்பட்ட போர் நிறுத்தத்தின் விளைவாக குறைஷிகள் அச்சமின்றி இவ்வணிகப் பாதையைக் கையாளும் நிலையும் இதன்மூலம் முடிவுக்கு வந்தது. அபூ பஸீர் குழுவினர் மக்காவிலிருந்து வரும் ஒவ்வொரு வணிகக் குழுவையும் தாக்கியபோது உடன்படிக்கைக்கு முந்திய பொருளாதாரத் தடை மீண்டும் நடைமுறைக்கு வந்துவிட்டதை குறைஷிகள் உணர்ந்தனர். தவிரவும் இப்போது குறைஷிகள் மரியாதை அரபுலகில் சரிந்திருந்ததன் விளைவாகத் தம் பழைய பெதோய்ன் கூட்டாளிகளை இணைத்துக்கொண்டு ஒரு புதிய படையெடுப்பை மேற்கொள்வதும் அவர்களுக்குச் சாத்தியமில்லாமல் ஆகிவிட்டது. புதிதாக முஸ்லிம் ஆகிறவர்கள் அல் இஸாவிற்குச் சென்று பஸீருடன் சேர்ந்து கொள்வதைக் காட்டிலும் மதீனாவுக்குப் புலம் பெயர்வதே பரவாயில்லை எனத் குறைஷிகள் நினைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே உடன்படிக்கைக்கு மாறாக இளைஞர்களைப் புலம் பெயரவும் உம்மாவில் இணைத்துக் கொள்ளவும் தமக்கு மறுப்பில்லை என அவர்களே முன் வந்து முஹம்மதிடம் தெரிவித்தனர். முஹம்மது மகிழ்ச்சி பொங்க அபு பஸீரையும் தோழர்களையும் வரவழைக்க ஆளனுப்பியபோது காலம் கடந்திருந்தது. அபூ பஸீர் இறந்துவிட்டிருந்தார்.

அரபுப் பழங்குடிகளிடையே அன்றிருந்த இனக்குழுப் பண்புகள், வழமைகள், மரபுகள், விதிமுறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் புதிய சூழலுக்குரிய சட்ட திட்டங்களை உருவாக்கும் பொறுப்பு நபிகளுக்கு இருந்தது. நபிகளைப் பிற இறைத்தூதர்களுடன் ஒப்பிடும்போது நாம் ஒன்றை மறந்துவிடலாகாது. அவர்கள் யாரும் ஒரு அரசுக்குத் தலைமையேற்கும் பொறுப்பைச் சுமக்கவில்லை. ஆனால் நாம் முன்பே கண்டபடி முஹம்மது இன்று ஒரு சய்யீத். ஒரு தலைவர். கிட்டத்தட்ட ஒரு அரசை நடத்த வேண்டிய பொறுப்பு அவருக்கிருந்தது. எனவே அரசுக்குரிய மரபுகளை, சட்ட ஒழுங்குகளை, நீதிமுறையை, தண்டனை வடிவங்களை அவர் உருவாக்க வேண்டிய அவசியமிருந்தது.

*கருத்துருவமான (abstract) அற போதனைகளைச் செய்யும் இறையியலாளராக மட்டுமின்றி நடைமுறையில் சட்ட ஒழுங்கையும் நீதியையும் பரிபாலனம் செய்கிற அரசியலாளராகவும் இருந்தவர் முஹம்மது. விரிந்த அரசு நிர்வாகம், நிலையான படை (Standing Army), காவல் துறை, சிறைக்கொட்டடிகள் முதலியன நிலவிய ஒரு சமூகமல்ல அவர் ஆட்சி புரிந்த உம்மா. அது ஒரு பழங்குடிச் சமூகம். பழங்குடி மரபுகள், குற்ற விசாரணை, தண்டனைகள் ஆகியவற்றிலிருந்து பெரிய அளவில் மாறுபட்டு நின்று அங்கு ஒரு புதிய அரசமைவை அவர் உருவாக்குவது சாத்தியமில்லை. பழங்குடிச் சமூகங்களில் ரத்த உறவுக்காரர்களே தண்டனைகளை நிறைவேற்றும் பொறுப்புடையவர் களாக இருந்தனர். அதற்கெனத் தனி நிர்வாகம் கிடையாது. கொலைக்குப் பழிவாங்குதல், தாக்குதலுக்கு ஈடாகத் திரும்பித் தாக்குதல் என்பதாக இவை நிறைவேற்றப்பட்டன.*

"அங்கு நாம் (யூதர்களின் தவ்ராத் வேதத்தில்), 'உயிருக்குப் பதில் உயிர், கண்ணுக்குப் பதில் கண், மூக்குக்குப் பதில் மூக்கு காதுக்குப் பதில் காது, பல்லுக்குப் பதில் பல், காயங்களுக்குச் சமமான காயங்கள் எனச் சமமான முறையில் பழிவாங்கப்படும்' என விதித்திருந்தோம். ஆயினும் யாரேனும் பழி வாங்காமல் அவர்களது சுதந்திர விருப்பின் அடிப்படையில் மன்னிப்பார்களேயாயின் அது அவரது பாவங்களுக்குப் பரிகாரமாகும். எவரெல்லாம் அல்லாஹ் இறக்கியருளிய சட்டத்திற்கேற்பத் தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்களெல்லாம் அநீதியாளர்கள்'. (5:45)

*எனத் திருக்குர்ஆன் சொல்ல நேர்ந்ததை நாம் இந்தப் பின்னணியிலேயே விளங்கிக் கொள்ள வேண்டும். நான் முன்பே குறிப்பிட்டபடி திருக்குர்ஆன் என்பது என்றென்றைக்குமான இறை வாக்குகளாக மட்டுமன்றி அன்றைய சூழலுக்கான ஆணைகளை அறிவிக்கும் 'கெஸட்' ஆகவும் இருந்ததென்பதை நாம் மறக்கலாகாது.*

*எனினும் இத்தகைய தண்டனைகளில் அத்துமீறல்கள் கூடாது என்பதையும் மன்னிப்புக்கு இடமுண்டு என்பதையும் திருக்குர்ஆன் வற்புறுத்துவதை நாம் கவனிக்க வேண்டும்.*

"நியாயமாகவன்றி இறைவன் தடுத்துள்ள எந்த ஒரு உயிரையும் கொலை செய்யாதீர். யாரேனும் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டால் அதற்குப் பழிவாங்கக் கோரும் உரிமையை அவருடைய காப்பாளருக்கு நாம் அளித்துள்ளோம். ஆனால் (பழிக்குப் பழியாகச்) செய்யும் கொலையில் அவர் வரம்பு மீறவேண்டாம்" (17:33)

"கொலை செய்தவனுக்கு கொல்லப்பட்டவரின் உறவினரால் சலுகை அளிக்கப்பட்டால் பிறகு நியாயமான முறையில் நிர்ணயிக்கப்படும் உயிரீட்டுத் தொகையை நேர்மையான முறையில் அவன் வழங்கிட

வேண்டும். இது இறைவன் அளித்த சலுகை, கருணை". (2:178)

*என்றெல்லாம் திருக்குர்ஆன் சலுகைகளையும், மன்னிப்புகளையும் வழங்கியுள்ளது. இந்தக் தண்டனைகளைப் பழித்துரைக்கும் இன்றைய நாகரீகச் சமூகத்தில் இத்தகைய மன்னிப்பிற்கு இடமில்லை என்பதையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சுதந்திர விருப்பின் அடிப்படையில் மன்னிக்கும் உரிமை என்பது அன்றைய அரபுச் சமூகத்தில் ஒரு கலகத் தன்மைமிக்க விதிமுறை நெகிழ்வு. அறவியல் ரீதியாகப் பழஞ் சமூகத்தை மேல் நோக்கி நகர்த்திச் செல்லும் ஒரு புரட்சிகர நகர்வு. 'தன்னைப் போல பிறரையும் நேசி' எனக் கிறிஸ்தவம் சொல்கிறதெனில் அதனினும் நடைமுறை ரீதியாகத் திருக்குர்ஆன்,*

"(இறைவனுக்குரிய) நற்செயல் என்பது உம் முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல. மாறாக அல்லாஹ்வையும், இறுதி நாளையும் வானவர்களையும், வேதங்களையும் நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும், தமக்கு விருப்பமான பொருட்களை உறவினர்களுக்கும், அநாதை களுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப் போருக்கும், அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதும், தொழுகையை மேற்கொள்ளுதலும், ஸக்காத் கொடுத்து வருவதுமேயாகும்"

*என இறைவனுக்குரிய பணியை விளக்குவது குறிப்பிடத்தக்கது.*

*முஹம்மது உருவாக்கிய உம்மா ஒரு உண்மையான சமநிலைச் சமுதாயமாக இருந்தது. அங்கு உயர்ந்தோருக்கும் தாழ்ந்தோருக்கும் எனத் தனித்தனிச் சட்டங்கள் இல்லை. சமூகத்தில் எந்த ஒரு பிரிவினரையும் உயர்த்தி அல்லது தாழ்த்தி அதற்குரிய தண்டனை வேறுபாடுகளைச் சொல்லும் 'தரும சாஸ்த்திர'ங்களல்ல ஷரியத் விதிகள். மத ரீதியாக உயர்ந்தவர்கள், மடாதிபதிகள், சிறப்பு மரியாதைக்குரியவர்கள், தண்டனை விலக்கு பெற்றோர் என யாரும் இங்கு இல்லை. காலில் விழுவதோ, ஆசி வழங்குவதோ இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவில்லை. பொருளியல் ரீதியான ஏற்றத் தாழ்வுகளை குறைக்கும் நடைமுறையாகவே 'ஸக்காத்' வழங்குவது அங்கே கடமையாக்கப்பட்டது. முஹம்மது மரணத்திற்குப் பின் நடந்த ஒரு சம்பவம்: பெதோய்ன் இனக்குழுத் தலைவர்களில் ஒருவரான ஜபலா என்பவர் இஸ்லாத்தைத் தழுவினார். ஒருநாள் அவரை உம்மாவிலுள்ள ஒரு எளியவர் ஏதோ கோபத்தில் கன்னத்தில் அறைந்துவிட்டார். கடுமையான தண்டனை அவருக்கு அளிக்கப்படும் என ஜபலா எதிர்பார்த்தார். தாக்கியவரது கன்னத்தில் திருப்பி அறைய மட்டுமே அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டபோது கோபமுற்ற ஜபலா மீண்டும் கிறிஸ்தவத்திற்குத் திரும்பினார்.*

*யாரும் அணுகத்தக்க மிக எளிய மனிதராக முஹம்மது வாழ்ந்தார். இறைத்தூதர் என்பது தவிர வேறு அடைமொழிகளையோ, மரியாதை*

விளிப்புகளையோ, புகழ்ச்சிகளையோ அவர் கோரியது இல்லை. மசூதியிலும், மரத்தடிகளிலும் சாதாரண மக்களுடன் அவர் சேர்ந்து அமர்ந்து உரையாடியிருக்கும் காட்சிகள் அவரது வரலாற்றில் ஏராளமாக உண்டு. குழந்தைகளிடம் மிக்க அன்பு கொண்டவராயிருந்தார் அவர். பிராணிகளிடம் அவர் காட்டிய கருணை குறிப்பிடத்தக்கது. பிராணிகள் மீது சூட்டுக்கோலால் அடையாளக் குறியிடுவது, கழுத்தை இறுக்கி வளையங்கள் மாட்டுவது, மிருகங்களைச் சண்டையிட்டு வேடிக்கை பார்ப்பது முதலியவற்றை அவர் தடை செய்தார்.

ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகு அபிசீனியாவிலிருந்த முஸ்லிம்களை மதீனாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார் முஹம்மது. கைபரிலிருந்த யூதக் குடியிருப்பு மதீனா முற்றுகையின்போது எதிரிகளுக்குச் சாதகமான நிலை எடுத்ததை அவர் மறக்கவில்லை.

அவர்களை அப்படியே விட்டு வைப்பது ‘உம்மா’வுக்கு என்றைக்கும் ஆபத்துதான் என்பதை உணர்ந்த முஹம்மது 600 பேர் கொண்ட படையுடன் சென்று கைபரை முற்றுகையிட்டார். மதீனாவைப் போலவே சுற்றிலும் மலைகள் சூழ்ந்த இயற்கைப் பாதுகாப்பு நிறைந்த கைபரை வெறும் 600 வீரர்களைக் கொண்டு முஹம்மது என்ன செய்யப்போகிறார் என குறைஷிகள் ஆவலுடன் பார்த்திருந்தனர். ஆனால் யூதர்களுக்கிடையே இருந்த ஒற்றுமையின்மை நபிகளுக்குச் சாதகமாக இருந்தது. ஒரு மாத முற்றுகைக்குப் பின் கைபர் யூதர்கள் பணிந்தனர். உடன்படிக்கை ஒன்றும் உருவானது. மதீனாவுக்கு முஸ்லிம்கள் திரும்பியபோது அபிசீனியத் தோழர்கள் வந்திருந்தனர். (அபூ சுஃப்யானின் மகளும் முஹம்மதின் மனைவியுமான உம்ம் ஹபீபா அவர்களில் ஒருவர்.) வடக்கில் புதிதாய் இணைந்திருந்த யூதக் கூட்டாளிகளின் வேண்டுகோளுக்கிணங்கி சில சூறைத் தாக்குதல்களும் இத்தருணத்தில் மேற்கொள்ளப்பட்டன.

புனித மாதமாகிய து-அல்-ஹிஜ்ஜா (மார்ச் 629)வில் ஹுதைபியா உடன்படிக்கையின்படி கஅபாவை நோக்கி முஸ்லிம்கள் புறப்பட்டனர். இம்முறை முஹம்மதைப் பின் தொடர்ந்தவர்களின் எண்ணிக்கை 2600. யாத்ரிகர் குழு மக்கா புனித மண்ணை, நெருங்கியவுடன் ஒப்பந்தப்படி குறைஷிகள் புனித நகரத்தை விட்டு வெளியேறினர். அபூ குபைஸ் மலை மீது நின்றிருந்த குறைஷி குலத் தலைவர்கள் அச்சத்துடன் என்ன நடக்கிறது என்று பார்த்த வண்ணமிருந்தனர். கஸ்வாவின் மீது அமர்ந்திருந்த முஹம்மதின் தலைமையில் முஸ்லிம்கள் புனித நகரத்திற்குள் நுழைந்த போது, ‘ஓ! இறைவா! உன் பணியில் நான்’ என்ற முழக்கம் விண்ணைப் பிளந்தது. கஅபாவை அணுகியதும் ஒட்டகத்திலிருந்து குதித்த முஹம்மது புனிதக் கருப்புக் கல்லை ஆரத் தழுவி முத்தமிட்டார். பின் கஅபாவைச் சுற்றி வரும் தவ்வாஃப் சடங்கு நிறைவு செய்யப்பட்டது. அது முழுமையான ஹஜ் இல்லை என்பதால் அராபத் மலை, மினா பள்ளத்தாக்கு முதலியவற்றிற்கு மட்டும் அவர் செல்லவில்லை.

முஸ்லிம் ஆகுமுன் அடிமையாகவிருந்த அந்தக் கருப்பு அபிசீனியரான பிலால் கஅபா திருத்தலத்தின் மீது ஏறி நின்று, ''தொழ வாருங்கள் அல்லாஹ்வே பெரியவன்'' என்று நாளொன்றுக்கு மும்முறை உரத்த குரலில் அழைத்தபோது குறைஷிச் சமூகம் அதிர்ச்சியால் உறைந்தது. முஹம்மதின் மாமா அப்பாஸ் முன்வந்து தன் விதவை மகள் மைமுனாவைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டினார். முஹம்மது அதை ஏற்றுக்கொண்டது மட்டுமின்றித் திருமண விருந்துக்கு அப்பாஸையும் அழைத்தார். முஹம்மது தங்கியிருந்த இடத்திற்கு வந்த சுஹாய்ல் மூன்று நாட்கள் முடிந்துவிட்டது எனவும் வெறியேறுமாறும் சொன்னபோது முஸ்லிம்கள் சிலர் கொதித்தெழுந்தனர். ''நமது கூடாரத்திற்கு வந்தவர்களைத் திட்டாதீர்கள்'' என வேண்டிய முஹம்மது இரவு கவியுமுன் யாத்ரீகர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

முஹம்மதுக்கு மீண்டும் ஒரு வெற்றி. அரபு நாடு முழுவதும் இதே பேச்சு. மேலும் மேலும் மக்கா நகர் இளைஞர்கள் புலம்பெயரத் தொடங்கினர். மேலும் மேலும் பெதோய்ன் குழுக்கள் முஹம்மதுடன் கூட்டு வைத்துக் கொண்டன. புதிதாய் முஸ்லிமானவர்களில் அம்ரும், காலித்தும் முக்கியமானவர்கள். முஹம்மதின் வெற்றிகளைப் புரிந்து கொள்வதற்கு அவர் இறைத்தூதர்தான் என ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி அவர்களுக்குத் தெரியவில்லை. பெருவீரரான காலித் முந்தைய போர்களில் முஸ்லிம்கள் பலரைக் கொன்றவர். இதுகுறித்து அவர் அஞ்சியபோது இஸ்லாமாவதன் மூலம் பழைய கடன்கள் தீர்கின்றன என்பதை முஹம்மது விளக்கினார். அது ஒரு புதிய வாழ்வின் தொடக்கம். உம்மாவின் அடிப்படை இதுவே.

மக்காவிலிருந்து திரும்பிய பின் முஹம்மது சில சோகங்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. சிரிய எல்லையை நோக்கிய ஒரு படை எடுப்பில் ஜஅஃபரும் ஸைதும் மாண்டனர். தனது இறுதி ஆண்டுகளில் நபிகளின் கவனம் வடதிசை நோக்கித் திரும்பி இருந்தது. அத்தகைய ஒரு படையெடுப்பிற்கு தலைமை தாங்கியே ஸைதும், ஜஅஃபரும் சென்றிருந்தனர். 3000 பேர் கொண்ட முஸ்லிம் படை ஒரு லட்சம் பேர்கள் கொண்ட ஹெராக்லிடஸின் படையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பெரும் படை எதிர்வருவதை அறிந்தபோது முஸ்லிம்கள் திரும்பியிருக்கலாம். என்ன காரணத்தினால் தொடர்ந்து முன்னேறினார்கள் எனத் தெரியவில்லை. இப்போர் குறித்த முழு விவரங்களும் நமக்குக் கிட்டவில்லை. செங்கடலுக்கு அருகிலிருந்த முஅபி கிராமத்தில் பைஸாண்டியப் படைப்பிரிவு ஒன்று தாக்கியபோது ஸைத், ஜஅஃபருடன் வேறு பத்து முஸ்லிம்களும் மரணத்தைத் தழுவினர். மிச்சமிருந்த படைகளுடன் காலித் திரும்ப நேரிட்டது.

செய்தி அறிந்த முஹம்மது ஜஅஃபர் வீட்டுக்குச் சென்றபோது அவர்

மனைவி அஸ்மா ரொட்டி சுட்டுக்கொண்டிருந்தார். முஹம்மதின் முகம் அவர் நல்ல செய்தியுடன் வரவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியது. ஜஅஃபரின் இரு மகன்களையும் தேடிய நபிகள் அருகில் அமர்ந்து அவர்களை மார்போடு அணைத்துக்கொண்டு தேம்பி அழுதார். அஸ்மா அரபு வழக்கப்படி வாய்விட்டுக் கதறினார். பெண்கள் ஓடி வந்தனர். அவர்களைக் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு முஹம்மது மசூதியை நோக்கி வந்தபோது வீட்டிலிருந்து வெளியே ஓடிவந்த ஸைதின் மகள் அவர் கரங்களில் வீழ்ந்தாள். தூக்கி அணைத்துக்கொண்ட முஹம்மது தேம்பித் தேம்பி அழுதவாறே நின்றிருந்தார்.

தோல்வியுடன் திரும்பிய காலித்தை முஸ்லிம்கள் கோபித்தபோது முஹம்மது அவர்களைச் சமாதானப்படுத்தினார். ஒரே மாதத்தில் அம்ரின் தலைமையில் சென்ற படை வட அரபுக் குலங்களைத் தாக்கித் துரத்தியது.

இந்தச் சோகங்களுக்கிடையில் நபிகளுக்குக் கிடைத்த ஒரே ஆறுதல் அவரது பிரியத்துக்குரிய மர்யம் அவருக்குக் கிடைத்ததுதான். மர்யத்திற்குப் பிறந்த குழந்தைக்கு நபிகள் இப்ராஹீம் எனப் பெயரிட்டார்.

அந்த ஆண்டு இறுதியில் குறைஷிகள் ஹுதைபியா உடன்படிக்கை முறியுமாறு ஒரு காரியம் செய்தனர். பக்ர் குலமும் குஸஅ குலமும் பாரம்பரியமான எதிரிகள். இவர்களில் பக்ர்கள் குறைஷிகளுடனும் குஸாஅக்கள் முஹம்மதுடனும் இணைந்திருந்தனர். நவம்பர் 629ல் குறைஷிகளின் உதவியோடு பக்ர்கள் குஸாஅக்களை தாக்கினர். மக்கா நகரின் புனித மண்ணிலும் கூட இவர்கள் போரிடக்கூடிய சூழல் ஏற்பட்ட போது குஸாஅக்கள் முஹம்மதிடம் உதவி வேண்டினர். நபிகள் அதை ஏற்றுக்கொண்டார்.

படையெடுப்புக்கு ஒரு நியாயமான காரணத்தை முஸ்லிம்களுக்கு வழங்கிவிட்டதை உணர்ந்த குறைஷிகள் முஹம்மதுடன் சமாதானத்திற்கு முயன்றனர். பக்ர்களின் தாக்குதலுக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என வாதிட்டுப் பார்த்தனர். அபூ சுஃப்யானும் சுஹாய்லும் இம்முயற்சிகளில் இறங்கினர். அபூ சுஃப்யான் மதீனாவிற்கே வந்து சமாதான முயற்சிகளைச் செய்தார். தன் மகளும் முஹம்மதின் மனைவியுமான உம்ம் ஹபீபா உள்ளிட்ட பலரையும் சந்தித்துத் திரும்பினான் அபூ சுஃப்யான். உயிரைக் காப்பாற்றிக் கொள்பவர்கள் முஹம்மதிடம் சரண் புகுவது தவிர வேறு வழியில்லை என்கிற நிலை ஏற்பட்டது.

அபூ சுஃப்யான் புறப்பட்டவுடன் படையெடுப்பிற்காக உம்மாவிற்கும் கூட்டணியினருக்கும் அழைப்பு விடுத்தார் முஹம்மது. இலக்கு எது எனச் சொல்லாமலேயே பெரும் படை திரட்டப்பட்டது. ரமளான் மாதம் 10ம் நாள் (ஜனவரி 630) 10,000 பேர்கொண்ட பெரும் படையுடன் மக்காவை நோக்கிப் புறப்பட்டார் முஹம்மது.

பேரழிவைத் தடுக்கும் நோக்குடன் அப்பாஸ், அபூ சுஃப்யான், புதாய்ல் மூவரும் முஸ்லிம்கள் தங்கியிருந்த முகாமை நோக்கி ஓடி வந்தனர். அன்றிரவு அங்கேயே தங்கவும் செய்தனர். காலையில் அபூ சுஃப்யானை நோக்கிய முஹம்மது அவர் இஸ்லாமாகத் தயாரா என வினவினார். அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பதைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் ஆனால் முஹம்மதை இறைத்தூதர் என ஏற்க மனம் ஒப்பவில்லை எனவும் சுஃப்யான் கூறினான். அதே நேரத்தில் பத்தாயிரம் வீரர்களும் மக்காவின் திசையில் மண்டியிட்டுத் தொழுதனர். அணி அணியாகப் படைகள் மக்காவை நோக்கி நகர்ந்தபோது சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைக் குறைஷிகள் புரிந்து கொண்டனர்.

அலீயின் ஆலோசனைக்கிணங்க சுஃப்யான் ஒரு அறிவிப்புச் செய்தான். சரண் புக விரும்புகிறவர்கள் தனது பாதுகாப்பில் வரலாம் எனவும் முஹம்மது அதை ஏற்றுக்கொள்வார் எனவும் அவர் கூறுவதை ஆவேசமாக அவர் மனைவி ஹிந்த் எதிர்த்தார். சுஃப்யானின் மீசையைப் பிடித்திழுத்து வைத்தார். எனினும் குறைஷியர் நிலைமையைப் புரிந்து கொண்டனர். அவரவர் தம் வீடுகளில் புகுந்து கொண்டனர்.

இக்ரிமாஹ், சஃப்வான், சுஹாய்ல் மூவர் மட்டும் சிறிய படையுடன் காலித் தலைமையிலிருந்த படைப்பிரிவைத் தாக்கித் தோல்வியுற்றனர். சுஹாய்லும் சரணடையத் தீர்மானித்து வீட்டிற்கு அகன்றார். மற்ற இருவரும் மக்காவை விட்டே ஓடினர்.

ஒரு சிறிய துரும்பைக் கூட அசைக்காமல் முஸ்லிம்களின் பெரும் படை மக்காவிற்குள் புகுந்தது. கஅபாவுக்கு அருகில் சிவப்பு நிறக்கூடாரம் அமைத்து முஹம்மது தங்கினார். மனைவியருள் உம்ம் சலாமாவும் மைமுனாவும் வந்திருந்தனர். அலீயின் சகோதரி உம்ம் ஹனி ஓடிவந்து காலித்திற்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்ட தனது உறவினர் இருவரை மன்னிக்க வேண்டினார். அலீயும் பாத்திமாவும் அவர்களைக் கொல்ல வேண்டும் எனச் சொன்னபோதிலும் முஹம்மது அதற்கு உடன்படவில்லை. அவர்களின் பாதுகாப்பிற்கு அவர் உறுதியளித்தார். யாரையும் பழி தீர்க்க அவர் விரும்பவில்லை. யாரையும் வற்புறுத்தி இஸ்லாமாக்கவும் அவர் தயாராயில்லை. சமாதானம் ஒன்றே அவரது குறிக்கோளாக இருந்தது. குறைஷிகளை அழிப்பதற்காக அல்ல, அவர்களைக் காப்பாற்றத் தவறிய அவர்களின் பகன் கடவுளரை அழிப்பதற்காகவே அவர் அங்கு வந்திருந்தார்.

விடிந்தது. தொழுகைக்குப் பின்னர் கஸ்வாவின் மீதேறி கஅபாவை ஏழு முறை வலம் வந்தார் முஹம்மது. ஒவ்வொரு முறையும் புனிதக் கல்லைத் தொட்டு 'அல்லாஹு அக்பர்' என அவர் ஒலித்தபோது பத்தாயிரம் வீரர்களும் அவருடன் இணைந்து குரலெழுப்பினர். இஸ்லாமின் இறுதி வெற்றியை அப்போரொலி பறைசாற்றியது.

# 26

# பொதுமன்னிப்பு

*இஸ்லாமியர்களால் 'இணை வைப்புகள்' என அழைக்கப்படுகிற பகன் தெய்வங்கள் - சிலை உருவங்களின்பால் அடுத்து முஹம்மதின் கவனம் திரும்பியது.*

உண்மை எழுந்தது. பொய்மை அழிந்தது.
பொய்மை அழிந்தே தீரும். (17:81)

*என்கிற இறைவாக்கை ஓதிய வண்ணம் நபிகள் அச்சிலைகள் 360-ஐயும் உடைத்து நொறுக்கிய காட்சியை அச்சம் கண்களில் தேங்க எட்ட நின்று குறைஷிகள் பார்த்துக் கொண்டிருந்தனர். பின் அவர் கஅபாவின் சாவியைக் கொணரச் செய்து உள்ளே நுழைந்தார். அங்கே வரையப்பட்டிருந்த பகன் தேவதைகளின் உருவங்களனைத்தையும் அழிக்க ஆணையிட்டார். ஆபிரஹாம், ஏசு, கன்னிமரி ஆகியோரின் திருவுருவங்களை மட்டும் முஹம்மது அனுமதித்ததாகக் கூறப்படுகிறது. எனினும் பின்னாளில் இஸ்லாம் எல்லாவிதமான உருவ வணக்கங்களையும் இல்லாதொழித்தது. உருவத்தின் மீது கவனம் குவிந்து இறைவனின் மீதான நாட்டம் சிதறடிக்கப்படுகிறது என்பதே காரணம்.*

*அல்லாஹ்வின் இல்லத்தின் முன் நின்றிருந்த நபிகள் கொஞ்சம் கொஞ்சமாக அங்கே வரத் துவங்கியிருந்த மக்கத்து மக்களை நோக்கி உம்மாவில் இணையுமாறும் தம்மை இறைத்தூதராக ஏற்குமாறும் வேண்டுகோள் விடுத்தார். பகன் கடவுளர் மீது கொண்டுள்ள பக்தியும், வீண் பிடிவாதமும், வறட்டு கவுரவமும் பிளவுகளுக்கே வழிவகுக்கும் என்பதை விளக்கினார்.*

"மனிதர்களே! உங்கள் அனைவரையும் நாம் ஒரே ஆண் - பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் நீர் ஒருவரை ஒருவர் அறிமுகமாகும் பொருட்டு உம்மைக் குலங்களாகவும் கிளைகளாகவும் பிரித்தோம். உங்களில் அதிக இறையச்சம் மிக்கவர் யாரோ அவரே உயர்ந்தவர். (மற்றபடி பிறவி உள்ளிட்டு வேறு எந்தக் காரணங் களினாலும் யாரும் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ அல்லர்) அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன் அனைத்தையும் புரிந்தவன்". (49:13)

என்று திருக்குர்ஆன் வசனங்களை அவர் ஓதி முடித்தார். எல்லாவிதமான சாதி மற்றும் இன வேறுபாடுகளுக்கும் எதிரான இறைவாக்கு என இது போற்றப்படுகிறது. உயர் பிறப்பு, தாழ்ந்த பிறப்பு, தீண்டாமை, இனக் கொடுமை எல்லாவற்றையும் இவ்வாறு கோட்பாட்டு ரீதியில் இஸ்லாம் மறுப்பதனாலேயே ஒப்பீட்டளவில் நடைமுறையில் இந்தக் கொடுமைகளில் இருந்து விலகியதாக இஸ்லாம் அமைந்துள்ளது.

எல்லோரும் வியக்கும்படி அனைவர்க்கும் பொது மன்னிப்பை அருளினார் முஹம்மது. ஸஃப்வானுக்கும் கூட மன்னிப்பு அளிக்கப்பட்டது. முஸ்லிம் எதிர்ப்புப் பிரச்சாரத்தை மேற்கெண்ட ஒரு கவிஞர், ஒரு பாடகி, இக்ரிமாஹ் மற்றும் இறைத்தூதரின் குடும்பத்தாரைத் தாக்கிய சிலர் எனச் சுமார் பத்து பேர்கள் மட்டுமே பொது மன்னிப்பிலிருந்து விலக்கப் பட்டனர். எனினும் இவர்களிலும் கூட மன்னிப்புக் கேட்டவர்கள் பின்னர் மன்னிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

நேர்மையும் அறிவுக் கூர்மையுமிக்க ஒரு அரசியல்வாதியாக நாம் இங்கு முஹம்மதைச் சந்திக்கிறோம். சுஹாய்லைக் கூட வெறுப்புடன் நோக்க வேண்டாம் எனத் தோழர்களுக்கு அவர் ஆணையிட்டார். “அவன் சுதந்திரமாக உலவட்டும். அவன் புத்திசாலி, இஸ்லாமின் உண்மையைப் பார்க்க இயலாதவனல்ல” என்றார். தனது அரசியல் அதிகாரத்தை ஏற்றுத் தம் விசுவாசத்தைத் தெரிவிக்குமாறு முஹம்மது அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

சாஃபா குன்றில் அமர்ந்து கொண்டார் முஹம்மது. ஒரு புறம் உமர். இன்னொரு புறம் அபூபக்கர். முதலில் ஆண்கள், பிறகு பெண்கள் என வரிசையாகத் திரண்டிருந்த மக்கள் கூட்டம் ஒவ்வொருவராகச் சென்று உமரின் கரங்களைத் தொட்டுத் தம் விசுவாசத்தை அறிவித்து அகன்றனர்.

மன்னிப்பு மறுக்கப்பட்டவர்களில் ஒருவன் அப்தல்லாஹ் இப்ன் ஸஅத். நபிகளுக்கு இறைவாக்குகள் இறங்கும்போது அவர் சொல்ல எழுதிக் கொண்டவன் அவன். அவனுக்கு அய்யம் ஏற்பட்ட தருணங்களில் இறைத் தூதர் கூறியவற்றை அவரறியாமலே திருத்தியவன் அவன். மக்காவிற்கு ஓடி வந்து இதுகுறித்துக் கதைகளையும் பரப்பி வந்த இவன் உத்மானுக்கு ஒன்றுவிட்ட சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது. அப்தல்லாஹ்வை மன்னிக்குமாறு உத்மான் வற்புறுத்தினார். நீண்ட நேரம் அமைதி காத்த முஹம்மது இறுதியில் அதை ஏற்க வேண்டியதாயிற்று. எனினும் பிறகு ஒருமுறை தோழர்களிடம் சொன்னார்: “நான் தான் ரொம்ப நேரம் பதில் சொல்லாமல் இருந்தேனே. அப்போது அந்த நாயை யாராவது போட்டுத் தள்ளியிருக்க வேண்டியதுதானே”. திருக்குர்ஆனைத் திருத்த முயன்றவர்களை அவர் மன்னிக்கத் தயாராக இல்லை. சல்மான் ருஷ்டி தனது ‘சாத்தானின் பாடல்கள்’ நூலில் அப்தல்லாஹ்வைப் புகழ்ந்தும் முஹம்மதை இரக்கமற்றவராகவும், பழிவாங்கும் பண்புடையவராகவும் சித்திரிப்பது குறிப்பிடத்தக்கது.

சஃப்வானும் இக்ரிமாஹ்வும் முஹம்மதின் தலைமையை ஏற்று நகருக்குத் திரும்பினர். இக்ரிமாஹ் இஸ்லாமையும் ஏற்றுக் கொண்டார். அன்புடன் அவரை வரவேற்ற முஹம்மது யாரும் அவரது தந்தை அபூஜஹ்லை இழித்துப் பேசவேண்டாம் என ஆணையிட்டார். ஹம்ஸாவின் உடலைக் கடித்துக் குதறிய ஹிந்த் கூட முஹம்மது முன் வந்து நின்றாள். ''நீ உத்பாவின் மகள் ஹிந்த் அல்லவா?'' என்றார் முஹம்மது. ''ஆம்'' என கொஞ்சமும் கலங்காமல் சொன்ன அவள், ''நடந்தவைக்காக என்னை மன்னியுங்கள். கடவுள் உம்மை மன்னிப்பார்'' என்றாள். முஹம்மது அறவுரைகளைத் தொடங்கினார். கற்பு தவறாதிருப்பாயல்லவா? களவு செய்திருப்பாய் அல்லவா? சிசுக்கொலை செய்யமாட்டேன் என உறுதியளிப்பாய் அல்லவா என நபிகள் கேட்டபோது, ''அவர்களைக் குழந்தையிலிருந்து வளர்த்து ஆளாக்கியவள் நான். ஆனால் பத்ரில் நீங்களே அவர்களைக் கொன்றீர்கள். நீங்களல்லவா அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும்'' (தபரி) என்றாள். ஹிந்த் இஸ்லாமைத் தழுவினாள். ''அல்லாஹ்வின் தூதரே. இனி நீர் என்னை எதுவும் செய்ய இயலாது. நான் இப்போது ஒரு முஸ்லிம்'' என்றவள் கூறியதும் புன்னகைத்த நபிகள் சொன்னார், ''நிச்சயமாக நீ சுதந்திரமானவள்''. வெகுவிரைவில் தனது கணவன் அபூ சுஃப்யானுக்கு நிறைந்த வெகுமதிகளும் பிள்ளைகளுக்கு உம்மாவில் சிறந்த பொறுப்புகளும் கொடுக்கபடுவதைக் கண்டு மகிழும் பாக்கியம் பெற்றாள் ஹிந்த்.

மக்க நகர் வெற்றி அரபியில் 'அல்ஃபடாஹ்' என அழைக்கப் படுகிறது. திறப்பு, தீர்ப்பு, தண்டனை, அருட்காட்சி எனப் பல பொருட்களையுடைய சொல் அது. மொத்தத்தில் 'வெற்றி' என்பதாக அது பின்னாளில் பொருள் கொள்ளப்பட்டது. முஹம்மது இறைத்தூதர் என்பதும் அவரது முந்தைய அனைத்துக் கொள்கைகளும் இதன் மூலம் நியாயப்படுத்தப்பட்டன. முஹம்மது சரியானவர் என்பதை அல்லாஹ் நிறுவிவிட்டான். அவரது கொடூரமான எதிரிகள் பலர் இப்போது பணிவு மிக்க தோழர்களாயினர். இதன்மூலம் அவர்கள் தமது கவுரவத்தையோ, பதவிகளையோ, பலன்களையோ எதையுமே இழக்கவில்லை. கத்தியின்றி ரத்தமின்றி அமைதி அங்கே நிலைநாட்டப்பட்டது. சில ஆண்டுகளில் அங்கே பகன் வணக்கம் முற்றாக அழிந்தது. காலித்தை நக்லாஹ்விற்கும் அலீயைக் ஹுதாய்லுக்கும் அனுப்பிய முஹம்மது அங்கிருந்த 'அல் உஸ்ஸா' மற்றும் 'மனாத்' எனப்படும் பகன் தெய்வங்களை நொறுக்கி அழித்தார். ஆனால் தய்ஃபில் இருந்த 'அல்லாத்' எனப்படும் மூன்றாவது முக்கிய பகன் தெய்வத்தை அழிப்பது மட்டும் அத்துணை எளிதாக இல்லை. குறைஷிகளின் பரம்பரை எதிரிகளான ஹவாஸினுடைய படைகள் தய்ஃபிற்கு வடக்கே திரண்டிருந்தன. தகீஃப் குலத்தவர்களும் அவர்களது கூட்டாளிகளும் எனச் சுமார் 20,000 பேர் அல்லாத்தைக் காக்கக் திரண்டனர்.

இம்முறை முஹம்மதின் தலைமையில் எழுந்த படையில் குறைஷிகளும் இணைந்திருந்தனர். மக்கா வெற்றிக்குச் சுமார் இரண்டு வாரங்களுக்குப் பின் (ஜனவரி 630) ஹுனைன் பள்ளத்தாக்கில் இரு படைகளும் மோதிக் கொண்டன. முஸ்லிம்கள் தோற்றுவிடக்கூடிய நிலை ஏற்பட்டபோதும் இறுதியில் அவர்கள் தம் ஆற்றலனைத்தையும் திரட்டித் தாக்கி எதிரிகளை ஓடச் செய்தனர். தய்ஃப் கோட்டையில் ஓடி ஒளிந்து கொண்ட எதிரிகளைத் துரத்திச் சென்று முற்றுகையிட்டார் முஹம்மது. இருபது நாட்கள் ஆன பின்னும் முற்றுகையிடப்பட்டவர்கள் பணியாத தால் முற்றுகையைத் தளர்த்திக்கொண்டு முஹம்மது திரும்ப வேண்டியதாயிற்று.

ஹுனைன் போரில் கொண்டு வரப்பட்ட பொருட்களை எவ்வாறு பிரித்துக்கொள்வது என்பது பெரிய பிரச்சினையாயிற்று. முஸ்லிம் களிடையே இருந்த ஒற்றுமையின்மை அதில் வெளிப்பட்டது. இது நாள் வரை முஸ்லிம்களின் எதிரிகளாக இருந்த அபூ சுஃப்யான், சஃப்வான், சுஹாய்ல் ஆகியோருக்கு முஹம்மது சற்று அதிகமாகவே பங்களித்ததை முஹம்மதின் பழைய விசுவாசிகள் குறிப்பாக அன்சாரிகள் விரும்பவில்லை. மகிழ்ச்சியில் திளைத்த சஃப்வான், சுஹாய்ல் ஆகியோர் அல்லாஹ்வை ஏற்று முஸ்லிம்களாயினர். பழைய விசுவாசிகளோ இக்கட்டான காலங்களில் துணையிருந்த தம்மை விட்டுவிட்டுத் தமது குலத்தவருடன் முஹம்மது நட்புப் பேணத் துவங்கிவிட்டார் என்கிற நியாயமான அச்சத்திற்குள்ளாயினர். புலம் பெயர்ந்து வந்த தமக்கு மதீனத்துத் தோழமை அளித்த அனைத்தையும் முஹம்மது நினைவு கூர்ந்து ஆற்றிய உரை அவர்களை அமைதி கொள்ளச் செய்தது. மதீனாவே இனி எனது இல்லமாக இருக்கும். என் உயிர் அங்கேயே பிரியும் என அவர் சொன்னபோது அன்சாரிகளின் கண்களில் நீர் வழிந்தது.

> "இவ்வுலக வாழ்வின் பயன்களை நான் அவர்களுக்கு அளித்தேன். அவர்கள் முஸ்லிம்கள் ஆவார்களென. ஆனால் உங்களிடம் நான் இஸ்லாத்தையல்லவா தந்துள்ளேன்? அவர்கள் ஆடுகளையும் ஒட்டகங்களையும் அழைத்துச் செல்லப் போகின்றனர். நீங்கள் இறைத்தூதரை அல்லவா உங்களோடு கொண்டு செல்லப் போகிறீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக, அவனது கையில் முஹமத்தின் உயிருள்ளது. புலப்பெயர்வு நடைபெற்றிருக்காவிட்டால் நானே அன்சாரிகளில் ஒருவனாக ஆகியிருப்பேன். எல்லோரும் ஓர் பக்கமும் அன்சாரிகள் ஓர் பக்கமும் என்றால் நான் அன்சாரிகளின் வழியையே தேர்வு செய்திருப்பேன். இறைவன் அன்சாரிகளுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அருள் பாலிக்கட்டும்" (இப்ன் இஷ்ஹாக்)

என்றவர் சொன்னபோது அன்சாரிகள் என்ன செய்திருக்க முடியும். அப்போதைக்கு அவர்கள் சமாதானமடைந்தனர். சுருக்கமான யாத்திரைக்

கடமைகளை (உம்ரா) முடித்த பின் சொன்னவாறே மதீனாவிற்குத் திரும்பினார் முஹம்மது. மக்காவில் தனது பிரதிநிதியாக அத்தாப் இப்ன் அசீதை அவர் நியமித்தார். தினம் ஒரு திர்ஹம் ஊதியமென அவருக்கு நிர்ணயிக்கப்பட்டது. மக்கத்து மக்களுக்குக் குர்ஆனையும் இஸ்லாத்தையும் கற்பிப்பதற்கென முஆத் இப்ன் ஜபல் அங்கேயே இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்.

ஹிஜ்ரி எட்டாம் ஆண்டில் (629-630) முஹம்மது மேலும் இரு திருமணங்களைச் செய்து கொண்டார். எனினும் இரண்டுமே விரைவில் தோல்வியில் முடிந்தன. ஒரு மனைவி மனநோயாளியாக இருந்தார். மற்றவரின் தந்தை முஸ்லிம்களுடனான சச்சரவில் கொல்லப்பட்டதால் முஹம்மதுடனான உறவை அவர் விரும்பவில்லை. அவர்கள் இருவருடான திருமண ஒப்பந்தத்தையும் ரத்து செய்வது தவிர அவருக்கு வேறு வழி இருக்கவில்லை. சவ்தாவையும் கூட முஹம்மது விவாகரத்து செய்ய முனைந்தபோது இறுதித் தீர்ப்பு நாளில் முஹம்மதின் மனைவியாக இருக்க விழைவதாக அவர் கூறியதை ஏற்று முடிவை மாற்றிக் கொண்டதாக இப்ன் ஸஅத் தொகுப்பில் கூறப்பட்டுள்ளதை மாக்ஸிம் ரோடின்சன் சுட்டிக்காட்டுகிறார்.

சதா தமக்குள் போரிட்டுக் கொண்டிருந்த பல்வேறு அரபு இனக் குழுக்களை இணைத்து ஒரு வலிமையும் அமைதியும் மிக்க அரபுச் சமூகத்தை உருவாக்கும் பணி இப்போது முஹம்மதிற்கு எளிதாகியது. அனைத்து அரபுப் பழங்குடியிபரும் தமது தூதுவர்களை முஹம்மதிடம் அனுப்புவது புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்வது என்பதாக அடுத்த இரண்டாண்டுகள் கழிந்தன. நாடோடிச் சமூகத்தினர் பலரும் முஸ்லிம்களுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியற்றவர்களாயினர். உம்மாவையோ அத்துடன் இணைந்துள்ளவர் களையோ தாக்குவதில்லை என்பதும் ஸக்காத், வழங்குவதற்கு ஒப்புதல் அளித்தல் என்பதும் ஒப்பந்தங்களின் முக்கிய நிபந்தனைகளாயிருந்தன. பல்வேறு அரசியல் சாதுரியங்களையும் பயன்படுத்தி அரபுலகில் ஒற்றுமைக்கு வழிகோலினார் முஹம்மது. எந்நிலையிலும் அவர் இஸ்லாமிய இறை நெறியை வற்புறுத்தி யார் மீதும் திணிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வலிமையானவர்களுக்குப் பரிசளித்தல், ராணுவ ரீதியில் கட்டுப்பட வைத்தல் எனப் பல்வேறு அரசியல் தந்திரங்களையும் அவர் செயற்படுத்தினார். அரசியல் ரீதியில் முஸ்லிம்களின் மேலாண்மையை முதலில் ஏற்றுக்கொள்ளுதல் என்பது அடுத்த கட்டமாக அவர்கள் படிப்படியாக இஸ்லாமியக் கருத்தியலை ஏற்றுக்கொள்ளுவது என்பதாகவே முடிந்தது என்பது வேறு கதை.

எனினும் தொடர்ந்து போர் புரிந்தே பழக்கப்பட்டிருந்த அரபுச் சமூகத்தை முற்றிலும் போரை விலக்கிய ஒன்றாக உடனடியாக மாற்ற இயலவில்லை. எனவே அக்டோபர் 630ல் முஹம்மது ஒரு

படையெடுப்பை அறிவித்தார். இம்முறை அது பைசான்டியப் பேரரசின் எல்லையை நோக்கியதாக அமைந்தது. அது கடும் வெப்பகாலம். பேரீச்சை அறுவடை நேரம் வேறு. பைசான்டிய வலிமை குறித்த அச்சமும் முஸ்லிம் களிடையே இருந்தது. எனவே அவர்களில் சிலர் முணுமுணுத்தனர். பின்வாங்கினர். 'முனாஃபிகின்கள் (ஏமாற்றுக்காரர்கள்) இதில் முண்ணணியிலிருந்தனர். அலீ கூட முஹம்மது குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளவெனப் போரில் கலந்து கொள்ளவில்லை. 30,000 பேர் கொண்ட படை முஹம்மது தலைமையில் வடக்கு நோக்கிப் புறப்பட்டது. சுமார் 90 பேர்கள் மதீனாவிலேயே தங்கினர். இவர்களில் சிலர் இறைத் தூதருக்கு எதிரான சதி நோக்கம் கொண்டவர்களாயு மிருந்தனர். முஹம்மதுடன் புறப்பட்டவர்களிலும் ஒரு சிலர் தயக்கத்துடனேயே தொடர்ந்தனர்.

மதீனாவிலிருந்து வடமேற்கில் 250 மைல்கள் தொலைவிலிருந்து தபூக்கை முஹம்மதின் பெரும் படை வந்தடைந்தது. சுமார் பத்து நாட்கள் முஹம்மது அங்கேயே தங்கியிருந்தார். பைசான்டியப் பேரரசின் நுழைவாயிலில் முஹம்மதின் பெரும் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டதென்பது அங்கிருந்த பெதோய்ன் பழங்குடிகள் மத்தியில் முஹம்மதின் செல்வாக்கு பெருகக் காரணமாயிற்று. அங்கிருந்த பல ஆட்சியாளர்களுடன் அவர் ஒப்பந்தம் செய்து கொண்டார். தற்போதைய இஸ்ரேலின் அன்றைய ஆட்சியாளரான எய்லத்தும் தற்போதைய ஜோர்டான், மக்னா ஆகியவற்றில் அன்றிருந்த யூதக் குடியிருப்புகளும் முஹம்மத்துக்குக் கப்பம் கட்டச் சம்மதித்தனர். பணிய மறுத்த துமாத் அல் ஜந்தாவின் அரசரும் கூட காலித் தலைமையில் அனுப்பபட்ட படையைக் கண்டவுடன் முஹம்மதுடன் சமாதானத்திற்கு இசைந்தார். பெரு வெற்றி எனச் சொல்ல இயலாவிட்டாலும் மதீனாவை மய்யமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட முஸ்லிம் அரசுக்கு வெளி உலகுடன் ஒரு கவுரவமிக்க உறவு விசாலிப்பாக இப்படையெடுப்பு அமைந்தது.

எனினும் முஹம்மதுக்கு எதிரான எதிர்ப்பு உள்ளுக்குள் உருவாகும் நிலையும் இக்காலகட்டத்தில் ஏற்பட்டது. ஒரு மலை உச்சியிலிருந்து அவரைத் தள்ளிக் கொலை செய்யும் முயற்சி ஒன்று நடந்ததாகவும் கூட நாம் அறிய வருகிறோம். எனினும் அவர் அல்லாஹ்வின் பேரருளால் தப்பினார். மதீனாவை விட்டுப் புறப்படுமுன் கூபா என்னுமிடத்தில் கட்டப்பட்ட மசூதியைத் திரும்பி வந்தவுடன் புனிதப்படுத்தித் திறந்து வைப்பதாகச் சொல்லிருந்தார் முஹம்மது. தனக்கு எதிரானவர்களின் மய்யமாக உம்மாவைப் பிளவுபடுத்தும் நோக்கமுடையவர்களால் அது உருவாக்கப்பட்டதாக உணர்ந்த முஹம்மது முஸ்லிம்களில் இருவரை கூபாவுக்கு அனுப்பி அந்த மசூதியை எரியூட்டி வரச் செய்தார். படை எடுப்பில் கலந்து கொள்ளாமல் மதீனாவில் இருந்தவர்கள் மீது விசாரணை ஒன்றை அடுத்த நாளில் நடத்தினார். பலரும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். மூவரை மட்டும் சுமார் இரண்டு மாத காலம் சமூக விலக்குச் செய்தார்.

முஸ்லிம் எதிர்ப்பு இவ்வாறு முறியடிக்கப்பட்டது எனலாம். சில நாட்களுக்குப் பின் பலவாறும் துரோகம் இழைத்துக் கொண்டிருந்த இப்ன் உபை இறந்தபோது நல்லெண்ண அடிப்படையில் அங்கு சென்ற முஹம்மது அவரது சமாதியில் தொழவும் செய்தார். முஸ்லிம்களில் சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். சமாதியிடத்திலேயே ஒரு சச்சரவு ஏற்பட்டது. பின்னர் இறங்கிய ஒரு இறைவாக்கு இறுதிவரை நம்பிக்கையற்றிருந்தோரது சமாதிகளில் இறைத்தூதர் தொழக்கூடாது என விதித்தது (9:84).

மக்க நகர் வெற்றியைத் தொடர்ந்து முஹம்மது மேற்கொண்ட முற்றுகை வெற்றி பெற இயலாமல் திரும்பி வந்து சரியாக ஓராண்டுக்குப்பின் (ஜனவரி 631) தய்ஃபப் சரணடைந்தது. ஹுனைன் போருக்குப் பின் ஹவாஸின்களும் முஹம்மதின் கூட்டாளிகளானதால் தய்ஃபுக்கு வேறு வழியில்லை. எனினும் அவர்கள் முஹம்மதிடம் சில சலுகைகள் வேண்டினர். தாம் பல நாடுகளில் சென்று வணிகம் புரிவதால் மனைவியல்லாத பெண்களுடனும் உறவு கொள்வதற்கும், தமது திராட்சைத் தோட்டத்தில் விளையும் மதுவைக் குடிப்பதற்கும், இன்னும் சில ஆண்டுகள் மட்டும் தமது அல்லாத் கோயிலை இடிக்காமல் வைத்திருப்பதற்கும் அவர்கள் வைத்த வேண்டுதல்களை முஹம்மது முற்றாகப் புறக்கணித்தார். மதுவையும் 'மய்சிர்' என்னும் ஒருவகைச் சூதாட்டத்தையும் முஸ்லிம் அரசு தடை செய்திருந்தது. மது அருந்துதல் பகன் இறை வழிபாட்டுச் சடங்குகளுடன் இணைந்த ஒன்றாக இருந்தது குறிப்பிடத்தக்கது. முஹம்மது அவர்களுக்கு மனமுவந்து அளித்த ஒரே சலுகை அவர்களாகவே அல்லாத் கோயிலை இடிக்க வேண்டுவதில்லை என்பது தான். பதிலாக அபூ சுஃப்யானை அனுப்பி அல்லாத் தேவதையின் கோயில் இடிந்து வீழ்த்தப்பட்டது. எந்த அபு சுஃப்யான் பகன் வழிபாட்டிற்காக இத்தனை காலம் போராடினாரோ அவர் கையாலேயே கடைசிப் பகன் தெய்வம் வீழ்த்தப்பட்டதென்பது அரபு வரலாற்றின் அடுத்த அத்தியாயம் தொடங்கிவிட்டதற்கான ஒரு குறியீடாக அமைந்தது.

அல்லாஹ்வைத் தவிர வேறு இணையாய்க் கருதத் தெய்வமில்லை என்று இறைப் பணியைத் தொடங்கிய முஹம்மது அதனைத் தம் மண்ணில் நிறைவேற்றி முடித்தபோது அவர் ஒரு முதிய மனிதர். அறுபது வயது. அடக்குமுறைகள், போராட்டங்கள், புலப்பெயர்வு, போர்கள், தோல்விகள், வெற்றிகள் என அவரது உடல் தளர்ந்திருந்தது. இறைவனின் விருப்பை, அவனது அன்றன்றைய அருள் வெளிப்பாடுகளை நிறைவேற்றி நிறைவேற்றிக் களைத்திருந்த அவரது உடல் நிரந்தர ஓய்வைக் கோரியது.

# விடைபெற்ற இறைத்தூதர்

## 27

*மிருகங்களிடமும் குழந்தைகளிடமும் நபிகள் எப்போதும் அன்பாக இருப்பார். இஸ்லாமுக்கு முந்திய காலத்தில் ('ஜாஹிலியாஹ்') உயிருடன் உள்ள மிருகங்களின் சதைகளைக் கழித்துச் சமைத்துச் சாப்பிடும் வழக்கம் இருந்தது. முஹம்மது அதைத் தடை செய்தார். பிராணி வதையை இஸ்லாமிய அரசு தடை செய்தது குறித்து முன்பே பார்த்தோம்.*

*குழந்தைகளை எங்கு பார்த்தாலும் அவர்களைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொஞ்சுவது அவரது வழக்கம். எந்தத் தருணத்திலும் நபிகளைக் குழந்தைகள் அணுகலாம். அலீயின் குழந்தைகள் ஹாஸனும் ஹுஸைனும் தாத்தாவிடம் ரொம்பவே விளையாடுவார்கள். முஹம்மதை மண்டியிடச் செய்து அவர் மீது குதிரை ஏறி விளையாடுவது அவர்களுக்கு ரொம்பப் பிடித்தம். அவரது பிரியத்துக்குரிய மர்யம் மூலம் அவருக்குக் கிடைத்த ஒரே மகன் இப்ராஹீமிடம் அவருக்குப் பாசம் அதிகம். எப்போதும் அவனைத் தூக்கித் திரிவார். ஆயிஷாவுக்கு இது அவ்வளவாகப் பிடிப்பதில்லை. போதாக்குறைக்கு நபிகள் ஒருநாள் அவரிடம், 'இவன் என்னைப் போலவே இருக்கிறான் இல்லையா'? என்று வேறு கேட்டு வைத்தார். "அப்படி ஒன்றும் தெரியவில்லையே" என்பதே ஆயிஷாவின் பதிலாக இருந்தது. "கொழு கொழு என்று எப்படி அழகாக இருக்கான் பார்" என அவர் மேலும் சொன்னதும், "ஆட்டுப்பால் குடிக்கும் எல்லாப் பிள்ளைகளும் குண்டாகவும் அழகாகவும்தான் இருக்கும்" என்று கடுகடுத்தார் ஆயிஷா. இப்ராஹீமின் வளர்ப்புத் தாயின் வீட்டிற்குத் தினம் நல்ல ஆட்டுப்பாலை அனுப்புவது வழக்கமாக இருந்தது.*

*ஆனாலும் **632**ம் ஆண்டின் தொடக்கத்தில் குழந்தை இப்ராஹீம் சுகவீனமடைந்தான். என்ன முயன்றும் அவன் தேறவில்லை. முஹம்மது மகனின் அருகிலேயே இருந்தார். அவனது கடைசிக் கணங்கள் அவரது கரங்களில் கழிந்தன. கடைசி மூச்சிழை பிரிந்தபோது அவர் தேம்பித் தேம்பி அழுதார். சில மாதங்களுக்கு முன்னர்தான் அன்பு மகள் உம்ம் குப்துமையும் அவர் இழந்திருந்தார். யாரும் இறக்கும்போது பேரொலி எழுப்பி அழ வேண்டாம் என அவர் கூறியிருந்தது சுற்றியிருந்தவர்களுக்கு நினைவுக்கு வந்தது. அப்த் அர்-ரஹ்மான் இதை வாய்விட்டுக் கேட்கவே செய்தார். அழுது ஆர்ப்பாட்டம் செய்வதுதான் வேண்டாமெனச் சொன்னேனேயொழிய உள்ளத்தின் மென்மையான உணர்வுகளின்*

வெளிப்பாடாகக் கண்கள் கசிவதை யார் தடுக்க முடியும் என முஹம்மது விளக்கினார். இப்ராஹீமுடன் விரைவில் தாம் ஒன்று சேர்வோம் என்கிற உணர்வு அவரைச் சற்றே ஆறுதல் கொள்ளச் செய்தது. இறுதிச் சடங்கு முடிந்து புதைக்குழி மூடப்பட்ட பின்னும்கூட அவருக்கு அந்த இடத்தை விட்டு அகல மனமில்லை.

இப்ராஹீம் அடக்கம் செய்யப்பட்ட சிறிது நேரத்தில் சூரிய கிரகணம் ஒன்று ஏற்பட்டது. கிரகணத்தின் விளைவாகவே நபிகளுக்கு இத்துயரம் ஏற்பட்டது என யாரோ சொல்ல முனைந்தபோது அந்த மூட நம்பிக்கையை நபிகள் கண்டித்தார். இறப்புக்கும் இதற்கும் தொடர்பில்லை என விளக்கினார்.

மரணம் தன்னை நெருங்கியதை உணர்ந்த நபிகளுக்கு இறுதி ஹஜ்ஜைச் செய்ய மனம் விழைந்தது. ஹஜ்ஜுக்குரிய அல்-ஹிஜ்ஜா மாதம் அது. தானே யாத்திரைக்குத் தலைமையேற்று அழைத்துச் செல்வதாக அறிவித்தார். ஏக இறைக் கொள்கையை ஏற்றவர்கள் மட்டுமே கஅபாவைச் சுற்றித் தொழப் போகிற முதல் ஹஜ் அது. புதிய மதத்தை அரபுப் பாரம்பரிய புனித வேர்களுடன் இணைப்பது அவரது நோக்கமாக இருந்தது. பிப்ரவரி இறுதியில் மனைவியர் அனைவரையும் அழைத்துக் கொண்டு யாத்ரீகர்கள் புடை சூழப் புறப்பட்ட அவர் மார்ச் 3 அன்று மக்காவை அடைந்தார்.

"ஓ! இறைவா! இதோ உன் பணியில் நான்" என்கிற பாரம்பரிய முழக்கத்தை ஒலித்த முஹம்மது அரபுகள் பிரியமாய்ப் போற்றி வந்த பழைய பகன் மரபுச் சடங்குகளைப் புதிய சூழலில் புதிய பொருளுடன் நிறைவேற்றியபோது அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரும் அதனைக் கூர்மையாகக் கவனித்தனர். இனி ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு ஹஜ்புரிய வருவோர் கடைபிடிக்கவேண்டிய முறைகளை வகுக்கும் நிகழ்வல்லவா அது.

ஒவ்வொரு முஸ்லிமும் அவரது சூழல் அனுமதிக்கும் பட்சத்தில் வாழ்வில் ஒரு முறையேனும் ஹஜ் புரிய வேண்டும். வெளியிலிருந்து பார்ப்போருக்கு அச்சடங்குகள் அர்த்தமற்றவையாகக் கூடத் தோன்றலாம். ஆனால் முஸ்லிம்களின் இறையியல் வாழ்வின் உச்ச நிகழ்வாக ஹஜ் அமைவதை அவர்களது கூற்றுக்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. இன்று ஹஜ்ஜின்போது கஅபாவில் முன் திரண்டிருக்கும் அனைவருமே அரபுகள் அல்ல. பல்வேறு நாட்டினர். பல்வேறு மொழியினர். அனைவரும் ஹஜ்ஜுக்குரிய ஆடையை அணிந்து கொண்டு ஒருமித்துத் தொழும்போது ஒவ்வொருவரும் தமது சுயப் பெருமைகளை இழக்கின்றனர். ஒற்றைச் சமூக உணர்வுடன் சகோதர பாசத்துடன் அவர்கள் இறையொளியில் அய்க்கியமாகின்றனர். தனி நபர் முக்தி அடைவது என்பதாக இல்லாமல் இங்கே தனி நபரின் ஆன்மீக உயர்வு சமூகத்தில் ஆன்மீக அனுபவத்துடன் பிரிக்க இயலாததாகிறது. இறைவனை மய்யமாகக் கொண்டு உம்மாவில்

தன்னைக் கரைத்துக் கொள்ளும் இறையனுபவத்தை ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஹஜ் வழங்குகிறது. அமைதியும் ஒத்திசைவும் நிரம்பிய ஒரு லட்சிய சமூக உணர்வை முஸ்லிம்கள் ஹஜ் மூலம் பெறுகின்றனர். புனிதத் தலத்தில் எல்லாவிதமான வன்முறைகளும் தடை செய்யப்பட்டு உள்ளன. யாரும் யாருக்கும் துன்பம் விளைவிக்கலாகாது. மனத்தை வருத்தும் சொற்களைக் கூறக்கூடாது. திருக்குர்ஆன் அடிக்கடி வலியுறுத்துகிற 'இறைவனிடம் திரும்புதல்' என்பதன் நிகழ் வடிவமாக ஹஜ் அமைகிறது.

ஹஜ்ஜில் பங்கு பெறுவோர் அனைவரும் இப்ராஹீம், இஸ்மாயில் ஆகியோரால் அடையாளப்படுத்தப்படும் முஸ்லிம்களின் ஆதி வேரை அடையும் உணர்வைப் பெறுகின்றனர். சாஃபாவுக்கும் மார்வாவுக்கும் இடையே அவர்கள் ஏழு முறை தொங்கோட்டம் செய்யும்போது ஹகரையும் குழந்தை இஸ்மாயீலையும் பாலைவனத்தில் தனியே விட்டு விட்டு இப்ராஹீம் அகன்றபோது குழந்தையின் தாகம் தணிக்க ஹகர் இப்படித் தானே ஓடியிருப்பார் என அவர்கள் உணர்கிறார்கள். மக்காவுக்குப் பதினாறு மைல்கள் தொலைவிலுள்ள அராபத் மலைச் சரிவில் அவர்கள் நிற்கும்போது முதல் நபியும் மனித குலத்தைச் தோற்றுவித்தவருமான ஆதமுடன் இறைவன் செய்து கொண்ட ஒப்பந்தம் அவர்கள் நினைவில் நிழலாடுகிறது. இங்கே அவர்கள் இஸ்லாமிய வேர்களையும் தாண்டி வேற்று நம்பிக்கையாளர்களுடனும் கூட ஒரு ஒருமையை உணர்கின்றனர். மினாவின் மூன்று தூண்கள் மீது அவர்கள் கற்களை எறியும் போது ஒவ்வொருவரும் தனக்குள் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்க வேண்டிய 'ஜிஹாத்'தை நினைவு கொள்ளக்கூடும். பின் அவர்கள் குர்பானி அளிக்கிறார்கள். இப்ராஹீம் தன் மகனை இறைவனுக்கு அர்ப்பணித்த பின்பு அளித்த மிருக பலியின் எதிரொலியாகவே அது அமைகிறது. உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள், ஹஜ்ஜுக்கு வந்திராதவர்களும் கூட, அதே நேரத்தில் தம் குர்பானியைச் செலுத்துகின்றனர். உலகெங்கிலும் விரவி நிற்கும் ஒட்டுமொத்த உம்மாவும் இறைவனின் பணியில் தமக்கு மிகவும் பிரியமான எதையும் அர்ப்பணிக்கும் ஒரு தயார் நிலையை அந்நிகழ்வு வெளிக்கொணர்கிறது.

அராபத் மலைக்கருகிலிருக்கும் நமிரா மசூதி இன்று அமைந்துள்ள இடத்தில்தான் அன்று (632) நபிகள் நாயகம் தன் விடைபெறும் உரையை நிகழ்த்தினார். இயேசுவின் மலைப் பேருரையையும் புத்தனின் இறுதி உரையையும் இத்துடன் பொருத்திப் பார்க்கும்போதுதான் இறைத்தூதர் முஹம்மது எந்த அளவிற்கு நடைமுறை சார்ந்தவராகவும் சகோதரத்துவத்தையே அனைத்திற்கும் முதன்மையாக நிறுத்துபவராகவும் திகழ்கிறார் என்பது விளங்கும். மற்றவர்களுடனான உறவு நீதியாய் அமைய வேண்டும் என அன்று அவர் வற்புறுத்தினார். பெண்களை அன்பாக நடத்துமாறு கேட்டுக்கொண்டார். மற்றவர் இழைத்த தவறுகளுக்காக இரத்தம் சிந்தும் சச்சரவுகளில் ஈடுபடும் வழக்கத்தை

முடிவுக்குக் கொண்டுவர வற்புறுத்தினார். உம்மா ஒன்றே. ஒவ்வொரு முஸ்லிமும் இன்னொரு முஸ்லிமுடைய சகோதரர் என்பதை அறிந்து கொள்ளுங்கள். முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள். ஒரு சகோதரன் விருப்பப்பட்டு எதைத் தருகிறானோ அதை ஏற்றுக் கொள்வதே நியதி. எனவே நீங்கள் (அதிகம் ஆசைப்பட்டுத்) தவறிழைத்துக் கொள்ளாதீர்கள். இனி முஸ்லிம்கள் யாரும் தனித் தனிக் குலத்தினர், தனித்தனி இனத்தினர், தனித்தனிச் சாதியினர் அல்லர். இறைவன் ஒருவனே போல முஸ்லிம்கள் அனைவரும் ஒரே உம்மாவின் உறுப்பினர்கள். அவ்வளவே.

விடைபெறும் ஹஜ் என அழைக்கப்படும் இந்த இறுதி ஹஜ்ஜை முடித்துவிட்டு மதீனா வந்தபின் முஹம்மதின் உடல் நலிவுற்றது. தலைவலியால் அவதியுற்றார். ஆயிஷா பின்னர் நினைவு கூர்ந்த ஒரு நிகழ்வு இங்கே குறிப்பிடத்தக்கது. ஒருநாள் ஆயிஷாவே தலைவலிக்கிறதென அவர் இல்லத்தில் சாய்ந்திருந்தார். ''அய்யோ என் தலை'' என அவர் முனு முணுத்தபோது முஹம்மது உள்ளே நுழைந்தார். ''இல்லை, ஆயிஷா அது என் தலை'' என்று நெற்றியைப் பிடித்தவாறு அமர்ந்தார். இப்போதும் கூடத் தன் அன்பு மனைவியை அவர் சீண்டாமல் இருக்க முடியவில்லை. எனக்கு முன் நீ சாவதை விரும்புவாயா ஆயிஷா? என் கரங்களில் உன்னைத் தூக்கிச் சென்று உனக்கு ஒரு அழகிய இறுதிச் சடங்கைச் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைக்குமல்லவா? சுருக்கென்று பேசுவதில் வல்லவரல்லவா ஆயிஷா?□''அடக்கம் பண்ணி முடித்த கையோடு இன்னொரு மனைவி வீட்டுக்கு நேராகப் போய்விடுவீர்களே'' என்று அவர் சொன்னபோது, ''இல்லை ஆயிஷா. அய்யோ என் தலை'' என்று நெற்றியைத் தேய்த்தவாறே அகன்றார் முஹம்மது.

தலைவலி மோசமாகியது. நெற்றியில் ஒரு துணியை இறுகக் கட்டிக்கொண்டு தொழுகைத் தலத்திற்கு வந்து போனார் முஹம்மது. உஹத் போரில் மரணமுற்றவர்களுக்காக தொழுது கொண்டிருந்த ஒரு நாளில் தான் இறைவனிடம் செல்லவிருப்பதை மறைமுகமாக வெளிப்படுத்தினார். தேம்பிய அபூபக்ருக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்தபோது மைமுனாவின் வீட்டில் சுருண்டு வீழ்ந்தார் முஹம்மது. செய்தியறிந்து ஓடிவந்த மனைவியர் அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். ''நாளை நான் எங்கிருப்பேன்? நாளை நான் எங்கிருப்பேன்'' என அவர் அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தார். மனைவியர் புரிந்து கொண்டனர். அவர் ஆயிஷாவிடம் இருக்க விரும்புகிறார். அனைவரும் ஒருமித்த மனத்துடன் தத்தம் நாட்களை அவருக்கு உவந்து அளிக்கச் சம்மதம் தெரிவித்தனர். ஆயிஷாவின் இல்லத்திலேயே அவர் இருக்கத் தொடங்கினார்.

கதீஜா அம்மையிடம் முஹம்மது கொண்டிருந்த அன்பிற்கு எதையும் ஈடு சொல்ல இயலாது. ஆயிஷா மீதும் அவருக்குத் தனிப்பிரியம். ஆயிஷாவைத் திருமணம் செய்து கொண்டபோது அச்சிறுமிக்கு வயது

ஒன்பது. முஹம்மதுக்கோ வயது அய்ம்பதுக்கும் மேல். சிறுமி என்பதால் பெரிய விருந்து ஏதுமின்றித் திருமணம் நடைபெற்றது. புதிய ஆடைகளையும், நகைகளையும் கண்டு கிறுகிறுத்துப் போயிருந்தாள் ஆயிஷா. வயதுக்கு வரும் வரை பெற்றோர் வீட்டிலேயே அவர் இருந்ததாகத் தபரி எழுதுகிறார். பின்னாளில் ஆயிஷா சில காட்சிகளை நினைவு கூர்வார். குழந்தைகளோடு பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருப்பாராம். எப்போதாவது முஹம்மது அவளைப் பார்க்க வரும்போது மற்ற சிறுமிகள் ஓடுவார்கள். முஹம்மது அவர்களை அழைத்து வந்து மனைவியுடன் விளையாடச் சொல்வார். ஒருநாள் அவளைக் கேட்டார்: ‘‘ஆயிஷா, இந்த விளையாட்டுக்கு என்ன பெயர்?’’ ‘‘இதெல்லாம் சாலமனின் குதிரைகள்’’ என ஆயிஷா பொம்மைகளைச் சுட்டிக் காட்டினாள். சிரித்தவாறே நகர்ந்தார் முஹம்மது.

ஒருநாள் தன்னுடன் ஓட்டப் பந்தயத்திற்கு ஆயிஷாவை அழைத்தார் முஹம்மது. ‘‘பார் நம்ம ரெண்டு பேரும் இப்போ சமமாயிட்டோம்’’ என்று குதூகலித்தார் அவர். மக்காவிலிருந்தபோது ஒருமுறை அச்சிறுமியை துரத்தித் தோற்றவர் முஹம்மது. முஹம்மதின் முடிக்கு வாசனை எண்ணெ பூசிக் கோதுவதும், அவர் குடித்த கிண்ணத்தில் தானும் அருந்துவதும், நோயுற்ற காலத்தில் அவரை அருகிலிருந்து கவனிப்பதும் ஆயிஷாவுக்குப் பிடித்தமான செயல்கள். அப்படித்தான் ஒருநாள் தனது செருப்பை ஏதோ சரிசெய்து கொண்டு அமர்ந்திருந்தார் முஹம்மது. ஏதோ சிந்தனையில் அவர் முகம் மலர்ந்தது. ஒளி வீசிய அவர் முகத்தைக் கண்ட ஆயிஷா, அவர் அழகை வாய்விட்டு மெச்சினார். எழுந்த முஹம்மது ஆயிஷாவின் நெற்றியில் முத்தமிட்டார். ‘‘ஆயிஷா, அல்லாஹ் உனக்கு எல்லாவற்றையும் அருளட்டும். என் இன்பத்தின் ஊற்றாக நீ இருப்பது போல நான் உனக்கு இல்லையே’’ என்று அவர் சொன்னதாக ஒரு முஸ்லிம் மரபு வழி நம்பிக்கை உண்டு (நய்ம் - அல்-இஸ்பஹானி). தங்களிருவருக்கும் இடையேயான வயது வித்தியாசம் அவருள் எப்போதும் உறுத்திக் கொண்டே இருந்ததுபோலும்.

உடல் நலிவுற்றபோதும் தொழுகைக்கு வருவதை நிறுத்தவில்லை நபிகள். விரைவில் அவர் மரணத்தை தழுவப் போகிறார் என்பதை யாரும் உணரவில்லை. அப்படி யாராலும் நினைத்துப் பார்க்கவும் இயலாது. முஹம்மதிற்குப் பிறகு உம்மா என்ன ஆகும்? அபூபக்ர் மட்டும் மகள் ஆயிஷாவிடம் தன் கவலையைப் பகிர்ந்து கொண்டார். இறந்துபோன ஸைதின் இளைய மகன் உஸாமாவின் தலைமையில் ஒரு படையெடுப்பை முஹம்மது ஆணையிட்டபோது உம்மாவில் அதற்கு ஒரு எதிர்ப்பு இருந்தது. என்ன இருந்தாலும் உஸாமா ஒரு இளைஞர். அடிமையின் மகன். சமாதானப்படுத்துவதற்காக முஹம்மது மசூதிக்கு வந்தபோது அவர் தள்ளாடியதைப் பார்த்து அனைவரும் கவலையில் ஆழ்ந்தனர். தொழுகை நடத்த இயலாத அளவிற்கு அவர் உடல் சோர்ந்தபோது அபூபக்ரை அவர் அப்பணிக்கென நியமித்தார். ஆயிஷா

அதை எதிர்த்தார். தன் தந்தை மீது அனைவரும் எரிச்சலைடையக் கூடாதல்லவா? முஹம்மது ஆயிஷாவைக் கண்டித்தார். அபூபக்ர் தொழுகையை நடத்தத் தொடங்கிய பின்னும் கூட முடிந்தபோதெல்லாம் தொழுகைக்கு வர முஹம்மது தயங்குவதில்லை.

அது ரபி மாதம் 12ம் நாள் (ஜுன் 8, 532) தொழுகை கொண்டிருந்தோரின் கவனம் திடீரெனத் திரும்பவே அபூபக்ர் உணர்ந்து கொண்டார். முஹம்மது வந்திருக்கவேண்டும். ஒளி வீசும் முகத்துடன் உள்ளே நுழைந்த நபிகள் ஒரு மூலையில் சென்று அமர்ந்தபோது அனைவரும் மகிழ்ந்தனர். வழிவிட்டு எழுந்த அபூபக்ரைத் தோளில் தட்டி அவரையே தொழுகையை நடத்துமாறு கூறினார் நபிகள்.

தொழுகை முடிந்ததும் தோழர்கள் கைத்தாங்கலாகப் பிடித்து வர ஆயிஷாவின் மடியில் தலை வைத்துக் சாய்ந்தார். அவர் நன்றாக இருப்பதாக உணர்ந்த அபூபக்ர் ஆயிஷாவிடம் சொல்லிவிட்டு மதீனாவிற்கு வெளியே இருந்த தனது புதிய மனைவியைப் பார்த்து வர அகன்றார். அலீயும் அப்பாசும் முஹம்மது நன்றாயிருக்கும் செய்தியை மகிழ்ச்சியோடு பலரிடம் கூறி வந்தனர். மாலையில் அப்த்-அர் ரஹ்மான் நபிகளைப் பார்க்க வந்தார். அவர் கையிலிருந்த பல் குத்தும் குச்சியை வேண்டிச் சைகை செய்தார் அண்ணல். ஆயிஷா அதை வாங்கிச் சற்றே மென்று பதமாக்கி அவரிடம் அளித்தார். நபிகள் தீவிரமாகப் பல்லைக் குத்தித் தூய்மை செய்யத் தொடங்கினார். சிறிது நேரத்தில் அவர் நிலை மோசமாயிற்று. அவருக்கு என்ன நடக்கிறது என்பதை ஆயிஷா அறிந்திருக்கவில்லை. மடியிலிருந்த முஹம்மதின் தலை திடிரெனக் கனத்தபோது அவர் மரணித்திருந்தார். "சுவனத்தின் உன்னதமான தோழனே"□என்பதே அவர் வாயிலிருந்து பிரிந்த கடைசிசெய்தி. ஜிப்ரில் (கப்ரியேல்) என்றும் வானவர் அவர் முன் தோன்றியதாக நம்புவது முஸ்லிம் மரபு.

மடியிலிருந்த தலையைக் கவனமாக ஒரு தலையணை மீது இறக்கிய ஆயிஷா அரபு வழக்கப்படி மார்பிலும் முகத்திலும் அறைந்து கொண்டு அழுதார். மற்ற மனைவியரும் ஓடிவந்து அவருடன் அழுகையில் கலந்தனர்.

# 28

முஸ்லிம்களின் இறுதி வெற்றியை அவர் ஈட்டித் தந்திருந்த போதும் எதிர்காலம் குறித்தோ தனக்குப் பிந்திய வாரிசு குறித்தோ முஹம்மது எதையும் செய்திருக்கவில்லை. தளிர்விடத் தொடங்கியிருந்த முஸ்லிம் அரசுக்கும் நபிகள் உருவாக்கிக்காத்த உம்மாவுக்கும் என்ன நேரும்? இறைவாக்குகளும் இனி இறங்கப் போவதில்லை. யார் அவர்களை வழிகாட்டப் போகிறார்கள்? முஹம்மது இருந்தபோதே முழு விசுவாசம் காட்டாத பெதோய்ன் குடியினர் இனிமேலும் கட்டுப்பட்டு இருப்பார்களா? செய்து கொண்ட ஒப்பந்தங்களை அண்டை நாடுகள் மதிக்குமா? பழைய இனக்குழுப் பகைகளை அரபுச் சமூகம் புதுப்பித்துக் கொள்ளுமா?

நபிகள் மறைந்த செய்தி மதீனா முழுவதும் காட்டுத்தீயெனப் பரவியது. அலறி அடித்துக்கொண்டு அனைவரும் முஹம்மதின் இல்லத்தை நோக்கியும் பள்ளிவாசலை நோக்கியும் திரண்டனர். உசாமா படையெடுப்பை முடித்துக் கொண்டு வீரர்களுடன் ஓடோடி வந்தார். அபூபக்ரும் ஓடிவந்தார். முஹம்மதின் முகத்தில் முத்தமிட்டார். விடை சொன்னார். பள்ளியை நோக்கி அகன்றார். அங்கே கூடியிருந்த மக்கள் முன் உமர் ஆவேசமாக உரையாற்றிக் கொண்டிருந்தார். நபிகள் சாகவில்லை என்று அவர் கூறிக் கொண்டிருந்தார். மோசஸ் சினாய் மலைக்குச் சென்றது போல முஹம்மது அல்லாஹ்விடம் சென்றுள்ளார். அவர் வந்துவிடுவார். முஹம்மது செத்ததாகச் செய்தி பரப்பிய பொய்யர்களின் கைகளையும் கால்களையும் வெட்டி எறிவார். அபூபக்ரால் உமரை அமைதிப்படுத்த இயலவில்லை. உமரைச் சற்றே ஒதுக்கிவிட்டு முன் சென்ற அபூபக்ர் உணர்ச்சி ததும்பும் முகத்துடன் அவர்கள் முன் கணீரென்று பேசத் தொடங்கினார்.

ஏகஇறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்கலாகாது என்பதை வாழ்நாளெல்லாம் கற்பித்தவரல்லவா முஹம்மது. இறைவனுக்கு அளிக்க வேண்டிய மகிமையை மனிதர்க்கு அளிக்கலாகாது எனத் திருக்குர்ஆன் எச்சரிக்கவில்லையா? எல்லோரையும் போலத் தானும் என்றாவது ஒருநாள் இறக்கக்கூடிய மனிதன்தான் என்பதை முஹம்மது திரும்பத் திரும்பச் சொல்லவில்லையா? கிறிஸ்தவர்கள் ஏசுவை வணங்குவது போல முஸ்லிம்கள் நம்மை வணங்கலாகாது என்பதை வற்புறுத்தவில்லையா?

முஹம்மது சாகவில்லை என நம்புவது அவர் குறித்த அடிப்படை உண்மையொன்றையே மறுப்பதல்லவா. ஆனால் இறைவன் ஒருவனே வணக்கத்திற்குரியவன் என முஸ்லிம்கள் நம்பும் வரை முஹம்மதின் பெயர் வாழும். "அன்பார்ந்த மக்களே, முஹம்மதை யாரேனும் வணங்குவீர்களாயின் அவர் இதோ இறந்துவிட்டார். அல்லாஹ்வை வணங்கினீர்களானால் அவன் உயிருடனிருக்கிறான். அவன் மரணத்தை அறியாதவன்" என்று கூறிய அபூபக்ர் உஹத் போரில் முஹம்மது மரணமுற்றதாகப் பரவிய வதந்தியை அடுத்து இறக்கப்பட்ட திருக்குர்ஆன் வாசகங்களாகிய,

> "முஹம்மது ஒரு தூதர் மட்டுமே. நிச்சயமாக அவருக்கு முன்பும் தூதர்கள் பலர் வாழ்ந்து சென்றுள்ளனர். அவர் மரணமடைந்தால் முந்திய வாழ்க்கைக்கு நீங்கள் திரும்பிவிடுவீர்களா?" (3:144)

என்பவற்றை ஓதியபோது சுற்றியிருந்தோர் அமைதியடைந்தனர். உமர் நொறுங்கிப் போனார். "யா அல்லாஹ்! அபூபக்ர் இதைச் சொன்ன போது நான் வாயடைத்துப் போனேன். இறைத்தூதர் உண்மையிலேயே இறந்துபோனார் என்பதை அறிந்தபோது என் கால்களால் என்னைச் சுமக்க இயலவில்லை. நான் தளர்ந்து வீழ்ந்தேன்" என்றார் பின்னர் உமர்.

முஹம்மதுக்குப் பின் உம்மாவின் தலைமையை ஏற்பது யார் என்பதை அவ்வளவு எளிதாக முடிவு செய்ய இயலவில்லை. புலம் பெயர்ந்து வந்த குறைஷிகளில் யாரும் இப்பொறுப்பை ஏற்பது மதீனாவாசிகளுக்கு குறிப்பாக கஸ்ரஜ் குலத்தினருக்குப் பிடிக்கவில்லை. முஹம்மதின் முதல் பிரிதிநிதியாக, முதல் கலீபாவாக - அன்சாரிகளில் ஒருவரான ஸஅத் இசப்ன் உபாதாவையே தேர்வு செய்ய வேண்டும் என்கிற நிலைப்பாட்டை அவர்கள் எடுத்தனர். அதே நேரத்தில் புலம் பெயர்ந்திருந்த குறைஷிகளில் பெரும்பாலோர் அபூபக்கர் தான் அப்பொறுப்புக்கு ஏற்றவர் எனக் கருதினர். உமரும் கஸ்ரஜ் குலத்தவர்களிடம் என்றென்றும் பகை கொண்டிருந்த மதீனாவாசிகளான அவ்ஸ் குலத்தாரும் கூட அபூபக்ரை ஆதரித்தனர். முஹம்மதின் குடும்பதார்கள் அலீ, அப்பாஸ், வளர்ப்பு மகனின் மகனாகிய உஸாமா, உதவியாளருள் ஒருவரான ஷிக்ரான் ஆகியோருடைய விருப்பம் மட்டும் வேறுவிதமாக இருந்தது. அவர்கள் முஹம்மதின் மருமகன் அலீயை முதல் கலீபாவாக்க விரும்பினர். எனினும் அவர்களுக்குப் பெரிய அளவில் வெளி ஆதரவில்லை.

பந்தங்களைக் கொளுத்தி வைத்துக்கொண்டு இரவு முழுவதும் விவாதம் நடந்தது. மதீனா நகரெங்கம் மக்கள் மத்தியில் இதே பேச்சாக இருந்தது. நபிகளின் உடல் ஆயிஷாவின் வீட்டில் கிடந்தது. புலம் பெயர்ந்து வந்துள்ள குறைஷி ஒருவர், உதவியாளர்களில் ஒருவர் என இரட்டைத் தலைமை இருக்கலாமே என ஒரு மதீனாவாசி முன்மொழிந்தார். பல்வேறு இனக்குழுக்களும் தத்தம் தலைவர்களை

(உலமா)த் தேர்வு செய்து கூட்டாட்சி அமைக்கலாம் என்கிற கருத்தும் கூட மொழியப்பட்டது. முஹம்மது உருவாக்கிய உம்மாவை அது பலவீனப்படுத்தி விடும் என கூறி அபூபக்ரும் உமரும் அதை மறுத்தனர். ஒன்றில் அனைவரும் உடன்பட்டிருந்தனர். கருத்து வேற்றுமையால் ஏற்படும் பிளவு எல்லோருக்குமே ஆபத்து என்பதுதான் அது. தேர்ந்தெடுக்கப்படுவர் எல்லோராலும் மதிக்கப்படக் கூடியவராக இருக்க வேண்டும். அன்சாரிகளில் எவரும் தேர்வு செய்யப்பட்டால் மதீனாவுக்கு வெளியே இருப்பவர்கள் அவரது ஆணையை ஏற்பார்களா என்பது அய்யம். தம் வேர்களை இழந்து நீண்ட நாளாய் புலம் பெயர்ந்து வந்த குறைஷி ஒருவரே பொருத்தமாக இருக்க இயலும். உமர் அல்லது அபூஉபைதா இருவரில் ஒருவரைத் தேர்வு செய்யலாமே என்றார் அபூபக்ர். இறுக்கமானவராகவும் கடுமையானவராகவும் அறியப்பட்ட உமரின் பெயர் அவ்வளவு உற்சாகமாக ஏற்கப்படவில்லை. உமரே அபூபக்ரை முன்மொழிந்தார். அபூபக்ரே நபிகளின் பிரதிநிதி (கலீபா) என இறுதியில் முடிவாயிற்று. அலீயும் உறவினர்களும் இம்முடிவை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்றானது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அபூபக்ர் மக்கள் திரளை நோக்கிப் பேசலானார்:

> “உங்கள் மீது எனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (இதன் பொருள்) உங்களிற் சிறந்தவன் நான் என்பதல்ல. நான் நல்லது செய்யும் போது எனக்கு உதவுங்கள். தீமைகள் செய்வேனாயின் திருத்துங்கள். விசுவசித்து ஒழுகுதலே சத்தியம். துரோகம் செய்வதே பொய்மை. உங்களில் பலம் குறைந்தவரே என் கண்ணில் பலம் வாய்ந்தவர். அல்லாஹ்வின் விருப்போடு நான் அவருக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் வரை (இது தொடரும்). உங்களில் பலம் மிகுந்தவர் என் கண்ணில் பலமற்றவராகவே தெரிவார். அல்லாஹ்வின் விருப்புடன் அவரிடமிருந்து பிறரின் உரிமைகளை நான் ஈட்டிக்காக்கும் வரை நான் அல்லாஹ்வையும் அவரது தூதரையும் பின்பற்றி நடக்கும் வரை நீங்கள் என்னைப் பணிந்து நடவுங்கள். நான் அல்லாஹ்வுக்கும் அவரது தூதருக்கும் பணிந்து நடக்காதபோது நீங்கள் என்னைப் பணிய வேண்டியதில்லை. தொழுகைக்கு எழுங்கள். அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டட்டும்”.

அனைவரும் எழுந்தனர். நபிகளின் உடல் அடக்கம் செய்யப்படுவது குறித்த நினைவு எழுந்தது.

நபிகளின் மூன்று புதல்வியரும் அவரது மகன் இப்ராஹீமும் அடக்கம் செய்யப்பட்டிருந்த பகீ அல்-கர்கத்தில் அவர்களின் உடலருகே அடக்கம் செய்யலாமெனச் சிலர் கூறினர். மக்காவில் அடக்கம் செய்யலாம் எனவும் பிற இறைத்தூதர்களைப் போல எருசலேமில் அடக்கம் செய்யலாம் எனவும் கூடச் சிலர் கூறினர். பள்ளிவாசலில் அடக்கம் செய்யலாம் என்பது சிலரின் கருத்தாக இருந்தது. இறைத்தூதர்களை அவர்கள் இறந்த

இடத்திலேயே அடக்கம் செய்ய வேண்டுமென நபிகள் கூறியதாக அபூபக்ர் நினைவு கூர்ந்தார். அக்கருத்து ஏற்கப்பட்டது. அலீயும் உறவினர்களும் அவசர அவசரமாக இம்முடிவை மேற்கொண்டு ஆயிஷா கூட அறியாமல் அவரது வீட்டிற்குள் கப்ர் (அடக்கக் குழி) தோண்டப்பட்டது என்றொரு கருத்தும் உண்டு (மாக்ஸிம் ரோடின்சன்).

அலீயும் நெருங்கிய உறவினர்களும் முஹம்மதின் உடலைக் குளிப்பாட்டினர். எக்காரணம் கொண்டும் இறைத்தூதரின் உடல் வெளியே தெரியக்கூடாது என்பதால் அணிந்திருந்த ஆடையுடனேயே அவர் உடல் குளிப்பாட்டப்பட்டது. மூன்று துணிகளால் அவர் உடல் போர்த்தப்பட்டு கதவுகள் திறக்கப்பட்டன. மதீனத்து மக்களனைவரும் சாரிசாரியாய் வந்து நபிகளுக்கு இறுதி மரியாதை செய்தனர். சிறுசிறு குழுக்களாக 'ஜனாஸா' (இறுதி)த் தொழுகை செய்தனர். நபிகள் அணியக்கூடிய சிவப்பு நிற மேலாடை ஒன்றை கப்ருக்குள் விரித்தபின் அலீயும் உறவினர்களும் நபிகளின் உடலை இறக்கினர். குறைஷிகளிலேயே புகழ் பெற்றவரும் உலக வரலாற்றின் திசையை மாற்றியமைத்தவருமான முஹம்மது இப்ன் அப்தல்லாஹ்வின் உடல் சுடப்படாத பச்சைச் செங்கற்களைக் கொண்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

அபூபக்ரின் தலைமையை (632-634) முதலில் அலீ ஏற்காதபோதும் விரைவில் அவர் சமாதானமாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இரண்டே ஆண்டுகளில் அபூபக்ர் மறைந்தார். அடுத்த கலீபா உமர் (634-644). பின்னர் உத்மான் (644-656) கலீபா ஆனார். இறுதியில் 656ம் ஆண்டு நான்காவது கலீபாவாக அலீ பொறுப்பேற்றார். இவர்கள் நால்வரின் ஆட்சிக் காலத்தை முன்மாதிரியான பொற்காலமென முஸ்லிம்கள் மதிக்கின்றனர். முஹம்மதின் கொள்கைகளிலிருந்து இம்மியும் வழுவாமல் 'சரியாக வழி நடத்தப்பட்ட கலீபாக்கள்' ('ரஷிதூன்') என இவர்கள் அழைக்கப் படுகின்றனர். ஒரு முஸ்லிம் ஆட்சியாளர் கொடூரமானவராக இருக்காலாது என்பதை அலீ அதிகம் வற்புறுத்தினார். ஒரு முஸ்லிம் அரசர் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர். தனது மக்களுக்குச் சமமாகக் கருதப்படுபவர். ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் எப்போதும் செவி சாய்ப்பவர். ஆடம்பரத்தின் அடிப்படையிலோ வேறு எந்த வகையிலுமோ ஒரு ஆட்சியாளர் தன்னை மக்களிடமிருந்து பிரித்து நிறுத்திக் கொள்ளகூடாது. எப்போதும் மக்களின் குறைகளைக் கேட்க அவர் தயாராயிருக்க வேண்டும்.

எல்லா முஸ்லிம் அரசர்களும் அப்படியிருந்தனர் என்றோ இன்றைய முஸ்லிம் அரசுகள் இக்கொள்கைகளைப் பின்பற்றிப் செயல்படுகின்றன என்றோ இதற்குப் பொருளல்ல.

எனினும் அவ்வப்போது முஸ்லிம் அரசர்கள் தாம் இஸ்லாமிய வழியிலேயே ஆட்சி செய்வதாக நிறுவ வேண்டிய அவசியமும் இருந்தது.

சிலுவைப் போர்களின் காலத்திய முஸ்லிம் மன்னர்களாகிய நூர் அத்-தின், சலாதின் முதலியோர் ஏழைகளுக்கு வாரி வழங்கியதும், இஸ்லாமியக் கோட்பாட்டின்படி வரிச் சீர்திருத்தம் செய்ததும், மக்கள் எளிதில் அணுகக் கூடியதாக இருந்ததும் குறிப்பிடத்தக்கன. இஸ்லாமிய வழியில் ஆட்சி இல்லை எனக்கூறி மக்கள் அரசுகளைத் தூக்கி எறிவதற்கும் இக்கொள்கைகள் நியாயம் கற்பித்தன. நம் காலத்திய ஈரானிய மன்னர் ஷா தூக்கி எறியப்பட்டது இதற்கொரு எடுத்துக்காட்டு.

முஹம்மது தன் தோழர்களுக்கு மிகச் சிறந்த ஆளுமையையும், பயிற்சிகளையும் அளித்திருந்தார். முதல் நான்கு கலீபாக்களும் தத்தம் அளவில் சிறப்புக்குரியவர்களாகவும் உம்மாவைக் கட்டிக் காத்தவர்களாகவும் இஸ்லாமிய அரசை விரிவாக்கியவர்களாகவும் இருந்தனர். நபிகள் மறைந்த இரு வாரங்களுக்குப் பின் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி உசாமாவின் தலைமையில் சிரிய நாட்டு எல்லையை நோக்கிப் படைகள் புறப்பட்டன. படையெடுப்பைக் கைவிடவோ தலைமையை மாற்றவோ அபூபக்ர் அனுமதிக்கவில்லை. அதே ஆண்டு செப்டம்பரில் காலித் தலைமையில் சென்ற படை அரேபிய எதிர்ப்பு ஒன்றை அடக்கி வந்தது. உம்மாவிலிருந்து பிரிய எத்தனித்த பல்வேறு குழுக்கள் மீது அப்போது தொடுக்கப்பட்ட போர்கள் ‘ரித்தா’ எனப்படும். பலர் தம்மைப் புதிய இறைத்தூதர்கள் என அறிவித்துக் கலகம் செய்யத் துவங்கியபோது முஸ்லிம்கள் அவர்களை வென்றனர். அரபு முழுவதும் இஸ்லாமிய ஆட்சியை அபூபக்ர் உறுதிப்படுத்தினார். உமரின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் படைகள் ஈராக், சிரியா, எகிப்து வரை வெற்றி கொண்டன. கடீஸ்சியா போரில் (637) பாரசீகப் படையையும் அவர்கள் வெற்றி கொண்டனர். மதீனா நகரப் பள்ளிவாசலில் பாரசீகப் போர்க் கைதி ஒருவனால் உமர் சாய்த்து வீழ்த்தப்பட்ட (644) பின்னர் உத்மான் இப்ன் அஃபன் கலீபா ஆனார். பைசாண்டைன்களிடமிருந்து சைப்ரஸ் கைப்பற்றப்பட்டது இவரது காலத்தில்தான். வட ஆப்ரிக்காவில் திரிபோலி (லிபியா) வரை முஸ்லிம் படைகள் சென்றன.

எனினும் சில எதிர்ப்புகளின் விளைவாக உம்மாவுக்குள் ஏற்பட்ட கலகத்தில் அரபு வீரர்கள் சிலர் உத்மானின் எளிய இல்லத்தை முற்றுகையிட்டு அவரைக் கொன்றனர். கலகக்காரர்கள் அலீயைப் புதிய கலீபாவாக்கினர். முஹம்மதுக்குப் பிந்தைய நூறாண்டுகளில் இஸ்லாமியப் பேரரசு இமயம் முதல் பைரனீஸ் வரை பரவியது. எனினும் தாம் வெற்றிகொண்ட நாடுகளில் இஸ்லாத்தைத் திணிப்பது அவர்களின் நோக்கமாக இல்லை. 700 ம் ஆண்டு வாக்கில் இஸ்லாமுக்கு மாறுவது சில ஆண்டுகள் தடை செய்யப்பட்டிருந்தது கூட உண்டு. எனினும் பரப்புதற்குரிய மதம் என்பதால் கலீபாக்கள் தடையை விரைவில் ரத்து செய்தனர். இஸ்லாமுக்கு அழைப்பு விடுத்தனர். எண்ணற்ற மக்கள் இஸ்லாமாயினர். மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்ரிக்க மக்களின் தேவைகளைத் திருக்குர்ஆன் நிறைவேற்றியது.

தொடர்ந்த வெற்றிகள், இந்தியா, இந்தோனேசியா, ஆப்ரிக்கா என வேறுபட்ட பல்வேறு கலாச்சாரங்களுக்கு இஸ்லாத்தைக் கொண்டு செல்லுதல். அந்தக் கலாச்சாரங்களிலிருந்து பலவற்றைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதாக இஸ்லாம் தொடர்ந்து வரலாற்றுடனும் புவிப்பரப்புகளுடனும் ஒரு உரையாடலை நிகழ்த்திக்கொண்டே இருந்தது, இருந்து கொண்டிருக்கிறது. சுன்னா, ஷியா, சூஃபி எனப் பல உள் மரபுகள் உருவான போதும் இவை எதுவும் உம்மா என்னும் கருத்தாக்கத்திலிருந்து பிறழவில்லை. உம்மாவினூடாகவே முஸ்லிம் இறையியல்கள் அனைத்தும் அமைந்தன. கிறிஸ்தவ, புத்தத் துறவிகளைப் போலல்லாது இவர்களில் எவருமே உலகியலிலிருந்து, எதார்த்தத்திலிருந்து விலகி நிற்கவில்லை. மனித வாழ்விலிருந்து ஒதுங்கவில்லை. உலகையும் வாழ்வையுமே இறைத் தேடலின் களமாக அவர்கள் ஏற்றுச் செயல்பட்டனர்.

இந்த இறைநெறிக்கு எடுத்துக்காட்டாக அவர்கள் முன் நபிகளின் வாழ்வு இருந்து வழிகாட்டியது. நான் அடிக்கடி இந்நூலினூடாக கூறி வருவதைப் போல அவர் சாதாரண ஒரு மானுடராக, மானுடத்தின் அனைத்து ஆசாபாசங்கள், நிறைகள், குற்றங்கள் மகத்தான பண்புகள் ஆகியவற்றோடு வாழ்ந்தார். வரலாற்றிலிருந்து ஒதுங்காமல் அதில் தலையிட்டார். நெறிமிக்க ஒரு வாழ்வை வாழ்ந்து காட்டினார். அறம் நிறைந்த ஒரு அரசியலைச் செயல்படுத்தினார். மாதிரியான இஸ்லாமிய ஆட்சி ஒன்றை நிறுவிக் காட்டினார். இறைத்தூதர் முஹம்மதின் மீதுள்ள அன்பினூடாகவும் முஸ்லிம்களிடையே சகோரத்துவம் நிலைநாட்டப் படுகிறது. சாதாரணர்களிலும் சாதாரணராக அவர் வாழ்ந்திருந்த போதும் அவர் வெறும் சாதாரணர் அல்லர். அவர் ஒரு முன்மாதிரி. தெய்வாம்சம் பொருந்தியவராக அவரைக் கருதாத போதும் முஸ்லிம்கள் அவரை ஒரு முழுமையான மனிதனாக (perfect man) நேசிக்கின்றனர். மதிக்கின்றனர். அவர் வாழ்ந்த காலத்தில் தேனீர், காபி முதலியவற்றைப் பருகியவரல்ல என்பதால் தாங்களும் அவற்றைப் பருகாத முஸ்லிம்கள் உண்டு. முஹம்மதின் பெயரை உச்சரிக்கும் போதெல்லாம் ‘அல்லாஹ்வின் ஆசியும் அமைதியும் அவர் மீது கவியட்டும் (சல்...)’ என்று சேர்த்துச் சொல்கிற வழக்கத்தை அவர்கள் கடைபிடிக்கின்றனர். (இந்நூலில் இம்முறை கடைபிடிக்கப்படாமைக்காக முஸ்லிம் தோழர்கள் என்னை மன்னிக்கட்டும்) இறைவனுக்கு முழுமையான திறப்புடைய ஒரு மனிதம் அவருடையது. இறையுலகிற்கு முழுமையான திறப்புடையவர் அவர் என்பதாலேயே அவர் எழுதப் படிக்க அறியாத உம்மி நபியாகக் கருதப்படுகிறார். ‘கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்’ என்கிற மாணிக்கவாசகம்தான் இங்கு நினைவுக்கு வருகிறது. எனவே ஒவ்வொரு முஸ்லிமுக்கும் முஹம்மதைப் போலவும் அவர் விதித்த நெறிகளுக்கு ஏற்பவும் வாழ்வதென்பது இறைவனுக்கு அருகாமையிற் செல்வதே. எனவேதான் எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாமியப் பேரரசு முழுவதிலும் அலைந்து திரிந்து முஹம்மது

வாழ்ந்ததையும் பேசியதையும் குறித்த அதிகாரபூர்வமான தகவல்களைத் திரட்டித் தொகுத்தனர் (ஹதீஸ்). திருக்குர்ஆனும் ஹதீஸ்களுமே பின்னாளைய இஸ்லாமியச் சட்டத்திற்கு (ஷரியத்) அடிப்படைகள் ஆயின.

ஒரு குறிப்பான காலத்தில் வாழ்ந்து அன்றைய அநீதிகளையும், ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடியவர் அந்த எளிய மனிதர். ஒரு சாதாரண ஒட்டக மேய்ப்பராக வாழ்வைத் தொடங்கி உலகை மாற்றியவர். அவர் வழி இறங்கிய திருக்குர் ஆன் இன்றைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அநீதியை எதிர்த்துப் போராடும் உத்வேகத்தை அளிக்கும் செய்திகளைத் தாங்கி இதோ நம்முன் விரிந்து கிடக்கிறது. அநீதிகள் எதன் பெயரிலானாலும் அதை எதிர்ப்பதே ஒரு முஸ்லிமின் கடமை. இறை வழியிலிருந்து விலகிச் சென்றால் தன்னையே தூக்கி எறியத் தயங்கலாகாது என முதல் கலீபா அபூபக்ர் சொன்னது வெறும் வார்த்தைகளன்று.

அதோ மதீனாவில் அண்ணல் அடக்கம் செய்யப்பட்ட அந்த எளிய குடில் இன்று அலங்கரிக்கப்பட்ட ஒரு மசூதியாக ஒளி வீசி நிற்கிறது. முஸ்லிம் அரசர்கள் அதற்கு வாரி வழங்கி அழகுபடுத்தியுள்ளனர். அருகில் அபூபக்ரும் உமரும் துயில் கொள்கின்றனர். ஏசுவுக்கும் கூட அங்கே ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாக ஒரு நம்பிக்கை. ஹஜ் செல்லும் யாதரீகர்கள் மதீனாவுக்குச் சென்று நபிகளின் அடக்கத் தலத்தைத் தரிசிப்பது வழக்கம். ஆனாலும் அவர்கள் அங்கே விழுந்து வணங்குவதில்லை. சாகும் தறுவாயில் கூட தனக்குப் பின் தனது கல்லறை வணக்கத் தலமாக மாறிவிடக் கூடாது என உறுதியாகச் சொல்லிச் சென்றவரல்லவா நபிகள்.

ஆனாலும் அவர் அடக்கமாயிருக்கும் பள்ளியைத் தரிசிக்காமல் பெரும்பாலோர் வருவதில்லை. நான் இறந்த பின்பு யார் ஒருவர் என்னை வந்து பார்த்தாலும் அது நான் உயிருடன் இருந்தபோது வந்து பார்த்ததற்குச் சமம்'' என்றல்லவா முஹம்மது சொல்லியுள்ளார்.

முஹம்மதை அறிந்த யாருக்கும் அந்த ஆசை இருக்கவே செய்யும். எனக்கும் கூடத்தான். இன்ஷா அல்லாஹ்.

## யார் எவர்?

*(நூலில் வருகிற சில முக்கிய பெயர்களின் சுருக்க விளக்கம் இப்பகுதியில் தரப்படுகிறது. பெயர்களுக்கு முன்பாக 'அப்த்' எனச் சேர்க்கும்போது பின்னால் வரும் பெயருக்குரியவரின் அடிமை எனப் பொருள். எ.டு.: அப்த் அல்லாஹ்: அல்லாஹ்வின் அடிமை. பெயர்களுக்கு நடுவில் 'இப்ன்' என வரும் போது இன்னாரின் மகன் எனப் பொருள். எ.டு.: முஹம்மது இப்ன் அப்தல்லாஹ்: அப்தல்லாஹ்வின் மகன் முஹம்மது. பெயர்களுக்கு நடுவில் 'பின்ட்' என வரும்போது இன்னாரின் மகள் எனப் பொருள். எ.டு.: ஆயிஷா பின்ட் அபூபக்ர் - அபூபக்ரின் மகள் ஆயிஷா).*

| | |
|---|---|
| அட்டாப் இப்ன் அசீத் | : மக்கா வெற்றிக்குப் பின் அங்கு முஹம்மதால் நியமிக்கப்பட்ட ஆளுனர் - இஸ்லாமிய வரலாற்றில் முதல் ஊதியம் பெற்ற அதிகாரி - நாளுக்கு ஒரு திர்ஹம் ஊதியம். |
| அபூ-அல்-அஸ் இப்ன் அர்ரபி | : கதீஜாவின் உறவினர் - முஹம்மதின் மகள் ஸைனப்பை மணந்த வகையில் அவர் மருமகன். |
| அபூ உபைதா இப்ன் அல் ஜர்ராஹ் | : குறைஷி - முஹம்மதின் ஆலோசர்களில் ஒருவர் முதல் முஸ்லிம்களில் ஒருவர். |
| அபூ சுஃப்யான் இப்ன் அல்ஹாரித் | : குறைஷிகளின் தலைவர், அப்த் ஹாம்ஸ் கிளை- முஹம்மதின் மாமனார் (உம்ம் ஹபிபாவின் தந்தை) - முஹம்மதின் கடும் எதிரி. |
| அபூதாலிப் இப்ன் அப்தல் முத்தலிப் | : முஹம்மதின் தந்தை அப்தல்லாஹ்வுடன் பிறந்தவர் - முஹம்மதை வளர்த்தவர் - அலீ, ஜஅஃபர் ஆகியோரின் தந்தை |
| அபூபக்ர் இப்ன் அபூ குஹாஃபா | : முஹம்மமதின் முதல் தோழர்களில் ஒருவர். மாமனார் (ஆயிஷாவின் தந்தை) முதல் கலீபா (632 - 634) |
| அபூ பஸீர் இப்ன் அஸித் | : முஸ்லிம் நெறியை ஏற்று புலம் பெயர்ந்து வந்தவர் - ஒப்பந்தப்படி முஹம்மது அவரை மதீனாவில் அனுமதிக்க மறுத்தார். |
| அபூலஹப் இப்ன் அப்த் அல் முத்தலிப் | : முஹம்மதின் தந்தை அப்தல்லாஹ்வின் உடன் பிறந்த அப்த் அல் உஸ்ஸாவின் இன்னொரு பெயர் (பொருள்: நெருப்பு மனிதன்) - முஹம்மதின் கடும் எதிரி, அவரது இரு மகள்களின் மாமனார். |
| அபூ ஜந்தால் இப்ன் சுஹாய்ல் | : குறைஷி, அமிர் - முஸ்லிமாகிப் புலம் பெயர முடியாமல் துன்பப் பட்டவர். |
| அபூ ஜஹ்ல் இப்ன் ஹிஷாம் | : செல்வாக்கு மிக்க குறைஷி, மக்ஸூம் கிளை முஹம்மதின் கடும் எதிரி |

அப்த் அல் கஅபா இப்ன் அபூபக்ர் : முஸ்லிம் மதத்தைக் கடுமையாக எதிர்த்தவர்.

அப்த் அல் முத்தலிப் இப்ன் ஹாஷிம் : குறைஷி கிளைகள் பலவற்றின் ஆதி மூதாதை அப்த் மனஃபின் பேரர் - இவரது பரம்பரை பனூ அப்த் முத்தலிப் எனப்படும் - முஹம்மதின் தாத்தா.

அப்த் அல்லாஹ் இப்ன் அல் முத்தலிப் : முஹம்மதின் தந்தை.

அப்த்-அல்லாஹ் இப்ன் உபை : இப்ன் உபை என அழைக்கப்படுபவர் - மதீனத்துக் கஸ்ரஜ் குலத் தலைவர் - முஹம்மதின் வளரும் செல்வாக்கில் எரிச்சலுற்றுப் பல துரோகங்கள் செய்தவர்.

அப்த் அல்லாஹ் இப்ன் உனைஸ் : மதீனத்து முஸ்லிம் (அன்சார்) - காலித் மகன் சுஃப்யானைக் கொன்றவர்

அப்த்-அல்லாஹ் இப்ன் சஅத் : முஹம்மதின் உதவியாளராக இருந்தவர். தமக்குத் தெரியாமல் இறைவாக்குகளைத் திருத்தியதால் அவரின் கடும் வெறுப்புக்கு ஆளானவர்- உத்மானின் வளர்ப்புச் சகோதரர்.

அப்த்-அல்லாஹ் இப்ன் ஜஹ்ஷ் : முஹம்மதின் ஒன்றுவிட்ட சகோதரர், நெருக்க மான நண்பர் - நக்லா சூறைத் தாக்குதலுக்குத் தலைமை ஏற்க முஹம்மதுடன் பணிக்கப்பட்டவர்.

அப்பாஸ் இப்ன் அப்தல் முத்தலிப் : முஹம்மதின் சிற்றப்பர்

அலீ இப்ன் அபுதாலிப் : முஹம்மதின் ஒன்றுவிட்ட சகோதரர், மருமகன் (பாத்திமாவின் கணவர்) - முஹம்மதுக்குப் பின் அவர் வாரிசாக விரும்பியவர் - நான்காவது கலீபா (656-661) வாகப் புகழ் பெற்றவர் - இவரது வழி வந்தோர் மட்டுமே முஸ்லிம் சமூகத்திற்குத் தலைமை ஏற்க வேண்டும் என்போரே ஷியா முஸ்லிம்கள்.

அல்-காஸிம் : குழந்தையிலேயே மரணமடைந்த முஹம்மது - கதீஜாவின் மகன்.

அல்-ஸுஹைர் : குறைஷி-மகஸூம் கிளை - மக்காவில் முஹம்மதுக்கு எதிராக சமூக விலக்கு மேற்கொள்ளப்பட்ட போது அவருக்கு ஆதரவாகச் செயல்பட்டவர்.

ஆதம் : இறைவனால் படைக்கப்பட்ட முதல் மனிதர் - முதல் நபி.

ஆமீனா பின்ட் வஹ்ப் : குறைஷி, ஸூஹ்ரா கிளை - அப்தல்லாஹ்வின் மனைவி - முஹம்மதின் தாய்.

ஆயிஷா பின்ட் அபூப்கர் : முஹம்மதின் வயதிற் சிறிய அன்பு மனைவி - முஹம்மதின் மறைவுக்குப் பின் அரசியலிலும் சமயத்திலும் முக்கிய பங்கு வகித்தவர்.

ஆரோன் : மோசஸின் சகோதரர் - பார்க்க: மோசஸ்.

இக்ரிமாஹ் இப்ன் அபூ ஜஹ்ல் : உஹத் உட்படப் பல போர்களில் முஸ்லிம்களுக்கு எதிராக உக்கிரமாகப் போரிட்டவர் - மக்கா வெற்றிக்குப் பின் இஸ்லாமாகி முஸ்லிம் படை எடுப்புகளில் பங்கு பெற்றவர்.

இப்ராஹிம் : ஆப்ரஹாம் எனப் பழைய வேதங்களில் வழங்கப்படும் இறைத்தூதர் - இஸ்மாயீலின் தந்தை - கஅபாவை நிர்மாணித்தவர்.

இப்ராஹிம் இப்ன் முஹம்மது : முஹம்மதின் மகன் - மர்யத்திற்குப் பிறந்தவர் - குழந்தையிலேயே மரணமடைந்தவர்.

இப்ன் இஷ்ஹாக் (இப்ன் இஸ்ஹாக்) : தொடக்க கால முக்கிய முஸ்லிம் வரலாற்றாசிரியர் (இறப்பு: 768) - நபிகளின் வாழ்க்கை வரலாற்றைச் சிறப்பாக எழுதியவர். அவருடைய மாணவர் இப்ன் ஹிஷாமாவால் அது வெளியிடப்பட்டது - கில்லாமேயின் மொழியாக்கம் புகழ்பெற்றது.

இப்ன் ஸஅத் : தொடக்க கால முஸ்லிம் வரலாற்றாசிரியர்களில் ஒருவர் (இறப்பு: 768) நபிகள் மற்றும் தோழர்களின் வரலாற்றைத் தொகுத்தவர்.

இஸ்மாயீல் : ஆபிரஹாமின் மகன் இஷ்மேய்ல் எனப் பழைய வேதங்களில் குறிப்பிடப்படுபவர் - இப்ரஹீம் நபிக்கும் ஹகருக்கும் பிறந்தவர்- முஸ்லிம்களை இவரது வழித் தோன்றல்களாகவே முஹம்மது முன் நிறுத்தினார்.

இஷ்ஹாக் : இப்ராஹீம் நபிக்கும் அவரது முறையான மனைவி சாராவுக்கும் பிறந்த மகன்.

ஈஸா : ஏசு கிறிஸ்து எனக் கிறிஸ்தவ வேதங்களில் வழங்கப்படுபவர் - நபிகளில் ஒருவராக முஸ்லீம்களால் ஏற்கப்படுபவர். பார்க்க: ஏசு கிறிஸ்து.

உத்பா இப்ன் ரபீயா : குறைஷி குல மூத்தவர்களில் ஒருவர்-அப்த் ஷம்ஸ் கிளை - ஹிந்த்தின் தந்தை - பத்ர் போரில் கொல்லப்பட்டவர்.

உத்மான் இப்ன் அல் - ஹுவாய்ரித் : ஹனீஃப்களில் ஒருவர்.

உத்மான் இப்ன் அஃப்பான் : முதல் முஸ்லிம்களில் ஒருவர் - உமையா குடும்பத்தவர் - முஹம்மதின் மருமகன் (ருகையாவின் கணவர்; அவரது மரணத்திற்குப் பின் இன்னொரு மகள் உம்ம் குப்தூமைத் திருமணம் செய்து கொண்டார்) - நான்காவது கலீபா (644-656)

உத்மான் இப்ன் மஸுூம் : முதல் முஸ்லிம்களில் ஒருவர்.

உபைத் அல்லாஹ் இப்ன் ஜஹ்ஷ் : முஹம்மதின் அத்தை உமைமாவின் மகன் ஸைனப்பின் சகோதரர் - ஹனிஃப்களில் ஒருவர்.

| | | |
|---|---|---|
| உமர் அல் வாஹிதி | : | முஸ்லிம் வரலாற்றாசிரியர் (இறப்பு: 820) நபிகளின் படை எடுப்புகள் பற்றி விரிவாக எழுதியவர். |
| உமர் இப்ன் அல் கத்தார் | : | குறைஷி, அதீ கிளை - முஹம்மதின் முக்கியத் தோழர், ஆலோசகர், மாமனார் (ஹஃப்ஸாவின் தந்தை)- இரண்டாவது கலிபா (634-644) |
| உமையா இப்ன் அப்த் ஷம்ஸ் | : | குறைஷி - அபு சுஃப்யானின் தாத்தா - உமையாத் குடும்பத்தைத் தோற்றுவித்தவர். |
| உம்ம் குப்தூம் இப்ன் முஹம்மது | : | கதீஜாவின் மகள் - உத்மானின் மனைவி. |
| உம்ம் சலாமா | : | குறைஷி - மக்ஸூம் கிளை - விதவையான இவரை முஹம்மது மணந்து கொண்டார். |
| உம்ம் ரூமன் | : | அபூபக்ரின் மனைவி, ஆயிஷாவின் தாய். |
| உம்ம் ஹபீபா இப்ன் அபு சுஃப்யான் | : | முஸ்லிமாக மாறியவர் - விதவையான பின் முஹம்மதைத் திருமணம் செய்து கொண்டவர். |
| உர்வா இப்ன் அஸ்-ஸுபைர் | : | உமையாத் கலீபா அப்துல் மாலிக் (685-705) கேட்டுக்கொண்டதற் கிணங்க இறைத்தூதரின் காலத்திய வரலாற்றுக் கட்டுரைகளை எழுதியவர். கதீஜா வழிப் பேரர்களில் ஒருவர் (பி.643/649 இ:709/717). |
| உஸாமா இப்ன் ஸைத் | : | முஹம்மதின் வளர்ப்பு மகன் ஸைதுக்கும் விடுதலை செய்யப்பட்ட அபிசீனிய அடிமைப் பெண்ணுக்கும் பிறந்தவர் - தாயைப் போல கருத்த தோற்றமுடைய இவரை முஹம்மதுக்கு மிகவும் பிடிக்கும். தனது இறுதிக் காலத்தில் பலரின் எதிர்ப்புகளையும் மீறி படையயடுப்பு ஒன்றிற்கு இவரைத் தலைமை ஏற்குமாறு செய்தார் நபிகள். |
| எட்வர்ட் கிப்பன் | : | பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் (1737 - 1794) - ரோமப் பேரரசின் வீழ்ச்சி குறித்த புகழ்பெற்ற நூலின் ஆசிரியர். |
| ஏசு கிறிஸ்து (ஈஸாநபி) | : | கிறிஸ்தவ மதத்தை நிறுவியர் - இறை மகன் எனக் கிறிஸ்தவர்களாலும் நபிகளில் ஒருவரென (ஈஸாநபி) முஸ்லிம்களாலும் ஏற்றுக் கொள்ளப் படுபவர். |
| கஅப் இப்ன் அல் அஷ்ரப் | : | மதீனத்து அரபு மரபில் வந்த அஷ்ரப்புக்கும் பனூ நாதிர்க் குல யூதப் பெண்ணுக்கும் பிறந்தவர். கவிஞர் - தனக்கு எதிராகக் கடும் பிரச்சாரம் செய்த இவரை முஹம்மது மன்னிக்கத் தயாராக இல்லை. மரண தண்டனை விதிக்கப்பட்டார். |
| கதீஜா பின்ட் குவாய்லித் | : | குறைஷி, அசத் கிளை - பணக்கார விதவை - முஹம்மதால் மிகவும் நேசிக்கவும் மதிக்கவும் பட்ட முதல் மனைவி - பாத்திமாவின் அன்னை |
| காலித் இப்ன் அல் வலித் | : | குறைஷி, மக்ஸூம் கிளை - மக்கா நகர்ப் |

படைகளின் தளபதியாக இருந்து முஸ்லிம் படைகளைப் பல களங்களில் சந்தித்தவர் - முஸ்லிமான பின் முஸ்லிம் படைகளுக்குத் தளபதியாகப் போர்க்களங்களில் பங்கு பெற்றவர்.

| | | |
|---|---|---|
| காலித் இப்ன் ஸஅத் | : | குறைஷி, அப்த்-ஷம்ஸ் கிளை - முதல் முஸ்லிம்களில் ஒருவர். |
| கார்லைல் (தாமஸ்) | : | புகழ்பெற்ற பிரெஞ்சு வரலாற்றாசிரியர், எழுத்தாளர் (1795 - 1881) - பிரெஞ்சுப் புரட்சி பற்றிய அவரது நூல் (மூன்று பாகங்கள்) புகழ்பெற்றது. |
| குஸைய்ய் | : | முக்கிய குறைஷி குலங்களின் ஆதி மூதாதை. |
| கொமெய்னி (ஆயத்தல்லாஹ்) | : | ஈரான் மன்னர் ஷாவுக்கு எதிராக நடந்த புரட்சிக்குக் காரணமானவர் - உயர் மதத் தலைவரான இவர் சல்மான் ருஷ்டிக்கு ஃபட்வா விதித்தவர். |
| சல்மான் | : | பாரசீக அடிமை - முஸ்லிமாகி உயர்நிலை அடைந்தவர். |
| சல்மான் ருஷ்டி | : | புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியர் - முஹம்மதை மறைமுகமாக இழிவு செய்து இவர் எழுதிய 'சாத்தானின் பாடல்கள்' நூலுக்காக ஆயத்தல்லாஹ் கோமெய்னியால் ஃபட்வா விதிக்கப்பட்டவர். |
| சவ்தா பின்ட் ஸம்அ | : | குறைஷி, விதவை- முஹம்மதை இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்டவர். |
| சஃபியா | : | யூதப்பெண் - ஹுயாயின் மகள்- கைபர் போரில் விதவையான இவரை முஹம்மது மணம் செய்து கொண்டார். |
| சஃப்வான் அலீமு அப்தல் அஸ் சுலமீ | : | சுலாய்ம் குலத்தைச் சேர்ந்த பெதோய்ன் பழங்குடி இளைஞன் - ஒருமுறை முஹம்மதின் படை ஆயிஷாவை விட்டு விட்டுவிட்டுச் சென்றபோது அவரை ஒட்டகத்தில் ஏற்றி வந்தவன்- இவ்வகையில் ஆயிஷாவின் மீது ஒரு அவதூறுக்குக் காரணமானவன். |
| சஃப்வான் இப்ன் உமையா | : | குறைஷி- முஹம்மதின் கடும் எதிரி |
| சுஹாய்ல் இப்ன் அம்ர் | : | குறைஷி, அமிர் - முஹம்மதின் கடும் எதிரி. |
| தபரீ | : | முக்கிய அரபு வரலாற்றாசிரியர் (839-923). |
| தல்ஹா இப்ன் உபைதல்லாஹ் | : | குறைஷி, தய்ம் கிளை - முதல் முஸ்லிம்களில் ஒருவர். |
| தாந்தே | : | இத்தாலியப் பெருங் கவிஞர் (1265-1321), அரசியல் அறிஞர் - அரசியல் காரணங்களுக்காக பிளாரன் சிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் - முக்கிய நூற்கள்- On Monarchy, The Divine Comedy. |

| | |
|---|---|
| நஜ்ஜாஷி | : முஹம்மது காலத்திய அபிசீனிய மன்னர். |
| நெகஸ் | : அபிசீனிய மன்னர். |
| (அல்) பராஅ இப்ன் மாரார் | : மதீனத்துக் கஸ்ரஜ் குலத் தலைவர்களில் ஒருவர் - முஹம்மதுக்கு முன்பே மக்காவை நோக்கித் (கிப்லா) தொழுதவர். |
| பர்ஃபெக்டஸ் | : ஸ்பெய்ன் முஸ்லிம் ஆட்சியிலிருந்தபோது (9ம்நூ) வாழ்ந்த ஒரு கிறிஸ்தவத் துறவி. முஹம்மதைத் தொடர்ந்து இழிவு செய்ததற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர். |
| பாத்திமா பின்ட் முஹம்மது | : முஹம்மது, கதீஜா ஆகியோரின் மகள் - அலீயின் மனைவி. |
| பால் அல்வாரோ | : முஹம்மதை இழிவு செய்ததற்காக பர்ஃபெக்ட்ஸ் என்னும் பாதிரிக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டவுடன் கார்டோவாவை மய்யமாகக் கொண்டு முஸ்லிம் எதிர்ப்புத் தற்கொலை இயக்கம் (9ம்நூ) ஒன்றை யூலோஜியோ என்னும் பாதிரியுடன் இணைந்து உருவாக்கியவர். |
| பிலால் | : கருப்பு அடிமை - முதல் முஸ்லிம்களில் ஒருவர் - அவரது நேர்மை, நற்குணம், கம்பீரமான குரல் கருதி முஹம்மது அவரை முதற்தொழுகை அழைப்பாளராகவும் (முஸீன்) இஸ்லாமிய இயக்கத்தின் நிதிப்பொறுப்பாளராகவும் நியமித்தார். |
| பெரியார் | : ஈ.வெ. இராமசாமி பெரியார் (1879-1973) |
| மரியம் (கன்னிமேரி) | : கன்னி மரி என கிறிஸ்தவ வேதத்தில் அழைக்கப்படும் ஏசுவின் தாய். |
| மாக்ஸிம் ரோடின்சன் | : பிரெஞ்சு அறிஞர் - இஸ்லாம் குறித்தும், முஹம்மது குறித்தும் முக்கிய நூல்கள் பல எழுதியவர். |
| மாரியா (மர்யம்) | : முஹம்மதுக்குப் பரிசளிக்கப்பட்ட எகிப்திய கிறிஸ்தவ (காப்டிக்) அடிமைப் பெண் - முஹம்மதின் பிரியத்துக்குரியவர் - குழந்தையி லேயே மரணம் அடைந்த முஹம்மதின் மகன் இப்ராஹீமின் தாய். |
| மார்ட்டின் லூதர் | : சீர்திருத்த கிறிஸ்தவ மதத்தை தோற்றுவித்தவர். |
| முஆவியா இப்ன் அபு சுஃப்யான் | : ஹிந்த்தின் மகன் - முஹம்மதின் உதவியாளர் - 661-680 வரை கலீபாவாக இருந்தவர்- உமையாத் அரச பரம்பரையைத் தோற்றுவித்தவர். அலீயின் எதிரி. |
| முகவ்கீஸ் | : முஹம்மது காலத்திய எகிப்திய மன்னர்-மர்யத்தை பரிசளித்தவர். |
| முஸ்அப்இப்ன் உமைர் | : குறைஷி முஸ்லிம் - புலப்பெயர்வுக்கு முன் |

மதீனாவில் முஹம்மதின் தோழராக இருந்தவர்.

முஸ்லிம் இப்ன் அல் ஹிஜாஜ் அல் குறைஷி : நபி மரபை (ஹதீஸ்) தொகுத்த 9ம்நூ அறிஞர் - 'முஸ்லிம்' என இவரது ஹதீஸ் குறிக்கப்படும்.

முஹம்மது இப்ன் அப்தல்லாஹ் : குறைஷி, ஹஷிம் கிளை - இறைத்தூதர் நபிகள் நாயகம் (571 - 632)

முஹம்மது இப்ன் இஸ்மாயில் அல் புகாரி : நபி மரபை (ஹதீஸ்) தொகுத்த 9-ம்நூ அறிஞர் - 'புகாரி' என இவரது ஹதீஸ் குறிக்கப்படும்.

மொஸாரப் : முஸ்லிம் ஆளுகையின் கீழ் இருந்த ஸ்பெய்ன் கிறிஸ்தவர்கள்.

மோசஸ் (மூஸா நபி) : யூத மதத்தின் இறைத்தூதர் - இஸ்ரேலியர்களின் விடுதலைக்காகத் தன் சகோதரர் ஆரோனுடன் இணைந்து போராடியவர் - பத்து கட்டளைகள் இவருக்கே அருளப்பட்டன - ஆதிவேதத்தின் முதல் அய்ந்து நூற்கள் இவருக்கு அருளப் பட்டவையே - இஸ்லாமும் இவரை நபிகளில் ஒருவராக ஏற்றுக்கொள்கிறது.

மைமூனா பின்ட் அல்ஹாரித் : அப்பாஸின் மைத்துனி - விதவை- முஹம்மதின் மனைவி.

யஸீத் இப்ன் அபு சுஃப்யான் : முஹம்மதுக்குப் பிந்திய இஸ்லாமிய ஆட்சியில் தய்மாவின் ஆளுநர் ஆனவர்.

யூலோஜியோ : 9ம் நூ - ஸ்பெய்னில், கார்டோவாவை மய்யமாகக் கொண்டு முஸ்லிம் எதிர்ப்புத் தற்கொலை இயக்கம் ஒன்றிற்குக் காரணமான கிறிஸ்தவப் பாதிரி.

ரிக்கார்டோடாலாமான்டிக்ரோஸ் : மத்திய காலத்தில் வாழ்ந்த ஒரு டொமினிகன் அறிஞர். முஸ்லிம் நாடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டு டிஸ்ப்யூடேஷியா என்கிற முக்கிய நூலை எழுதியவர்.

ருகைய்யா பின்ட் முஹம்மது : கதீஜாவின் மகள் - முதலில் அபூலஹப்பின் மகனையும் பின்பு உத்மானையும் திருமணம் செய்து கொண்டவர்.

ரைஹானா பின்ட் ஸைத் : பனூ நாதிர் குல யூதப் பெண்-பனூ குறைஸா குலத்தைச் சேர்ந்த கணவர் கொல்லப்பட்ட பின் முஹம்மது அவரை ஏற்றுக் கொண்டார்- முஸ்லிமாகப் பின் மாறியவர்.

(பதினைந்தாம்) லூயி : 13-ம் நூல் பிரான்சை ஆண்ட மன்னன் - புனித லூயி என கிறிஸ்தவத்தால் ஏற்கப்பட்டவன் - மத எதிர்ப்பாளர்கள் எனக் கருதப்பட்டவர்கள் மீதான முதல் விசாரணைக்குக் காரணமானவன் - சிலுவைப் போரைத் தொடங்கியவன்.

வராகாஹ் இப்ன் நவ்ஃபல் : குறைஷி, ஆசாத் கிளை - ஹனீஃப்களில்

| | |
|---|---|
| | ஒருவர் - கதீஜாவின் உறவினர். |
| (அல்) வலீத் இப்ன் அல் வலீத் | : குறைஷி, மக்ஸூம் கிளை - முதல் முஸ்லிம்களில் ஒருவர் - இன்னொரு பெயர்: உயைஸ் |
| வால்டேர் (பிரான்சுவா மேரி அருட்) | : புகழ்பெற்ற பிரஞ்சுச் சிந்தனையாளர். நாடகாசிரியர் (1694 - 1778). |
| வாஹ்ஷி | : அபிசீனிய அடிமை - உஹத் போரில் ஹம்ஸாவைக் கொன்றவர். |
| ஜஅஃபர் இப்ன் அபூதாலிப் | : அலீயின் சகோதரர் - முஹம்மதின் ஒன்றுவிட்ட சகோதரர். |
| ஜுவாரிய்யாஹ் பின்ட் அல்ஹாரித் | : பனூ அல் முஸ்தலிக் குலத் தலைவரின் மகள், முஹம்மதின் மனைவி. |
| ஸஅத் இப்ன்மு ஆத் | : மதீனத்து அவ்ஸ் குலத் தலைவர் |
| ஸுமைர் இப்ன் அல் அஸ்லாம் | : கதீஜாவின் சகோதரர் மகன் - உர்வாவின் தந்தை - முதல் முஸ்லிம்களில் ஒருவர் |
| ஸுஹைல் இப்ன் அம்ர் | : குறைஷிகளின் தலைவர்களில் ஒருவன் - ஹுதைபியா ஒப்பந்தத்தில் கையயழுத்திட்டவர் களில் ஒருவன். |
| ஸைத் இப்ன் ஹாரித் | : கல்ப் குலம் - கதீஜாவின் அடிமை - முஹம்மதால் விடுவிக்கப்பட்டு வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டு ஸைத்-இப்ன்-முஹம்மது ஆனவர் -ஸைனப் பின்ட் ஜஹ்ஷை மணந்து உஸாமாவைப் பெற்றவர். |
| ஸைனப் | : கைபரைச் சேர்ந்த யூதப் பெண் - முஹம்மதை விஷம் வைத்துக் கொல்ல முற்பட்டவர். |
| ஸைனப் பின்ட் குஸைமாஹ் | : ஆமிர் இப்ன் ஸஸ்ஸா குலத்தைச் சேர்ந்தவர் - குறைஷி ஒருவரின் மனைவி-பின் அவர் சகோதரனைத் திருமணம் செய்து கொண்டார்-முஸ்லிமாகிய அவர் பத்ர் போரில் மரணமடைந்த பிறகு ஸைனப்பை முஹம்மது மணந்து கொண்டார். |
| ஸைனப் பின்ட் முஹம்மது | : கதீஜாவின் மகள் - அபு அல் -அஸின் மனைவி. |
| ஸைனப் பின்ட் ஜஹ்ஷ் | : உயர்குலக் குறைஷி - முஹம்மதின் அத்தை மகள் - ஸைதைத் திருமணம் செய்து பின் விவாகரத்து செய்யப்பட்ட பின் முஹம்மதை மணந்து கொண்டார். |
| ஹகர் | : இஸ்மாயில் நபியின் தாய் - இப்ராஹீம் நபியின் முறைப்படி திருமணம் செய்து கொள்ளாத துணைவி. |
| ஹப்ஸா பின்ட் உமர் | : உமரின் மகள், முஹம்மதின் மனைவி. |

| | | |
|---|---|---|
| ஹம்ஸா பின்ட் அப்த் அல் முத்தலிப் | : | முஹம்மதின் தந்தை அப்தல்லாஹ்வின் உடன் பிறந்தவர். |
| ஹலீமா பின்ட் அபூ துஅய்ப் | : | ஹவாஸின் பழங்குடி, பனீ சஅத் கிளை - முஹம்மதின் வளர்ப்புத் தாய். |
| ஹஸன் இப்ன் அலீ | : | பாத்திமாவின் மகன் - முஹம்மதின் பேரன் |
| ஹாலா பின்ட் உஹாய்பு | : | குறைஷி, ஸுஹ்ரா கிளை - முத்தலிப்பின் மனைவி |
| ஹிந்த் | : | அபு சுஃப்யானின் மனைவி - முஸ்லிம்கள் மீது கடும் வெறுப்புடையவர் - மக்கா வெற்றிக்குப் பின் முஸ்லிம் ஆனவர். |

# அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| அகபா | : | மக்காவுக்கு அருகிலுள்ள மினா பள்ளத் தாக்கிலுள்ள ஒரு மலையிடுக்கு, 620ல் நடைபெற்ற ஹஜ்ஜுக்கு வந்திருந்த யத்ரிப் (மதீனா)பைச் சேர்ந்த ஆறு கஸ்ரஜ் குலத்து அரபியர்கள் இங்கு முஹம்மதைச் சந்தித்து அவர் கருத்துக்களுக்கு ஆதரவாய்ச் செவி சாய்த்தனர். யத்ரிபில் யூதர்களுக்கு மத்தியில் வாழ்ந்த அரபுக்குலங்கள் தமது தனித்துவத்தை நிலைநாட்டவும் தமக்கென ஒரு மதம், இறைத்தூதர் உண்டு என உரிமை கொண்டாடவும் விருப்புற்றிருந்த காலம் அது. எனவே முஹம்மதை அவர்கள் இறைத் தூதராகவும் ஏற்க விருப்பம் கொண்டனர். 621 ஹஜ்ஜின் போது இவர்கள் அறுவரும் மேலும் எழுவரை அழைத்து வந்து அகபாவில் ஏக இறைக் கொள்கை உறுதி ஏற்றனர். இது முதல் அகபா எனப்படும். 622 ஹஜ்ஜுக்கு மதீனத்திலிருந்து வந்திருந்த 75 அரபுகள் புலம் பெயர்ந்து வருகிற முஸ்லிம்களுக்கு உரிய பாதுகாப்பு அளிப்பதாக இங்கு இரகசிய உறுதி அளித்தனர். இது இரண்டாவது அகபா எனப்படும். |
| அதீ | : | குறைஷிக் கிளைகளில் ஒன்று. |
| அபிசீனியா | : | முஹம்மது காலத்திய முக்கிய அரசுகளில் ஒன்று - (பார்க்க: வரைபடம்) - கிறிஸ்தவ நாடு - இன்றைய எதியோப்பியா. |
| அப்த்மனாஃப் | : | குறைஷிக் கிளைகளில் ஒன்று. |
| அப்த் ஷம்ஸ் | : | குறைஷி கிளைகளில் ஒன்று. |
| அம்ர் | : | மதீனத்து அவ்ஸ் குலக் கிளைகளில் ஒன்று |
| அல் அமீன் | : | 'உறுதியான நம்பிக்கைக்குரியர்' - முஹம்மதுக்கு குறைஷிச் சமூகம் வழங்கிய பெயர். |
| அல் உஸ்ஸா | : | இஸ்லாத்துக்கு முந்திய பகன் பெண் கடவுள் - நக்லாஹ்வில் இதன் ஆலயம் இருந்தது. |
| அல் முத்தலிப் | : | குறைஷிக் கிளைகளில் ஒன்று. |
| அல்லாத் | : | இஸ்லாத்துக்கு முந்திய பகன் பெண் கடவுள் - தைஃப் நகரில் இதன் ஆலயம் இருந்தது. |
| அல்லாஹ் | : | முஸ்லிம்களின் ஏக இறைவன் - திருக்குர்ஆனை அருளியவன். |
| அவ்ஃப் | : | மதீனத்துக் கஸ்ரஜ் குலக் கிளை |
| அவ்ஸ் | : | மதீனத்து முக்கிய இரு அரபுக்குலங்களில் ஒன்று (மற்றது கஸ்ரஜ்). |
| அன்ஸார் (அன்சாரிகள்) | : | 'உதவியாளர்' (நஸ்ர் - உதவி) - புலம் பெயர்ந்து வந்தவர்களுக்கு (முஹாஜிருன்) அடைக்கலம் அளித்த மதீனத்து |

முஸ்லிம்களுக்கு முஹம்மது அளித்த பெயர்.

அஸத் : குறைஷிக் கிளைகளில் ஒன்று.

அஹ்லஃப் : 'கூட்டாட்சியர்' - மக்கத்துக் குறைஷிகளுக்கிடையே இருந்த இரு குழுக்களில் ஒன்று.

அஹ்ல் அல்-கிதாப் : 'வேதம் வழங்கப்பட்டவர்கள்' - யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களைக் குறிக்க திருக்குர்ஆன் பயன்படுத்தும் சொல்.

அஹ்ல் அல் பெய்த் : 'குடும்பத்து நபர்கள்' - மதீனாவுக்குப் புலம் பெயர்ந்தவர்களில் இருந்த இரு குழுக்களில் ஒன்று - முஸ்லிம் சமூகத்தை அலீ - பாத்திமா வழியில் வந்தோரே தலைமை தாங்க வேண்டும் எனக் கருதிய பிரிவினர்.

அஷுரா : 'பத்தாம் நாள்' - யூதர்களின் 'யோம் கிப்பூர்' நோன்பின் பெயர்.

அஷ்ரப் : ஷரீஃப் என்பதன் பன்மை - உயர்ந்தோர், மேல்தட்டினர்.

ஆமிர் : குறைஷிக் கிளை.

ஆயத்துல்லாஹ் : 'அல்லாஹ்வின் அடையாளம்' - இமாமி (ஷியா) படிநிலையின் மிக உயர்ந்த நிலை வகிக்கும் மதத் தலைமை.

இத்தாஹ் : 'காத்திருக்கும் காலம்' - விவாகரத்து செய்யப்பட்ட அல்லது கணவர் மறைந்த பிறகுள்ள காத்திருப்புக் காலம்.

இப்லீஸ் : ஷைத்தானுக்கு திருக்குர்ஆன் வழங்கும் பெயர்களில் ஒன்று.

இமாம் : 'முன்னால் நிற்பவர்' - குறிப்பாகத் தொழுகையை முன்னின்று நடத்துபவர் - முஸ்லிம் சமூகத்தின் உயர் தலைவர்.

இறுதித் தீர்ப்பு நாள் : வரலாற்றின் இறுதி நாளில் இறைவன் அனைவருக்கும் இறுதித் தீர்ப்பு அளிப்பார் என்பது கிறிஸ்தவ நம்பிக்கை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அது நிகழும். திருக்குர்ஆனும் ஹதீஸ்களும் இறுதித் தீர்ப்புநாள் என்கிற கருத்தாக்கத்தை ஏற்றுக்கொள்கின்றன. மறுபிறப்பை நம்பும் இந்திய மதங்கள் இதை ஏற்கவில்லை.

இஸ்லாம் : 'பணிந்து சமர்ப்பித்தல்' - முழுவதும் தன்னை மறந்து இறைவனிடம் அர்ப்பணித்தல் - தனது நாற்பதாவது வயதிற்குப் பின் முஹம்மது உருவாக்கிய மதம் - முஸ்லிம் என்பது இதன் வழிச்சொல்

இஹ்ரம் : ஹஜ் செல்லும் - யாத்ரீகர்களின் சடங்கு ரீதியான தூய்மை - யாத்ரீகர்கள் அணியும் இரு வெள்ளைத் துணிகள்.

உம்மா (உம்மத்) : முஸ்லிம் சமூகம்.

உம்மிநபி : முஹம்மதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு அடைமொழி - எழுதப் படிக்கத் தெரியாத நபி எனப் பொருள் - எழுதப் படிக்கத் தெரியாத ஒரு சமூகத்திற்கான நபி என்று பொருள் சொல்வாரும் உண்டு.

உம்ரா : ஹஜ்ஜுக்குரிய எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றாமலும் ஹஜ்ஜுக்குரிய புனித மாதத்தில் அல்லாமலும் சுருக்கமாகச்

செய்யப்படும் யாத்திரை - கஅபாவிற்கு அருகில் மட்டும் மேற்கொள்ளப்படும் சடங்கு.

| | | |
|---|---|---|
| உஹத் | : | மதீனாவிற்குச் சுமார் இரண்டு அல்லது மூன்று மைல் தொலைவிலுள்ள எரிமலைப் பாறைகளால் சூழப்பட்ட ஒரு பகுதி. இங்கு நடைபெற்ற ஒரு போரில் (625) முஹம்மது அடைந்த தோல்வி முஸ்லிம் இயக்கத்திற்கு ஒரு தற்காலிகப் பின்னடைவாக அமைந்தது. |
| எருசலேம் (ஜெருசலேம்) | : | முஹம்மதுக்கு முந்திய நபிகள் பலரும் அடக்கமாகியுள்ள புனிதத் தலம் - யூதர்களின் கிப்லா. |
| கஅபா | : | 'கன சதுரம்' - மக்காவிலுள்ள பழமை வாய்ந்த புனிதத் தலம் - இத்தலத்தை நோக்கியே புனித ஹஜ் மேற்கொள்ளப் படுகிறது. - இப்ரஹீம் நபியால் கட்டப்பட்டதாக நம்புவது முஸ்லிம் மரபு. |
| கதஃபான் | : | மேற்கு அரேபிய நாடோடிக் குலங்களில் ஒன்று. |
| கல்ப் | : | பைஸாண்டிய சிரிய எல்லையில் வாழ்ந்த ஒரு அரபுக்குலம். - பெரும்பான்மையும் கிறிஸ்தவர்கள். |
| கஃப்ன் | : | இறந்த உடலைக் குளிப்பாட்டி அணிவிக்கப்படும் ஆடை. |
| கலீஃபா (கலிபா) | : | நபிகளுக்கு பின் உம்மாவின் ஆளுகைப் பொறுப்பை ஏற்றவர்கள் - நபிகளின் பிரதிநிதியாய் அவர் வழிநின்று தலைமை தாங்கியவர்கள். |
| கவ்ம் | : | அரபு இனக்குழுக்களைக் குறிக்கும் சொல். |
| கஸ்ரஜ் | : | மதீனாவிலுள்ள முக்கிய இரு அரபுக் குலங்களில் செல்வாக்குமிக்கது (மற்றது அவ்ஸ் குலம்). |
| கஸ்வா | : | முகம்மதின் ஒட்டகம். |
| கஸ்ஸான் (கஸ்ஸானிட்கள்) | : | சிரியாவிலிருந்து வந்து உருவான அரபு அரச குலம் - பைஸாண்டியக் கிறிஸ்தவர்கள். |
| கஸூ | : | சூறைத் தாக்குதல். |
| காஃபிர் | : | நம்பிக்கை மறுப்பாளர்கள் - அல்லாஹ்வின் கருணைக்கும் அருளுக்கும் தகுதியற்றவர்கள். |
| கிப்லா | : | தொழுகைத் திசை - மக்கா நகரிலுள்ள கஅபா திருத்தலத்தின் திசை - முஸ்லிம்கள் இத்திசையை நோக்கியே தொழ வேண்டும். |
| கிறிஸ்தவம் | : | ஏசு கிறிஸ்துவால் உருவாக்கப்பட்ட மதம் - பல உட்பிரிவுகள் இருந்த போதிலும் கத்தோலிக்க மற்றும் சீர்திருத்தக் கிறிஸ்தவங்கள் முக்கியமானவை - கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுவோர் கிறிஸ்தவர்கள் |
| (திருக்)குர்ஆன் | : | முஸ்லிம்களின் ஆகப் புனித நூல் - 610 முதல் முஹம்மதின் இறுதிக் காலம் வரை அவர் ஊடாக இறங்கிய இறை வாக்குகளின் தொகுப்பு - கவித்துவத்துடன் கூடிய இவ்வாக்குகள் 114 அத்தியாயங்களாக (சூரா) தொகுப்பப் பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| குறைஷி | : | மக்காவிலிருந்த உயர் குல அரபுகள் - மக்கா நகரின் ஆதிக்க சக்திகள் - குறைஷ் என்ற மூதாதையர் வழி வந்த குலத்தினர். |
| குஸஅ | : | மக்காவிலிருந்த ஒரு அரபுக் குலம். |
| கூபா | : | மதீனாவுக்கு வெளியே அமைந்துள்ள ஒரு இடம். |
| கைபர் | : | மதீனாவுக்கு அருகிலிருந்த ஒரு யூதக் குடியிருப்பு. |
| சப்பாத் | : | இறை வணக்கத்திற்கும் மதக் கடமைகளுக்கும் கிறிஸ்தவ, யூத மதங்களில் ஒதுக்கப்பட்ட வாரநாள் - யூத மதத்தில் இது வெள்ளிமாலை சூரியன் மறைவு தொடங்கி அடுத்த நாள் சூரியன் மறைவு வரை. கிறிஸ்தவ மதத்தில் இது ஞாயிற்றுக்கிழமை. இந்நாளில் சாதாரண வேலைகள் செய்யப்படுவதில்லை. |
| சஹ்ம் | : | குறைஷிக் கிளைகளில் ஒன்று. |
| சாத்தானின் பாடல்கள் | : | திருக்குர்ஆனின் 53வது அத்தியாயம் அருளப்பட்டுக் கொண்டிருந்தபோது நபிகளின் உதடுகளின் ஊடாக சாத்தான் நழுவவிட்டதாகத் தபரீயால் குறிப்பிடப்படும் இரு கூற்றுகள். வேறு எந்த ஆதாரமும் இல்லாத இத்தகவலை முஸ்லிம்கள் ஏற்பதில்லை. |
| சாத்தான் / ஷைத்தான் | : | பாவத் தூண்டலுக்குக் காரணமாகும் இறைமையின் எதிர்மறை. |
| சுலாய்ம் | : | பெதோய்ன் பழங்குடிக் குலங்களில் ஒன்று. |
| சுன்னாஹ் | : | வழிவழியாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை - இஸ்லாமுக்கு முந்திய பழங்குடி வழமைகள் - அல்லாஹ்வின் ஆணைகளும் அவனால் தடை செய்யப்பட்டவைகளும் - நபிகளின் மொழிகள், நடைமுறைகள். |
| சுன்னி இஸ்லாம் | : | முஸ்லிம் பெரும்பான்மையினர் - நிலவும் இஸ்லாமிய மரபை ஆதரிப்போர் - ரஷிதூன்களை ஏற்போர். |
| சூஃபியிசம் | : | இறையன்பையும், இறையறிவையும், இறைவனுடனான நேரடி அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ள இயலும் என நம்பும் இஸ்லாமிய பிரிவு. முஹம்மதின் மரணத்திற்குப் பிறகு இறுக்கமான மத மரபுகளிலிருந்து விலகிக் கிளைத்த ஒரு மரபு. இஸ்லாமியத் துறவிகளை சூஃபிகள் என்பர். |
| சூரா | : | 'அத்தியாயம்' - திருக்குர்ஆன் இறை வாக்குகளின் தொகுப்பு- 114 சூராக்களாக திருக்குர்ஆன் தொகுக்கப்பட்டுள்ளது - ஒவ்வொரு அத்தியாயமும் பல இறை வாக்குகளாகப் பிரிக்கப்பட்டு எண்ணிக்கை தரப்பட்டுள்ளன. எ.டு.: 4:21 என்றால் நான்காவது சூரா - இருபத்தி ஒன்றாம் இறைவாக்கு எனப் பொருள். |
| தகீஃப் | : | தய்ஃப் நகரில் வாழ்ந்த குலத்தினர் |
| தமீம் | : | அரபுத் தீபகற்பத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த ஒரு அரபுக்குலம். |
| தலாக் | : | சட்டப் பூர்வ விவாகரத்து. |

| | | |
|---|---|---|
| தவாஃப் | : | மக்காவிலுள்ள கஅபா ஆலயத்தை ஏழுமுறை இடம் வருவது. |
| தவ்ஹித் | : | ஏக இறைக்கொள்கையை வற்புறுத்தும் நெறி. |
| தார் அல் இஸ்லாம் | : | 'இஸ்லாமின் இருப்பிடம்' - முஸ்லிம் ஆட்சிக்குட்பட்ட பகுதி. |
| திரை வாக்கு | : | நபிகளின் மனைவியரிடம் பேசுபவர்கள் திரைக்குப் பின்னிருந்து பேச வேண்டும் என விதிக்கும் இறைவாக்கு. (33:53). |
| திர்மிதீ | : | முஹம்மது பின் ஈஸா அத் திர்மிதீ இயற்றிய நபிமொழித் தொகுப்பு. |
| திர்ஹம் | : | வெள்ளி நாணயம். |
| தீன் | : | இறைநெறி - மதம் - இஸ்லாமைப் பொருத்தமட்டில் இறை நெறியும் வாழ்வியல் நெறியும் பிரிக்க இயலாதவை. |
| துஆ | : | பிரார்த்தனை |
| தைய்ம் | : | குறைஷிக் கிளைகளில் ஒன்று. |
| தோரா (தவ்றாத், டோராஹ்) | : | யூதர்களின் வேதம் - மோஸஸுடன் தொடர்புபடுத்தப்படும் பழைய ஏற்பாட்டின் முதல் அய்ந்து நூற்கள். |
| நக்லாஹ் | : | இஸ்லாமுக்கு முந்திய பகன் கடவுளான அல் உஸ்ஸாவின் வணக்கத் தலம் இருந்த இடம் - மக்காவுக்கும் தைஃபுக்கும் இடையிலுள்ள நகரம். |
| நதிர் | : | 'எச்சரிக்கையாளர்' - முஹம்மதை ஒரு எச்சரிக்கையாளராக திருக்குர்ஆன் நிறுத்துகிறது. (35:23,24) |
| நபி | : | இறைத்தூதர் - ஆதம் முதல் மோசஸ், இப்ராஹிம், ஏசு என எண்ணற்ற நபிமாரை இஸ்லாம் ஏற்றுக்கொள்கிறது. |
| நவ்ஃபல் | : | குறைஷிக் கிளை. |
| நஜ்த் | : | பெதோய்ன் அரபுக் குலங்கள் வசித்த பகுதிகளில் ஒன்று. |
| நிக்காஹ் | : | திருமண ஒப்பந்தம். |
| பகன் | : | இஸ்லாமுக்கு முந்திய அரபுக்களிடம் இருந்த பல கடவுளரை வணங்கும் நெறி - சிலை வணக்க நெறி. |
| பகீ அல் கர்கத் | : | மதீனாவில் இருந்த ஒரு கல்லறைப் பகுதி - முஹம்மதின் மகன் இப்ராஹிம், மகள் ருகையா மற்றும் பல தோழர்கள் இங்கேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். |
| பத்ர் | : | மக்காவுக்கும் சிரியாவுக்கும் இடையிலானவணிகப் பாதையில் செங்கடற்கரை ஓரம் அமைந்த ஒரு தங்குமிடம். இங்கு நடை பெற்ற போரில் முஹம்மது அடைந்த வெற்றி இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்புமுனை. |
| (ஃ)பத்வா (ஃபட்வா) | : | இஸ்லாமியச் சட்டத்தின் அடிப்படையில் அறிஞர் ஒருவர் அளிக்கும் சட்டப்பூர்வக் கருத்து அல்லது தீர்ப்பு. |
| பய்யத் அல்-ரித்வான் | : | 'மரத்தடி ஒப்பந்தம்' - ஹுதைபியாவில் முஸ்லிம்கள் ஏற்ற |

உறுதிமொழி.

பனூ : இவரின் பிள்ளைகள் / வழிவந்தோர் என்பதைக் குறிக்கும் சொல் - குலங்களுக்கு முன் இணைக்கப்படுவது.

பனூ குறைஸா, பனூ கைனூபா, பனூ நாதிர் : மதீனத்திலிருந்த மூன்று முக்கிய யூதக் குலங்கள்.

பாரசீகப் பேரரசு : நபிகள் காலத்திய யூதப் பேரரசு (பார்க்க: வரைபடம்) - பெர்ஷியா என்பது இன்றைய ஈரான்.

புனித பைபிள் : கிறிஸ்தவ புனித நூற் தொகுதி.

(ஃ)புர்கான் : திருக்குர்ஆனில் பயன்படுத்தப்படும் ஒரு சொல் (21:48,50) - இறை மீட்பாக அளிக்கப்படும் ஒரு வெற்றி.

பெதோய்ன் : மத்திய கிழக்கிலிருந்த பாலைவன நாடோடிக் குலம். ஒட்டகம், ஆடு ஆகியவற்றை மேய்த்துத் திரிந்த பழங்குடியினர். மழைக்காலத்தில் பாலை வனங்களிலும் வெயிற் காலங்களில் விவசாயப் பகுதிகளுக்கும் இவர்கள் இடம் பெயர்வது வழக்கம்.

பைஸாண்டியப் பேரரசு : தெற்கு / தென் கிழக்கு அய்ரோப்பா மற்றும் மேற்கு ஆசியா வரை விரவியிருந்த ஒரு பேரரசு (395-1453) - பண்டைய கிரேக்கக் காலனிகளில் ஒன்றான பைஸாண்டிய நகரிலிருந்து உருவானதால் இப்பெயர் ரோமின் வீழ்ச்சிக்குப் (476) பிறகு இப்பேரரசின் கிழக்குப் பகுதி மட்டும் இப்பெயரில் கான்ஸ்டான்டினோபிலைத் தலைநகராகக் கொண்டு தொடர்ந்தது. நபிகள் காலத்தியக் கிறிஸ்தவப் பேரரசு.

மக்கா : இஸ்லாமின் ஆகப் புனித நகரம் - கஅபா திருத்தலம் உள்ள நகர் - முஹம்மது பிறந்த ஊர் - இன்றைய சவூதி அரேபியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.

மக்ஸூம் : குறைஷிக் கிளைகளில் ஒன்று.

மதீனா (யத்ரிப்) : மக்காவுக்கு வடக்கே சுமார் 330 கி.மீ. தொலைவில் இருந்த ஒரு பயணத்தரிப்பிடம். பாலைவனச் சோலை - யூதர்களும் அரபுகளும் வசித்திருந்த இந்நகரின் இன்னொரு பெயர் யத்ரிப். 622-ல் முஹம்மதும் அவர் நெறியை ஏற்றுக்கொண்டவர்களும் இங்கு புலம் பெயர்ந்தனர். மக்காவுக்கு அடுத்த புனிதநகர். முஹம்மதின் அடக்கத் தலம் இங்கேயே உள்ளது.

மத்ரஸாஹ் (மதரசா) : மத்திய காலத்தில் சட்டம் பயிற்றுவிக்கும் கல்லூரி - மார்க்க உயர் கல்விக் கல்லூரி - தொழுகைத் தலத்துடன் இணைந்திருக்க வேண்டும் என அவசியமில்லை.

மனாத் : இஸ்லாமுக்கு முந்திய அரபுலகப் பெண் கடவுள் - அல்லாஹ்வின் மகளாக வணங்கப்பட்டவர் - குதாயத்தில் இதன் ஆலயம் இருந்தது.

மய்யித் : இறந்த உடல்

மஃப்டி : இஸ்லாமியச் சட்டத்தில் தேர்ந்தவர் - ஃபத்வா அளிக்கும் அதிகாரமுள்ளவர்

| | | |
|---|---|---|
| மஸ்ஜித் (மசூதி) | : | தொழுகைத் தலம் - உம்மாவின் பிரச்சினைகளைத் தீர்க்கும் மையம் |
| மஹர் | : | திருமண ஒப்பந்தத்தின்போது மணமகன் மணமகளுக்கு அளிக்கும் பரிசுத் தொகை. |
| மினா | : | மக்கா நகரப் பள்ளத்தாக்கு. |
| மிஃராஜ் | : | 620ல் முஹம்மதுக்கு ஏற்பட்ட ஒரு இறையனுபவம். ஒருநாள் நள்ளிரவு திருக்குர்ஆனை ஓதிய பின் கஅபாவில் முஹம்மது துயின்றபோது வானவர் ஜிப்ரீல் அவரை விண்ணகத்திற்கு அழைத்துச் செல்கிறார் மோசஸ். இப்ராஹீம், ஏசு போன்று இறைத்தூதர்கள் அவரை வரவேற்கின்றனர். நீர்-பால்-மது அடங்கிய மூன்று கிண்ணங்கள் குடிப்பதற்காக அவரிடம் வழங்கப்பட்டபோது முஹம்மது பாலைத் தேர்வு செய்தார். இஸ்லாம் ஒரு நடுநிலைப் பாதை என்பதற்கு ஒரு குறியீடாக இந்நிகழ்வு அமைகிறது. முஸ்லிம்கள் தினம் 50 முறை தொழ வேண்டும் என இறைவன் முஹம்மதிடம் அன்று கூறியபோது மோசஸின் ஆலோசனையின் படி பலமுறை இறைவனை அணுகி 50ஐ 5 ஆகக் குறைத்தார் என்று நம்புவது முஸ்லிம் மரபு. |
| முமின் | : | நம்பிக்கையாளர்கள் - முஹம்மதின் இறை வழியை ஏற்றுக் கொண்டோருக்கு அளிக்கப்பட்ட முதற்பெயர்களில் ஒன்று. |
| முத்தய்புன் | : | 'வாசனை பூசியோர்' - மக்கத்துக் குறைஷிகளிடையே இருந்த இரு குழுக்களில் ஒன்று. |
| முனாஃபிகூன் (முனாஃபிகின்கள்) | : | 'அய்யம் கொண்டவர்கள்' - மதீனாவில் முஹம்மதை ஆதரிப்பதாகச் சொல்லிக்கொண்டு அவர் முன்வைத்த நம்பிக்கை மீதும் அவரது நடைமுறைகள் மீதும் அய்யங்களைப் பரப்பியவர்கள் - நெருக்கடியான சில சந்தர்ப்பங்களில் முஹம்மதைக் கைவிட்டவர்கள். |
| முருவ்வாஹ் (முருவா) | : | இஸ்லாமுக்கு முந்திய இனக்குழு விழுமியங்களுள் ஒன்று. |
| முஸ்லிம் (பன்மை: முஸ்லிமுன்) | : | இஸ்லாம் என்பதன் வழிச்சொல் - அல்லாஹ்வின் விருப்பிற்கு ஆட்பட்ட தன்னிலைகள் - முஹம்மதின் மதத்திற்கு வழங்கப்பட்ட பெயர் - முஸல்மான் என்பது இதன் வழிச்சொல். |
| முஹாஜிரூன் (முஹாஜிர்கள்) | : | புலம் பெயர்ந்தோர் - முஹம்மதின் இறை வழியை ஏற்று அவருடன் மதீனாவிற்குப் புலம் பெயர்ந்த மக்க நகர் குறைஷிகள். 'ஹிஜ்ரத்' என்பது இதன் வழிச்சொல் - இறை நெறியின்படி வாழ்வதற்கேற்ற இடத்தை நாடிச் செல்பவர்கள் என்ற பொருளில். |
| யத்ரிப் | : | மதீனாவின் இன்னொரு பெயர். |
| யூதர்கள் | : | பண்டைய ஹீப்ரு இனத்தில் வழிவந்தோர் - பழைய வேதங்களில் காணப்படும் இஸ்ரேலில் வாழ்ந்தோர் அரேபியாவில் வசித்த இவர்கள் தம்மை வேதம் வழங்கப் பட்டவர்கள் எனப் பிற அரேபியர்களிடமிருந்து வேறுபடுத்தி உயர்த்திக் கொண்டனர். |
| யூதமதம் | : | யூதர்களின் மதம் - ஒரிறைக் கொள்கையுடைய 3 பெரிய |

மதங்களில் ஒன்று (மற்றவை: இஸ்லாம், கிறிஸ்தவம்) - புனித தோராவை வேதமாகக் கொண்டவர்கள் - ஆபிரஹாம், இஸாக், ஜேக்கப், மோசஸ் என்கிற இறைத்தூதர்களை ஏற்றோர்.

யேமன் : அரபுத் தீபகர்ப்பத்தின் தெற்குப் பகுதி. இன்று இப்பெயரில் அழைக்கப்படுகிறது.

ரசூல் : (அல்லாஹ்வின்) தூதர்.

(அல்) ரஹிம் : கருணைமிக்கவர்

(அல்) ரஹிதூன் (632-661) : சரியாக வழி நடத்தப்பட்ட (முதல் நான்கு) கலீபாக்கள் - இவர்களை ஏற்போர் சுன்னி இஸ்லாமியர் எனப்படுவர்.

வக்ஃஃப் அற நிறுவனம் : குறிப்பிட்ட மத, இறை நோக்கத்திற்கென ஒருவர் நிறுவிய சொத்தின் மூலம் கிடைக்கும் வருமானம்.

வஹாபிகள் : தூய்மை வாத முஸ்லிம் பிரிவு - இன்றைய சவூதி அரேபிய மன்னர்கள் இப்பிரிவினர்.

வஹீ : அறிவிப்பவரையும் அறிவிக்கப்படுபவரையும் தவிர பிறர் அறியா வண்ணம் விரைவாகச் செய்தி அறிவித்தல் - இறைத் தூதருக்குள் செய்திகளை அறிவிக்கும் முறை.

ஜம் ஜம் ஊற்று : மக்காவில் கஅபா தலத்திற்கு அருகேயுள்ள நீருற்று - இப்ராஹீம் நபியின் காலத்திலிருந்து தொடர்ந்து அதில் நீருறி வருவதாக நம்பிக்கை.

ஜனாஸா : இறந்த உடலுக்கு முன்செய்யப்படும் தொழுகை.

ஜாஹிலிய்யாஹ் : 'அறியாமையின் காலம்' - இஸ்ஸாமுக்கு முந்திய பகன் வழிபாட்டுக் காலத்தைக் குறிக்கத் திருக்குர்ஆனில் பயன்படுத்தப்படும் சொல் - இறைநெறியிலிருந்து வழி தவறியதாகத் கருதும் மற்றவர்களைத் தம்மை தீவிரமாக இஸ்லாத்தைக் கடைப்பிடிப்பதாகக் கருதிக் கொள்வோர் இன்றும் அடையாளப்படுத்தப் பயன்படுத்தும் சொல்.

ஜிப்ரீல் : கப்ரியேல் எனப் பழைய வேதங்களில் குறிப்பிடப்படும் வானவர்.

ஜின்கள் : தேவதைகள்.

ஜிஸ்யாஹ் (ஜிஸியா, திம்மி) : முஸ்லிம் ஆட்சியை ஏற்றுக்கொண்ட முஸ்லிம் அல்லாத (யூதர், கிறிஸ்தவர்)வர்கள் முஸ்லிம் அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி தமது உயிரையும், உடமையையும் பாதுகாப்பதற்காகச் செலுத்துகிற வரி - முஸ்லிம்கள் செலுத்தும் இறை வரி 'ஸக்காத்' எனப்படும்.

ஜிஹாத் : ஏதேனும் ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான தீவிர முயற்சி, போர் உட்படப் பல்வேறு முயற்சிகளையும் உள்ளடக்கும் சொல் - தனக்குள்ளேயே தீக்குணங்களுக்கு எதிராக நடத்தவேண்டிய போரையும் இது குறிக்கும்.

ஸகீனா : திருக்குர்ஆனில் பயன்படுத்தப்படும் ஒரு சொல் (48:4) - இறைவன் தன் சமாதானத்தையும் அமைதியையும்

வெளிப்படுத்துவது.

ஸக்காத் (சக்காத்) : முஸ்லிம்களின் அடிப்படைக் கடமையாக விதிக்கப்பட்ட மத வரி - இதன் மூலம் கிடைக்கும் அனைத்து வருமானமும் உம்மாவிலுள்ள ஏழைகளுக்குசெலவிடப்பட வேண்டும் என்பது இஸ்லாமியக் கோட்பாடு.

ஸன்னா : மதவியல் சார்ந்த வெட்டி விவாதங்கள்.

ஸய்யித் (சயீத்) : அரபுக் குலத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம்.

ஸலாத் (சலாத்) : வரையறுக்கப்பட்ட வடிவங்களில் வீழ்ந்து மண்டியிட்டுப் புனிதநூற்களை ஓதித் தொழுதல்.

ஸஸ்ஸானிட்கள் (சஸ்சானிட்கள்) : பாரசீகப் பேரரசை 224 முதல் அரபு வெற்றி வரை (636-651) ஆண்ட பரம்பரை.

ஸுஹ்ரா (சுஹ்ரா) : குறைஷிக் கிளைகளில் ஒன்று.

ஷரிய(த்) : 'அல்லாஹ்வின் விருப்பு' - திருக்குர்ஆன் மற்றும் நபி மரபின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இஸ்லாமியச் சட்டம்.

ஷவ்வாப் : முஹம்மதின் குதிரை.

ஷியா முஸ்லிம்கள் : 'ஷியா-இ-அலீக்கு உரியவர்கள் - அலீயை ஆதிர்ப்போர் ரஹிதூண்களுக்குப் பதிலாக உம்மாவின் பொறுப்பை இறைத்தூதரின் மருமகன் அலீயே அவருக்குப் பின் ஏற்றிருக்க வேண்டும் என நம்புவோர் அலீ வழியில் வந்த பல இமாம்களைப் போற்றுபவர்கள், பெரும்பான்மையான சுன்னி முஸ்லிம்களுக்கும் இவர்களுக்குமான வேறுபாடு முற்றிலும் அரசியல் அடிப்படையிலானதே.

(அல்)ஹகீம் : எல்லாம் அறிந்தவர் - திருக்குர்ஆனில் அல்லாஹ்விற்கு அளிக்கப்படும் அடைமொழிகளுள் ஒன்று.

ஹதீத் (ஹதீஸ்) : நபி மரபு - முஹம்மதின் கூற்று / நடைமுறை குறித்து வழி வழி வழங்கிவரும் நம்பிக்கை - அதிகாரபூர்வமான ஒருவரால் அதிகாரபூர்வமான ஒருவருக்குச் சொல்லப்பட்டு வருவது. பின்னோக்கி இழை பிடித்துச் சென்றால் நேரில் கண்ட / கேட்ட ஒருவரின் கூற்றாக அது அமையும்.

ஹராம் : அனுமதி மறுக்கப்பட்டது.

ஹலால் : அனுமதிக்கப்பட்டது.

ஹனீஃப் : மத்திய அரபைச் சேர்ந்த ஒரு பெரிய பழங்குடி

ஹனீஃபா : இஸ்லாமுக்கு முந்திய காலங்களில் பகன் வழிபாட்டை மறுத்து ஓரிறைக்கொள்கையை வற்புறுத்திய பிரிவினர் - இவர்களது நெறி ஹனீஃபியா

ஹஜ் : 'புனித யாத்திரை' - ஒவ்வொரு முஸ்லிமும் சாத்தியமானால் தன் வாழ்நாளில் ஒரு முறையேனும் மேற் கொள்ளவேண்டிய இறைக் கடமை - புனித மாதத்தில் மக்காவிலுள்ள கஅபா திருத் தலத்திற்குச் சென்று அதற்குரிய முறைப்படிச் சடங்குகள் செய்து தொழுதுவருதல்.

| | | |
|---|---|---|
| ஹஷிம் | : | குறைஷிக் கிளை - முஹம்மது இக் கிளையைச் சேர்ந்தவர். |
| ஹில்ஃஃப் அல்-புதுல் | : | குறைஷிக் குழுக்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தம். |
| ஹிஜாப் | : | முகத்திரை. |
| ஹிஜ்ரா (ஹிஜ்ரத்) | : | 'புலப்பெயர்வு' - 622-ல் மக்காவிலிருந்து முஹம்மதும் அவரது நெறியை ஏற்றுக்கொண்ட இதர முஸ்லிம்களும் மதீனாவிற்கு மேற்கொண்ட புலப்பெயர்வு - இஸ்லாமிய ஆண்டுமுறை இதிலிருந்தே (622) தொடங்குகிறது. |
| ஹீராமலை | : | மக்காவுக்கு அருகிலுள்ள ஒரு மலை. இம் மலையிலுள்ள ஒரு குகைக்கு முஹம்மது அவ்வப்போது சென்று இறைச் சிந்தனைகள் செய்வது வழக்கம். அவ்வாறு சென்றிருந்த ஒரு நாளில்தான் (610) திருக்குர்ஆன் அவருடாக இறங்கியது. |
| ஹுதைபியா | : | மக்காவைச் சுற்றியுள்ள சரணாலயத்தின் விளிம்பில் உள்ள ஒரு இடம்: குறைஷிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மார்ச் 628-ல் மக்காவில் ஏற்பட்ட உடன்படிக்கை. தொலைநோக்குடன் சில உடனடி நலன்களை முஹம்மது விட்டுக் கொடுத்ததால் முஸ்லிம்கள் 'மத்தியில் சற்று அதிருப்தி ஏற்பட்டது. |

## மேலும் அறிய


□ *Abdur Raheem M.R.M., Muhammad The Prophet, (Madras 1971)*

□ *Asghar Ali Engineer, Islam and its Relevance to our Age (Mumbai 1984)*

□ *Chris Horris & Peter Chippindale, What is Islam (London, 1997)*

□ *David Wainer, An introduction to Islam (ND, 2004)*

□ *Edward W Said, Orientalism: Western Conceptions of the Orient (New Yark / London, 1978)*

□ *Gordon D Newby, The Making of the Last Prophet: A Reconstruciton of the Earilest Biography of Muhammed. (Columbia 1989).*

□ *Guillaume A, The Life of Muhammad: A Translation of Ishaq's Sirat Rasul Allah (London 1955)*

□ *History of Al-Tabari (Albani: State University of NY Press - 38 vol).*

□ *Karen Armstrong, Islam, A Short Histroy (New York, 2002)*

□ *Karen Armstrong, MUHAMMAD A Biography of the Prophet (London, 1991)*

□ *Mahmood Mamdani, Good Muslim Bad Muslim (NY, 2004)*

□ *Malaise Ruthven, Islam in the Word (London 1984)*

□ *Maxime Rodinson (Trans: Anne Casser), Muhammad, Prophet of Islam London Ny, 2002)*

□ *Montgomery Watt, W. Muthammad at Mecca (Oxford. 1953)*

□ *Montgomery Watt. W. Muthammed's at Madina - (Oxford 1966)*

□ *Montgomery Watt W. Muhammed's Mecca: Histroy in the Quran (Edinburgh, 1988)*

□ *Muhammad Hamidullah, Introduciton to Islam (ND, 1992)*

□ *Muhammed Hussan Haykal, The Life of Muhammad (Delhi 2000)*

□ *Noorani A.G., Islam and Jihad (New Delhi, 2002)*

□ *Noorani A.G., The Muslims of India (New Delhi 2003)*

□ *Rana Kabbani, Europe's Myths of Orient (London 1986)*

□ *Sir William Muir, The Life of Mahomet, (New Delhi, 2002)*

□ *Abdulla Yusuf Ali - The Holy Quran - (ND, 2002)*

□ திருக்குர்ஆன், உர்து மூலம்: மௌலானா சையித் அபுல் அஃலா மௌதூதி, *(மொ.பெ.: மௌலவி குத்புதீன் அகமத் பாகவி. மௌலவி அப்துர் ரவூஃப் பாகவி), (சென்னை 2002).*

□ மார்ட்டின் லிங்ஸ் *(மொ.பெ.: அப்துல் கப்பார் முஹம்மத் ஸனீர்)* முஹம்மத் அவர்களது வாழ்வு *(சென்னை 1985)*

□ மௌலானா முஹம்மத் யூசுப் இஸ்லாஹி வாழ்க்கைக் கலை. *(மொ.பெ.: மௌலவி எம்.எம். அப்துல்காதிர் உமரி). (சென்னை, 2003)*

□ மௌலானா ஸயீத் அபுல் அஃலா மௌதூதி, இதுதான் இஸ்லாம், *(சென்னை, 2002)*

□ மௌலானா ஸயீத் அபுல் அஃலா மௌதூதி *(மொ.பெ.: எஸ்.அப்துல் வஹாப் பாகவி. அப்துல் ரஜப் பாகவி)*, குத்பாப் பேருரைகள் *(சென்னை 2003)*

□ ஸஹிஹுல் புஹாரி *(நபிகளார் பொன்மொழிகள் - 7 தொகுதிகள்), (சென்னை 2000).*